உ

சிவமயம்

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

# 18வது சைவ மாநாடு

# 18th SAIVA CONFERENCE

## "வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும்"

வேதமொடாகமமும் விளங்கிதிகாசபுராணமும்
நாதமொடு கீதமும் நற்றிருமுறைகளும் இறை
பாதநெறி பணிந்திட பரவி வரும் நூல்களும்
பேதமறப் போற்றியே பேணுவோம் சைவசித்தாந்தம்

06th & 07th May 2017





WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Srilankan Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5, Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
Season's Best is Summer, Saree's Best is Silk Emporim Sarees
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

# 18வது

# சைவ

# மாநாடு

## 'EIGHTEENTH SAIVA CONFERENCE'

## "வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும்"

**Day 1**

Saturday 6th May 2017
from 9.00 am - 8.00 pm
**Highgatehill Murugan Temple**
200 A Archway Road
London N6 5 BA

**Day 2**

Sunday 7th May 2017
from 9.00 am - 8.00 pm
**London Sivan Kovil**
4A Clarendon Rise
London SE13 5ES

# FEDERATION OF SAIVA(HINDU) TEMPLES U.K.

## Affiliated Temples

**SHREE GHANAPATHY TEMPLE**
125-133, Effra Road Wimbledon, London SW19 8PU
**Tel : 020 8542 7482**

**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
200A, Archway Road , London N6 BA
**Tel : 020 8348 9835**

**LONDON SIVAN KOVIL**
4A, Clarendon Rise , Lewisham, London SE13 5ES
**Tel : 020 8318 9844**

**SRI KANAGA THURKKAI AMMAN TEMPLE**
5, Chapel Road, West Ealing, London W13 9AE
**Tel : 020 8810 0835**

**SRI RAJARAJESWARY AMMAN TEMPLE**
Dell Lane, Stoneleigh Surrey KT17 2NE **Tel : 020 8393 8147**

**SRI KARPAHA VINAYAGAR TEMPLE**
2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
**Tel : 020 8527 3819**

**SRI SELVA VINAYAGAR TEMPLE**
209 – 303 Ley Street, Ilford Essex IG1 4BN
**Tel: 0208 911 8934**

**SORNA KAMADCHI AMMAN TEMPLE**
Unit B Stephensonway Three Bridges Crawley, West-Sussex RH10 1TN
**Tel : 01293 619 918**

**SRI SIVAKAMI SAMETHA SITHAMBARESWARAR TEMPLE**
2 Salisbury Road , Manor Park, E12 6AB
**Tel : 0208 514 4732**

**SHRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
Charisma Building, 59B, Rear of Station Road, Harrow Middx HA1 2TY
**Tel: 020 8427 5428**

**EELA PATHEESWARAR TEMPLE**
Pavit hall, Union Road, Alberton, Middlesex HA0 4AU **Tel: 0208 902 3238**

**NEW MALDEN MURUGAN TEMPLE**
255 Burlington Road, New Malden, Surrey KT 3 4NE
**Tel: 0208 942 4475**

**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
271 Forest Road, Walthamstow, London E17 4PX
**Tel: 0208 531 0872**

**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR**
65 A George Elliot Road, Coventry CV14HT
**Tel: 02476 632 21**

**LONDON SREE AYYAPPAN TEMPLE**
36 Masons Avenue Harrow, Middlesex HA3 5AR
**Tel:020 8861 5825**

**EELA KANTHAN TEMPLE**
2 Lythalls Lane, Coventry CV6 6FC
**Tel: 02476 663 554**

**LIVERPOOL GANESH TEMPLE**
Delfby Crescent Kirkby, Liverpool L32 8TN
**Tel: 0151 546 7611**

**SRI THURKKAI AMMAN TEMPLE**
10 A West Crescent Beeston, Nottinghamshire NG9 1QE
**Tel: 0115 967 7751**

**SHRI MEENATCHI TEMPLE**
Abercromby Avenue, High Wycombe, Bucks HP12 3BW

**SRI KALPAGA VINAYAHAR TEMPLE**
43 Addision Road, Port Talbot, SA12 6HZ
**Tel: 016397 798 72 / 07870 831 417**

**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
21 Brigstock Road, Thornton Heath CR7 7JJ
Tel: 020 8689 3466

**ENFIELD NAGAPOOSAHNI AMBAAL TEMPLE**
61-65, Church Lane, Edmonton, London N9 0PZ
**Tel: 0208 884 3333/4333**

# பொருளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| 01. அறிமுகம் | 01 |
| 02. அங்கத்துவ ஆலயங்கள் | 02 |
| 03. பொருளடக்கம் | 04 |
| 04. தலைவரின் செய்தி | 06 |
| 05. செயலாளரின் செய்தி | 08 |
| 06. மாநாட்டு நிகழ்ச்சி நிரல் | 10 |
| **ஆசியுரைகளும் வாழ்த்துக்களும்** | |
| 07. தவத்திரு குமர குருபர சுவாமிகள் | 12 |
| 08. தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் | 14 |
| 09. தவத்திரு மருதாசல அடிகளார் பேருர் | 15 |
| 10. சிவஸ்ரீ S.K.ராஜா பட்டர் | 16 |
| 11. திரு டி.எம். சுவாமிநாதன் பா.உ அமைச்சர் இலங்கை | 17 |
| 12. திரு சி.சிறீதரன் பா உ, இலங்கை | 18 |
| 13. திரு சீ.யோகேஸ்வரன் பா உ,இலங்கை | 20 |
| 14. தமிழருவி திரு த. சிவகுமாரன், இலங்கை | 21 |
| 15. திரு அ.உமாமகேஸ்வரன் இந்து கலாச்சார அமைச்சு | 22 |
| 15. விம்பிள்டன் கணபதி ஆலயம் | 23 |
| 16. உயர்வாசற்குன்று முருகன் ஆலயம் | 26 |
| 17. லண்டன் சிவன் கோயில் லூாயிசம் | 27 |
| 18 ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம் | 29 |
| 19. கனக துர்க்கை அம்மன் ஆலயம் | 30 |
| 20. கற்பக விநாயகர் ஆலயம் | 31 |
| 21. சைவப்புலவர் வசந்தக்குருக்கள் (கற்பக விநாயகர்) | 33 |
| 22. செல்வவிநாயகர் ஆலயம் | 34 |
| 23. கொவென்றி சித்திவிநாயகர் ஆலயம் | 35 |
| 24. வோல்த்ம்ஸ்ரோ ஸ்ரீமேருபுரம் மகாபத்ரகாளி அம்மன் தேவஸ்தானம் | 36 |
| 25. சைவ முன்னேற்றச்சங்கம் | 37 |
| 26. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், ஹரோ | 38 |
| 27. லக்சுமி நாராயணன் ஆலயம் | 39 |
| 28. லண்டன் ஸ்ரீமுருகன் ஆலயம் | 40 |
| 29. லிவர்பூல் பிள்ளையார் கோயில் | 41 |
| 30. சொர்ணகாமாட்சி அம்மன் ஆலயம் | 42 |
| 31. ஈழபதீஸ்வரர் ஆலயம் | 43 |
| 32. ஸ்ரீ நியுமோல்டன் ஆலயம் | 44 |
| 33. ஐயப்பன் கோயில் | 45 |
| 34. வேல்ஸ் ஸ்ரீ கல்பக விநாயகர் ஆலயம் | 47 |
| 35. வேல்ஸ் ஈழக்கந்தன் ஆலயம் | 48 |
| 36. ஸ்ரீ துர்க்கை ஆம்மன் ஆலயம் நொட்டிங்காம் | 49 |
| 37. என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் | 50 |
| 38. ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம் | 51 |
| 39. மில்டன்கீன்ஸ் முருகன் ஆலயம் | 52 |
| 40. சிவஸ்கந்தகிரி முருகன் ஆலயம் | 53 |
| 41. சர்வதேச இந்து இளைஞர் பேரவை | 54 |
| 42. ஸ்ரீ வெங்கடேஸ்வரா பாலாஜி ஆலயம் | 55 |

# பொருளடக்கம் பக்கம்

## கட்டுரைகள்


43. வேதசிவாகர மரபும் ஆலய வழிபாடும் - தமிழருவி த.சிவகுமாரன் 56
44. வேதகீதம் ஒரு வைத்திய நாதம் - சொல்வேந்தர் சுகி சிவம் 60
45. Siva Dharma in sanatan Dharma வைத்திய கலாநிதி இராநாதன் லம்போதரன் 66
46. வேதசிவாகம ஆலய வழிபாட்டு.. குமார சசி குமாரகுருக்கள் 68
47. வேதசிவாகமங்களும் ஆலய வழிபாடுகளும் முனைவர். த. முருகையன் 70
48. பெரியபுரரணத்தின் வழிபாட்டு மரபும்... முனைவர் இரா சந்திரசேகரன் 73
49. வேதசிவாகம மரபு பிரம்மஸ்ரீ பத்மநாபன் கட்டுரை 77
50. சைவ ஆகம மரபும் பூசை விதி எஸ். முத்துக்குமாரசாமிக்குருகள் 80
51. வேதசிவாகமங்களிலும்... சைவப்புலவர் வசந்தக்குருக்கள் 83
52. ஆலய வழிபட்டாடில் காலம், இடம், அளவு கமலநாதகுருக்கள் கட்டுரை 87
53. பெரிய புராணத்தில் சேக்கிழார் காட்டும் வழி திரு இ.குணசிங்கம் 90
54. சைவாகமங்கள் கூறும்....திரு. T.கணேசன் புதுச்சேரி 95
55. திருமுறைகள் கூறும்....பால இந்திரகுமார் கட்டுரை 101
56. வேத ஆகம ஆலய வழிபாடு ...டாக்டர் க.கதிர்காமநாதன் 103
57. சைவம் தமிழ் இலக்கியம் - கலாநிதி பொன் பாலசுந்தரம் 105
58. வேதமும் ஆகமமும் சி.கஜேந்திரகுமார் 107
59. தமிழ் மந்திரம் காட்டும் சமயம் ....திருமதி ராஜேஸ்வரி ஈஸ்வரஞானம் 109
60. Systamatistaion of worship in the Siva Aagama – Dr R.Gopalakrishnan 113
61. சைவத்திருக்கோயில்கள் ஒன்றிய வரலாறு திரு ந.சச்சிதானந்தன் 116
62. எமது விரதங்களும் ஆலயங்களும் - கலாநிதி அப்பையா தேவசகாயம் 117
63. பஞ்சாங்கம் என்பது என்ன? ஜோதிட கலாநிதி க.சிதம்பரநாதக்குருக்கள் 118
64. Panchangams 121


## பாராட்டுக்களும் பரிசளிப்பும்


கௌரவிப்பு: "சமூகசீலர்"

61. "சமூகசீலர்" அமரர் திரு செல்லத்துரை செல்வராசா 123
"சமூகசீலர்" திரு சபா மகேசன் 124
"சமூகசீலர்" திரு R.பத்மநாப ஐயர் 125
"சமூகசீலர்" திரு சண்முகநாதன் ஸ்ரீரங்கன் 126
"சைவ வளரொளி"
"சைவ வளரொளி" திரு சிவபாதம் கணேஸ்குமார் 127
62. சைவ சமயப்போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் விபரங்கள் 128

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்
THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafedaration-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819



**Chairman**
Mr. M. Gopalakrishnan
**Secretary**
Mr. K.V. Kanesamoorthy
**Treasurer:**
Mr. K. Nagarajah
**Vice Chairman**
Mr. R.D. Ratnasingham
**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam

**Committee**
Mr.W.Nagaratnam, Mr.D. Rabindramohan
Dr.S.Maheshwaran, Mr. K. Kesawan
Mr.K.Kumarathasan, Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah, Mrs. S. Muralitharan
Mr. E. Suntharalingam, Mr.K.Thirurasa
Mr.S.Anandathiyagar, Mr. K. Gengatharan

**AFFILIATED TEMPLES**
**SRI GHANAPATHY TEMPLE**
LONDON SW19 8PU.
**SRI KANAGA DURKA AMMAN KOVIL**
LONDON W13 9AE.
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
LONDON N65BA.
**SRI RAJARAJESWARI AMMAN TEMPLE**
SURREY, KT17 2NE.
**LONDON SIVAN KOVIL**
LONDON SE13 5ES.
**CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE**
WEST SUSSEX, RH10 1TN.
**SRI KATPATGA VINAYAGAR TEMPLE**
LONDON E17 4PX.
**ARULMIGU SRI SIVAGAMI SAMETHA**
LONDON E12 6AB.
**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**
ILFORD IG1 4BN.
**SRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
MIDDLEX HA1 2TY.
**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
Surrey CR 7 7JJ.
**EELA PATHEESWARAR TEMPLE**
Middlesex HA0 4AU.
**NEW MALDEN MURUGAN TEMPLE**
Surrey KT 3 4NE.
**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
London E17 4PX
**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR,** Coventry CV14HT
**LONDON SREE AYYAPPAN TEMPLE**
Middlesex HA3 5AR
**EELA KANTHAN TEMPLE**
Coventry CV6 6FC
**Liverpool Ganesh Temple**
Liverpool L32 8TN
**Sri Thurkkai Amman Temple**
Nottinghamshire NG9 1QE
**MEENAKSHI TEMPLE**
Bucks HP12 3BW
**SRI KATPAGA VINAYAHAR TEMPLE**
Port Talbot SA126HZ


## தலைவரின் உள்ளத்தில் இருந்து...

சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் புலம்பெயர் நாடுகளில் சைவமும் தமிழும் சேர்ந்து நல்லதொரு வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் மாநாடுகளை வருடாவருடம் நடத்தி வருகிறது. ஒவ்வொரு ஆண்டிலும் சைவ சமயம் சார்ந்த நூல்களின் நுணுக்கங்கள் அவற்றின் சிறப்புகளை சைவ சமூகம் உணர்ந்து கொள்ளும் வகையில் பல ஆதீனங்கள். மடங்கள் மற்றும் ஆன்மீகச் சான்றோர்கள் மூலமாக எடுத்துக் கூறி வருகின்றன. இளையோர் மத்தியில் தேவார திருமுறைகள் மற்றும் சமய சம்பந்தமான தமிழ் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் வைத்தல் போன்றவற்றின் மூலம் எமது சமயத் தளங்களில் அனைவரும் சந்திக்கிறோம். இம்முறை எல்லோரும் அதிகம் பேசிவரும் அல்லது இவை ஏன் நமக்கு என்று எண்ணி வரும் வேத மந்திரங்கள் ஆகமக்கிரியைகள் போன்றவைகள் இங்கும் மரபு மாறாமல் ஆலய வழிபாட்டில் பயன்படுத்தப்பட வேண்டிய அவசியம் பற்றி எடுத்துக் கூறும் நோக்கில் வேத சிவாகம மரபுகளும் ஆலய வழிபாடும் என்ற விடயத்தை வெளிப்படுத்தும் கருப்பொருள் மாநாட்டில் அமைந்துள்ளமை பலரது சந்தேகங்களை நீக்கும். ஏன் வடமொழி, அது புரியாத மொழி சமஸ்கிருதத்திற்கும் சைவத்திற்கும் ஏதோ ஒரு தொடர்பும் இல்லாத மாதிரி எமக்கும் அதற்கும் என்ன சம்பந்தம் என்று கூசாமல் சொல்லும் ஒரு சிலரது பேச்சுக்கள் செயல்கள் சமய நம்பிக்கைகளில் ஆர்வமாக நுழையும் இளையோர் மத்தியில் வீண் குழப்பங்களை உண்டுபண்ணும்.

ஆலயங்களை நாம் முறைப்படி ஸ்தபதிகள் மூலம் கட்டி வேத சிவாகமங்களை அறிந்த அதேவேளை உபநயனம் தீட்சை (குருப்பட்டாபிஷேகம்) முறைப்படி ஆசார்யபிஷேகம் செய்து வந்த குருமாரை புலம் பெயர் நாட்டிற்கு அழைத்து முறைப்படி செய்யும் செயல் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியது. எமது சமய மூலங்கள் பற்றி தெரியாமல் அடியோடு அழிக்கும் சில முயற்சிகளை முறியடிக்க வேண்டிய நிலையில் ஆதீனங்கள், மடங்கள் ஆலய நிர்வாக அன்பர்கள் அறங்காவலர்கள் ஆன்மீக அறிவாளிகள் இவ்விடயங்களில் மிகக் கவனம் செலுத்த வேண்டும். இவற்றிற்கு மாறான அல்லது தவறான கருத்துக்களை பரப்புவதை நிறுத்த வேண்டும்.

நாம் தமிழை மதிக்கும் அதே வேளையில் சமயம் சார்ந்திருக்கும் தமிழ்த் திருமுறைகள் சித்தாந்தங்கள் போன்றவறையும் போற்றுகின்றோம். ஏன் நாம் இந்த திருமுறைகள் சைவ சித்தாந்தசாஸ்திரங்கள் போற்றும் சமஸ்கிருத மொழியைப் பற்றி ஏன் நாம் குறைவாக நினைக்க வேண்டும். இவற்றை எல்லாம் ஏற்பவர்கள் தான் ஆஸ்திகர்கள் என்பார்கள். ஒரு சில நாஸ்திகவாதிகள் பழிப்பது போல் சைவ சமய சில அன்பர்களும் வடமொழி அல்லது சம்ஸ்கிருத மரபுகளை பழித்து வருவது மிக வேதனை அளிக்கிறது. இது சிவனை அவமதிக்கும் செயலாக நாம் எண்ண வேண்டும். அவரால் அருளப்பட்டது வேத சிவாகமங்கள் என்று தமிழ் நூல்களே எமக்கு ஆதாரம் தரும் போது நாம் புறக்கணிக்க முடியாது. இன்னுமொரு விடயத்திலும் நமது பார்வை செலுத்த வேண்டும்.

உண்மையில் நாம் சைவர்களாக இருந்தாலும் விஷ்ணு சம்பந்தமான வழிபாடுகளையும் விடுவதில்லை. வீடுகளில் லட்சுமிப்படம் வைப்பதில் ஆர்வம் காட்டுகிறோம். விஷ்ணுவின் பத்தினியாக லட்சுமியை ஏற்றுக்கொள்கிறோம். இராமாயணம்,பாரதம் போன்ற கதைகளைக் கேட்கிறோம் கடமை செய் பலனை எதிர்பாராதே என்ற பகவத்கீதை வசனங்களை சொல்கிறோம். பல தெய்வ வழிபாடுகளை ஆலயங்களில் செய்து வருகிறோம். சிவனை முழுமுதலாக ஏற்கும் அதே வேளையில் மற்றைய தெய்வங்களையும் பகுதி பகுதியாக ஏற்றுக் கொள்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கோவில் கட்டுவதற்கு இடம் எடுப்பது நாள் எடுப்பது முதல் கும்பாபிஷேகம் திருவிழா போன்ற எல்லாவற்றிக்கும் மூல நூல்களாக உள்ளவை வடமொழியில் இருந்துள்ளன.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

அன்றாடம் பாவிக்கும் பஞ்சாங்கம் வடமொழி நூல் சார்ந்த காலநிலைப் பகுப்பு. நாம் பிறந்த நட்சத்திரம் ராசி எல்லாமே மூல நூல்களில் ஒன்றான சமஸ்கிருதத்தில் இருந்துள்ளன. அவற்றின் மொழிபெயர்ப்புகள் இருப்பதால் நாம் விளங்கிக் கொள்ளலாம். உள்ளதை உள்ளபடி செய்வது தான் மரபு. அதற்காக மொழிபெயர்ப்பை செய்து கொண்டு மூலத்தை புதைக்கும் செயல்களில் நாம் ஈடுபடக்கூடாது.

இதனாலேயே வேதசிவாகம மரபு என்ற தலைப்பு நல்லதொரு விளக்கத்தைத் தருகிறது. வருடாவருடம் எல்லா ஆலயங்களிலும் இசை நடனம் வாத்தியம் போன்ற இனிமையான நிகழ்வுகள் மூலம் இளையோரை வரவழைக்கும் நாம், எமது மரபு சார்ந்த பல விடயங்களையும் எடுத்துக் கூற வேண்டும். சைவ சமயம் சார்ந்த முழு நூல்களையும் மதிக்காமல் ஒரு சில தமிழ் நூல்களை மட்டும் கருத்திற்கொண்டு சில சைவத்தமிழ் அபிமானிகளும் இன்று ஒரு சில மடங்களும் கூட நாயன்மார்களுடைய அற்புதச் செயல்களை எடுத்துக் காட்டி அவர்கள் தமிழில் பாடி அற்புதம் செய்தார்கள் என்று கூறி வடமொழியை உதாசீனம் செய்கிறார்கள். எக்காரணம் கொண்டும் எம்மை அவர்களுடன் ஒப்புவமை செய்யக் கூடாது. அவர்களது பக்திக்கு நாம் இணையில்லை. அப்படியாயின் ஏன் ஒருவரும் கண்ணப்பநாயனார் இறைவனுக்கு செய்த வழிபாட்டை விரும்பவில்லை. அவரது பக்தி மிக உயர்ந்தது என மணிவாசகரே சொல்கின்றார். அதேபோல் மற்ற நாயன்மார்களது அற்புதம் அதை நாம் போற்ற வேண்டுமே தவிர அவர்கள் யாரும் கும்பாபிஷேகம் திருவிழாக்கள் தேவாரம் பாடிச் செய்யவில்லை. இல்லற வாழ்வில் இருப்பவர்கள் அவர்களுக்கு உரிய முறையில் மட்டும் வழிபாடுகளை செய்ய வேண்டும். தமிழ் இனிமையான மென்மையான மொழி அன்பு மொழி என்றெல்லாம் நாம் போற்றுகிறோம். இனிய தமிழ் மொழியில் கிடைத்த தேவார திருவாசகங்களை ஓதி மகிழ்வோம். கேட்டு மகிழ்வோம். அத்துடன் சமய சாஸ்திரங்களையும் மதிப்போம் என்ற கொள்கையை இன்று பல ஆலயங்கள் மிகத் திறமையுடன் செயற்படுத்தி வருகின்றன.

சமூக நலன்கள் பல எல்லா ஆலயங்களும் செய்து வரும் வேளையில் எமது சமயத்தின் சொத்தான நால்வேதங்கள் ஆகம மரபுகள் தொடர்புடைய குருமார்கள் ஓதுவார்கள், மங்கள வாத்தியக் கலைஞர் எல்லோரையும் தகுந்த முறையில் பராமரித்து எமது சமயம் முழுமையான சமயமாக வளர்வதற்கு அனைவரும் முயற்சி செய்வோம்.

மற்றும் ஆலயங்கள் இங்கு நடைபெறும் விரத விசேட நாட்கள் என்பவற்றை அதிகமாக ஒரே நாளில் சரியான விதிமுறைகளுக்கு உட்பட்டு செய்து வருவது மிக நன்று. பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியத்தில் பல ஆலயங்கள் இணைந்துள்ளனர். பதினெட்டாவது வருடமாகிய இவ்வருடம் என்பீல்ட் நாகபூசணி அம்மன் ஆலயம் இணைந்திருப்பது மேலும் எமக்கு நல்ல வலுவை சேர்த்திருக்கிறது. அவர்களது கும்பாபிஷேக பளு வேலையிலும் அவ்வாலய பிரதம குருக்களுடன் சேர்ந்து நிர்வாகம் நல்ல ஒத்துழைப்பை தரும் விடயம் பாராட்ட வேண்டியதாகும். அத்துடன் இங்குள்ள நேரகாலக் கணிப்புகளின்படி சரியான விழாக்களை விரதங்களை மற்றும் இந்நாட்டிற்கு உரிய முறையில் திருக்கணித பஞ்சாங்கம் கணித்து வெளியிடும் ராகுகாலம் யமகண்டம் போன்ற விடயங்களை சரிவர அமுல் படுத்தி வரும் ஒரு பெரிய கோவில் என்ற வகையில் பல அடியார்கள் நன்மை பெறுவார்கள் என்ற பெரு நம்பிக்கை பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்திற்கு உண்டு.

புலம்பெயர் நாடுகளில் இருக்கும் ஆலயங்கள் தாயகத்தில் அல்லலுறும் மக்களின் நலன்களிலும் அக்கறை கொண்டு தற்போது பணியாற்றுவது போல் தொடர்ந்தும் அவர்களது கல்வி வாழ்க்கைக்கு நிதி உதவி போன்ற அறப்பணிகளையும் செய்யவேண்டும்.

எல்லாவிதத்திலும் ஆலயங்களில் நடைபெறும் அபிஷேக ஆராதனைகளை இந்நாட்டுக் கணிப்பிற்கு ஏற்றமுறையில் குறைவற நடைபெறுவதற்கு அன்பர்கள் உபயகார பெருமக்கள் ஆலய நிர்வாக அடியார்கள் அனைவரும் சிவாச்சார்யப் பெருமக்களின் வழிகாட்டலில் வேத சிவாகம மரபு ஆலய வழிபாடுகளில் செழித்து ஓங்க ஒத்துழைப்போம்.

தலைவர்,
M. கோபாலகிருஷ்ணன்
பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் - பிரித்தானியா.

# பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்

## THE FEDERATION OF SAIVA (HINDU) TEMPLES U.K

200A Archway Road, London N6 5BA, Tel: 020 8348 9835 | Fax: 020 8482 6508
Web: www.sivafederation-uk.org | Email: admin@saivafedaration-uk.org
Correspondence: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 0208 527 3819



**Chairman**
Mr. M. Gopalakrishnan
**Secretary**
Mr. K.V. Kanesamoorthy
**Treasurer:**
Mr. K. Nagarajah
**Vice Chairman**
Mr. R.D. Ratnasingham
**Asst.Treasurer:**
Mr. R. Kunasingam

**Committee**
Mr.W.Nagaratnam, Mr.D. Rabindramohan
Dr.S.Maheshwaran, Mr. K. Kesawan
Mr.K.Kumarathasan, Dr. T.G.V. Sritharan
Dr. T. Sriskandarajah, Mrs. S. Muralitharan
Mr. E. Suntharalingam, Mr.K.Thirurasa
Mr.S.Anandathiyagar, Mr. K. Gengatharan

**AFFILIATED TEMPLES**
**SRI GHANAPATHY TEMPLE**
LONDON SW19 8PU.
**SRI KANAGA DURKA AMMAN KOVIL**
LONDON W13 9AE.
**HIGHGATEHILL MURUGAN TEMPLE**
LONDON N65BA.
**SRI RAJARAJESWARI AMMAN TEMPLE**
SURREY, KT17 2NE.
**LONDON SIVAN KOVIL**
LONDON SE13 5ES.
**CRAWLEY SRI SWARNA KAMADCHI AMMAN TEMPLE**
WEST SUSSEX, RH10 1TN.
**SRI KATPATGA VINAYAGAR TEMPLE**
LONDON E17 4PX.
**ARULMIGU SRI SIVAGAMI SAMETHA**
LONDON E12 6AB.
**LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE**
ILFORD IG1 4BN.
**SRI SITHI VINAYAGAR THEVASTHANAM**
MIDDLEX HA1 2TY.
**SHREE SAKTHY GHANAPATHY TEMPLE**
Surrey CR 7 7JJ.
**EELA PATHEESWARAR TEMPLE**
Middlesex HA0 4AU.
**NEW MALDEN MURUGAN TEMPLE**
Surrey KT 3 4NE.
**SRI MERUPURAM MAHA PATHIRAGALI AMMAN DEVASTHANAM**
London E17 4PX
**COVENTRY SHREE MAHA SITHI VINAYAGAR,** Coventry CV14HT
**LONDON SREE AYYAPPAN TEMPLE**
Middlesex HA3 5AR
**EELA KANTHAN TEMPLE**
Coventry CV6 6FC
**Liverpool Ganesh Temple**
Liverpool L32 8TN
**Sri Thurkkai Amman Temple**
Nottinghamshire NG9 1QE
**MEENAKSHI TEMPLE**
Bucks HP12 3BW
**SRI KATPAGA VINAYAHAR TEMPLE**
Port Talbot SA126HZ


## ஒன்றாக இருக்கின்றோம்
### நன்றாகச் சிவசீவ பணி செய்கின்றோம்!



சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 18வது அனைத்துலக மாநாட்டினை "வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்" என்னும் பொருண்மை யில் இவ்வாண்டில் காண வைத்துள்ள இறைவனின் கருணைப் பெருக்குக்கு முதலில் நன்றி கூறி எனது செயலாளர் அறிக்கையினைத் தொடங்குகின்றேன்.

கடந்த மூன்றாண்டு காலமாக தொடர்ந்து சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ள வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய நிறுவனர் திரு மு. கோபாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையிலான திருக்கோயில் ஒன்றியத்தின் சிவசீவபணிகளின் வழி இந்தத் திருக்கோயில்கள் ஒன்றியத்தில் உறுப்புரிமை பெற்றுள்ள ஐக்கிய இராச்சிய சைவக்கோயில்களின் எண்ணிக்கையை 21 ஆக இறைவன் அதிகரிக்க வைத்துள்ளமை மனதிற்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது.

இறைவனின் வெளிப்படுத்தல்கள் என்று சொல்லப்படும் வேதங்கள் மற்றும் சிவாகமங்கள் மரபில் ஆலய வழிபாடுகள் நடைபெறுவதன் முக்கியத்துவத்தையும் தேவைகளையும் மக்களுக்கு எடுத்து ரைத்துத் தெளிவுபடுத்தி 21ம் நூற்றாண்டிலும் மரபு வழுவாத முறையில் ஐக்கிய இராச்சியத்தில் இந்து மதத்தினை மக்கள் போற்றுதற்கும் ஏற்றுதற்கும் சைவத்திருக்கோயில்கள் எடுக்கும் அருமுயற்சியில் வலுவூட்டும் ஒன்றாக "வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்" என்ற தலைப்பிலான இந்த மாநாட்டில் பரிமாறப்படும் கருத்துக்கள் படிக்கப்படும் கட்டுரைகள் அமையவும், இசை, நாட்டிய, நாடக, இயல் தமிழ் நிகழ்ச்சிகள் அமையவும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகையுடன் உறை அருணாசலப் பெருமானை வணங்குகின்றேன்.

இம்முத்தமிழ் நிகழ்வுடன் கூடிய இந்த அனைத்துலக மாநாட்டுக்குத் தாயகத்தில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் வருகை தந்து சிறப்பிக்கும் அனைவரையும், பங்குபற்றும் ஒவ்வொருவரையும் திருக்கோயில் ஒன்றியத்தின் செயலாளர் என்ற அன்புறவில் வரவேற்றுக்கொள்கின்றேன்.

திருக்கோயில்கள் பலவாக ஐக்கிய இராச்சியத்தில் வளர்ச்சி யுற்ற இக்காலகட்டத்தில் அவற்றுக்கு இடையிலான இணைப்புப் பாலமாகவும் புலம்பெயர் தமிழர்களின் தேவைகளையும் அச்சங்களையும் நீக்கும் கடமையில் ஒரு பொதுமையை ஏற்படுத்தல் வேண்டும் என்ற உயர் நோக்குடன் தொடங்கப் பெற்ற திருக்கோயில் ஒன்றியம் தனது 18வது வயதில் இந்த மாநாட்டினை நடாத்துவது அதனது தவழும் நடக்கும் ஆதரவு தேடும் பருவநிலைகள் மாறி வாலிப மிடுக்குடன் தனித்துவமாகத் தன் பணிசெய்வதற்கான எழுச்சிநிலைக்கு உயர்ந்துள்ளமை பாராட்டுக்குரியது.

இந்த ஒன்றாக எழுகின்ற எழுச்சியில் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள மற்றைய ஆலயங்களும் வந்திணைந்திட வேண்டுமென்று திருக்கோயில் ஒன்றியத்தின் செயலாளர் என்ற அன்புறவில் வேண்டுகின்றேன். அனைத்து ஆலயங்களினதும் நிறுவனர்களையும் அறங்காவலர்களையும் ஆண்டவன் விரைவில் ஒன்றுபடுத்துவான் என்பது எம் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது. இந்த ஒன்றாக வாழ்தல் ஒன்றாகச் செயற்படல் என்பதற்கான அடித்தளமாகவே ஆலயங்களின் திருநாட்கள் திருவிழாக்களில் காலத்துக்கேற்ற கணிப்பு முறைகளைக் கையாளும் திருக்கணிதப் பஞ்சாங்கத்தைத் திருக்கோயில் ஒன்றியத்தினைச் சேர்ந்த 21 ஆலயங்களிலும் பின்பற்றுகின்றோம். தாயகத்திலும் வரலாற்றுப் புகழ்பெற்ற ஈஸ்வரங்கள் முதல் பல முக்கிய கோயில்கள் இன்று திருக்கணிதப் பஞ்சாங்கத்தைப் பின்பற்றி வரும் நிலையில் கடந்த ஆண்டின் திருக்கோயில் ஒன்றியத்தின் அனைத்துலக மாநாட்டுத் தீர்மானங்களில் ஒன்றாக ஐக்கிய இராச்சியத்தில் உள்ள திருக்கோயில்களும் திருக்கணிதப் பஞ்சாங்கத்தையே பின்பற்றல் வேண்டும் என்பது நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்னெடுக்கும் பொறுப்பைத் தன் கடமையாகத் திருக்கோயில் ஒன்றியம் தொடர்ந்து செயற்பட்டுவருகிறது. இதனை உணர்ந்து இன்னமும் திருக்கணிதப் பஞ்சாங்கத்தில் இணையாத ஆலயங்களை இந்த இறைபணியில் இணைந்து ஒரே முறைமையில் ஐக்கிய இராச்சியத்துத் திருக்கோயில்கள் அனைத்தும் செயற்பட உதவிட வேண்டுமென்பது எமது தாழ்மையான வேண்டுகோளாக இவ்வாண்டிலும் அமைகிறது.

அடுத்து இளையவர்களை இறைவழிபாடுகளிலும் ஆலயச் செயற்பாடுகளிலும் அதிக அளவில் இணைப்பது என்ற திருக்கோயில் ஒன்றியத்தின் உயர் நோக்கினை நடைமுறைப்படுத்துவதற்காக இளையவர்கள் திருமுறைகளில் பயிற்சி பெறவும் தமிழிசையில் வளரவும் கலைகளில் சிறக்கவும் பல வழிகளில் திருக்கோயில் ஒன்றியம் செயற்திட்டங்களை நடாத்தி வருகிறது. பரிசில்களை வழங்கியும் பாராட்டுக்களைத் தெரிவித்தும் இளையவர்களை இயன்றளவு ஊக்குவித்து வருகிறது.

இப்பணியில் சமய அறிவில் வளர்தல் என்பது அவசியம் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் கோரிக்கையாக 1879ல் யாழ்ப்பாண சமயநிலை என்னும் அவர் நூலில் முன்வைக்கப் பெற்று கடந்த 138 ஆண்டுகளாகத் தாயத்திலும் தமிழகத்திலும் தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் பல வழிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இலண்டன் திருக்கோயில் ஒன்றியத்தினராகிய நாமும் இளைஞர்களுக்கான எமது செயற்திட்டங்கள் பலவற்றை மேலும் உருவாக்கி அதன் வழி திருக்கோயில் ஒன்றியத்திற்கான இளையோர் அமைப்பு ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டி இருக்கிறது. இதனை இவ்வாண்டில் அனைத்து ஆலய அறக்கட்டளையினரும் நிறுவனர்களும் மனத்திருத்தி செயற்படல் காலத்தின் தேவையாக உள்ளது. இவ்வாறான காலத்துக்கேற்ற பல செயல் களையும் செய்து சைவமும் தமிழும் ஐக்கிய இராச்சியத்தில் இளையோர் மத்தியில் நிலைக்கவும் வளரவும் நாமனைவரும் ஒன்றிணைந்து உழைக்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் வேண்டுகின்றேன்.

இறுதியாக இலண்டன் திருக்கோயில் ஒன்றியம் என்பது எங்கள் யாருக்கும் சொந்தமில்லாத எம்பெருமானுக்கே சொந்தமான அவனையே தலைவனாகக் கொண்ட அவனது அமைப்பு. அந்த அமைப்பில் எமக்கும் ஒவ்வொரு கடமைப் பொறுப்புக்களைத் தந்து, எங்களைக் கருவியாகக் கொண்டு அவன் செய்யும் திருவிளையாடல்கள் அனைத்தின் பலன்கள் அனைத்தும் அவனுக்கே என்பதனை உரக்கச் சொல்லி திருநாவுக்கரசுசுவாமிகளின் திருப்புகலூர்த் தனித்திருத்தாண்டகத் தேவாரம் ஒன்றுடன் என் இவ்வறிக்கையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவார் ஓடாதாரே
உருகிவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர்பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரோ
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே!

எனவே இறைவன் காட்டக் காணும் செயலை இலண்டன் திருக்கோயில் ஒன்றியம் காண்கிறது.

நன்றி! வணக்கம்!

வி. கணேசமூர்த்தி
இலண்டன் திருக்கோயில்கள் ஒன்றியச் செயலாளர்.

# 18th Saiva Conference on the Saturday 6th of May 2017

## Programme

| Time | |
|---|---|
| 09.00 am - 10.00 am | Pooja, Auspicious Lamp Lighting Veda Recital<br>Hoisting Nandi Flag Nathaswaram |
| 10.00 am - 10.20 am | Thirumurai recital by Shree Ghanapathy Temple –Pannisai group |
| 10.20 am - 10.25 am | Blessings by Vamadeva Vamarajah Kurukkal<br>*Priest of Highgate Murugan Temple* |
| 10.25 am - 10.30 am | Welcome Speech Mr. A. Vairavamoorthy, Chairman,<br>Highgate Murugan Temple |
| 10.30 am - 10.40 am | Session Chairman's Speech,<br>Mr. Nadaraja Satchithanathan, Founder London Sivan Kovil |
| 10.40 am - 11.10 am | Conference Souvenir Release |
| 11.10 am - 11.30 am | Speech Sivasiri R. Kamalanatha Kurukkal<br>*Priest of Nagapooshani Amman Temple, Enfield* |
| 11.30 am - 12.10 pm | Speech by Tamil Aruvi Sivakumar Sri Lanka |
| 12.10 am - 12.15 pm | Speech by Secretary Mr K V Kanesamoorthy |
| 12.15 pm - 12.55 pm | Thavathiru Kumarakurubara Swami Siravi Adheenam Kaurama Mataylam of India |
| **12.55 pm - 01.45 pm** | **Lunch** |
| 01.45 pm - 02.45 pm | Presentation of prizes and certificates, winning speeches and Thirumurai - Chaired by Dr Maheswaran and coordinated by Mrs. Sharmila Murali |
| 02.45 pm - 03.25 pm | Speech Dr. R. Lambotharan, Canada |
| 03.25 pm - 03.35 pm | Speech S.K Kuna – Athavan TV |
| **03.35 pm - 03.55 pm** | **Tea Break** |
| 04.00 pm - 05.00 pm | Speech Solventhar Dr. Suki Sivam, India |
| 05.00 pm - 05.20 pm | Thirumurai Recital by Mathangi Uthayakumar &<br>Sambavi Uthayakumar |
| 05.20 pm - 05.40 pm | Speech by Sivasiri Saiva Pulavar Vasanthan Kurukkal<br>*Priest of Katpaka Vinayagar Temple Walthamstow* |
| | **Navalar Aranku** |
| 05.40 pm - 06.40 pm | Saiva Karutharangu – Presided by Mr. S. Ganeshkumar<br>*Founder & Chairman of Hindu Youth Forum*<br>colaborated by members |
| 06.40 pm - 07.00 pm | Dance performance by students of Sakthi Fine Arts<br>*(Disciples of Mrs Anusha Sajeev)* |
| 07.00 pm - 07.20 pm | Drama Ilford Selva Vinayagar Temple Elders Group |
| 07.20 pm - 07.40 pm | Dance performance by students of Mrs. Shantha Annapoorani<br>*(On behalf of Ilford Sri Selva Vinayagar Temple)* |
| 07.40 pm - 07.50 pm | Vote of Thanks by Mr. Nagarajah,<br>*Secretary of Highgate Murugan Temple* |
| 07.50 pm - 08.50 pm | Amirtha Ghanam by Sai Vignesh Group |
| 08.50 pm | Lowering of Nanthi Kodi and Vaazhlthu |
| 08.55 pm | Dinner |

# 18th Saiva Conference on Sunday the 7th of May 2017

## Programme

| Time | |
|---|---|
| 9.00 am to 9.45 am | Pooja, Auspicious lamp lighting, Hoisting Nandi flag |
| 9.45 am to 10.05 am | Recital of Thirumurais by London sivan kovil |
| 10.05 am to 10.10 am | Blessing by Chief Priest S Maheswarakurukkal London Sivan Kovil |
| 10.10 am to 10.20 am | Welcome speech Dr T Sriskandarajah, Chairman, London Sivan Kovil |
| 10.20 am to 10.40 am | Conference Souvenir release |
| 10.40 am to 10.50 am | ' Guru in Saiva siddhantam' Dr Vatshalan Santhirapala |
| 10.50 am to 11.00 am | Speech by Kumaran Sriskandarajah |
| 11.00 am to 11.10 am | Speech By Mrs Geetha Maheswaran |
| 11.10 am to 11.20 am | Speech by Selvi Annaniya Rajeethirakumar |
| 11.20 am to 12.00 am | Speech by Dr Lambotharan from Canada |
| 12.00 to 12.40 pm | Speech by Thavathiru Kumarakurubara Swami Siravi Adheenam Kaumara Matalayam of India |
| **12.40 pm to 13.30 pm** | **Lunch** |
| 13.30 pm to 14.40 pm | Presentation of prizes and certificates, winning speeches and Thirumurai Mr S. Pathmamokan, Dr T Sriskandarajah Cordinated Mrs Vaxala Gengatharan, Asst .Treasurer of London Sivan Kovil |
| 14.40 pm to 14.50 pm | Secretary speech Mr K V Kanesamoorthy |
| 14.50 pm to 15 30 pm | Thamilaruvi Sivakumar, Srilanka |
| **15.30 – 16.00 pm** | **Tea Break** |
| 16.00 pm 17.00 pm | Guest speaker Dr Suki Sivam of india |
| 17.00 pm to 18.20 pm | Appreciation for their community service **Samooga seelar** Mr Maheshan, Mr R Pathmanabaiyar, Mr S Srirangan, Late Mr S Selvarajaha And Mr S Ganeshkumar Saivavalar Oli |
| 18.20 pm to 18.40 pm | Drama: Children of Merton Tamil School, Shree Ghanapathy Temple . |
| 18.40 pm to 18.50 pm | Vote of thanks: Dr S Rajasundaram, Secretary of London Sivan Kovil |
| 18 50 – 19.10pm | Honouring of conference delegates, |
| 19.10 – 20.10 pm | Amuthaganam by Sai vignesh |
| 20 10 | Lowering of the Nanthi flag and prayer |
| 20.15 Dinner | |
| ***14 .30 – 15. 45** | Parallel session in English by Dr R.Lambotharan , based on key questions about Saivaism |

இந்து சமயமா? சைவ சமயமா? சிந்துவெளி நாகரீகம் கூறும் பதில்!
மறுபிறவி என்பது உண்மையா? அல்லது கற்பனையா?
ஆகமம் படித்தால் இறைவனை நெருங்கலாமா?
திருச்சிற்றம்பலத்திற்குள் ஒளிந்திருக்கும் ரகசியம்!
பிராமணன் என்பவன் யார்?
அவர்களுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது?

உ
குருவே துணை

Dr. Thavathiru Kumaragurubara Swamigal
HEAD OF THE MUTT
Siravanampuram
KAUMARA MATALAYAM



முனைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகள்
மடாதிபதி
சிரவணபுரம்
கௌமார மடாலயம்

<u>*வாழ்த்துரை*</u>

24.03.2017

அண்ட சரசரங்களுக்கு எல்லாம் ஒரு முதல் ஆகிய சிவபிரானின் சைவநன்னெறி தொல்பழங்காலத்தில் இந்த உலகம் முழுவதிலும் சிறந்து விளங்கியது. எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்தப்பழைய நிலை காலவேறுபாட்டால் இடையில் சற்று மங்கி இப்பொழுது மீண்டும் உலகம் முழுவதிலும் செழித்து வளர்கிறது. அந்த வகையில் பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் சமயப்பணி மிகமிகப் பாராட்டற்பாலது.

உலகியற் காரணங்கள் பற்றித் தத்தம் தாய்நட்டை விட்டுக் கடல்தாண்டி மேல் நாடுகளில் குடியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையிலும் தம் தாய்மொழியையும் ஆன்மீகத்தையும் விட்டுவிடாத பண்பாடு போற்றுதற்குரியது. கடவுள் வழிபாட்டில் ஈடுபடுகின்ற எல்லோரும் சடங்குகளின் முழுமையான குறிப்பிட்டுப் பொருளையும் வழிபாட்டு மரபுகளின் வேறுபட்டுக் காரணங்களையும், சமய சித்தாந்தங்களையும் முற்றிலுமாக ஐயந்திரிபரத் தெரிந்துகொள்ள வேண்டியது இல்லை. ஈசன்பால் நிலையாக உள்ளன்பு கொண்டு முழுஈடுபாட்டுடன் வழிபட்டால் போதும் என்றாலும் என்ன செய்கிறோம் ஏன் செய்கிறோம் என்பதைப் பற்றிய அடிப்படை அறிவு கூட இல்லாமல் செய்வதைவிட இயன்ற அளவு புரிந்துகொண்டு செய்தல், **“ சொல்லிய பாட்டின் பொருளறிந்து சொல்வதைப் போல”** சிறப்புடையது.



சின்னவேடம்பட்டி (அஞ்சல்), கோயமுத்தூர் - 641 049. தமிழ்நாடு : 0422 - 2666370, : 98421 - 66373
Chinnavedampatti (P.O) Coimbatore - 641 049. Tamilnadu. E-mail : kaumaramutt@gmail.com | www.Kaumaramutt.in

இவ்வகையில் நம் வழிபாட்டுச் சடங்குகள் இக்காலத்தில் சிலர் செய்வதைப் போல பொருளற்ற மூடத் தனங்களாக ஆகிவிடாமல் புரிந்துகொண்டு , பக்தியை வெளிப்படுத்தும் சாதனங்களாக அமைய இன்றியமையாத கல்வியைத் தருவது சீரிய சமயப்பணி ஆகும். இந்த அடிப்படைக் கல்வி தான் ஒரு சமயத்தை உணர்வு பூர்வமாகச் செறிந்து வளரவைக்கும். இந்த அரிய சைவத்திருப்பணியில் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் தொடர்ந்து ஈடுபட்டு வருவது பெரிதும் மகிழச்சிக்குஉரியது.

சைவ சமயத்தற்குப் பொது நூலாகிய வேதங்களையும் சிறப்பு நூலாகிய ஆகமங்களையும் பற்றிய செய்திகளை ஆய்வுப் பொருளாகக் கொண்டு நடத்தப்பெறும் இந்த பதினெட்டாவது மாநாடு சிவமேயாகத் திகழும் குருவருளாலும் மங்களகரமாக நிறைவுற்றுச் சைவமும் தமிழும் தரணியெலாம் பரவ நல்ல வழிகாட்டியாக அமைய வாழ்த்துகிறோம்.

அண்ணல் அரன்நெறிதான் ஆங்கில நல் நாட்டினொடு
மண்ணல்பல் தேயத்தும் மாண்படைய – என்றும்
பிரித்தனின் கோவில்ப் பெருமன்றம் எங்கெங்கும்
விரித்தபுகழ் பெற்றுயர்க வே.

அன்புடன்

உ

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகாசந்நிதானங்கள்
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்


**சாந்தலிங்க இராமசாமியடிகள்**

பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607994 / 995
webpage: www.sivasiva.in




சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Holy Kailash Heritage Meikandar
Heirarchy - Kailai Guru Mani - His Holiness


**Dr. Santhalinga Ramasamy Adigal**

Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone: 0422-2607994 / 995
Email : perurmutt@yahoo.com


*குருமுதல்வர் (ஆதீனத்தலைவர்)*
Maha Mandalesvar
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்*
Thavathiru Santhaliga Adigalar Holymutt

**புரவலர் - Patron**

*உலக சைவர் பேரவை*
World Saiva Council
*தமிழகத் துறவியர் பேரவை*
Tamilnadu Saints Forum
*வளர்தமிழ் இயக்கம்*
Valartamil Iyakkam

**தலைவர் - President**

*சத்வித்யா சன்மார்க்க சங்கம்*
Sathvidhya Sanmarga Sangam
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்*
Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி*
Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி*
Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School
*ஞானாம்பிகை நுழைவுரிமைப் பள்ளி*
Gnambikai Matriculation School
*தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ் பள்ளி*
Thavathiru Aarumuga Adigalar Tamil School
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை*
Thavathiru Santhalinga Adigalar Memorial Trust
*தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை*
Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust

**மாண்புசார் உறுப்பினர்**
Honourary Member

*விசுவ இந்து பரிசத்- அறவழிகாட்டும் ஆன்றோர் பேரவை*
VHP - Kendiriya Marg Darsak Mandal

*ஆச்சார்ய சபா* - Aacharya Sabha

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

ஈழத்தமிழர் திருமுறையை ஏற்றுப் போற்றிச் சிந்திப்பார்
வாழ இலண்டனில் வதிந்து மரபோடு உயர்ந்த திருக்கோயில்
சூழ அமைத்து திருத்தொண்டு செய்தே இறைவன் திருவடியில்
தாழத்தகு பத்திமையாலே தழைப்பார் தம்மை வாழ்த்துகின்றோம்.

திருமுறை நெறியே சிவநெறியாய் தேர்ந்து அன்பாலே பாடிடுவார்
அருமறையதுவே எனும் ஆறுமுகநாவலர் அருட்சீர் போற்றிடுவார்
குருவருள் திருவருள் ஓங்கிடவே கும்பிட்டேத்தி கோயில்வளம்
வரும் நந்தமிழர் வளமைமிகு வாழ்வுபெறவே வாழ்த்துகின்றோம்.

செந்தமிழ் நெறியில் வாழ்வியலை தெய்வ வழிபாட்டு அருளியலை
சிந்தித்து ஏற்கும் நமை மேற்குலக சித்தாந்த மாநாட்டுக்கு அழைத்து
வந்தனை வழிபடாற்றி அன்பால் வளரும் சைவத் திருக்கோயில்
முந்தும் பணியில் அன்பர்கள் முயன்று செய்பணியை வாழ்த்துகின்றோம்.

தெய்வத் தமிழே அருமறையாய் திருமுறை வகுத்த நெறியுணர்ந்து
உய்வை நாடாது அயல்மொழியில் உணரா வழிபாட்டினர் மயங்காது
மெய்மைதரும், ஆறுமுகநாவலர் வழியே விரும்புந்தொண்டர்
உய்வுக்குரிய வழிபாட்டில் உவந்து வாழ்வோர் பணிவாழி

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளைய பட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு

☎ : +91-422 - 2607995, 📠 : 2607994
📱 : +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Kailai - Punithar
**Dr. Marudhasala Adihal**
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
☎ : +91-422 - 2607995, 📠 : 2607994
📱 : +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com

**குருமுதல்வர்**
அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தள், உதகை

**இளையபட்டம்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

**செயலர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்வித்ய சன்மார்க்க சங்கம்

**இயக்குநர்**
சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி

சீர்வளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி

தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

**இணைச் செயலர்**
தமிழகத் துறவியர் பேரவை

**மாவட்டத் தலைவர்**
உலகத் திருக்குறள் பேரவை

**தாளாளர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

**முதல்வர்**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

**ஒருங்கிணைப்பாளர்**
தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

**உறுப்பினர்**
தமிழகப் புலவர் குழு

**மேனாள் உறுப்பினர்**
ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்

## வாழ்த்துரை

பத்தி இலக்கிய காலங்களில் திருமேனி தீண்டி கருவறைக்குள் சென்று தமிழ்ப்பாமாலைகள் பாடித் தொடர்ச்சியாக வழிபாடு செய்து வந்ததை அறிகின்றோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வந்த இவ்வழிபாடுகளை மீண்டும் வலியுறுத்தும் வண்ணம் 1953இல் சீர்வளர்சீர் குன்றக்குடி அடிகளாரின் வழிகாட்டுதல் வண்ணம் பேரூரதீனம் சீர்வளர்சீர் பேரூரடிகளாரின் பெருமுயற்சியால் தமிழருச்சனை வழிபாடு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. 1954இல் முதன்முதலாகத் திருக்குட நன்னீராட்டு திருநெறிய தெய்வ ஒண்தீந்தமிழால் நடத்தப்பெற்றது. இன்று பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்களின் திருக்குட நன்னீராட்டு தமிழ்நெறியில் நடைபெற்று வருகிறது.

இந்தியா மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியசு, தென்னாப்பிரிக்கா, இலண்டன், கனடா போன்ற பல நாடுகளிலும் தமிழ் வழிபாடு பரவி வருகிறது. இத்தகைய திருமுறைகளையும் தமிழ் வழிபாட்டு முறைகளையும் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்று நாம் ஆண்டுதோறும் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறோம். அவ்வகையில் பிரித்தானிய சைவத்திருக்கோயிலகள் ஒன்றியம் 1998ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்குத் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீனம் வழிகாட்டுதலாக அமைந்தது. ஐந்தாவது உலக மாநாடு தஞ்சாவூரில் நடைபெற்ற போது இலண்டன் சிவன் கோவில் சச்சிதானந்தம் அவர்கள் பேரூரடிகளாரைச் சந்தித்துப் பேசிய போது இக்கரு உருவானது. பேரூரடிகளாரே முதல் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். அதில் கருவறையில் தமிழ் ஒலிக்க வேண்டும் என்பது குறித்து பேசப்பட்டது.

நாமும் பலமுறை இம்மாநாட்டிற்குத் தலைமையேற்றுச் சிறப்பித்திருக்கின்றோம். தற்போது பதினெட்டாவது முறையாக நடைபெறும் இம்மாநாட்டிற்கு சிரவையாதீனம் குருமகாசந்நிதானங்கள் தலைமை தாங்க உள்ளார்கள். அவ்வகையில் இச்சிறப்பான மாநாட்டை ஏற்பாடு செய்த தலைவர் கோபாலகிருட்டிணன், செயலர் கணேசமூர்த்தி, நிர்வாகக்குழுவினர் உள்ளிட்ட அனைவரும் அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளும் அருட்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி கயிலைக்குருமணி முதுமுனைவர் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அவர்களின் குருவருளும் பெற்றுத் திகழ வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள,
[signature]



உ
ஸ்ரீ குருப்யோ நம:
கந்தன் பாதம் கனவிலும் துணை செய்யும்

**சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி**

**சிவஸ்ரீ S.K. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர்**

ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்
அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷி - ஸுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

---

உ
சிவ சிவ

## வாழ்த்துரை

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றிம் ஆண்டுதோறும் ஒரு கருத்தரங்கம் நடத்திவருவது என்பது சைவமக்கள் அனைவரும் அறிந்த ஒரு விஷயம். அதுபோலவே இவ்வாண்டும் 18வது கருத்தரங்கம் ''வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்'' என்ற உயரிய கருப்பொருளில் அமையவிருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம்.

பழம்பெரும் இலக்கியங்களும், நம் சமயத்தின் மூல இலக்கியங்களும், சமயத் தலைவன் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டவையுமாகிய வேதாசிவாகமங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் திறத்தன. 'வேதமொடாகமம் மெய்யாம் இறைவன் நூல்' என்ற திருமூலர் வாக்கும், 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' என்ற சேக்கிழார் பெருமானின் திருவாக்கும் இவற்றின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

இம்மரபில் ஆலயவழிபாடு மிகவும் முக்கியமானதாக, உயர்ந்ததாகக் கொண்டாடப்படுகிறது. உலகநன்மைக்கும் ஆலயவழிபாட்டுக்கும் உள்ள தொடர்பை 'திருக்கோயிலிழிவு' என்ற பகுதியில் படம்பிடித்துக் காட்டுகிறார் திருமூலர் பெருமான். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' 'கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்பது போன்ற அருள்மொழிகளும், 'திருக்கோயில் உள்ளுறையும் மூர்த்திதனைச் சிவனெனவே கண்டவர்க்கு அவனுறைவான் அங்கே' 'சிவனுறையும் கோயில் சூழ்ந்து தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றே' 'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே' என்ற வாக்கியங்களும் ஆலயவழிபாட்டின் மேன்மையையும் அவசியத்தையும் விளக்குகின்றன.

அறிவில் சிறந்த பெரியோர்களைக் கொண்டு நம் சமயக் கருத்துக்களை காலத்திற்கேற்றவாறு விளக்கிக் கூறும் வண்ணம் இம்மாநாடு அமையவும், மக்கள் அனைவரும் இதன்மூலம் பயன்பெற்றுத் தங்கள் வாழ்வை வேதசிவாகமமரபின் வண்ணம் அமைத்துக்கொண்டு அமைதியான, ஆனந்தமான வாழ்வை வாழ்வதற்கு உறுதுணையாக அமையவும், இதுபோன்ற அறப்பணிகளை 'பிரித்தானியத் திருக்கோயில்கள் ஒன்றியம்' திருப்பரங்கிரிதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருவடிக் கமலங்களையும், மதுரையம்பதியில் வீற்றிருந்தருள் அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணலின் பொற்றாள்மலர்களையும் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

க. ராஜா பட்டர்


26-4-2017
திருப்பரங்குன்றம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம்
மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

## சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

## மாண்புமிகு டி.எம். சுவாமிநாதன் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



"வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்" என்ற தொனிப்பொருளில் இலண்டன் மாநகரில் நடைபெறவுள்ள 18வது சைவமாநாடு சிறக்க எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற நோக்கோடு உலகின் பல நாடுகளுக்கும் சென்ற நம்மவர் எமது சமயம், ஆசாரம், பண்பாடு, கலாசாரம் என்பவற்றைப் பேணிவருவதோடு பல ஆலயங்களையும் கட்டி சமயத்தை வளர்த்து வருவது போற்றுதற்குரிய விடயமாகும்.

பிரித்தானிய சைவத்திருக்கோயில்களின் ஒன்றியம் மிக அருமையான தொனிப்பொருளில் சைவமாநாட்டை முன்னெடுப்பது பாராட்டிற்குரிய விடயமாகும். எமது பழம்பெருமை மிக்க வேத ஆகம சாரத்தையும் ஆலயக் கிரியைகள் பற்றிய முறையான அறிவையும் இளம் சமூகத்திற்கு இம்மாநாடு போதிக்கும் என நம்புகின்றேன்.

18வது சைவ மாநாடு சிறக்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுதல் செய்து வாழ்த்துகின்றேன்.

**டி.எம். சுவாமிநாதன்**
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

**2017.04.18.**

**சிவனருளால் சிவநெறி ஓங்குக**

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் நடாத்தும் 18 ஆவது மாபெரும் சைவ மாநாடு மாண்புபெற மனங்கொண்டு வாழ்த்துகின்றேன்.

சமயம் என்பது மக்களை தூய நேரிய வாழ்வு வாழ வழிகாட்டும் ஒரு சன்மார்க்கமாகும். வீட்டு நலத்தையும், நாட்டு நலத்தையும் பேணுவதே சமய வாழ்வின் நோக்கமாகும். அருளாளர்களும் ஆலயங்களும் இந்நிலை உணர்ந்து பணியாற்ற வேண்டியது காலம் அவாவுறும் நற்கடனும், சிரமேற்கடமையமாகும்.

சைவம் என்ற சொல்லுக்கு அன்பு என்று பொருள். அதுவே கருணையாகவும், இரக்கமாகவும், பாசமாகவும் மலர்கிறது. பிறவுயிர்பால் அன்பு காட்டலே சைவநெறியாகும்.

"எவ்வுயிருக்கும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"

என்று தாயுமான சுவாமிகள் பாடினார்.

"**வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும்**" என்ற தொனிப்பொருளில் நடைபெறும் இம்மாநாடு சைவ உலகிற்கும் உலகம் முழுமைக்கும் மேன்மைகொள் சைவநீதியை விளங்கச் செய்ய வேண்டும் என்பது எனது வேணவா. வேத சிவாகம மரபுகளும் ஆலய வழிபாடுகளும் அகாலமரணம் அடைந்துவரும் அபாயச்சூழலில் நாமும் குறிப்பாக இளைய தலைமுறையினரும் வாழ்ந்து வருவது பெரும் சாபக்கேடாகும். இத்தகைய சூழ்நிலையில் பெருந்திருப்புமுனையாக அருமையான தொனிப்பொருள் தாங்கி இம்மாநாடு கைகூடப்பெற்ற திருவருளை வணங்குகின்றேன்.

ஒரு சமூகத்தை நன்னெறியில் நடத்திச்செல்ல சட்டம் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு சமயமும் அவசியமாகும். சட்டப்புத்தகங்களில் இருக்கும் சட்டங்களிலும் பார்க்க சமயப் புத்தகங்களில் இருக்கும் சட்டங்கள் மிகவும் உன்னதமானவை. இதனைக் கண்டுகொள்ள வேதசிவாகம மரபுகளை நாம் பேண வேண்டும்.

ஆல்யவழிபாடுகள் அர்த்தம் இழக்கும் போது சமூகத்தில் அழிவுகள் நர்த்தனம் ஆடுகின்றன. எங்கும் கோயில், எல்லாம் கோயில், உலகமே கோயில், உள்ளமே கோயில் என்ற முறையில் இறை நம்பிக்கையை மக்கள் வாழ்வில் இறைத்த சமயம் சைவமாகும். ஆலய வழிபாட்டில் அமைதியும் இன்பமும் பிறக்கின்றது. ஆலயத்தின் கண் அமைந்தவை வெற்றுச்சிலைகளாக இல்லாமல் உட்பொருள் கொண்ட தத்துவச்சிலைகளாக காட்சி தருகின்றன. அத்தகைய ஆலயவழிபாட்டில் அகவிருள் நீக்கி அகிலத்தை வாழ்விக்க வேண்டியது நம்சமயம் சார்ந்த சமூகப்பெறுமானமாகும்.

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியம் அங்குள்ள இருபதுக்கும்மேற்பட்ட சைவாலயங்களை ஒருங்கிணைத்து சமயப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்து வருவது போற்றுதற்குரியதாகும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என சமயப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துள்ள ஒன்றியத்தின் தலைவர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களும் அவருக்குத் தோள் கொடுக்கும் செயற்குழுவினரும் நன்றிக்கும் பாராட்டுக்குமுரியவர்கள். கிறிஸ்தவம் நிலைகொண்ட பிரித்தானிய சாம்ராச்சியத்தில் சைவத்தை நிலைகொள்ள வைக்கும் இவர்தம் எண்ணிய கருமம்முடிக்கும் திண்ணிய நெஞ்சம் கண்டு வியக்கின்றேன்.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

**SIVAGNANAM SHRITHARAN M.P**
M.Ed.,B.A.,PGDE(Me).,Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Sri Lanka.
☎ : 021 3207584, 021 2280024
Fax : 021 2221595, 021 2280024
Mobile : 077 6913244
Email : shritharanmp@gmail.com
Web : www.shritharan.com

கால்கோளாகும் இம்மாநாடு பல்வேறு நிலைகளில் இன்னலுறும் ஈழத்தமிழினத்திற்கும் புலம்பெயர் தமிழ் சமூகத்திற்கும் உலகம் முழுமைக்கும் அமைதியும், சமாதானமும் நிறைந்த சுபீட்சமான வாழ்வினை வழங்கக்கூடிய நல்லவிழுமியங்களை நவில வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். மாநாடு இலங்கிட தொனிப்பொருள் துலங்கிட வண்ணமலர் மணம் கமழ்ந்திட ஈசன்பாதம் பணிந்து இன்பமே சூழ எல்லோரும் வாழ வாழ்த்துகின்றேன்.

" வேதநெறி தழைத்தோங்குக
மிகு சைவத்துறை விளங்குக……."

நன்றி ,

சிவஞானம் சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர் – மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு,
கிளிநொச்சி.

சி.சிறீதரன்,
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
இல : 882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

சீனித்தம்பி யோகேஸ்வரன் (பா.உ)
**SEENITHAMBY YOHESWARAN (M.P)**

அலுவலகம் : இல.84, பார் வீதி,
முகவரி மட்டக்களப்பு..
Office Address : **No.84, Bar Road, Batticaloa.**

Mobile 077-6034559

அலுவலகம் Office: 065-2228273, 065-2229868, 011-2778560
பக்ஸ் Fax: 065-2229868

E-mail : yoheswaran.mp@gmail.com

பாராளுமன்ற உறுப்பினர் - மட்டக்களப்பு மாவட்டம்
**MEMBER OF PARLIAMENT - BATTICALOA DISTRICT**

Date :20.04.2017

## பிரித்தானிய சைவத்திருக்கோயில் ஒன்றியத்தின் 18வது சைவ மாநாடு வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டில் கடந்தகால அசாதாரண சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து புலம் பெயர்ந்த எமது தமிழ் உறவுகள் தாம் புலம் பெயர்ந்து வாழும் மேலைநாடுகளில் எமது சமயம், பண்பாடுகளைப் பாதுகாப்பதில் பாரிய பங்காற்றியுள்ளனர் என்றால் மிகையாகாது.

அந்த வகையில் ஒரு காலத்தில் எமது ஈழநாட்டில் எமது சமயத்தையும், கலாசார பண்பாட்டினையும், மொழியையும் அழித்து தமது சமயத்தையும் மொழியையும் பணபாட்டையும் கட்டாயப்படுத்தி வளர்த்த இலங்கை நாட்டினை ஆண்ட பிரித்தானிய அரசின் மண்ணில் புலம் பெயர்ந்து குடியமர்ந்த எம் உறவுகள் எமது சமய பண்பாடுகளை வளர்க்கும் நோக்கோடு ஆங்காங்கே சைவக் கோயில்களை ஸ்தாபித்து அதன் மூலம் எமது சமயத்தினை மேம்படுத்தியதோடு "மக்கள் சேவையே மகேசன் சேவை"என்ற வகையில் கடந்த யுத்த சூழலாலும், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட எமது ஈழ உறவுகளின் துயர் துடைப்பிற்காக பல ஆயிரக்கணக்கான பவுண் நிதிகளை தமது ஆலயம் மூலமும் பிரித்தானியாவில் உள்ள அனைத்து சைவ ஆலயங்களையும் ஒன்றிணைத்து அதன் மூலம் உருவான பிரித்தானிய சைவத்திருக் கோயில் ஒன்றியம் முலமும் மாபெரும் சமூக சேவையினை வழங்கி வருவதையாரும் மறுக்க முடியாது.
பிரித்தானிய சைவ திருக் கோயில் ஒன்றியத்தில் பல சைவ ஆலயங்கள் இணைந்துள்ள நிலையிலும் நான் அறிந்த வரை லண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன் லூசியம் சிவன் ஆலயம், வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம், வெம்பிளி விநாயகர் ஆலயம், இல்பேர்ட் செல்வ விநாயகர் ஆலயம், நாகபூசனி அம்மன் ஆலயம் போன்றவை எமது இலங்கை நாட்டில் துன்புறும் தமிழ் உறவுகளுக்கு பல வகையிலும் நிதி, பொருள் உதவிகளை வழங்கி வருகின்றனர். இவ்வகையில் ஆலய தர்மஹர்த்தா சபையினருக்கும் இவ்வாலயங்களின் புனித பணிக்கு உதவி நல்கும் சைவ பெருமக்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வேளை இச்சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் தற்போதைய பெரும் தலைவரும் கற்பக விநாயகர் ஆலய அறங்காவலரும் மதிப்பிற்கு உரிய உயர்திரு. எம். கோபாலகிருஸ்ணன் அவர்கள் பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 18வது சைவ மாநாடு ஒன்றினை ஏற்பாடு செய்து தலைமை ஏற்று நடாத்துவதை இட்டு அவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். கடந்த 2009ம் ஆண்டு எமது ஈழநாட்டில் வடமண்ணில் அரசால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலையில் தமது உயிர்களைத் தியாகம் ஆக்கிய அனைத்து தமிழ் உறவுகளுக்காகவும் 18.05.2015இல் பிர்த்ததானிய சைவ திருக்கோயில்கள் ஒன்றியம் ஆத்ம சாந்தி வேண்டி இந்திய நாட்டின் ஆன்மீக புனித பூமியான வாரணாசியில், (காசி) புனித கங்கா நதியில், மாணிக்கவாசக சுவாமிகள் ஆதீன சுவாமி மூலம் ஆத்ம சாந்தி கிரிகைகள் நடாத்தி பின் பிராமணர்களுக்கும், துறவிகளுக்கும் உணவும் தானமும் வழங்கி பிரிந்த ஆத்மாக்களுக்கு ஆற்றிய புனித கைங்கரியங்களுக்காக ஈழமக்கள் அவரை பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேவேளை இன்று நடாத்தப்படும் 18வது சைவ மாநாடும் அதன் மூலம் வெளிவரும் மாநாட்டு மலரும் எமது சைவத்தினையும் அதன் கலாசார, பண்பாட்டு பாரம் பரியத்தினையும் பிரித்தானியா மட்டும் அன்றி இவ் உலகம் முழுவதும் கொண்டு செல்வதோடு "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாக்கியத்தினை வலுப்படுத்த ஊன்றுகோலாக அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்தித்து நல்வாழ்த்து கூறுகின்றேன்.

சீ.யோகேஸ்வரன்
பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு மாவட்டம், இலங்கை
தலைவர் - மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை
தலைவர்- கிழக்கு இந்து ஒன்றியம்.

சிவமயம்

# வாழ்த்துச் செய்தி



பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்தும் 18 வது சைவ மாநாடு மே 6 மற்றும் 7ஆம் திகதிகளில் "வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடுகளும்" என்னும் கருப் பொருளைக் கொண்டு நடை பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். 18 வருடங்கள் தொடர்ந்து இம்மாநாட்டை சிறப்பாக நடத்துவதென்பது இலேசான விடயமல்ல.மிகவும் போற்றத்தக்கது. அன்றிலிருந்து இன்றுவரை இதற்காக மிகவும் கஸ்ரப்பட்டு உழைத்த, உழைத்து வருகின்ற அத்தனை பெரியவர்களையும் வியந்துபோற்றி வாழ்த்துகிறேன், வணங்குகிறேன். இந்த மாநாடுகளால் பயன் பெற்ற ஆயிரக்கணக்கான குழந்தைகளையும், இளைஞர்களையும் எண்ணிப் பார்க்கிறேன்.

பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்திய முதலாவது சைவ மாநாடு 1998, ஜூலை 11 மற்றும்12 ஆம் திகதிகளில் "மேற்குலகில் சைவசமயம்" என்ற தொனிப்பொருளில் Catfort, Lewisham Theatre ல், காலை 9.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை இரு நாட்களும் மண்டபம் நிறைந்த சனக் கூட்டத்தோடு நடைபெற்றமை இன்னும் எனக்கு நல்ல நினைவிலிருக்கிறது. மிகவும் வெற்றி பெற்ற மாநாடு, அதன் வெற்றியில் ஒன்று தானே தொடர்ச்சியாக மாநாடுகள் இடைவிடாமல் நடைபெற்று இப்பொழுது 18 ஆவது மாநாடு நடைபெறுவதுமாகும். அந்த முதலாவது மாநாட்டிற்கு இலங்கையிலிருந்து நானும் அருள்மொழியரசி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், பொறியியலாளர் கணேசலிங்கம் ஆகியோர் பங்குபற்றியிருந்தோம். அதிலிருந்து பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்திய ஏழு சைவமாநாடுகளில் தொடர்ச்சியாக பங்குபற்றும் பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன். அதற்காக எல்லாம்வல்ல எம்பெருமான் சிவபிரானைப் போற்றுவதுடன் லண்டனுக்கு என்னை அழைத்த ஆலயங்களின் அறங்காவலர்களையும், சங்கங்களையும், அவ்வவ்வாண்டுகளில் பிரித்தானியா சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் நிர்வாகிகளாக இருந்த அனைத்துப் பெரியோர்களையும் நன்றியுடன் நினைத்துப்பார்க்கிறேன்.

இவ்வாண்டும் இம்மாநாடு மிகச்சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை. இதனையொட்டி சிறந்த மாநாட்டு மலர் வெளிவருகின்றது.
இவையனைத்திற்குமாக மிகவும் பாடுபடுகின்ற தலைவர், செயலர், பொருளர் உள்ளிட்ட மாநாட்டு நிர்வாக குழுவினரையும் மலாசிரியராக இருந்து சிறப்பாக கடமையாற்றும் சிவஸ்ரீ.சர்வேஸ்வரக்குருக்கள் (வசந்தன் ஐயா) மற்றும் மலர் குழுவினரையும் ஏனையோரையும் பாராட்டுவதோடு சைவமாநாடு தன் குறிக்கோளினை அடைந்து நன்கு வெற்றிபெற மனதார வாழ்த்துகிறேன்.

தமிழருவி த.சிவகுமாரன்
இலங்கை

**හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව**
**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**Department of Hindu Religious and Cultural Affairs**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 011-2552643 | සහකාර අධ්‍යක්ෂ (පාලන)<br>உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)<br>Asst. Director (Admin) | 011-2503740 | පොදු<br>பொது<br>General | [redacted]<br>011-2552641 |
| නියෝජ්‍ය අධ්‍යක්ෂ<br>பிரதிப் பணிப்பாளர்<br>Deputy Director | 011-2505403 | සහකාර අධ්‍යක්ෂ (කෝවිල්)<br>உதவிப் பணிப்பாளர் (ஆலயம்)<br>Asst. Director (Temple) | 011-2552642 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax | 011-2552825 |
| | | සහකාර අධ්‍යක්ෂ (දහම්පාසල්)<br>உதவிப் பணிப்பாளர் (அறநெறி)<br>Asst. Director (Arancry) | 011-2554278 | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| ගණකාධිකාරී<br>கணக்காளர்<br>Accountant | 011-2552824 | පරිපාලන නිලධාරී<br>நிருவாக உத்தியோகத்தர்<br>Administrative Officer | 011-2554975 | විද්‍යුත් තැපැල<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudir@yahoo.com |
| මගේ අංකය<br>எனது இல<br>My No | | | | දිනය<br>திகதி<br>Date | 20.04.2017 |


தலைவர்,

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

தங்களது 2017.04.19 ஆம் திகதிய கடிதம் சார்பாக.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலங்கை வாழ் இந்து மக்களுக்கு பயன் தரும் வகையில் கடந்த 25 வருடங்களாக பஞ்சாங்கம் வருடாந்தம் வெளியிடப்பட்டு வருகின்றது.


திருக்கணித பஞ்சாங்கமே மிகவும் திருத்தமான கணிப்பினை கொண்டுள்ளதால் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பஞ்சாங்கங்கள் யாவும் திருக்கணித முறையில் கணிப்பீடு செய்யப்பட்டவையே என்பதனை தங்களது கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

**அ. உமாமகேஸ்வரன்,**
பணிப்பாளர்.

**அ. உமாமகேஸ்வரன்**
**பணிப்பாளர்**
**இந்து சமய கலாசார**
**அலுவல்கள் திணைக்களம்,**
**248-1/1, காலி வீதி கொழும்பு-04**

248-1/1, காலி வீதி, கொழும்பு – 04. 248-1/1, ගාලු පාර, කොළඹ - 04 248-1/1, Galle Road, Colombo -04.



# SHREE GHANAPATHY TEMPLE

125-133 Effra Road, London, SW19 8PU
Tel: +44 (0)20 8542 4141 / 8542 7482
www.ghanapathy.co.uk

ஓம்

கணபதி துணை

**பதினெட்டாவது சைவமாநாடு சிறப்புடன் நடைபெற**

**திருவருள்மிகு விம்பிள்டன் விநாயகர் ஆலய தேவஸ்தான ஆசிச்செய்தி**



வந்தோரை வாழவைக்கும் சீர்மேவு இங்கிலாந்து நாட்டிலே, கடந்த காலங்களில் உருவாகிய ஆலயங்கள் போற்றுதலுக்கும் பெருமைக்கும் உரிய பெரும் புகழ் பெற்ற திருக்கோவில்களாக உலகம் முழுவதும் அறியப்பட்ட ஆலயங்களாக விளங்குகின்றன. இதற்கு அந்தந்த ஆலயங்களின் திருவருள் பிரவாகமும், அல்லல் படும் மக்களின் தேவைகளை, வேதனைகளை தீர்த்து வைத்து, இறைவனுடைய திருவருளினை பெருகச் செய்வதிலும் ஆலய நிருவாகிகளின் பங்கும் காரணமாகும். தனியே பூஜை, அபிசேகம், திருவிழா என்றளவில் நிற்காமல் சைவசமயம், தமிழ்மொழி வகுப்புக்கள், இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் கலைகளையும் வளர்க்கும் கல்விக்கூடமாகவும் விளங்குவது சிறப்பு, தனித்தன்மை வாய்ந்தது.

அறிவு மிக்க இளம் தலைமுறையின் ஆன்மீக கேள்விகளை தீர்க்கும் வண்ணமாகவும், அவர்களை எமது கலாச்சார சம்பிரதாய நிகழ்வுகளை ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கவும், கற்றுணர்ந்த சிவாச்சாரிய பெருமக்கள், ஆன்மீக சொற்பொழிவாளர்கள் மூலமான விளக்கங்களை அவ்வப்போது வழங்கிவருதலையும் காணலாம். இத்தகைய செல்பாட்டின் சிகரமாக ஒவ்வொரு வருடமும் சைவ திருக்கோவில்கள் ஒன்றியம் நடாத்தும் சைவமாநாடு அமைகிறது.

மேலும் முதலாவது சைவமாநாடு 1998ல் எமது ஆலய அறங்காவளர் அமரர் திரு சின்னத்துரை இரத்தினசிங்கம் அவர்களாலும், இலண்டன் சைவ ஆலய ஒன்றிய அறங்காவளர்களாலும் மிக சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது இப்போது நினைவு கூறத் தக்கது. அது போன்றே முதலாவது சைவ மகாநாட்டில் கலந்து சிறப்பித்தவர் தமிழருவி சிவகுமாரன் அவர்கள்.

பெரியோர்களின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட சைவமகாநாடு இவ்வாண்டும் 6/5, 7/5 ஆம் திகதிகளிலே நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. தமிழ் நாட்டில் இருந்தும், ஈழவளநாட்டில் இருந்தும் சொற்பொழிவாளர்களும், சைவ ஆதீன மடாலய குருநாதர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கிறார்கள்.

அவ் வகையில் இவ்வாண்டு சைவமாநாடு தனித்தன்மையுடன் சிறக்க திருவருள் மிகு விம்பிள்டன் விநாயகப் பெருமான் திருப்பாதம் துணை செய்யும்.



சுபம்





**பிரதமகுரு சிவஸ்ரீ நா..விக்னேஸ்வரக் குருக்கள்**


**விம்பிள்டன் விநாயக் பெருமான் திருக்கோயில்**

வேழமுகத்து விநாயகனை தொழ
வாழ்வு மிகுந்து வரும்

# SHREE GHANAPATHY TEMPLE



# SHREE GHANAPATHY TEMPLE

**125-133 Effra Road, Wimbledon, London SW19 8PU**
Tel: 020 8542 7482 or 020 8542 4141 (Service Bookings & Priest)
07956 481588 (General Enquiries in English)
Website: www.ghanapathy.co.uk e-mail: enquiries@ghanapathy.com
www.facebook.com/sgtempleuk


**Opening Hours - 7 Days a Week: 9am – 10pm**
(Fridays: 8.30am-10.30pm. Festival Days: 9am-11pm)

**Daily Services: 10am, 12noon, 5pm & 8pm.**
**Special Abishekams (Ritual bathing of deity) :**
**Milk Abishekham every day at 11am**
Full Abishekhams on Fridays & Auspicious Days - 7pm, Sundays – 11am
Full Abishekhams can be booked by devotees on any day at 11am or 7pm


**Weddings, Civil Marriages (Registrations), Punyavaachanams (House cleansing ceremony), Pregnancy and Baby Blessing Ceremonies plus all other Samskara Ceremonies, Homams, Funeral Services, Last Rites & Thivasam (Death Anniversary Service) are performed by our priests.**


Guided tours for schools, teacher-training colleges, other educational establishments & religious groups, by appointment.

**Carnatic Vocal, Pann Isai, Violin, Bharathanatyam, Miruthangam, Tamil language (Merton Tamil School), GCSE & A-Level Hinduism, Yoga, Meditation classes and other religious-based cultural activities are available.**











Aum Muruga

**BRITTANIA HINDU (SHIVA TEMPLE TRUST**

**ESTABLISHED 1974, REGISTERED CHARITY NO: 269067**

**HIGHGATEHILL MURUGAN TEMPLE**

**200A, Archway road, London N6 5BA Tel:020 8348 9835 Fax: 020 8482 6508**

Email: admin@highgatehillmurugan.org Website highgatehillmurugan.org



அப்பாத்துரை வைரவமூர்த்தி

தலைவர்

உயர்வாசற்குன்று முருகன் ஆலயம்

திருச்சிற்றம்பலம்

## பதினெட்டாம் ஆண்டு சைவமாகாநாடு சிறப்பாக நடைபெற எமது வாழ்த்துக்கள்

"மயல் அற்று இருள் அற்று மாமனம் அற்றுக்
கயல் உற்ற கண்ணிதன்கை இணக்கு அற்றுத்
தயல் உற்றவரோடும் தாமே தாமாகிச்
செயலற்று இருந்தார் சிவவேடத்தாரே" (திருமந்திரம் 1662)

இந்தக் கோட்பாட்டில் நின்ற இறையடிசேர்ந்த சபாபதிபிள்ளை இம் மண்ணில் முதன்முதலில் உயர்குன்று முருகன் ஆலயத்தை நிறுவினார். இம்மண்ணில் வாழும் இந்துமக்களின் மனங்களில் சைவசிந்தாக்கோட்பாடுகளை பரப்பினார். மேலும் தமிழ்க் கடவுள் முருகப்பெருமானுக்கு கோயில் உருவாக்கிய பெருமை அவருக்கே உரியதொன்று. அவர் காட்டிய பாதையில் இந்த மண்ணில் ஊருக்கு ஒரு ஆயலமாக எழும்பிய வண்ணம் உள்ளன. வேற்று மனத்தினரும் மனம் ஒன்றி சைவக்கோயில்களுக்கு விரும்பிச்சென்று வழிபாடு செய்கின்றனர் பாடசாலை மாணவர்கள் விருப்போடு எம் ஆலயங்குளுக்கு வருகை தந்து சைவதத்துவங்களை அறிகின்றனர் இலண்டனில் நடக்கவிருக்கும் 18வது சைவமாகநாடு இளஉள்ளங்களை கவர்ந்து சாத்துவீகமாக எம் கொள்கைகளில் மனம் லயிக்க வழிவகுப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. வாழ்க சைவத்தமிழ் திருக்கோயில்கள் ஒன்றியம்.

புலம்பெயர்ந்த வாழும் எமக்கு பெருமை அளிக்கப் கூடிய வகையில் சைவதிருக்கோயில்கள் ஒன்றியத்தால் உருவாக்கப்பட்ட இந்த மகாநாடு இன்று தனது பதினெட்டாவது ஆண்டு நிறைவுவிழாவை சிறப்பாக கொண்டாடுவதையிட்டு இம்மண்ணில் வாழும் சைவத்தமிழ்மக்கள் பெருமைப்படாமல் இருக்கமுடியாது. சைவத் தமிழ் ஆலயங்கள் மனித நேயத்திற்கும் எம்மண்ணில் வாழும் எம் சந்ததியினருக்காகவும் குரல் எழுப்பி அவர்கள் அல்லல்களை நீக்க அதற்காகான உதவிகளை தொடர்ந்தும் செய்து வருகின்றதை எண்ணி நாம் பெருமையடையாமல் இருக்கமுடியாது. புலம் பெயர்ந்த தமிழர்கள், தாம் வாழ்கின்ற மண்ணில் பழம்பெரும் பாரம்பரியமான தமிழர் பண்பாடுகளையும், அவர்களின் கலைகலாச்சார விழுமியங்களையும், விதைத்து, அரும் பெரும் ஆலயங்களை எழுப்பி பரப்பி வருவது சைவத்துக்கும், தமிழ்க்கும் அவர்கள் செய்துவரும் மாபெரும் தொண்டு என்பதில் ஐயமில்லை. புலம் பெயர்ந்து வாழும் சைவத்திருமக்கள் பாரதியார் காட்டிய வழியில் நின்று தாம் வாழும் மண்ணுக்கும் வாழ்ந்த மண்ணுக்குமாக உழைக்கிறார்கள் என்றால் அது புகழ்ச்சியில்லை.

"ஊருக்கு உழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருத்துதல் யாகம்
போருக்கு நின்றிடும்போதும் - உளம்
பொங்கல் இலாத அமைதி மெய்ஞ்ஞானம்" என்று அன்று புரட்சிக் கவிஞன் பாரதிபாடினான்.

தமிழர் விழுமியங்களாகப் போற்றப்படும் பன்னிரு திருமுறைகளையும் பேணிக் காப்பாற்றி தமிழர் கல்வி கலாசாரம் வளர வருங்கால சமுதாயம் பணிபுரியு எனது வாழ்த்துக்கள்.

அன்புடன்
அ.வயிரவமூர்த்தி

உ
Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

## இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Dr. S.Rajasundaram

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharajah

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Sivathasan

**Community Service. Sub Committee Chairman**
Mr. T. Arulthas

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S. Yogarajah

K V. Kanesamoorthy
Dr.(Mrs.) V.M.Karunakaran
Mr. S.Parameswaran
Dr. S.Navaratnam
Mr. N. Sivasubramaniam
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co



I am very much humbled and blessed to provide this message on behalf of the London Sivan Kovil Trust for the Eighteenth Saiva Conference. Over the last twenty years, the Saiva Federation and its associated temples have taken the responsibility of ensuring Saiva devotees are able to practice their faith, enhance their bhakti, learn about their culture and divine language. We as a community should be pleased with the progress we have made together over these years.

The Saiva Federation has now grown to more than fifteen Saiva Temples, and expected to grow further in number in the near future. This growth has served to ensure that the majority of devotees, especially those based in South East of England, are able to easily practice and balance the demands of Western society whilst also re-energising and connecting with their inner eternal self by visiting an established temple relatively close by.

The London Sivan Kovil has witnessed a rise in attendance since its Maha-kumbhabishekham, 12th June 2011. The feeling of connection and association with the temple has grown in the hearts of many devotees of our beloved Lord Arunachaleshwara. The interest in attending temple festivities, functions and activities has highlighted a real desire of our community to make the temple an integral part of their life.

Despite everything that has been achieved across Southeast England over the last twenty years, we still have a big task ahead of us to ensure that the Saiva faith, practice and interest in our community is maintained and taken to the next level of understanding.

Although we have a high attendance of devotees across Southeast England we still need to tackle the challenge which is to ensure our community of devotees, especially those classified as youth, have a solid understanding of our rich Saiva traditions. Youngsters and young Saiva families must be helped to understand our religion and history. The reality is that if we were to survey all 'youth' who attend our temples', and questioned "what is Saivisim and who are the Nayanmaars?" we would most likely get a muted response, "I don't know". This is the reality and we need to take seismic measures to change this situation.

To achieve greater understanding of Saivism across Southeast England would require a co-ordinated effort across our society. The necessary change can't be achieved solely by the efforts of the Federation of Saiva Temples. It is absolutely imperative that we embrace all the Tamil Schools across Southeast of England and harness their regular structured interaction with our Saiva youth. We also need to embrace all the music examination boards and teachers across Southeast England to help us to raise greater awareness and understanding of the Saiva tradition.

We have yet to show our Youth the treasures of Saivism, and how its divine teachings/techniques can help them in a practical way in this lifetime and guide them on their spiritual path.

With the grace of Lord Arunachaleshwara we will be able to work together and achieve His divine will.

With Regards,
**Dr T Sriskandarajah, President of London Sivan Kovil Trust.**

உ
Love is God
**LONDON SIVAN KOVIL TRUST**
**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**
Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108
www.londonsivankovil.org.uk e-mail: sivan.kovil@yahoo.co.uk

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr. S. Somasegaram

**Secretary:**
Dr. S.Rajasundaram

**Asst Secretary:**
Mr. V. Krishnanandharajah

**Treasurer:**
Mr. S. Sukumar

**Asst Treasurer:**
Mrs. V. Gengatharan

**Building & Finance. Sub Committee Chairman**
Dr. S.Sivathasan

**Community Service. Sub Committee Chairman**
Mr. T. Arulthas

**Cultural Activity Sub Committee Chairman**
Mr. S.Yogarajah

K V. Kanesamoorthy
Dr.(Mrs.) V.M.Karunakaran
Mr. S.Parameswaran
Dr. S.Navaratnam
Mr. N. Sivasubramaniam
Mrs. R.Sritharan
Mr. S. Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc Dartford Branch
2. Lloyds Bank plc Billericay Branch
3. Natwest Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

உ
வித்யாபூஷணம், சிவப்பிரதிஷ்டா ஞானதிலகம், சிவாகமரத்தினம், குருமணி, ஜோதிடகணிதர், சிவாச்சார்ய திலகம்.
**சிவஸ்ரீ சபா. மகேஸ்வரக்குருக்கள் (B. A.)**
(பிரதம சிவாச்சார்யார்)
ஸ்ரீசிவன் திருக்கோயில் லூயிஷம், இலண்டன்

# அருளாசியுரை

தமிழ் மக்களாகிய நாம் புலம் பெயர்ந்து அந்நிய நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையானது காலத்தின் சூழ்நிலையாகும். எனினும் எமது பாரம்பரியங்களை அழியவிடாமல் பாதுகாக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். இதில் முக்கியமாக எமது சமயம், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு என்று சொல்லக்கூடிய எமது பொக்கிஷங்களை நாம் பாதுகாப்பது மட்டுமன்றி எமது வருங்காலச் சந்ததியினரிடம் அதனைக் கையளித்துக் காப்பாற்றும் பொறுப்பையும் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். இதில் சைவ ஆலயங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். இலண்டனில் விளங்கும் சைவ ஆலயங்கள் ஒன்றினைந்து உருவாக்கப் பெற்ற சைவத்திருக் கோயில்கள் ஒன்றியம் மேற்கூறிய விடயத்தில் பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றது. அதில் வருடா வருடம் இடம் பெறுகின்ற சைவ மாநாடு குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் 18வது சைவ மாநாடு மே மாதம் 6ம், 7ம் திகதிகளில் இங்கு நடைபெறவிருப்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். இம் மாநாட்டில் அறிவாற்றல் மிக்க சான்றோர்கள் வருகை தந்து ஆன்மீக உரையாற்றவிருப்பது மாநாட்டிற்கு மகுடம் வைத்தால் போல் அமைகிறது. அத்துடன் இவ்வருட மாநாட்டின் கருப்பொருளாக வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்னும் தலைப்பு அமைவது இக்காலச் சூழ்நிலையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். மேலும் சைவமாநாடு சிறப்புடன் நடைபெறவும், மாநாட்டில் கிடைக்கப் பெறுகின்ற ஆன்மீக அறிவினை எம்மக்கள் எல்லோரும் பெற்று பயனடையவும், மேலும் இதுபோன்ற ஆக்கபூர்வமான விடயங்களை சைவத்திருக்கோயில் ஒன்றியம் நடாத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் இவ்வுலகம் எங்கும் அன்பும், சமாதானமும் நிலவ வேண்டும் எனவும், எல்லோருக்கும் இறைவனது திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் எனவும் இலண்டன் லூயிஷம் சிவபுரம் பதியில் கோயில் கொண்டருளி திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபீதகுஜாம்பாள் சமேதஸ்ரீஅருணாசலேஸ்வரப்பெருமானது திருவடிகளைப் பிரார்த்தனை செய்து எல்லோருக்கும் எமது மனப்பூர்வமான நல்லாசிகளைக் கூறுகிறோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

சிவஸ்ரீ சபா. மகேஸ்வரக்குருக்கள்

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Education for Language, Music & Culture - Funeral Religious Services.**




# SRI RAJARAJESWARY AMMAN TEMPLE

## ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்

**Parasakthi Hindu Temple Trust**

No 4 Dell Lane, Stoneleigh, Surrey KT17 2NE

Tel: 020 8393 8147


உ

## வாழ்த்துரை

பிரித்தானிய திருக்கோவில்கள் ஒன்றியத்தின் 18வது ஆண்டு வருடாந்த மாநாடு லண்டனில் நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஐந்து ஆலயங்களின் கூட்டு முயற்சியில் ஆரம்பித்து, இன்று இருபத்தொரு ஆலயங்கள் இணைந்து இந்த ஒன்றியத்தைப் பலப்படுத்தி, மிகச்சிறப்பான முறையில் இந்த 18வது மாநாட்டை நடாத்துவது புலம் பெயர் நாட்டில், விசேடமாக லண்டனில் சைவமும் தமிழும் தழைத்தோங்குவதைக் காட்டி நிற்கின்றது. எமது ஒற்றுமையையும் வலுப்படுத்தி நிற்கின்றது. எந்த இலட்சியத்திற்காக இந்த ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த இலட்சியம் நிறைவேறி இருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில் ஒரே நேரத்தில் எமது விரதங்களை அனுட்டிக்கவும், பூசை வழிபாடுகளை நடாத்தவும் திருக்கணித பஞ்சாங்கத்தை நாம் அனைவரும் பின்பற்றி வருவது, எமக்கு மட்டுமன்றி, சைவசமயத்தில் பற்றில்லாமல் இருக்கும் இளைய தலைமுறைக்கும் ஓர் நம்பிக்கையை, பிடிப்பை ஏற்படுத்தி இருக்கின்றது. புலத்தில் எதிர்காலங்களில் நாம் இன்னும் பல சைவ சமயத்தை வளர்க்கின்ற, எமது இளைய தலைமுறையினருக்கு ஊட்டுகின்ற வேலைத்திட்டங்களில் ஆர்வம் காட்ட வேண்டும். எமது காலத்திற்குப்பின் இளைஞர்கள் ஆலயங்களில் முன்னின்று வழிநடத்த நாம் கரம் கொடுக்க வேண்டும். திருவிழாக்களின் விளக்கங்கள், விரதங்களின் மகத்துவங்கள் இளைய தலைமுறையினருக்கும் புரியும்படியான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள வேண்டும். நாம் எமது ஒன்றியத்துடன் இணைந்து இத்தகைய செயற்பாடுகளில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

சைவ மாநாடு மிகச்சிறப்புடன் நடைபெற, ஒன்றியம் எடுக்கும் அனைத்துக்காரியங்களும் வெற்றிபெற எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் பாதங்களைப் போற்றி வணங்குகின்றோம்.

இவ்வண்ணம்

இ.குணசிங்கம்

தலைவர்



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* *TEL: 0208 - 810 0835*
Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*
www.ammanealing.org Email: info@ammanealing.org

**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
MR. R. D. Ratnasingham

**Vice Chairman**
MRS. S. Kanesarajah

**Secretary**
MR. K. Kesavan

**Joint Secretary**
MRS.S. Sundaralingam

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Elected Comm. Member**
Mr P Kanapathipillai

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Sri Rangan

**Secretary**
Dr. A. Thevasagayam

Mr. S. Abayalingam
Mr. R. Kaneshárajah
Mr. T. Thevaraajan
Mr. S. Premachandra
Dr. V. Paramanathan

**Our Motto for 2014-2015**
Commitment and Respect

உ

05-04-2017

சிவமயம்

பதினேழு மகாநாடுகளை நடாத்தி இன்று பதினெட்டாவது மகாநாட்டை நடாத்துவதற்கு முன்வந்து நிற்கும் சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஓன்றியம் முகிழ்வதற்கு ஊன்று கோலாய் இருந்த ஐந்து ஆலயங்களுள், எமது ஸ்ரீ கனக துர்க்கை ஆலயமும் ஒன்று என்பதை நினைவூட்டு கின்றோம்.

ஒன்றியத்தைச் சார்ந்த ஆலயங்களில் மிகவும் குறைந்த அளவு ஆலயங்களே அறப்பணியை மேற்கொள்கின்றன. ஆலயங்கள் என்பன பூசைகள், விழாக்கள், கூடிக் குலாவுதல் என்பவற்றுக்கு அப்பால் அறப்பணியையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இதனை நாங்கள் ஒன்றியத்தின் ஊடாக விஸ்தரிக்க வேண்டும்.

இறைவனைப் போற்றிப் பாடிய மாணிக்கவாசகப் பெருமான் "எழை பங்காளன்" என்று திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளதும் "யாவருக்கும் ஒரு கைப்பிடி" என்று திருமூலர் பாடியுள்ளதும் ஈங்கு யாவராலும் ஊன்றிப்பார்க்க வேண்டிய குறிப்புகளாகும். எமது தாயகத்தில் வலுவிழந்து, நாதியற்றுத் தவிக்கும் ஏழை மக்களின் வாழ்வை மலரச் செய்யவேண்டியது எமது தார்மீகக் கடமையாகும். வாய்ச்சொல் அருளுவதைக் குறைத்து, செயல்வடிவம் கொடுப்பதற்கு யாவரும் முன்வருதல் வேண்டும்.

ஆரம்பத்தில் இருந்த ஐந்து ஆலயங்கள் மட்டும்தான் ஒன்றியம் என்பது இன்று பதினைந்து, இருபது திருக்கோவில்களாகப் பெருகி ஒன்றியத்தில் இணைந்து எமது பலத்தை அதிகரித்துள்ளன. " அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்ற பழமொழிக்கு நாங்கள் புதுவடிவம் கொடுத்து நாங்கள் பிரியாமல் கலையாமல் என்றென்றும் ஒன்றிணைந்து ஒன்றியத்தின செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

"தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவற்கும் இறைவா போற்றி"!!

என்றும் அன்புடன்

இ.து.இரத்தினசிங்கம்
தலைவர்
நிர்வாக சபை

ச.சிறி ரங்கன்
தலைவர்
அறங்காவல் சபை

KATPAKAPATHY



# SHREE KARPHAHA VINAYAGAR TRUST (TEMPLE)

Charity No: 1092252
2 - 4, Bedford Road, Walthamstow, London E17 4PX
Tel: 020 8527 3819 | Web: katpakapathy.com | Email: katpakapathy@gmail.com

**Board of Trustees:**

**President**
Mr M. Gopalakrishnan

**Secretary**
Mr.C.P.Thiagarajah

**Asst. Secretary**
Mr.S.Rajeeve

**Treasurer**

**Asst. Treasurer**
Mrs A. Sakthivel

**Ministers of Religion**
Sivasri Sarveswarasarma
Balasubramania Iyer

Sivasri Athithan
Uruthiramoorthy Sarma

Sivasri Ganeshan
Parameswara Kurukkal

Sivasri Pranav Somas Kanda
Sarma

**Committee for Kumbhabhishegam**
Mr.K.Sithamparapillai
Mr.N.Perinpanathan
Mr. N.Surenthiran
Mr.T. Rabindramohan
Mr. Bala Ravindran
Mr.K.Kuhachandran
Mr. P.Ramesh
Mr. S.Thambithurai
Mr.S.Suresh
Mr.K.Sathiyananthamoorthy
Mr.N.Nadarajah
Mr.P.Sakthivel
Mr.R.Maruthalingam
Mr.M.Maheshwaran
Mr.N.Yoganathan
Mr.S.Nesaranjan
Mrs.B.Manoharan
Mr.B.Bavaharan
Mr.R.Thiripuran

**Adminstrator**
Mr.B.Vijayakumar

## வாழ்த்துச்செய்தி

சைவ சமயம் பல்வேறு நூல்களை ஆதாரமாகக் கொண்டும் அதேவேளை ஆலயங்களில் அவற்றைப் பராமரித்துக்கொண்டும் வருகின்றன. இந்தவகையில் வேதங்கள் ஆகமங்கள் திருமுறைகள் சித்தாந்தங்கள் எனப் போற்றப்படும் பல நூல்களை நாம் மதிக்க வேண்டியவர்களாக உள்ளோம். புலம் பெயர் நாடுகளில் எமது இளம் சிறார்கள் சமய உண்மைகளை தெரிந்து தெளிந்து செய்வதற்கு இது போன்ற மகாநாடுகள் அவசியமாகிறது. ஏன் ஆலயத்திற்கு செல்ல வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வி கூட சில இளையோர் மத்தியில் எழலாம். அவர்களுக்கான நல்ல ஆதாரங்களை நாம் கொடுக்க வேண்டும். எப்படி எமக்கு உணவு உண்ணுதல் உடலுக்கு நன்மை அளிக்கிறதோ அதேபோல உயிருக்கு நன்மை அளிப்பது இறை உணர்வு. அதனைத் தீர்ப்பதற்கு ஆலயமே சிறந்த இடம் என நாம் சொல்லும் போது ஏற்றுக்கொள்கிறார்கள். இதனை இரை தேடுவதோடு இறையும் தேடு எனச் சுருக்கமாக சொல்வார்கள்.

ஆகவே எமது ஆலயங்கள் விதிமுறைகள் பல உள்ளடக்கி கட்டப்படுவதுடன் வழிபாட்டு நெறி முறைகளையும் ஏற்படுத்தி வைத்துள்ளது. அவற்றிற்கான பல தத்துவக்கருத்துக்களும் உண்டு. இவற்றை வெளிப்படுத்தும் களமாக இவ்வாறான மகாநாடுகள் அமைய வேண்டும். நாம் தமிழர் ஆக இருந்தாலும் எமது தமிழ் பண்பாட்டுடன் சைவ சமய நம்பிக்கைகளையும் சேர்த்து வளர்க்கும் பண்புடையவர்கள். இதனால் சைவத்தின் பல நூல்களை வாசிக்கும் பழக்கங்களை இளம் சிறார்களுக்கு ஏற்படுத்த வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வகையில் அவர்களை மதிக்கும் பழக்கத்தை வழக்கப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் ஆலயங்களுக்கும் தமது குழந்தைகளை கூட்டிச் செல்ல வேண்டும். அங்கு நடைபெறும் பூஜைகள் விழாக்கள் முதலியவற்றை முதலில் தரிசனம் செய்தாலே அவர்களுக்கு அருள் பிரவாக அலை வரும். விளக்கங்களை பின்பு கூறலாம். இறைவன் தந்த கண்ணால் இறைதரிசனம் பார்க்க வேண்டும் என்று நாம் சொல்லும்போது அவர்கள் சம்மதிக்கின்றனர்.

ஆலயத்தின் அமைப்பின் புறக்காட்சிகள் அவர்களது மனத்தை நாளடைவில் சமய நம்பிக்கைகளை வளர்க்க உதவும். ஆலய மூலஸ்தானப் பண்டிகைகள், கொடிமரம் சில ஆலயங்களில் கோபுரம் போன்றவைகளை பார்த்து ஏன் இவ்வளவு உயரமாகவும் நுனியில் கூர்மையான கலசத்துடனும் இவை உள்ளன என்று கேட்கும் சிறார்கள்



தத்துவத்தை வெளிப்படுத்தும் அடையாளமாக உள்ளதை சொல்கின்றனர். நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே என்பது திருவாசகம்.



இன்று பல ஆலயங்களில் பண்ணிசை சித்தாந்தம் போன்ற வகுப்புகள் நடைபெறுவது எமது சமய வளர்ச்சிக்கு நல்ல உரங்களாக அமைகின்றன. அத்துடன் ஆலய வழிபாட்டுக் கிரியைகள் பற்றிய விளக்கங்களையும் நாம் தெரியப்படுத்த வேண்டும். இதனால் இளையோரின் ஆர்வம் அதிகமாகும். முதலாவதாக நம்பிக்கையை அவர்களிடம் விதைக்க வேண்டும். ஒவ்வொரு மதமும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வளர்கிறது, ஏன் எதற்கு என்ற கருத்துக்களை நாம் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டியது அவசியம். ஆனாலும்கூட கோவிலுக்கு சென்று பிள்ளையாரை முதலில் குட்டிக் கும்பிட்டு தோப்புக்கரணம் போட்டு வணங்க வேண்டும். ஆலயத்தை வலம் வர வேண்டும் விழுந்து கும்பிட வேண்டும். அங்கு மந்திரங்கள் ஓதப்படுகின்றன. மணி அடிக்கப்படுகின்றது. மங்கள வாத்தியம் சங்கு போன்றவை முழங்குகின்றன. பஜனைப் பாடல்கள் செவிக்கு இனிமையை அள்ளித் தருகின்றன. இவைகளை கேட்பதால் உள்ளம் தூய்மை அடைகின்றது என நாம் அவர்களிடம் சொல்ல வேண்டும். பின்பு கருத்துக்களை சொல்லலாம். சற்று நேரம் ஆலய மண்டபத்தில் அமர்ந்து இருக்க வேண்டும் என பல உடலியல் சார்ந்த முறைகளை முன்னுக்கு செய்யப் பழக்கினால் அவர்களுக்கு ஆரோக்கியம் நன்றாக அமையும். அது எமது சமயத்திற்கும் ஆரோக்கியத்தை தரும். இன்று பல ஆலயங்களில் பண்ணிசை சித்தாந்தம் போன்ற வகுப்புகள் நடைபெறுவது எமது சமய வளர்ச்சிக்கு நல்ல உரங்களாக அமைகின்றன.

அத்துடன் ஆலய வழிபாட்டுக் கிரியைகள் பற்றிய விளக்கங்களையும் நாம் தெரியப்படுத்த வேண்டும். இதனால் இளையோரின் ஆர்வம் அதிகமாகும். முதலாவதாக நம்பிக்கையை அவர்களிடம் விதைக்க வேண்டும்.
ஒவ்வொரு மதமும் நம்பிக்கையின் அடிப்படையிலேயே வளர்கிறது, ஏன் எதற்கு என்ற கருத்துக்களை நாம் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டியது அவசியம்.

இவ்வாறான தூய்மையான விடயங்கள் ஆலயத்தில் இருப்பதால் நாமும் நீராடி தூய்மையாக தோய்த்து உலர்ந்த அல்லது புதிய கோடி வஸ்திரங்களை அணிந்து எமது பாரம்பரிய உடைகளான வேட்டி சால்வை ஆண்கள் அணிந்து கொண்டும் பெண்கள் சேலை அணிந்து கொண்டும் ஆலயத்திற்கு செல்லும் வழக்கத்தை ஏற்படுத்தி இருந்துள்ளனர்.
ஆகவே நாமும் வேதமந்திரங்கள் ஆகம முறைகள் பண்ணிசை வளங்கள் போன்ற ஆலய வழிபாடுகள் சார்ந்த மரபுகளை வளர்த்தெடுத்து இறை அருளைப் பரப்புவோம்.

ஆலய நிர்வாகம் சிவாச்சார்யர்கள்
வோல்தம்ஸ்ரோ கற்பகபதி கற்பக விநாயகர் கோவில்




உ
சிவமயம்
பிள்ளையார் துணை

"சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும்"

# இலண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயம்

# LONDON SRI SELVAVINAYAGAR TEMPLE

299 - 303 LEY STREET ILFORD, ESSEX IG1 4BN TEL / FAX :- **0208 911 8934**
WWW.SRISELVAVINAYAGAR.ORG.UK E-Mail:- info@sriselvavinayagar.org.uk

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 18வது மாநாடு வெகு சிறப்பாக நடைபெறவுள்ளதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கடந்த காலங்களில் நடைபெற்ற மாநாடுகள் புலம்பெயர்வாழ் மக்களுக்கும் அவர்தம் சிறார்களுக்கும் பெரிதும் நன்மை பயக்குவதாகவும், ஆன்மீக தாகத்தைத் தணிப்பதாகவும் அமைந்தன. ஆன்மீகவாதிகளும் அறிஞர் பெருமக்களும் சிறந்த பேச்சாளர்களும் இம்மாநாடுகளைச் சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் மட்டுமன்றி நமது இளைய தலைமுறையினரும் பங்குபற்றும் வகையில் தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சுப்போட்டிகள், திருமுறை ஓதுதல் போன்ற போட்டிகளை இங்குள்ள மாணவர் மத்தியில் நடாத்தி இலைமறைகாயாக உள்ள அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர ஒன்றியம் நடாத்தும் போட்டிகள் பெரும் பயனளிக்கின்றன. சைவ சமயம் பற்றிய ஆழமான கருத்துக்கள், ஓவியங்களாகவும், குறும் படங்களாகவும் வெளிவர வேண்டும்.

சைவ சமயத்தின் தத்துவங்கள், கருத்துக்கள் விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதென்பதை விளங்கப்படுத்தக்கூடிய ஆவணங்கள் மாணவர் மத்தியில் வெளிக்கொணரப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினர் எமது ஆலயப்பொறுப்புக்களை ஏற்று சிறந்த முறையில் நடாத்த நாம் பின்னணியில் நின்று செயற்பட வேண்டும். அதற்கேற்ற வேலைத்திட்டங்களை பிரித்தானிய திருககோயில்கள் ஒன்றியத்தின் அனுபவம் மிக்க சைவப்பேராளர்கள் ஒன்றிணைந்து முன்வரவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அமரர் திரு செல்வா அவர்கள் விட்டுச் சென்ற ஆன்மீக சேவையும், சமூக சேவையும் எள்ளளவும் தடங்கலின்றி தொடர, நாம் என்றென்றும் வணங்கும் செல்வ விநாயகன் பாதார விந்தங்களைப் போற்றி வணங்குவோமாக.

இவ்வண்ணம்
ஆலயப்பணியில்
திரு செல்வா குடும்பத்தினர்

# கொவன்றி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

# Coventry Shri Sidhi Vinayagar Devasthanam

Registered Charity in England and Wales Number: 1144183
Registered Office: 65A George Elliot Road, Coventry, CV1 4HT, United Kingdom

## *வாழ்த்துச் செய்தி*

பிரித்தானிய சைவத்திருக் கோயில்களின் ஒன்றியத்தால் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற மாநாடானது இவ்வாண்டு **18**ம் மஹாநடாக வேதசிவாகமங்களும் ஆலய வழிபாடுகளும் என்னும் கருப்பொருளில் நடைபெறுவது இன்றைய காலத்தின் தேவையே.வேதசிவாகமங்களை தமிழ் அருளாளர்களும் போற்றிப்பரவியதை நாமும் நன்கறிவோம் வேதாகமவழிபாடுகளை பதிணென் பத்ததிகளே ஆலயவழிபாட்டில் பிரயோகிக்கிண்றன. எனவே **18**வது மாநாட்டில் இத்தலைப்பு சாலப்பொருத்தமுடையதே.

இன்றைய தலை முறையினர் இவற்றை நேரடியாக மூலநூற்கற்றல் செய்யும் வாய்ப்பை இழந்ததுள்ளதால் மொழிபெயர்பாளர்களின் கருத்தையும் நடுநிலையில்லா ஆய்வாளர்களில் கருத்தையும் கண்டு கிலேசமடைகின்றனர் யானையின் உறுப்பைக்கண்டகுருடர்போல சிலர் வேதாகமங்களின் ஒருசில சொற்களைக் கொண்டு முழுவற்றிற்கும் வியாக்கியானம் செய்யவும் விளைகின்றனர்.. சைவ சமய வழிபாடுகள் அனைத்தும் இவ்வைதீக நெறியை அத்திவாரமாக் கொண்டே ஆக்கப்பட்டுள்ளன என்ற உண்மையைப்புரிந்தால் எமக்கு மேன்மையே.

இன்று உலகின் பல ஆய்வாளர்களும் விஞ்ஞானிகளும் சொல்கின்ற செய்திகள் எமக்கு பெருமையையும் ,புகழையும்,தருகின்றது. இதற்கு எம் முன்னோரயே நாம் போற்றவேண்டும்

**18**ம் மாநாடு தடைகள் இன்றி இனிதே நடைபெறவும் மாநாட்டு மலர் சிறப்படையவும் எம்மையன் எல்லாம் வல்ல பெரியபிரித்தானியாவின் பெரியபிள்ளையாரான கொவன்றி ஸ்ரீசித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து மாநாட்டுக் குழுவினர்க்கும், விருந்தினர்க்கும், சுவஞ்ஞர்களுக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .

இவ்வண்ணம்

சிவாச்சாரியார்கள்

ஆறங்காவலர்கள் - பரிபாலனசபை - அடியவர்கள்

Telephone: +44(0) 2476 632211 Email: info@sidhivinayagar.org.uk www.sidhivinayagar.org.uk

# SRI MERUPURAM PATHIRAKAALI AMMAN TEMPLE

## ஸ்ரீ மேருபுரம்
## மஹா பத்ரகாளி அம்மன் தேவஸ்தானம்

வோல்தம்ஸ்ரோ, இலண்டன்.
**271 Forest Road, Walthemstow, London E17 6HD**



### வாழ்த்துச் செய்தி

சைவ மாநாடு இதுவரை காலமும் நடைபெற்று 18வது மகாநாட்டை எட்டியுள்ளது. சைவத்திருக்கோவில்கள் ஒன்றியமானது பிரித்தானியாவில், சைவமும், தமிழும் தழைத்து ஓங்கவும், வளரவும் ஆரம்பிக்கப்பட்ட சேவை. இச்சேவை மிகவும் பாராட்டத்தக்கது என்று கூறின் மிகையாகாது. இம்முறை வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்னும் தலைப்பு மிகவும் பொருத்தமானதாகும். வேதங்கள் இறைவனின் அருள்வாக்காக ஏற்று எமது சமயம் முன்னுரிமை கொடுக்கின்றது. நால் வகையான வேதங்களில் சாம வேதம் இசையோடு கூடியதாக அமைந்துள்ளது. இதனது தொடர்ச்சியாக இன்றும் இசையுடன் கலந்த பண்ணிசை மரபுகள் ஸ்தோத்திரங்கள் கலைநிகழ்வுகள் என்பன் ஆலயங்களில் நடைபெறுவதை அவதானிக்கின்றோம்.
ஆலயங்களில் நடைபெறும் அபிஷேகம், ஆராதனை, அலங்காரம் என்பவற்றின் முக்கியத்துவத்தை ஆகமங்கள் வலியுறுத்துகின்றன.

இளம் சிறார்கள் சைவமும், தமிழும் கற்று வளர்வதற்காக கலை, கலாச்சாரங்களில் ஈடுபடுவதற்காகவே சைவ ஆலயங்களும், சைவ ஆலய ஒன்றியமும் இணைந்து சேவையை நடாத்தி வருகின்றனர்.

சைவர்களாகிய எம்மக்கள் சிவதீட்ஷை பெற்று சிவசின்னங்கள் அணிந்து, திருமுறைகளை ஆலயங்களில் பாராயணம் செய்து வருவதால் ஆன்மீக சிந்தனைக்குச் செல்வதற்கு சைவ மகாநாடுகள் புலம்பெயர் நாடுகளில் நடைபெறுவது நன்மை பயக்கும் என்று கூறி ஸ்ரீமேருபுரம் பத்திரகாளி அம்பாளின் திருவருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றோம்.

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

கயிலை காளிதாசன்
சிவஸ்ரீ லிங்கலோகநாதக்குருக்கள்
பிரதமகுரு,
ஸ்தாபகர்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம்(UK)

*"Community Service Through Saiva (Hindu )Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel :020 8514 4732
**Registered Charity No: 292085**
www.saivamunnettasangam.comemail: smsukinfo@gmail.com


*President & Trustee*
Mr Sathasivam Anandathiyagar
*Vice-President & Trustee*
Mr D Rabindramohan
*Hony. General Secretary & Trustee*
Mr M Indusegaran
*Hony. Treasurer & Trustee*
Mr S Niranjan
*Hony. Deputy Gen. Secretary & Trustee*
Mr S Balasingam
*Trustees*
Mr W Nagaratnam
Mr V R Ramanathan
Mr C Sithamparapillai
Mr S Thamboo
*Building Project Secretary*
Mr G Paramesvaran
*Examination Secretary*
Mr V Jegendirabose
*Membership Secretary*
Mr S Ratnarajah
*Overseas Project Secretary*
Mr V C Vamananathan
*Publication Secretary*
Mr V Sivanarutchelvar
*Religious Secretary*
Mr S.Kugarajah
*School Secretary*
Mrs S Ahtheesan
*Social Service Secretary*
Mrs. B.Kanagasabesan
*Assistant Treasurers*
Mr V R Loganathan
*Committee Members*
Mrs V Kanagenthiran
Mrs Vasantha Mahadevan
Mrs G Sooriyakumar
Mrs.P.Sabaratnam
Mrs.A.Kunarajah

## சைவ சமயத்தின் பெருமையையும் உண்மையையும் வெளிக்கொணரும் மாநாடு சிறப்படைய வாழ்த்துகிறோம்

பிரித்தானிய சைவ ஆலயங்களின் ஒன்றியத்தினால் எதிர்வரும் மே மாதம் 6ம் 7ம் திகதிகளில் 18வது சைவ மாநாடு நடைபெற இருப்பதை அறிந்து சைவ முன்னேற்றச் சங்கம் (uk) மட்டற்ற மகிழ்ச்சி அடைவது மட்டுமல்லாமல் திருக்கோயில் ஒன்றியத்தின் சேவைகளை பாராட்டி நிற்கிறோம். சைவசமயக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சைவசமயப்பாடப் பரீட்சை, பண்ணிசைப்போட்டி. பேச்சுப்போட்டி போன்றவற்றால் இளம் சமுதாயத்தை ஊக்குவிப்பது எமது காலத்தின் தேவையாகும். பிரத்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் இந்த மாநாடுகளின் மூலம் வெளிநாடுகளிலிருந்து சைவ அறிஞர்களை வரவழைத்து ஆன்மிக சொற்பொழிவுகளை ஆற்றுவதன் மூலம் மக்கள் பல ஆன்மிகம் தொடர்பான விடயங்களை அறிந்து செயற்பட முடிகிறது. இங்குள்ள ஆலயங்கள் எமது சமுதாய தொடர்பான கலை கலாச்சாரங்களை வளர்க்கின்ற இடமாகவும் திகழ்வதால் மொழியையும் சமயத்தையும் வளர்ப்பதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது.
இவ் ஆலயங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழிநெறிப்படுத்தும் பணியை சைவத்திருக்கோயில் ஒன்றியம் செய்து வருவதால் இம்முயற்சி எதிர்வரும் காலங்களில் நல்லதொரு சமுதாய சிந்தனையுள்ள ஒரு தலைமுறையை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எம்மையும் இவ்வுலகையும் காத்து நிற்கும் இறைவன் வாழும் ஆலயங்கள் ஒன்றாகச் சேர்ந்த சைவத் திருக்கோயில. ஒன்றியம் நடாத்ததும் 18 வது மாநாடு சிறப்படைய ஸ்ரீ சிவகாமி சமேத சிதம்பரேஸ்வர் திருவருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

மா. இந்துசேகரன்
கௌரவ பொதுச் செயலாளர்



# ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் (ஹறோ)
# Shri Sithi Vinayagar Thevasthanam (Harrow)

Unit B, Rear of 59 Station Road, Harrow, Middlesex HA1 2TY
Est. 2001 • Registered Charity No: 1145206
**Tel: 020 8427 5428**

## வேதசிவாகம மரபும் ஆலய வழிபாடும்

சமயங்கள் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்து மேல்நெறி அடைவதற்கான மார்க்கங்களை போதிப்பனவாகும். இந்து சமயத்தில் சமய வாழ்க்கை தெய்வீக நெறியுடன் இணையப் பெற்றுள்ளது. உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுள்ளது. நமது இந்து மதத்திற்கு வேதம் ஆகமம் தோத்திரம் சாத்திரம் இதிகாஸம் புராணம் எனப் பல நூல்கள் இருக்கின்றன. உலகின் மிகத்தொன்மையான நூல் வேதங்களாகும். இறைவனைக் கண்டவர்கள் ரிஷிகள். இறையறிவால் மரணத்தையும் வெல்லமுடியும் என்பதை உணர்ந்த அவர்கள் தாங்கள் ஈடேறியதுபோல் அனைவரும் ஈடேறவேண்டுமென்ற நோக்குடன் ரிஷிகளால் தொகுக்கப்பட்டதே வேதங்கள் ஆகும். சூரியன் பூமி மனிதர்கள் முதல் எண்பத்து நான்காயிரம் வகை உயிரினங்கள் எப்போ படைக்கப்பட்டதோ நீரும் நெருப்பும் என்று அறிமுகமாயினவோ அன்றே இறைவனால் அருளப்பட்டது தான் வேதம் ஆகும். இவ்வேதங்களை எளிமையான முறையில் தொகுத்தளித்தவர் வேதவியாசர் ஆகும். அவை ரிக் யஜுர் சாம அதர்வணம் என்கின்ற நான்கும் ஆகும்.

வேதங்களிடையே ஒருபொதுத் தன்மை காணப்படுகிறது. அது மக்களின் நலனிற்காக வாழ்க்கை நெறி வேள்விகள் பிரார்த்தனைகள் என்பன மிகமிக முக்கியம் என்பதை இவ்வேதங்கள் வலியுறுத்துகின்றன. வேதம் ஒரு கடல் போன்றது. அதில் எல்லாவற்றையும் விபரிக்கவோ அறியவோ புரிந்து கொள்ளவோ முடியாது. ஆதனால்தான் நாம் வழிபடுகின்ற ஆலயவழிபாட்டின் மூலமாக பெருமளமானவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. சைவாகமம் என்ற சொல்லை ஆகமம் எனப் பிரிக்கலாம். ஆ + கமம். ஆ என்பது ஆன்மாக்களையும் கமம் என்பது பாசங்களை நீங்கச்செய்து முத்திப் பேற்றை அருளுவது என்பதாகும். இறைவனது ஐந்து முகங்களில் இருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின. இவ் ஆகமங்களில் சரியா பாதத்தில் பூஜைக்குரிய பொருட்களைச் சேகரித்தலும் பூஜை முறைகளும் கூறப்பட்டுள்ளன. ஆலயங்கள் சிவாகமங்களை ஒட்டியும் சாக்தேயம் பாஞ்சராத்திரிகம் தந்திரம் முதலியவற்றை ஒட்டியுமே நிர்மாணம் செய்யப்படுகின்றன. ஆலய நிர்மாணங்கள் எந்த சிவாகமதத்தை ஒட்டி நிறுவப்பட்டதோ அந்த ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டே பூஜைகள் கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயங்களிற்குச் சென்று இறைவனை வேண்டிவந்தால் மனச்சுமை குறையும், துன்பங்கள் விலகும், மனம் அமைதிபெறும். மந்திர ஒலிச்சக்தி குவிந்திருக்கின்ற இடங்களில் திருவருள் பிரகாசிக்கும். பக்தன் ஒருவன் தனது வெளித்தோற்றங்களைத் திறந்து உள்ளடங்கி இறைவனோடு ஒன்றி இறையின்பம் பெறுவதற்காகவே ஆலயங்கள் அத்தியாவசியமாகின்றன. வேதகாலத்தில் ஆலயங்கள் இருந்ததில்லை. பின்னர் சிவாகமங்களின் விதிப்படி ஆலயங்கள் அமைக்கப்பட்டன. மூலவிக்கிரகங்கள் கருங்கற்களால் செய்வதற்கு காரணம் பஞ்சபூதங்களான ஆகாயம், காற்று, நீர், நெருப்பு, நிலம் ஆகியவை இதனுள் அடங்கியுள்ளன. ஐம்பூத வடிவான ஆண்டவனை ஐம்பூதங்களும் அடங்கிய கல்லில் வழிபடுவதற்கு சிவாலய வழிபாடு அவசியமாகிறது.

மனம், மொழி, மெய் ஆகிய திரிகரணசுத்தியுடன் ஆலயவழிபாட்டிற்குப் போகவேண்டுமென்பது சமயக் கோட்பாடாகும். ஆலயத்திற்குள் நுழையும்போது உலக விவகாரங்களை ஒதுக்கிவைத்துவிடல் வேண்டும். சிலர் சத்தம் போட்டுப் பேசுவதனால் ஆலயத்தின் புனிதத்தையே பாழ்படுத்துகின்றனர். ஒருவரோடு ஒருவர் பேசாது அமைதியும் சாந்தமுமாக வழிபாடு செய்து முடித்தபின் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து தியானம் பண்ணுவது மிக முக்கியம். உயர்ந்த எண்ணங்கள் நிறையப்பெற்ற இடம் ஆலயம். இங்கு வழிபடுவோர் அமைதியுடன் அமர்ந்திருந்தால் உயர்ந்த எண்ணங்கள் அவர் மனதில் பிரதிபலிக்கும். அதுவே ஆலயவழிபாட்டில் ஒரு பக்தன் பெறும் பெரும்பேறாகும். இத்தகைய எண்ணங்களுடன் எத்தனைபேர் ஆலயத்திற்குள் வந்து வழிபடுகிறார்களோ அதற்கேற்ப ஆலயத்தினுள் ஏற்கனவே அமைந்துள்ள அருள் பன்மடங்கு அதிகரிக்கின்றது. அவ்வருளைத் தானே அடைவதன் மூலம் ஆலயத்தின் அருளைப் பெருக்குவதே ஆலய வழிபாட்டின் ஒப்பற்ற பயனாகும்.

பிரித்தானிய சைவக் கோவிலகள் ஒன்றியம் நடாத்தும் 18வது சைவமகாநாடு இனிதே நடைபெற அருள்மிகு ஹறோ ஸ்ரீ சித்தி விநாயகரை வணங்கி நல்லாசிகளையும் நல்வாழ்த்துகளையும் வழங்கும்

**ஹறோ ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**
**சிவாச்சாரியர்கள், அறங்காவலர்கள், தொண்டர்கள், அடியார்கள்**



By Serving the devotees we serve God


# LAKSHMI NARAYANA TRUST
## London Sri Mahalakshmi Temple

**Charity Reg. No: 292677**

241 High Street North, Manor Park, London E12 6SJ

Tel: 020 8552 5082 Fax: 020 8552 5315

Web: www.srimahalakshmitemple.net

e.mail : info@srimahalakshmitemple.net



**Patrons**
Sri P.R. Ramasubrahmaneya Rajha
Nadarajah family Venus Group

**Senior Advisor**

Mr. S.N Perumal

**Board of Trustees**
**Senior Trustees**
Mr. V.N.Alagirisamy

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairmen**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officer**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakas

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan


## வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்

பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றிய அங்கத்தவர்கள் கடந்த 17 வருடங்களாக பெருமையுடன் இந்த ஒன்றியத்தினை நடாத்தி வருகின்றார்கள்.

இவ்வாண்டும் "வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும்" என்ற ஒரு தலைசிறந்த தத்துவத்தினை மையப்பொருளாக வைத்து அறிவில் சிறந்த பெரியோர்களை அழைத்து நுண்ணிய கருத்துக்கள் நிறைந்த எமது சமயத்தின் உட்பொருளை ஆராய்ந்து அறிந்து கற்றோருக்கும், மற்றோருக்கும் தெரியப்படுத்தும் நல்நோக்குடன் இவர்கள் பணி நடந்து வருகின்றது.

தெளிந்த அறிவு கிடைக்கப்பெற்றவர் இந்த மானிட ஜென்மத்தில் பெரிய பாக்கியசாலி ஆகி விடுகின்றார். காரணம் தன்னிறைவு என்கின்ற ஒரு உணர்வை அவரால் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இந்து சமயம் இதனை அடைவதற்கு ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றது.

இவ்வழியில் எமது பிரித்தானிய சைவத்திருக்கோயில்கள் ஒன்றியக் குழுவினர் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்தி வருகின்றார்கள். இவர்கள் பெரும்பணி தொடர எல்லாம் வல்ல ஸ்ரீ மஹாலட்சுமி சமேத நாராயணப் பெருமாளை வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வளர்க பணி. வாழ்க இந்து மதம்

கா. சிவரூபன்
கௌரவச் செயலாளர்
இலட்சுமி நாராயணா டிரஸ்ட்

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO: 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433 FAX: 020 8478 0407
www.londonsrimurugan.org

BOARD OF TRUSTEES
Mrs. L. Sivajoti (Chairman)
Mr. V.E. Palaniappan
Mr. G. Ramadass
Mr. R.C.A. Anpananthar
Mr. S. Narashiman

PRESIDENT
Mr. S. Sampathkumar

VICE PRESIDENTS
Mrs. S. Krishnasamy
Mr. R. Renganathan

SECRETARY
Mr. P. Dakshinamoorthy

ASST. SECRETARY
Mr. R. Panneerselvam

TREASURER
Mrs. P. Raguvaran

ASST. TREASURER
Miss. V. Thambyrajah

EXECUTIVE COMMITTEE
Mr V Chettiar
Mr. A. Gopal
Mrs. M. Gopalnathan
Mrs. Malliga Ramadoss
Mr. I. Muthu
Mr. R. Narayanan
Mrs. R. Ramachandran
Mr. Ravi Ramasamy
Mr. G. Sathiamoorthy
Mrs P Sekar
Mrs. R. Sekaran
Mr. M Sivam
Mr. M. Thenappan
Mr P Uthayakumar

06.02.2017

Mr M Gopalakrishnan
Chairman
The Federation of Saiva (Hindu)Temple UK
2-4 Bedford Road
Walthamstow
London E17 4PX

பெருமதிப்பிற்குரிய பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத் தலைவர் திரு மு கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு வணக்கம்.

சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 18வது சைவமாநாடு விழாவையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவது குறித்து தங்களின் கடிதம் கிடைக்கப்பெற்றோம் மிக்க மகிழ்ச்சி. ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்ட இந்நாட்டில் இந்து சமயத்திற்காகவும் தமிழ் கலாச்சாரத்திற்காகவும் தாங்கள் ஆற்றிவரும் மகத்தான சைவத்தொண்டு உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு உந்துதலாக அமையும் என்பதில் அய்யமில்லை.

மேலை நாடுகளில் சமய வளர்ச்சிக்கும் மனிதவள மேம்பாட்டிற்கும் ஆலய வழிபாடுகள் பேருதவி புரிகின்றன. குறிப்பாக இளைய சமுதாயத்தினர் நல்வழியில் பயணிக்க சமய மெய்ஞானத் தெளிவு மிகமிக அவசியம். கடந்த 17 ஆண்டுகளாக இலண்டன் மாநகரில் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட சைவ மாநாடுகளின் மூலமாக அனேக பக்தப்பெருமக்களும் இளைஞர்களும் ஆன்மீகத் தெளிவுபெற்று பெரும் பயனடைந்துள்ளார்கள்.

இங்கிலாந்து நாட்டில் பெரும் சமயத் தொண்டாற்றி வரும் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் 18வது சைவ மாநாடு “வேத சிவாகமங்களும் ஆலய வழிபாடுகளும்” என்ற கருப்பொருளில் நடைபெற இருப்பதறிந்து மகிழ்வுகொள்கிறோம். சைவ சமய வளர்ச்சிக்கு தூண்டுகோலான இம்மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறி பெருமை பெறவும் பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் சமய நற்பணிகள் மேன்மேலும் வளர்ந்து ஆன்மீக வழிகாட்டியாகத் திகழ வேண்டியும் எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப்பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

இங்ஙனம்

ப, தட்சிணாமூர்த்தி
செயலாளர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாக குழுவினர் சார்பாக



# Liverpool Ganesh Temple

CHARITY REG. NO. 1147647
Main Entrance: Gate between No 11 and 15, Delfby Crescent,
Kirkby L32 8TN, UK.
www.liverpoolkirkbyganeshtemple.org.uk
Tel:-01515 467 611

சைவத் தமிழ் மக்களின் நலன் கருதி இவ்வாறான மகாநாடுகளை பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் வருடா வருடம் செய்து வருவது அவசியமானதாகும். பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் எம்மையும் இணைத்து சேர்த்து கொண்டிருப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். எமக்கு இந்நாட்டிற்குரிய விரத அனுஷ்டானங்களை பின்பற்ற நாட்காட்டியை தந்து ஒரே நாளில் வழிபாடுகள் செய்யவதற்கு உறுதுணையாக உள்ளனர்.

எமது ஆலயமும் ஆகம முறையில் அமைக்கப்பட்டு வேத மந்திர ஓசைகள், திருமுறை மற்றும் மங்கள இசைகளுடன் திருவிழாக்கள் நடைபெற்று வருகிறது. இங்குள்ள இளையோரும் கூட ஆவலாகக் கலந்து கொள்கின்றனர். எமது மரபுகள் எங்கு சென்றாலும் நாம் மாற்றக்கூடாது என்பதில் நாமும் விருப்பமாக உள்ளோம். அந்த வகையில் வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற தலைப்பு மிகப் பொருத்தமானதாக உள்ளது. எமது சைவ சமயத்தின் மூல வேர்களாக விளங்கும் வேத சிவாகமங்கள் மதிக்கப்பட வேண்டியவை. அவற்றின் வழி பயிற்சி பெற்ற குருமார்களின் வழியாக எமது ஆலய மரபுகள் பாதுகாக்க வேண்டிய அவசிய நிலையில் அனைத்து ஆலயங்களும் முன்னிற்க வேண்டும் என்பதே அனைவரும் விரும்பும் விடயமாகும். அவற்றின் உண்மையான தத்துவங்களும் விளக்கங்களும் அளிக்கப்படும் போது மேலும் எமது வழிபாட்டின் வலிமை உயரும்.

நாமும் பல சிரமங்களின் மத்தியில் இந்த வழிபாட்டு நெறிகளை பேணி வருகிறோம். மேலும் இவற்றினை தொடர்ந்து பரப்புவதற்கு பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் ஒத்துழைக்கும் என்னும் ஆவலுடன் இம்மகாநாடு சிறப்புற லிவர்பூல் விக்ன விநாயகப் பெருமான் அருளாட்சியைப் போற்றுவோம்.



# SORNA KAMADCHI AMMAN TEMPLE-GREAT BRITAIN

## சொர்ண காமாட்சி அம்மன் ஆலயம்-குறோளி-பிரித்தானியா

**THE SIVA TRUST LTD – EST 2005-Charity Number 1122668**
**Unit B Stephenson Way, Three Bridges, Crawley RH10 1TN (01293 619 918)**

பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் இம்முறை வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற நல்லதொரு விடயத்தை முன்வைத்து மகாநாட்டை நடத்துகிறது. பல்லாண்டு காலமாக நாம் ஆலயங்களில் செய்து வரும் வழிபாடுகள் ஏன் எதற்கு என்று நாம் கேட்பதில்லை. ஆனால் இன்றைய கால கட்டத்தில் தெரிவிக்க வேண்டிய தேவை உள்ளது. இதனை இவ்வாறான மகாநாடுகளில் பங்கு பற்றும் அறிஞர்களின் அறிவுரையும் அங்கு வெளியிடப்படும் மலரும் எமக்கு நல்ல பலனைத்தரும். ஆலயம் சென்றவுடன் நாம் கேட்கும் மணியோசை தெய்வீகச் சூழலை எமக்கு அறிவிக்கிறது. மணியோசை மூலம் தீய சக்திகள் அகன்று தேவ சக்திகள் அவ்விடம் வருவதாக அங்கு கூறப்படும் மந்திரம் எமக்கு தெரிவிக்கிறது. ஆகமார்த்தந்து தேவானாம் கமனார்த்தந்து ரக்சஸாம் என ஆலயத்தில் கூறுவதைக் கேட்கலாம். மந்திரங்கள் சக்தி வாய்ந்தவை. இறைவனால் அருளப்பட்டவை என்ற நம்பிக்கையில் நாமும் ஆலயங்களில் மந்திர ஓசைகளை கேட்கிறோம். உண்மையில் சிலர் பொருள் விளங்கவில்லை என்று குறை கூறினாலும். அவற்றின் சக்தி எமக்கு நல்ல தெய்வீக சக்தியை தருவதை உணர்கிறோம். எல்லா மந்திரங்களுக்கும் பொருள் உண்டு. அவற்றை நாம் அறிய முயல்வதில்லை. ஆனால் ரிஷிகள் ஞானிகள் தந்த சொத்து. நாம் ஆலய வழிபாடுகளில் பேண வேண்டும் என்ற மரபை பின்பற்றி வருவோம். இதே போல் திருமுறைகள் பண்ணுடன் ஓத நற்பலனைத் தரும். அவற்றையும் நாம் ஆலயங்களில் வழிபாடுகளில் பயன்படுத்தி வருகிறோம்.

சைவ சமயத்தில் பல கலைகள் நிறைந்துள்ளன. நாட்டியம் இசை வாத்தியம் என்பன பற்றியும் வேத சிவாகமங்கள் எடுத்து இயம்பியுள்ளன. வேதத்தில் நான்கு வேதத்தில் சாம வேதம் இசையோடு கூடியது. மற்றும் பல அறிவு நூல்கள் வேதங்கள் என்னும் பெயரால் கூறப்படுகிறது. காந்தர்வ வேதம் இசையுதானும். ஆயுர் வேதம் உடலுக்குரிய ஆரோக்கியத்துடனும் தொடர்பானது. இன்று வரைக்கும் அந்த ஆகம அடிப்படையில் ஆலயங்களில் இசை நடனம் வாத்தியம் என்பவற்றை நாமும் பின்பற்றுகிறோம். வீணா வேணு மிருதங்கம் கீதம் நிருத்யம் என்பவைகளை ஆகமங்கள் சொல்லுகின்ற மரபு நாம் அவதானிக்கலாம்.

ஆகவே இவ்வாறு பல செய்திகளை எமது ஆலய வழிபாடுள் உள்ளடக்கியுள்ளன. இந்த அரிய தத்துவங்களை தாங்கி வரும் நூல் பலருக்கு நற்பயனைத் தரவும் இம்மகாநாடு மேன்மையுற நடைபெறவும் குறோளி சுவர்ண காமாட்சி அம்மன் ஆலய குருமார்கள் நிர்வாகத்தினர் அன்பர்கள் ஆதரவு தருவதுடன் வாழ்த்துகிறோம்.

ஓம் சாந்தி

செயலாளர்
அறங்காவலர்/நிரவாக சபை சார்பாக



# Eelapatheeswar Temple

Union Road, Wembley Middx HA0 4AU
Tel: 020 8902 3238
www.epashivatemple.org

சைவமும் தமிழும் சேர்ந்து வளர்ந்து வரும் இங்கிலாந்து மாநாட்டின் ஆலயங்கள் பல தாயகத்தில் உள்ளது போன்று வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற பொருளில் அறிஞர்கள் கூடுவது வரவேற்கத்தக்கது. எமது ஆலயமும் வேத சிவாகமங்களை மதித்து நடத்திவரும் பல வழிபாடுகள் உண்டு. சிவனால் அருளப்பட்ட நால்வேதங்களில் யஜுர் வேதத்தில் குறிப்பிடப்படும் ருத்திரம் மிகவும் சிவனது பெருமையை கூறுகிறது. இதனை ஸ்ரீ ருத்திரம் எனப் போற்றுவர். எமது ஆலயத்தில் ஏகாதச ருத்திர ஹோமம் பல முறை விதிமுறையின்படி பல சிவாச்சார்யர்கள் பங்கு கொள்ள நடைபெற்று வந்துள்ளது. வழிபாடுகளின் சிறப்பு அம்சங்களை நாம் செய்வதுடன் அல்லலுறும் மக்களுக்கும் ஏனைய ஆலயங்கள் போல் அறவழியையும் அடியார்களின் உதவியுடன் செய்து வருகிறோம்.

சைவ சமயத்தின் பல்வேறு நூல்களையும் திருமுறைகளையும் நாம் போற்றி வளர்க்க வேண்டும். இளையோருக்கும் இவற்றின் பெருமைகளையும் எடுத்து உரைக்க வேண்டும்.

எமது தாயகத்திலும் சைவ சமய பரவல் இருக்க வேண்டும்.சமயப் பற்றுடன் வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆலயம் அமைத்து வரும் பணியையும் செய்துள்ளோம்.
மகா நாட்டு பொருள் உலகமெங்கும் பரந்து வாழும் அனைத்து சைவ தமிழ் மக்களுக்கும் போய் சேர வேண்டும் என ஈழபதி சிவன் பாதம் போற்றி வாழ்த்துகிறோம்.

- ஆலய சிவாச்சார்யர்கள்
- நிர்வாகத்தினர்
- அன்பர்கள்



Shree New Malden Murugan Temple
255 Burlington Road, New Malden
Surrey KT3 4NE,
Tel: 020 8942 4475

## சாலச் சிறந்த சேவை

சகல வளமும் பொருந்திய இலண்டன் மாநகரில், சைவ மக்களின் முன்னேற்றத்திலே அதிக அக்கறை கொண்டு ஒவ்வொரு வருடமும் சைவ மகாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்தி வரும் திருக்கோயில் ஒன்றியத்தின் செயற்பாடுகளை பாராட்டுவதில் நாமும் பெருமையடைகின்றோம்.

இந்தியா ஈழநாட்டில் இருந்து பல ஆன்மீகவாதிகளை இலண்டன் அழைத்து மக்களுக்கும், சிறுவர் சிறுமிகளுக்கும் இந்து மதத்தின் பழமையையும் அதன் வழிபாட்டு முறைகள் மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கு இடையே சமயப்போட்டிகளை வைத்து சைவத்தையும் தமிழையும் வளர்த்து வரும் பெருஞ் சேவையை செய்து வருகின்றது.

பதினெட்டாவது ஆண்டாக இவ்வருடமும் வேதாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற இனிய தலைப்பில் தமது மகாநாட்டை நடாத்தவுள்ளது.
இவர்கள் பணி சிறக்க எல்லாம் வல்ல நியூ மோல்டன் முருகன் துணை நிற்பாராக.

சுபம்


சிவஸ்ரீ. சிவஞான.இராஜசேகர குருக்கள்
ஆதினகர்த்தா
நியூமோல்டன் முருகன் கோயில்



# Sree Ayyappan Kovil



## ஸ்ரீ ஐயப்பன் கோயில்



## ശ്രീ അയ്യപ്പൻ കോവിൽ

36 Masons Avenue, Harrow, Middlesex, HA3 5AR Tel : 020 8861 5825

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்...**

சைவத்திருகோயில் ஒன்றியத்தின் பதினெட்டாவது மாநாடு இறைவன் திருவருளால் இங்கு நடைபெறுவதை முன்னிட்டு நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். புலம் பெயர்ந்து நாம் அன்னிய தேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சூழநிலையில் எமது பாரம்பரியங்களைப் பாதுகாக்க வேண்டிய பெரியதோர் கடமை தமிழ் மக்களாகிய எமக்கு உண்டு. இதில் மிகவும் முக்கியமானதாக சமயம், தமிழ்மொழி, கலாச்சாரம் என்னும் மூன்றையும் குறிப்பிடலாம். இதில் சமயத்தினூடாக மற்றய இரு விடயங்களையும் பேணி வளர்த்துக்கொள்ளலாம்.

இவ்வாறாக சமயத்தை பாதுகாப்பதற்கு இன்றைய சூழ்நிலையில் சைவமாநாடுகள் அதிமுக்கியத்துவம் பெறுகின்றன. இதில் விசேடமாக சைவைதிருகோயில் ஒன்றியம் ஒவ்வொரு வருடமும் மாநாடுகளை நடத்தியும், இளம் தலைமுறையினரிடம் சமய உணர்வினை வளர்த்தும் ஆற்றும் சேவை மிகவும் முக்கியமானதொரு விடயமாகும்.

இவ்வகையில் இவ்வருட மாநாட்டில் கருப்பொருளாக "வேதசிவாகம மரபும், ஆலய வழிபாடுகளும்" என்னும் தலைப்பு தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். இறைவன் திருவருளோடு நடைபெறவிருக்கும் இம்மாநாடு சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும், இதன்மூலம் எண்ணற்ற நன்மைகள் எல்லா மக்களுக்கும் சென்று சேர வேண்டுமென்றும் ஹரோவீல்ட் மாமணி ஸ்ரீஐயப்பசுவாமியின் திருவடிகளை தொழுது, எமது மனமார்ந்த நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய சிவாச்சாரியார்கள்
ஆலய அறங்காவலர் சபையினர்

WWW.LONDONAYYAPPAN.ORG
Charity Reg. No: 1059478



# Sree Ayyappan Kovil



## ஸ்ரீ ஐயப்பன் கோயில்



## ശ്രീ അയ്യപ്പൻ കോവിൽ

36 Masons Avenue, Harrow, Middlesex, HA3 5AR Tel : 020 8861 5825

History of Sree Ayyappa Seva Sangam and Beloved Gurusamy PADMANABHAN SREEDHARAN

The year 1980 witnessed the cult worship of Lord Ayyappa being introduced in the UK and the worship was initiated by our holiness Gurusamy P Sreedharan in the abode of Lord Murugan temple located in Eastham, London. Our holiness is well loved and respected by the Hindu devotees all over the UK as he continued to inspire them through his devotion, wisdom and innumerable services rendered to Swami Ayyappa. In due course it was the desire of Gurusamy to make everyone participate in the daily bhajans and he did so with the devotees gathering for the bhajans in front of Lord Ayyappa idol at the temple premises. The then chief priest of the temple Siva Sri Kailai R Naganathasivam appreciated his work and gave his complete support for the induction of Mandala Thiruvizha on 26th December (Boxing Day) and to be followed every year. It was the desire of the Gurusamy to make everyone participate in this great function rather to say, this must raise from the very grassroots. With this idea in mind, they went to every devotees and collected small amount of money to the extent of the money required for the function. This being a first of its kind in London, UK, gave an opportunity to the local residents to meet each other under one roof in the name of Lord Ayyappa.

With immense support extended to him by the temple trustees and devotees, Gurusamy conceived the idea and formed Sree Ayyappa Seva Sangam shortly. Aftermath following the revered footsteps of our holiness, devotees and certain group of people joined together and decided to conduct monthly puja on every first Saturday of the month at Kensington Primary School, London.

The objectives that steered the Ayyappa Seva Sangam is to serve the devotees who clustered in the name of swami Ayyappa. In late 1990s and early 2000s the seva sangam experienced big volume of devotees. In order to accommodate them the seva sangam looked ardently to build a separate temple for Lord Ayyappa near the Eastham locality, despite their hard efforts and lack of amenities they couldn't find one near the place. Devotees continued to conduct monthly puja both at Kensington and Harrow.

Finally in 2007, formally unite and merge the devotees from all over the UK and Gurusamy conceptualized the idea of building a proper temple anywhere in London to accommodate Ayyappa devotees and initiated to construct a temple in Masons avenue, Harrow.

உ

வேல்ஸ் ஸ்ரீ கல்பக விநாயகர் தேவஸ்தானம்
Wales Sri Kalpaga Vinayakar Temple
UNIT 43, ADDISON ROAD, PORT TALBOT, SA12 6HZ
TELEPHONE : 01639779872 /07870831417


*வேத சிவாகம மரபும் ஆலயவழிபாடும்*

மரபு என்றால் குறிப்பிட்ட இனம் அல்லது குழு அல்லது வகை ஒன்றின் வழியில் தலைமுறைகள் பல தாண்டி தொடர்ச்சியாய் வரும் தனித்துவமான பண்பாட்டு சிறப்பு பழக்கவழக்கங்கள் வாழையடி வாழையாக தொடர்வதே மரபு ஆகும். சைவர்களின் மரபை ஆராய்ந்துபார்த்தால் வேத சிவாகம மரபே பலஆயிரமாண்டுகள் அவர்களின் தனித்துவமான பண்பாட்டு பழக்க வழக்கமாக இருந்துவருவதாக வரலாற்றுச்சான்றுகள் கூறுகின்றன.

அதற்குச் சான்றாக ஆலயங்களும், அங்கு நடைபெறும் வழிபாடும், நமது சம்பிரதாய சடங்குகளும் இருந்து வருகிறன. இவை வேத சிவாகம அடிப்படையிலேயே அமையப்பெற்றிருப்பது நாம் அறிந்த ஒன்றாகும். வேத சிவாகமத்தை ஆதாரமாக கொண்டு நடைபெறும் ஆலயவழிபாடுகள், மனிதனை மனிதனாயும் அத்தோடு புனிதராயும் செதுக்கி செப்பமிட்டு செவ்வனே வாழ செய்கின்றன. அந்த வாழ்வியல் அறத்தன்மை உடையதாக அமைந்துவிடுகின்றது. அந்த அமைவின் காரணமக உலகில் மனிதனேயம் என்னும் உயரிய பண்பு சைவர்களின் வாழ்வியல் சிறப்பாகின்றது.

இத்தகைய சிறப்புக்கு முழுமுதல் காரணமாக இருக்கின்ற வேத சிவாகம மரபை நாம் பேணிபாதுகாப்பதோடு, நம் முன்னோர்கள் எமக்கு தந்தது போல, நம் வருங்கால சந்ததிக்கு எடுத்து கூறும் கடமைப்பாடை உணர்ந்து, பிருதானிய சைவத் திருக்கோயில் ஒன்றியமானது வேதசிவாகம மரபும் ஆலயவழிபாடும் என்ற கருப்பொருளில் பதினெட்டாவது சைவமாநாட்டை ஏட்பாடு செய்து நடாத்துவது, காலத்தால் சால சிறந்ததாகும். அத்தகைய அறப்பணி சிறப்புற இறை இன்னருளை இரஞ்சி இன்புற்றமைகிறோம்.


சுபம்.


# வேல் முருகன் ஈழகந்தன் திருக்கோயில்

# VEL MURUGAN EZHASKANDHAN THIRUKKOVIL





02 , Lythalls lane , Coventry , CV 66FG * Charity No 1145652 * Tel : 02476 663554.


*பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் வருடா வருடம் ஏற்பாடு செய்து வரும் மகாநாட்டு ஒழுங்கின் இவ்வருடம் பதினெட்டாவது மகாநாட்டை எட்டியுள்ளதை முன்னிட்டு நாமும் அக மகிழ்கிறோம். லண்டனில் பல ஆலயங்கள் அமைந்திருப்பதும் அங்கு எமது சைவத் தமிழ் மக்கள் அதிக அளவில் இருப்பதும் நாம் அறிந்ததே. லண்டன் நகருக்கு வெளியே பல இடங்களில் ஆலயங்கள் அமைத்து சைவ மக்களை ஒன்றிணைக்கும் பணியில் பலர் முன் வந்துள்ளனர். எமது ஆலயமும் கொவென்றி என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள மக்களுடன் ஒத்துழைப்புடன் நாமும் இவ் ஆலயத்தை நடத்தி வருகிறோம். நித்ய பூஜை மகோற்சவம் ஸ்கந்த சஷ்டி போன்ற பல விழாக்களும் நடைபெறுகின்றன . எனினும் நித்திய பூஜைகளுக்கும் விழாக்களுக்கும் சிவாசார்யார்களை வரவழைப்பதில் சிரமங்கள் உண்டு. இதற்கான வழிமுறைகளை பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் வருங்காலத்தில் செய்தால் எமது மரபுகள் மாற்றாமல் வேத சிவாகம முறைப்படி அனைத்தும் நடைபெற . நாமும் மிக விருப்பம் உடையவர்களாக இருக்கிறோம்.*

*நாம் வேறு தேசங்களில் இருந்தாலும் எமது ஊரில் செய்த வழிபாட்டு முறைகளை செய்வதில் மிக ஆர்வமாக உள்ளோம். வேத மந்திரங்கள் ஆகம கிரியைகள் என்பன சிவாச்சார்யர்கள் வந்து பணியாற்றும் போது மக்களும் ஈடுபாட்டுடன் வருவார்கள். விரதம் வழிபாடுகள் என்பன ஆலயங்களை சார்ந்து செய்யும்போது மனத் திருப்தியும் நல்ல அருளும் கிடைக்கும்.*

*எமது சிறார்களை ஆலயத்திற்கு வரவழைத்து கொண்டு வருவதில் பெரியோர்கள் பெற்றோர்கள் நல்ல முயற்சி எடுக்க வேண்டும். அவர்களது படிப்பு வேலை என்றிருந்தாலும் கிழமையில் ஒருநாள் வெள்ளிக்கிழமை மட்டும் இரவு நேரப் பூஜைகளுடன் ஆன்மீக ஒன்று கூடலை ஏற்படுத்த வேண்டும் . இவ்வாறான பணிகளையும் ஆலயங்கள் மேற்கொண்டால் தான் வருங்காலங்களில் எமது ஆலயங்களை பரா மரிக்கமுடியும் .*

*தங்களது முயற்சியில் நடைபெறும் வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற தலைப்பில் நடைபெறும் மகாநாட்டின் மூலம் எமது பாரம்பரிய நடைமுறைகளையும் அதன் உட்பொருள்களையும் உலகறியச் செய்வது மிக நல்ல செய்தியாகும் மகாநாடு சிறப்புற எமது ஈழக்கந்தன் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.*





# ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் – நொட்டிங்கம்
# Sri Thurkkai Amman Temple – Nottingham

10A West Crescent, Beeston, Nottinghamshire, NG9 1QE, United Kingdom
Tel - 0115 967 7751 Email - beeamman@gmail.com Web - www.nottinghamamman.org

**Chairman:**
Mr.J.Balasundaram

**Secretary:**
Mr.S.Krishanand

**Treasurer:**
Mr.M.Vijayathas

**Asst. Secretary:**
Dr.N.Balendran

**Committee Advisor:**
Mrs.V.Balendran

**Bank:**
Natwest Bank Plc

**Charity Number:**
1151808


**Trustees:**
Mrs S Janarthanan
Mrs V Kobaha
Dr K Sharmini

பிரித்தானிய சைவத்திருக்கோவில் ஒன்றியம் வருடா வருடம் நடத்தி வரும் மகாநாடு மூலம் சைவ மக்களையும் ஆலயங்களையும் ஒன்றிணைப்பதுடன் இளையோரையும் ஊக்குவித்து வருவது மிகவும் மகிழ்ச்சி. எமது ஆலயம் லண்டனிலில் இருந்து தொலைவில் இருந்தாலும் சைவத் தமிழ் மூலம் நாம் அண்மையில் தான் இருக்கிறோம். இங்கு வாழும் சைவமக்கள் விளங்க கூடிய வகையில் எமது ஆலய மரபுகளை எளிமையாக எடுத்துக் கூறும் நல்ல நிகழ்வாக வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்னும் விடயம் பற்றி மகா நாடு கருப்பொருள் கொண்டு நடாத்துவது பலவிடயங்களை நாம் தெளியக் கூடியதாக அமையும். இந்நாட்டில் பல கஷ்டங்கள் மத்தியில் தான் ஆலயம் கட்ட வேண்டியுள்ளது.அதனை எமது ஆகம மரபுகளைப் பேணி வழிபாடுகளில் குறைவு இல்லாமல் சிவாச்சாரியார்களை நாம் அழைத்து உரிய முறைப்படி செய்வதில் ஆர்வமாக உள்ளோம்.இதற்க்கு காரணம் இறைவனால் அருளப்பட்டு இன்றுவரையும் காப்பாற்றப் பட்டுக்கொண்டிருக்கும் வேத சிவாகமங்களை போற்றி கற்று வரும் மரபுகள் எமது ஆலயத்தில் தொடர்ந்தும் வளர வேண்டும் என்பதில் நாமும் மிக விருப்பம் உடையவர்களாக இருக்கிறோம்.உண்மையில் இதற்காக நாம் பல கஷ்டங்களை அனுபவிக்கிறோம்.தாய் நாட்டில் இருந்து அல்லது இந்தியாவில் இருந்து குருமாரை அழைப்பதில் உள்ள உள்நுழைவு அனுமதி பெறுவதில் உள்ள சிரமம் பலருக்கும் தெரியும்.இருப்பினும் ஆலய வழிபாடுகள் இடையூறின்றி நடைபெற ஒவ்வொரு ஆலயமும் கடின முயற்சி செய்கிறது.காலப்போக்கில் பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் இதில் கவனமெடுத்து செயற்படுத்தினால் நன்றாகும்.ஆலயப் பணியில்வேத சிவாகம முறைப்படி கடமையாற்றும் குருமார்களை வரவழைத்து எமது ஆலய மரபுகளை பேணுவோம்.

எமது ஆலயம் தொடங்கிய காலம் முதல் பல முன்னேற்றங்களை அம்பிகை அடியார்களின் உதவியுடன் செய்து வருகிறோம்.ஆலய மகோற்சவம் வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.அத்துடன் ஆலயத்திற்கு சிகரமாக விளங்கும் கோபுரம் அமைப்பதற்கும் உரிய வடிவமைப்பு வந்துள்ளது.எனினும் நகர சபைக் கட்டுப்பாடுகள் காரணமாக சில தடங்கள் உள்ளது.மிக விரைவில் அவற்றை நிவர்த்திசெய்து எமது திருப்பணிகளை செய்ய உள்ளோம்.

இவற்றை நாம் செய்வது தெய்வீக சக்திக்கு நாம் கொடுக்கும் உயர் மதிப்பாகும்.இம் மகாநாடு பல அறிஞர்கள் வருவதால் நல்லமுறையில் நடைபெற ஜெய துர்க்கையம்மன் அருள் வேண்டி எமது அன்பு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்

ஆலய நிர்வாக சபை
தலைவர்



**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**
என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD)
இந்து தமிழ் கலாச்சார சங்கம் (என்பீல்ட்)
61-65 Church Lane, Edmonton, London, N9 9PZ

Tel: 020 8884 3333/4333 info@ambaal.org www.ambaal.org **Charity No: 1143043**

# வாழ்த்துரை

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் திருவருள் துணைநிற்க

பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியம் 18வது சைவமாகாநாட்டை நடத்துவதை முன்னிட்டு வாழ்த்துக் கூறுவதில் அகமகிழ்வு அடைகின்றோம். சைவ மகாநாட்டிற்கு வருகை தரும் தாயகத்து பேச்சாளர்கள், தமிழகத்து பேச்சாளர் பெருமக்களையும் வாழ்த்துகின்றோம். இம்மகாநாட்டினூடாக நடாத்தப்படும் சிறுவர்களுக்கான சைவசமய அறிவுப் போட்டியினூடாக நம் இளம் சந்ததியினரிடையே சமயம் சார்ந்த நல்லறிவும் தெளிவும் ஏற்படும் என்பது திண்ணம். வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் எனும் தலைப்பில் நடைபெறும் மாநாடின் ஊடாக சைவத்தின் கண்களாக விளங்கும் வேத சிவாகம மரபும் திருமுறை மரபும் சிறந்து விளங்கவும் வேத சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள சிறந்த சிந்தனைகள் வெளிகொனர இம்மாநாடு உதவும். மேலும் வேதசிவாகமங்களே அனைத்திற்கும் மூலமாக, பொதுவாக உள்ளவை என்பதனை யாவரும் அறிய உதவும்.

பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் நடாத்தும் 18வது சைவ மகாநாடு சிறக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்

என்பீல்ட் நாகபூசனி அம்பாள் ஆலயம்
சிவாச்சாரியர்கள்

தெய்வீகத் திருப்பணியில்
இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

# Shree Sakthy Ghanapathy Temple

**Board of Trustees**

Chairman
K Kanendran

Vice Chairman
T Pangayetselvan

Secretary
C Kailaya – Vasan

Asst. Secretary
K Jeyakumar

Finance
K Paramanathan

**Temple Opening Hours**

Sunday - Thursday

8.30am – 2.00pm &
5.00pm – 9.00pm

Friday & Saturday

8.30am – 9.00pm

**Address**

21 Brigstock Road
Thornton Heath
Croydon
Surrey
CR7 7JJ

Tel: 020 8689 3466

**Chief Priest**

K Prakash Kurukkal

Registered Charity



The Chairman
The Federation of Saiva (Hindu) Temples UK
2-4 Bedford Road,
Walthamstow,
London E17 4PX

## வாழ்த்துச் செய்தி

*"திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை"*

இப்பிரபஞ்சம் முழுதும் நீக்கமற நிறைந்துள்ள பரமகருணா மூர்த்தியான இறைவன் உலகினை உய்விக்கும் பொருட்டு சைவாகம முறைப்படி அமையப்பெற்ற திருகோயில்களிலே எழுந்தருளி அருள்பாலித்து வருகின்றார்கள். ஆகவே ஆலய வழிபாடு என்பது நமது நீங்காத்துயரையெல்லாம் நீக்கி சுபமானதொரு வாழ்விளை அளிக்கவல்லது.

தமிழர்களிடத்திலே "கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்" என்ற ஒரு முதுமொழி உண்டு.

சமயகலாச்சாரத்தில் ஆழ்ந்த அறிவும் பற்றும் கொண்ட நம் முதாதயர்கள் உலகமெங்கும் புலம் பெயரும் பொழுது சைவாலயங்களை அமைத்து வழிபாடுகள் செய்து நமது சமயத்தையும் கலாச்சாரத்தையும் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பது வரலாறு கூறும் உண்மை.

அதேபோன்று இன்றளவும் பிரித்தானியாவில் புலம்பெயர்ந்த நம் மக்கள் அவரவர்கள் இருக்கும் இடத்தில் தங்களது சக்திக்கு தக்கவாறு பல்வேறு ஆலயங்களை ஆகமமுறையில் அமைத்து வழிபாடுகள் நடத்திவரும் வேளயில் அவ்வனைத்து ஆலயங்களையும் ஒன்றிணைத்து சைவத்திருகோயில் ஒன்றியம் என்றதொரு அமைப்பினை உருவாக்கி வருடாவருடம் இலங்கை இந்தியாவிலிருந்து பல சமய பெரியோர்களை அழைத்து கௌரவித்து மிக பிரமாண்டமாக மகாநாட்டினை நடத்திவருவது போற்றுதலுக் உரியதாகும்.

அந்த வகையில் பிரித்தானிய ஆலயங்களை ஒன்று சேர்த்து தனது 18வது சைவ மகாநாட்டை கொண்டாடும் பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியத்தை மகிழ்ச்சியுடன் பாராட்டும் இவ் வேளையில் அவர்கள் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல சக்தி கணபதி என்றும் துணை நிற்பார் என வாழ்த்துகிறோம்.

க பரமநாதன்
அறங்காவலர் சபை, செயற்பாட்டுக் குழு & சிவாச்சாரியார் சார்பாக
05 ஏப்ரல் 2017

# Milton Keynes Murugan Temple Trust

Registered Charity Number: 1150435

**வாழ்த்துரை**

"எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் கோலாகலமான 18வது சைவ மகாநாடு பக்த கோடிகளுக்குப் பரவசமூட்டும் ஒரு நிகழ்வாகும். ஞானிகளும், பேரறிவாளர்களும் பங்கு பெற்றுச் சிறப்பிக்கும் இவ் விழாவில், புதிதாக ஒன்றியத்தில் இணைந்த மில்டன் கீன்ஸ் முருகன் ஆலயச் சார்பில் வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை கொள்கிறோம்.

வணக்கத்திற்குரிய போப் அடிகளார் திருவாசகத்தை மொழிபெயர்த்த போது, "எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ற வரியைப் படித்துக் கண்ணீர் சிந்தினார். இக் கலி யுகத்தில், 21ம் நூற்றாண்டில், சிவபக்தி உலகெங்கும் வியாபித்து, மாணிக்கவாசகரின் மணியான அத் திருவாக்கு இன்று மெய்யானது.

வேத சிவாகம மரபுகள் இந்நாட்டில் தழைத்தோங்க இது வரை தோன்றிய 20க்கும் மேற்பட்ட ஆலயங்களை ஒருங்கிணைத்து பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் சைவத்திற்குப் பெரும் தொண்டாற்றுகிறது. ஒன்றியத்தின் வருடாந்த சைவ மகாநாடுகள் சைவ சமயக் கொள்கைகளை பிரித்தானியா வாழ் இந்து சமூகத்திற்கு ஊக்கி வளர்த்துப் பேருதவி புரிகிறது.

வாழ்க சைவத் திருக்கோயில் ஒன்றியத்தின் சமயப் பணி.

வளர்க "மேன்மை கொள் சைவ நீதி

விளங்குக உலகமெல்லாம்."

அன்பே சிவம்.

மில்டன் கீன்ஸ் முருகன் ஆலய அறக்கட்டளை சார்பாக

செயலாளன் மயில்வாகனம் வீரவாகு

http://www.miltonkeynesmurugantempletrust.com

# கருணாலயா
# சிவஸ்கந்தகிரி முருகன் திருக்கோயில்

**13 - 15 Thornton Road, Thornton Heath CR7 6BD**

**Tel: 0208 684 0747**

## வேதமும் ஆகமமும்

புனித வாழ்வை உயர்நிலை அடைய செய்ய ஆலய வழிபாடு முக்கியமானது. இவற்றிற்கு வேதமும் ஆகமமும் இரண்டு கண்களாக விளங்குகின்றது. நமது வாழ்விற்கு ஆதாரமான இப்பிரபஞ்சத்தை படைத்த இறைவன் மூச்சுக்காற்றில் இருந்து உருவானவை வேதங்கள். இவை போதிக்கும் வழிபாட்டு நெறி சனாதன தர்மம் எனப்படும். ஆன்மாக்கள் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டு சிவாகம கிரியை மரவுகள் அமைகின்றன.

சைவ சமயத்தையும் ஆலய வழிபாட்டையும் நெறிநிலைப்படுத்த சைவ மகாநாட்டில் வேதசிவாகம மரபு என்ற தலைப்பில் நடைபெறும் கருத்துரை, சிறப்பானதும் பயனுடையதானதும். சமய வாழ்வு என்றுஞ் சிறக்க அன்பு நிறைந்த நல்லாசிகளை மெய்யினால் இறைவனை ஏற்றி வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளர்க சைவம்!

நாகேந்திர முரளீதரக் குருக்கள்

மாணிக்க சதீஸ்வரசர்மா

மற்றும் ஆலய குருமார்கள், தொண்டர்கள்

# சர்வதேச இந்து இளைஞர் பேரவை

## International Hindu Youth Forum - UK

Founder **Mr. S. Ganeshkumar**

Address: IHYFUK- 204, 226, Imperial Drive, Harrow, HA2 7HH
Email: ihyforum@gmail.com Phone: 07411354315, 07459806397
Facebook: @ihyfuk

**Board Committee**

President
**Miss U. Marthungi**

Vice-President
**Miss S. Nathusha**
Secretary
**Miss T. Tharisana**
Assistant Secretary
**Mr B. Barath**
Treasurer
**Mr Y. Jeyram**
Assistant Treasurer
**Miss S. Nilogy**

**Miss S. Janani**
**Mr M. Kuruji**
**Miss N. Yesica**
**Mr S. Shakishnan**

**Trustees**
**Mr S.Ganeshkumar**
**Dr S. Mayooran**
**Mr K. Arulkumaran**
**Mrs M. Thayalini**
**Mr S. Sripathman**

**Patrons**
**SivaSri Kamalanatha Kurukkal**
**Sarveswarasarma**
**Balasubramaniyaiyer**
**Mr Kaneshamoorthy**
**Mr S. Karunalingam**
**Mr Sri Rangan**
**Mr A. Agilan**

இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ப பிரித்தானிய சைவத் திருக்கோவில் ஒன்றியம் வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடும் என்ற மேன்மையான பொருளில்மகாநாடு நடைபெறுவதை முன்னிட்டு எம்முடன் சேர்ந்திருக்கும் இளைஞர்களுடன் சேர்ந்து நாமும் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.ஏன் ஆலயங்களில் மந்திரங்கள் ஓத வேண்டும் அது விளங்காத மொழி என்று நம்மில் ஒரு சிலர் பேசுவதும் வடமொழியில் உள்ள மொழி புரியாது என்று சில சைவ சித்தாந்திகளும் எடுத்து சொல்வதும் ஏற்புடையதல்ல.காரணம் சைவ சமயம் அல்லது பல தெய்வங்களை வழிபட்டு வரும் மரபு உடையதால் இந்து சமயம் எனச் சிறப்பித்துக் கூறப்படும் எமது இந்து சமயம் பல நூல்களின் பரப்பில் வளர்ந்து வருகின்றது.அத்திவாரமாக பல மூலங்கள் இருந்து நமது சமயத்தை வளர்த்துள்ளன.அதில் ஒன்றாக வடமொழி சார்ந்த நூல்களும் அமைகின்றன என்பது மறைக்க முடியாத உண்மை.

அத்துடன் மரபு என்பது வாழையடி வாழையாக இன்றும் வந்து கொண்டே இருக்கிறது.மரபு பற்றி திருமுறைகளின் நிறைவான பெரிய புராணம் பல இடங்களில் எடுத்து ஆளுகிறது. தடுத்தாட் கொண்ட புராணத்தில் தந்தையார் சடையனார் தந்தனித்திரு மகற்குச் சைவஅந்தணர் குலத்துட்டங்களரும் பெரும் மரபுக் கேற்ப என மரபு என்பதின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.வேதங்கள் ஆகமங்கள் என்பன வடமொழியில் இருந்தாலும் அவற்றில் பாண்டித்யமானவர்களைக் கொண்டு பராமரிக்கும் பொறுப்பு சைவ சமய மக்களுக்கு உண்டு.எமது முன்னோர்கள் இவற்றை செய்துள்ளனர் .ஆறுமுக நாவலர் ,பண்டிதமணி கனபதிப்பிள்ளை பிற்காலத்தில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்கள் வேத சிவாகம மரபுகளையும் ஆலய வழிபாட்டில் முறையாக பேண வழி வகுத்தவர்கள்.

ஆனால் தற்காலத்தில் இவைபற்றிய தெளிவு வேண்டும் என்பதில் பல இளைஞர்கள் விருப்பமுடையவர்கள்.வெறும் பூசைகளுடன் நிற்காது எமது வழிபாட்டு மரபின் செயல்களை ஆலய சிவாச்சாரியார்களும் நிர்வாகத்தினரும் அல்லது எடுத்து விளக்கக்கூடிய அன்பர்களைக் கொண்டு அடியார்களுக்கு எடுத்துக் கூறி உண்மையான மூலங்களை காப்பற்றும் பணியையும் செய்ய வேண்டும்.அத்துடன் எமது தாய்மொழியாம் தமிழ் மொழியில் உள்ள திருமுறைகள் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் என்பவற்றையும் பேணி அவை எடுத்துரைக்கும் மூல நூல்கள் சம்பிரதாயங்கள் மரபுகள் அனைத்தையும் மதிக்க வேண்டும்.

அருணகிரிநாதர் கூட நாதவிந்து கலாதி நமோ நமோ வேத மந்திர ஸ்வரூபா நமோ நமோ என தமிழ்க்கடவுள் என்று நாம் சொல்லிக் க்கொண்டிருக்கும் முருகப் பெருமான் மீது பாடியருளியுள்ளார்.வேதாகமச் சித்திர வேலாயுதன் என கந்தர் அலங்காரத்தில் கூறுகிறார்.இருக்கு மந்திர மொழிவகை முனிபெற உரைத்த சம்ப்ரம சரவணபவ குக என திருப்புகழில் குறிப்பிடுகிறார் .இதிலிருந்து நாம் புரிய வேண்டியதொன்றுண்டு வடமொழி மரபும் தமிழ் மொழியும் சேர்ந்து வளர்த்த எமது சமய உண்மைகளை நன்மைகளை நலம் பெறச் செய்வோம்.இவ்வாறான அருள் ஞானிகள் போற்றிய வேத மந்திரங்கள் வடமொழி மரபுகளை நாமும் மதிப்பது தான் சமயத்திற்கு நாம் செய்யும் பெருந் தொண்டு. இந்த வகையில் இம்முறை மகாநாடு இனிய நற் பலன்களை இளையோருக்கு அள்ளித் தரவேண்டும்.எனவே தான் நாமும் வருடா வருடம் பெரியோர்களை கௌரவித்தல் இளையோர்களுக்கு இசை சந்தர்ப்பம் அளித்தல் போன்ற பல சைவ சமூக இணைப்புக்களை செய்து வருகிறோம்.இதன் மூலமும் பல ஆலயங்கள் சிவாச்சாரியார்கள் அன்பர்கள் இணைந்து எமது சமய தொன்மைகளை உணரும் வாய்ப்பு இருந்துள்ளது.காலம் பல கடந்தாலும் எம்முன்னோர் இவ் வேத சிவாகம மரபுகளை அவற்றிற்கு உரியோர் மூலம் பாதுகாத்து வந்தமையே இன்று வரைக்கும் நாம் எமது ஆலயங்களில் காணும் அபிஷேகம் ஆகுதி அலங்காரம் ஆராதனை அர்ச்சனை என்று விரிவுபட்டு நிற்பதை காண்கிறோம். இவற்றின் மரபு நிலைத்து நிற்க வேத சிவாகமங்களை ஆலய வழிபாடுகளில் போற்றுவோமா குக .இம் மகாநாடு மாண்புற எமது வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கிறோம். வேத ஒலியும் விளங்கு ஆகம மரபும் அருள் திருமுறைகளும் சைவ தேசம் எங்கும் திகழ்ந்து பொலியப் போற்றுவோம் .

இவ்வண்ணம்

சி.கணேஷ்குமார்

ஸ்தாபகர் , சர்வதேச இந்து இளைஞர் பேரவை.




## *Shri Venkateswara (Balaji) Temple*
### *of the United Kingdom*

Dudley Road East. Tividale. Oldbury. West Midlands. B69 3DU
Tel : 0121 544 2256. Fax: 0121 544 2257 • website: www.venkateswra.org.uk • Email: contact@venkateswara.org.uk
Registered charity no: 326712


20 April 2017

To:

Mr. M. Gopalakrishnan

Chairman

The Federation of Saiva (Hindu) Temples UK

**Re: 18th Saiva Conference on 6th & 7th May 2017**

We, the Board of Trustees, committee members and the devotees of Shri Venkateswara (Balaji) Temple, have immense pleasure in sending our Greetings and Warm Wishes for the success of your forthcoming 18th Saiva Conference.

It is admirable that your Federation is promoting the Saiva aspect of Hindu faith, bringing together all the followers of our faith.

One of our main objectives at Balaji temple is also to promote all aspects of Sanarthana Dharma in the UK for the education and enlightenment of our younger generation.

We look forward to cooperating and working together to achieve our common objectives in the future.


With kindest regards,

**Dr S Kanagaratnam** MBBS.MRCOG.

Chairman, Board of Trustees

# வேத சிவாகம மரபும் ஆலய வழிபாடுகளும்

- தமிழருவி த.சிவகுமாரன் B.A (Hons) M.Phil



வேதம், சிவாகம், மரபு, ஆலய வழிபாடுகள் என்னும் நான்கு சொற்களைக் கொண்டு விரியும் மேற்படி தலைப்பு ஆழ்ந்த பொருள்நயம் கொண்டது.

வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் என்னும் அருள்மொழிக்கு ஏற்ப இறைவனால் இறைவனால் அருளிச் செய்யப்பட்டு அவ்வப்போது அருளாளர்கள் மூலமாக உலகிற்கு மரபுரீதியாக எடுத்துச்சொல்லப்பட்டு, ஆலயங்களையும் மக்களையும் வழிப்படுத்தும் ஒரு பெரும் செயல்நுட்பத்தை மேற்படி தலைப்பு கொண்டுள்ளது.

வேதம் என்று நாம் நோக்கும்போது இந்திய தத்துவத்தின் அடிப்படை நூல்களான பிரஸ்தான திரயத்தில் அடங்கும் முதல்நூலாம் உபநிடதத்தைத் தந்தது வேதத்தின் தனிச்சிறப்பாகும். இந்து சமயத்தின் மூலநூல்களில் ஒன்றான வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே இந்து தத்துவஞானம் எழுந்து நிற்கின்றது. இந்து தத்துவ சிந்தனை என்பது மெய்ப்பொருள் ஆராய்ச்சி ஆகும். மெய்ப்பொருள் காண்பதே உயர்ந்த அறிவு. தத்துவம் என்பது பிரபஞ்ச நோக்குடையதும் இறைநெறியை இணைத்துக்கொண்டதும் ஆகும். தத்துவஞானம் வேட்கையை வலியுறுத்துவது. இந்து தத்துவத்தின் உயர்ந்த இலட்சியம் முத்தியாகும். முத்திக்கு சாதனைகள் அவசியமாகும்.

வேத இலக்கியத்தில் உள்ள 'ஏகம் சத்', 'தத் ஏகம்' என்னும் இறை உண்மைக் கருத்துக்கள் இந்துதர்ம கோட்பாட்டின் மூலமாகத் திகழ்கின்றன. இறைதத்துவங்கள் மட்டுமன்றி இந்துமதத்தின் அடிப்படை சிந்தனைகளும் வேத இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. வேத இலக்கியங்களில் உள்ள முழுமுதற்கடவுள் பற்றிய சிந்தனைகள், உயிர், கன்மம், மறுபிறப்பு, ஒழுக்கம் முதலானவை இந்து தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. தர்ம சிந்தனைகள் அனைத்துக்கும் மூலமாக வேதஇலக்கியங்கள் விளங்குகின்றன. ஆச்சிரமதர்மம், குருகுலதர்மம் என்பன வேதஇலக்கியங்களில் அடிப்படைக் கருத்துக்களாக குறிப்பிடப்படுகின்றன. வேதங்களின் அந்தமான உபநிடதங்களின் உரையாடல்களில் பிரம்மம், ஆன்மா, உலகம் தொடர்பான சிந்தனைகளைக் காணலாம். இவற்றில் பிரம்மம் யாவற்றிற்கும் மூலமானது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த பிரம்மமே சைவசித்தாந்தத்தில் சிவனாக சுட்டப்படுகிறது. உபநிடதம் பிரம்மத்திற்கு குறிப்பிடும் சகுணபிரபஞ்சம், நிற்குணபிரஞ்சம் நிலைகள் சைவசிந்தாந்தத்தில் முறையே தடத்த, சொருப நிலைகளுக்கு ஒப்பிடப்படும்.

பிரச்சின உபநிடதம் "உயர் பிரம்மம் ஒன்றே அதற்கு அப்பால் ஒன்றுமில்லை" என்று குறிப்பிடுவதன் மூலம் நித்திய பொருட்கள் அனைத்திலும் பிரம்மமே உயர்வானது என்ற கருத்து வெளிப்படுகின்றது. இதனாலேயே சைவசித்தாந்தத்தில் தொடக்கமாக வேதத்தை காணமுடிகிறது. வேதம் என்னும் அறிவு நூல்கள் உலகிற்கு முதன்முதலாக மூலப்பொருள் பற்றிய தெளிவைத் தந்தன. இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் ஆகிய நான்கு வேதங்களும் மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் ஆகிய நான்கு பிரிவுகளை உடையன. இவை கர்மகாண்டம், ஞானகாண்டம் எனும் இருபிரிவினுள் அடங்கும். இவ்விரு காண்டங்களும் இந்து தத்துவ சிந்தனைக்கான மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. வேதப்பாடல்களில் பிரதானமாகக் கூறப்படும் மெய்யியல் சிந்தனை இறைவன் பற்றியதாகும். "இயற்கைக்கும் மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட மேலான சக்தி ஒன்று உண்டு" என்பதே இதன் பொருள்.

"ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி" என்னும் வேதப்பாடல் இருக்குவேத பாசுரம் முதலாம் அத்தியாயம் 164ம் பாடலாக உள்ளது. இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன் என பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவ்வாறு அழைக்கப்படும் சக்தி ஒன்றே என்பது இதன் பொருளாகும். இந்த சக்தியே சைவசித்தாந்தத்தில் "யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி மாதொரு பாகனார் தாமே அங்கு வருவார்" என வளர்ச்சி பெற்றுநிற்கின்றது. இருக்குவேதம் 10ம்

அத்தியாயத்தில் உள்ள 121ம் பாடலில் எல்லாத் தேவரிலும் மேலான தேவர் எவன் என்ற கேள்வி கேட்கப்பட்டு, அதற்கு "அவன் ஒருவனே" என பதில் அளிக்கப்படுகிறது. இது சிவஞானபோதத்தின் முதல் சூத்திரத்தில் இடம்பெறும் "அவன்" என்பதற்கு மூலம் என அறிஞர்கள் குறிப்பிடுவார். இருக்குவேதப் பாடல்களில் உள்ள புருஷசூக்தம், நாசதீயசூக்தம் முதலானவை இறைவனுக்கும் பிரபஞ்ச படைப்பிற்கு இடையிலான தொடர்பை வலியுறுத்துகின்றன. வருணசூக்தம் முழுமுதற் கடவுள் கோட்பாட்டினையும், பிரபஞ்ச கோட்பாட்டையும் அறவியல், அறிவியல் சிந்தனைகளையும் இணைப்பதாக அமைந்துள்ளன.

ரிதம் என்பது இயற்கையையும் மனிதசெயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும் சக்தியாக விளங்குகிறது. ரிதத்தின் பாதுகாவலனாகவும் ரிதத்தை நிலைநிறுத்துபவனாகவும் பரம்பொருள் விளங்குகிறான் என்பது ஒழுக்கங்களுக்கு வேதங்கள் கொடுத்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஆறு, கடல், மலை ஆகிய இயற்கை அம்சங்களை நிலைநிறுத்தும் ஒரே சக்தியாக ரிதம் விளங்குகிறது. யமசூக்தப் பாடல்கள், வேண்டுதல்கள், கன்மவினை, மறுபிறப்பு என்பன பற்றி விரிவான செய்திகளைத் தருகின்றன. "தெய்வவழிபாடு என்னும் கன்மத்தில் ஈடுபட்டவன் தேவஉலகமாகிய சுவர்க்கத்தை அடைகிறான்" என்ற குறிப்பில் இறைசிந்தனையே உயர் கருமமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி சைவசித்தாந்தத்தில் கன்மம், மறுபிறப்பு கோட்பாடாக உயர்நிலை எய்தியுள்ளது. சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்று இந்நிலை சமூக, தனிமனித கட்டுப்பாடு நோக்கி வளர்ந்த விதம் வியக்கத்தக்கது.

வேதம் பொதுநூலாகவும் ஆகமம் சிறப்பு நூலாகவும் சைவர்களால் கொள்ளப்படுகிறது. ஆயினும் இந்து மதநூல்கள் அனைத்திற்கும் மூலநூலாக அமைபவை வேதமும் ஆகமமும் ஆகும். இவ்விரண்டும் இருவேறுபட்ட பொருள் மரபினை கொண்டதாகவும் தழுவி பிரிந்து விரிந்து நிற்பன. "வேதம் மரமாகில் ஆகமம் அந்த மரத்தில் பழுத்த பழம்" என குமரகுருபரர் குறிப்பிடுகிறார். வேத உபநிடதங்களின் சாரமாக வேதாந்தம் அமைவது போல சிவாகமங்களின் சாரமாக சைவசித்தாந்தம் அமைகிறது. சைவசமயத்தவர்களை பொறுத்தவரையில் சிவாகமங்களே மிக முக்கியமாகும். காரணஆகமத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது, "சைவசமயம் சிவப்பரம்பொருளால் உருவாக்கப்பட்ட அதேவேளை சிவப்பரம்பொருளை விளக்குவது" என்கிறது. காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள சிவாகமங்கள் 28 உம் சைவசித்தாந்த கருத்துக்களை எடுத்துக்கூறுகின்றன. சித்தாந்தம் என்பதன் பொருள் முடிந்தமுடிவு எனவும் நன்கு நிறுவப்பட்டது எனவும் அறிஞர்கள் கொள்வர். இக்கருத்து காமிக ஆகமம் மூலம் வெளிப்படுகிறது. ஆகமம் என்னும் சொல் பாசம், பசு, பதி என்னும் முப்பொருளையும் ஞானம், மோட்சம், ஆணவ ஒடுக்கம் (மலநாசம்) என்பனவற்றையும் சிறப்பித்துக் கூறுகின்றன. அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞானத்தை வழங்குவதே ஆகமம் எனப்படுகிறது.

"ஆகமம் என்றால் இறைவனை அடையச்செய்வது" என்று கருத்துரைப்பர். இறைவனையும் அடியவனையும் நெருங்கச் செய்யும் வழிமுறை ஆகமம் ஆகும். ஆகமம் என்ற வடமொழிச்சொல் ஆதிசங்கரரின் சிவசங்கராஷ்டகத்தில் பயன்படும் விதத்தில் இருந்து அதன் பொருளை நோக்கலாம்.

"ஆதிபீஷண கடுபாஷண யமகிங்கர படலி கிருததாடன பரிபீடண <u>மரணாகம</u> சமயே உமையாள் சக மம சேதஷி யமசாசன நிவசம் சிவசங்கர சிவசங்கர ஹரமே ஹர துரிதம்"

இதில் மரண + ஆகம என்ற இருசொற்களில் ஆகம என்பதற்கு "நெருங்கிவருதல்" என்று பொருள். ஆகவே ஆகமம் என்பது இறைவனையும் அடியார்களையும் நெருங்கிவரச்செய்வது என்பதாகும். ஆகமங்கள் சைவசித்தாந்த உண்மைப்பொருளை வெளிப்படுத்துகின்றது. இவை கிறிஸ்துசகாப்த காலங்களிலேயே செல்வாக்கு பெற்றதாகக் கூறப்படுகிறது. சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு பாதங்களைக் கொண்டதாகும். ஆகமங்களில் சரியாபாதம், கிரியாபாதம் என்பன கிரியை நெறிகளாகக் கூறப்பட்டாலும் சிந்தாத்தப்பொருளை உள்ளடக்கமாக உள்ளன. ஓம் எனும் பிரணவம், சிவலிங்கவழிபாடு, மஹோட்சவத்திருவிழா, நித்தியக்கிரியைகள் என்பன ஆகமங்களில் விதந்தோதப்படுகின்றன. மேற்சொன்னவை சைவசித்தாந்த நெறியை அடிப்படையாகக் கொண்டவையாகும். இந்தக்கிரியை மரபுகள் ஐந்தொழில் மரபினை எடுத்துக்காட்டுகின்றன. "கிரியை என மருவும் அவை யாவும் ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" என சிவப்பிரகாச நூல் கூறுகிறது.

யோகபாதமும் ஞானபாதமும் தத்துவப்பொருளை எடுத்துக்கூறுகின்றன. யோகபாதம் என்பது இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகத்தை எடுத்துக்காட்டுகின்றது. ஞானபாதம் முழுமையாக சைவசித்தாந்த

பொருளை விளக்கிக்கூறுகின்றது. மூலஆகமங்களாக சுவாயம்புவம், சுப்பிரபேதம், கிரணம், மகுடம், ரௌரம் ஆகிய ஆகமங்களில் மட்டுமே தற்போது ஞானபாதம் காணப்படுகிறது. ஆன்மீக விடுதலைக்கு வழிகளைக்கூறும் நூல்களில் ஆகமங்கள் முதன்மையானது. ஆகமங்களில் கூறப்படும் சாதனைகள் அனைத்தும் முப்பொருள் தத்துவத்தை அடக்குபவையாக அமைகின்றன. சிவனின் திருமேனிகளாக சிவாகமங்களை குறிப்பிட்ட நூல்கள் அச்சிவனுக்கு நிவேதனப் பொருளாகக் கொள்ளுவது அச்சிவாகமங்களில் ஞானபாதப் பொருளாகிய சித்தாந்தத்தையே ஆகும். இதனை “சித்தாந்தேன நிவேதிகம்” என்று காமிகஆகமம் குறிப்பிடுகிறது.

ஆகமங்களில் ஞானாபாதம் அனைத்திலும் பதி, பசு, பாசம் என்னும் மூன்றினதும் இலட்சணங்கள் பசுவானது பாசங்களின் நின்றும் நீங்குவதற்கான சாதனைகள் அதன் பயனாய் பசு அடையவேண்டிய முத்தி நிலை என்பன பற்றியும் சிறப்பாக விளக்குகின்றன. உபாகமங்களான மாதங்கபேஸ்வரம், மிருகேந்திரம், தேவிகாலோத்தரம், பௌஷ்கரம் என்பவற்றில் ஞானபாதத்தினை சிறப்பாக நோக்கமுடியும். ஆகமங்களில் பொதுவாகவே ஆன்மாவின் இயல்பு, மாயையின் இயல்பு, கன்மவினை, பஞ்சபூதம், ஐந்தொழில், பதி பசு பாச இலட்சணம், தீட்சை, மந்திரம், இருவினையொப்பு, சத்திநிபாதம், அட்டாங்கயோகம் என்பன கூறப்பட்டன.

கிரணஆகமத்தை விஷேடமாக நோக்கும் போது அதில் பதியின் சொரூபஇலட்சணம், தடத்தஇலட்சணம் மூவகை ஆன்மாக்கள், ஆணவம், கன்மம், மாயை, மலபரிபாகம், இருவினையொப்பு முதலிய விடயங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. ஆகமங்களில் யோகபாதம் சிவயோக முறைகளை விளக்கிக் கூறுகிறது. ஞானபாதமானது சிவஞானத்தை குறிப்பிடுகிறது. ஞானபாதம், பதிஇலக்கணம், பசுஇலக்கணம், பாசஇலக்கணம் முதலியவற்றை எடுத்துக்கூறுகின்றது. ஆன்மாக்கள் முத்தி இன்பம் பெறுவதற்குரிய வழிகளையும் ஆகமங்களில் ஞானபாதம் கூறும். சர்வஞானோத்தர ஆகமத்தில் சர்வஞானோத்திரம் என்பது சிவாகமங்களில் அனைத்தினதும் சாரமாகிய ஞானம் என பொருள் படுகிறது. சர்வஞானோத்தரத்தில் சித்தாந்த முத்தி என்பது சிறப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. சித்தாந்த முத்தி என்பது பரமுத்தி ஆகும். இவ்வாகமத்தில் பதியின் சொரூபஇலட்சணம், பதியின் ஐந்தொழில், பசுஇலக்கணம், பாசஇலக்கணம் ஆகிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் வடமொழியில் எழுச்சிபெற்ற சைவசித்தாந்த நூல்களான அட்டபிரகரண நூல்களுக்கு சிவாகமங்களில் ஞானபாதமே அடிப்படையாயின. பிற்கால சைவசித்தாந்த பனுவல்களில் குறிப்பிடப்பட்ட சில கலைச்சொற்களுக்கும் உவமான உத்திகளுக்கும் சிவாகமங்களே முன்னோடியாக விளங்கின.

இவ்வாறு தத்துவப் பொருட்களை மிக விளக்கி உரைத்த ஆகமங்கள் கிரியைமரபு பற்றி மிகவும் விதந்தோதின. அவற்றை ஆகமம் கூறும் பொருள்மரபு என விஷேடித்து கூறுவர். அவையாவன கோயில் அமைப்பு முறை, கோயில் அமைக்கவேண்டிய இடத்தின் அமைப்பு, விக்கிரக அமைப்பு முறை, கிரியை முறைகள், வழிபாட்டு முறைகள், ஆலயத்தில் இடம்பெறவேண்டிய கலைகள் போன்றவையாகும்.

கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயசித்தம் என்பவை எவ்வாறு அமையவேண்டும். இதன் அடிப்படையில் ஆலயத்தின் சகல கிரியைகளும் இடம்பெறவேண்டும் என ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. கர்ஷணம் என்றால் ஓர் இடத்தில் புதிதாக அமைக்கமுன்னர் நிலத்தை மட்டப்படுத்துவதற்கு கலப்பைக் கொண்டு உழுது துப்புரவு செய்வது என்பதையும் பிரதிஷ்டை என்றால், பிர என்பது நன்கு, திஷ்டை என்பது நிலைநிறுத்துதல் என்பதையும் குறிக்கிறது. எனவே நன்றாக நிலைநிறுத்துதல் என்பது இதன் பொருளாகும். ஆலயம் அமைந்த பின்னர் மூலவிக்கிரகத்தை நன்கு நிலைநிறுத்தலே பிரதிஷ்டை ஆகும். இது நான்கு வகைப்படும். அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என்பனவாகும். ஆலயம் இல்லாத இடத்தில் புதிதாக ஆலயம் அமைத்து விக்கிரக மூர்த்தியை எழுந்தருளச் செய்தல் அநாவர்த்தன பிரதிஷ்டை எனவும் முன்பிருந்த ஆலயம் அழிந்துவிட்டால் அதே இடத்தில் புதிய ஆலயத்தை அமைத்து மூர்த்தியை பிரதிஷ்டை செய்தல் ஆவர்த்தனபிரதிஷ்டை என்றும் ஒரு ஆலயத்தின் திருத்தவேலைகளுக்காக மூர்த்தியை பாலஸ்தாபனம் செய்து திருத்தவேலைகள் முடிந்ததும் மூர்த்தியை பிரதிஷ்டை செய்வது புனராவர்த்த பிரதிஷ்டை என்றும் ஆலயத்தில் மரணம், திருடர் புகுதல் போன்றன ஏற்பட்டிருப்பின் அக்குற்றங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பிரதிஷ்டை அந்தரிதபிரதிஷ்டை எனவும் குறிப்பிடப்படும்.

ஆலயத்தில் நடைபெறும் கிரியைகள் அனைத்தையும் ஆகமங்கள் விரிவாகக் கூறுகின்றன. நித்திய, நைமித்தய பூசைகள், விழாக்கள், காமிய, நிஷ்காமிய கிரியைகள் உற்சவங்கள் பற்றி

அவை செய்யப்படவேண்டிய விதிமுறைகள் பற்றி வழியுறுத்தி குறிப்பிடுகின்றன. ஆகம முறைப்படி அமையப்பட்ட ஆகமங்கள் மனித உடலை ஒத்தவையாக காணப்படும். ஆகமங்கள் கூறும் கிரியை பற்றி விளக்கிக் கூறும் நூல்கள் பத்ததிகள் எனப்படும். இதன் எண்ணிக்கை 18 ஆகும். கிரியை என்றால் உயிர்கள் இவ்வுலகில் நல்வாழ்வு பெறவும் மறுமை உலகில் நற்பேறு பெறவும் மந்திரங்களோடு கூடி ஆற்றப்படுபவையே கிரியைகள் ஆகும். தனிமனிதனுக்கும் சரி, ஆலயங்களுக்கும் சரி செய்யப்படவேண்டிய கிரியைகளை ஆகமங்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. ஆன்மார்த்த கிரியைகள் மனிதனுக்குரியது. இது பூர்வகிரியை, அபரக்கிரியை இருவகைப்படும். ஆலயங்களில் இயற்றப்படும் கிரியைகள் பரார்த்தகிரியைகள் எனப்படும். இவை நித்திய கிரியைகள், நைமித்திய கிரியைகள் காமிக கிரியைகள் என வகைப்படுத்தப்படும்.

இவை தவிர விக்கிரக அமைப்புமுறை, எவ்வாலயங்களில் எவ்விக்கிரகங்கள் அமையவேண்டும், அவை என்னென்ன அளவில் அமையவேண்டும், அவை எந்தத் திசையில் அமையவேண்டும், பிரகார கோயில்கள் என்ன அளவில் அமையவேண்டும், விக்கிரகங்களைச் செய்யப்பயன்படும் கற்கள் எவ்வாறு தெரிவுசெய்யப்படவேண்டும் (சிலாபரீட்சணம்) என்பவற்றையெல்லாம் மிகவும் அச்சொட்டாக வலியுறுத்தி கூறுகின்றன. எந்தெந்த திசையில் ஆலயங்கள் அமைக்கப்படவேண்டும், ஆலயத்தைச் சுற்றி எட்டுத் திக்குகளிலும் அமைக்கப்படவேண்டிய அட்டதிக்கு பாலகர்கள் போன்றோர் விபரங்களையும் ஆகமங்கள் சிறப்பாக கூறுகின்றன. உதாரணமாக: கோயிலின் தூலலிங்கம் எனப் போற்றப்படுகின்ற கோபுரத்தின் சிறப்புப்பற்றி சுப்பிரபேதம் என்ற ஆகமம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"தூரஸ்யே சிகரே திருஷ்வா
யாவத் கைலாச பூதலம்" என்கிறது.

"ஒரு ஆலய கோபுரத்தின் கலசம் எவ்வளவு தூரத்திற்கு கண்பார்வைக்குத் தெரிகிறதோ, அத்தூரம் சுற்றி அமைகின்ற நிலம் யாவும் பூமியில், சிவன் உலவும் கைலாசம்" என்பது இதன் பொருளாகும்.

இவ்வாறு வேதங்களையும் ஆகமங்களையும் தொன்றுதொட்டு பிரமாணம் பிசகாமல் காத்துவருவதற்கே மரபு என்று பெயர். மரபு மீறப்படுதல் ஆகாது. இதை இன்னொரு வகையில் சம்பிரதாயம் என்றும் குறிப்பிடுவார். ஆனால் இன்று உலகெங்கிலும் உள்ள இந்துக் கோயில்களில் குறிப்பாக, சைவஆலயங்களில் இந்த வேதாகம மரபுகள் சரியான முறையில் பேணப்படுகின்றனவா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும். ஆகமங்கள் சொன்ன பிரமாணங்கள் சகல வழிகளிலும் மீறப்பட்டுள்ள நடைமுறையை இலங்கை, இந்தியா உட்பட புலம்பெயர் தேசங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆலயங்களில் காணமுடிகிறது. இந்நிலை தவிர்க்கப்படவேண்டும். வேதாகமங்கள் சொன்ன பிரமாணங்களை, மரபுகளை சரியான முறையில் கடைப்பிடித்து ஒழுகும் போது அனைவருக்கும், உலகிற்கும் நல்லவையே நடக்கும்

# வேத கீதம் - ஒரு வைத்திய நாதம்

படை வீரர்கள் நடந்து போகும்போது தாளம் மாறாமல் லெஃப்ட், ரைட் என்று கால்களைப் பூமியில் உதைத்தபடி நடப்பார்கள். பாதை முழுவதும் இப்படி நடப்பவர்கள், ஆறுகளுக்கிடையேயான பாலங்களின் மீது நடக்கும்போது மட்டும், ராணுவ நியதிக்கு மாறாக ஒலி ஒழுங்கின்றி விருப்பம் போல நடக்கும்படி உத்தரவு பிறக்கும். ஏன் தெரியுமோ?

அந்தப் பாலம் அவர்கள் எடையைத் தாங்கும் வல்லமை உடையது என்றாலும் தாள ஒலியின் மூலம் முறிந்து போக வாய்ப்புண்டு. அவர்கள் நடையில் எழும் தாளகதியும், பாலத்தின் அதிர்வலையும் இணையும் போது பாலம் அதிர்வடைந்து பாதிப்புக்குள்ளாகிறது. இதுதான் ஒலியின் மகத்துவம். Resonance எனப்படும் எதிர் ஒலி அதிர்வே இவ்விளைவை ஏற்படுத்துகிறது.

வேத மந்திரங்கள் இந்த விஞ்ஞான அடிப்படையில்தான் பலவிதமான விளைவுகளை பிரபஞ்சத்தில் உண்டுபண்ணு கின்றன. நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்கிற பஞ்சபூதங்களை நாம் அறிவோம். அவற்றின் தன்மையையும் நாம் ஓரளவு அறிவோம். அவை ஒவ்வொன்றையும் சுட்டுவதற்கு வண்ணங்கள் இருக்கின்றன. அதைவிட அதிசயம் ஐம்பூதங் களும் ஐந்து வகை ஒலிவித்துக்களால் (பீஜம்) கட்டப்படுகின்றன. உதாரணமாக, 'ரம்' என்கிற பீஜம் நெருப்பைக் குறிக்கும். அதாவது 'ரம்' என்கிற ஒலியை அளவு மாறாமல் எழுப்பியபடி

ஒரு பொருளை நோக்கினால் அது தீப்பற்றி எரியும். இப்படி ஒலி இரகசியங்களை உள்ளடக்கியே வேத மந்த்ரங்கள் உருவாயின.

இப்படியே ஓம் என்கிற ஒலியை 'பிரபஞ்ச இயந்திரத்தின் சுழற்சிப் பேரொலி' என்ற பொருளில் 'The vibratioin of the Cosmic Motor' என்று வர்ணிக்கிறார் பரமஹம்ச யோகானந்தர் அவர்கள். பிரபஞ்சத்தின் சகல ஒலியின் சங்கம ஒலியே 'ஓம்' ஆகிறது. அதனால்தான் சகல மந்த்ரங்களும் ஓமில் தொடங்கி ஓமில் நிறைவுறுகின்றன.

ஓர் ஆச்சரியம் பாருங்கள்! உலகின் பல மதத்தவரும் இதே ஒலியைச் சிறிது கூட்டிக் குறைத்து புனித ஒலியாகக் கொள்கிறார்கள். திபெத்தியர்கள் ஹூம் (hum) என்றும், கிறிஸ்தவர்கள் ஆமென் (Amen) என்றும், இஸ்லாமியர்கள் ஆமீன் (AAmean) என்றும், எகிப்தியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் எல்லாருமே ஆமேன் (Amen) என்றும் புனிதச் சொல்லாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஓம் என்ற ஒலி, ஒலிக்க ஒலிக்க தூய்மையும் தெய்விகமும் உண்டாகிறது. ஓம் என்பதை உள்ளே கேட்கத் தொடங்கிய பின்னர், அத்துடன் நாம் ஒன்றிவிடும்போது நாம் பரமாத்ம நிலையையே எய்தவும் முடிகிறது. 1920இல் பரமஹம்ஸ யோகானந்தா என்கிற அருளாளர், மெய்யுணர்வு நாட்ட முள்ளவர் கூட்டமைப்பு நிறுவி ஆய்வு செய்து சில முடிவுகளை வெளியிட்டார். நம் கண்களுக்கு வேறு வேறாகத் தென்படும் திடப்பொருள்கள், திரவம், வாயுக்கள், ஒலி ஒளி இவை எல்லாம் உள்ளிருக்கும் அதிர்வுகளால்தான் வேறுபடுகின்றன என்று தெளிந்தார். ஓம் என்கிற ஒலி அதிர்வு இவை அனைத்தையும் ஊடுருவி அவற்றுள் பலவிதமான மாற்றங்களை ஏற்படுத்து வதையும் உணர்ந்தார். ஓம் என்கிற ஒலியை முறையாக ஒருவர் ஏற்படுத்துவதன் மூலமும், உள்வாங்குவதன் மூலமும் பிரபஞ்ச

சக்தியை நம் உடம்பு பெற்று பலவிதமான நோய்கள், வலிகள், குறைபாடுகளில் இருந்து விடுதலை பெற முடியும் என்று நிரூபித்தார்.

அவரது ஆய்வின்படி பன்னிரண்டாயிரம் முன்ற ஓம் ஒலி எழுப்புவது - பெறுவது மூலம் பாவங்களின் பதிவுகள் கரைகின்றன. தினம்தோறும் 12000 முறை ஒலித்து, ஓராண்டு பழகினால் ஆத்ம சாட்சாத்காரம் ஏற்பட்டு பிரம்ம ஞான அனுபவம் ஏற்படுகிறது என்பது வெளிப்பட்டது.

ஒலி மருத்துவம் என்கிற கட்டுரையில் சைமன் ஹிதர் என்கிற ஆய்வாளர் பல அதிசயத் தகவல்களைப் பதிவு செய்திருக்கிறார். உலகின் பல பாகங்களிலும், பழங்குடி மக்கள் உட்பட, பல மதத்தவரும் ஒலியின் மூலம் நோய்களை வெல்ல முடியும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நோயைக் குணமாக்கும் ஆற்றல் (healing power) ஒலியில் உள்ளது என்பதே அவர் ஆய்வுச் செய்தி. தாவீது தம் இசைக்கருவி மூலம் பேரரசர் சாலின் மனச்சோர்வை மாற்றிய செய்தி பைபிளில் உள்ளது. இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே எகிப்தில் ஆண்மைக் குறைவு (infertility, Rheumatic pain) முடக்குவாதம் போன்றவற்றை மாற்ற இசை பயன்படுத்தப்பட்டுள்ளது.

பக்கவாதம் அல்லது ஒருபக்கம் முழுமையும் சிறிது சிறிதாகப் பாதிப்புறும் துயர் (Sciatica), மூட்டு வலி ஆகியவற்றை கிரேக்கர்கள் இசை மூலம் மாற்ற முயன்றுள்ளனர். அலெக்ஸாண்டர் மனச்சிதைவுற்ற போது லயர் என்ற இசைக்கருவி மூலம் அவரைச் சரியான நிலைக்குக் கொணர்ந்த தகவல்கள் உள்ளன. ‘இசையே மருத்துவம்’ என்ற பொருளில் ‘Men have song as a physician for pain’ என்று எழுதுகிறார் அவர்.

உடலிலும் உள்ளத்திலும் ஒலி அதிர்வுகள் உட்புகுந்து பிரமிக்கத்தக்க விளைவுகளை உண்டாக்குகின்றன. உறுப்புகளுக்கிடையிலான ஒத்திசைவு, நோயின்றி உடலும் மனமும் சுறுசுறுப்புடன் இயங்குதலே ஆரோக்கியம் என்று அகராதிகள் வரையறை செய்யும்போது, இசை அதிர்வு ஒலி இதனை நம்முள் ஏற்படுத்தும் என்றால் ஒலியைப் பயன்படுத்துவது ஒருவகை மருத்துவம் தானே!

பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ENT மருத்துவர் டாக்டர் ஆல்ஃபிரட் டோமட்டீஸ், ஐம்பது ஆண்டுக்காலம் 'கேட்கும் திறன்' பற்றி ஆய்வு செய்து சில அரிய உண்மைகளை வெளியிட்டார். காதுதான் நமது புலன்களிலேயே மிகமிக முக்கியமானது என்கிறார். தள்ளாடாதபடி நிற்க, நடக்க காரணமான உடம்பின் சமநிலை, தாளகதி, அசைவு, முழு நரம்பியல் மண்டலத்தையும் ஆட்டிப் படைக்கும் திறன் இவை யாவும் காதுகளையே மையமாகக் கொண்டுள்ளன.

கவனம். அந்தக் காதுகளுக்காகவே உண்டானது சுருதி, வேதம். காதுகள் மூலம் ஒலி மருத்துவம் செய்யும் மிக உயர்ந்த உத்தியே வேத கோஷம். பல விஞ்ஞானிகள் ஆய்வை அடுத்தடுத்து வரிசைப்படுத்துகிறேன். குரல் ஒலி காதுகள் மூலம் செய்யும் அதி அற்புதங்களை நாம் பிறகு ஒப்புக் கொள்ளுவோம்.

கேட்புத்திறனுக்கான நரம்பு, உடம்பில் சகல தசை மண்டலத்துடனும் தொடர்புடையது. Vagus nerve எனப்படும் செவிக்குள் இலங்கும் நரம்பு, இதயம், நுரையீரல், வயிறு, கல்லீரல், சிறுநீர்ப்பை, சிறுநீரகம், சிறுகுடல், பெருங்குடல் அனைத்துடனும் தொடர்புடையது. டாக்டர் டோமடீஸ் ஆய்வின்படி அதிக அதிர்வலை எழுப்பும் (3000 Hzக்கு மேல்) ஒலி 'மூளையைத் தூண்டி சிந்திக்கும் திறன், நினைவாற்றல்,

முடிவெடுக்கும் திறன், கவனம் இவற்றை வளர்க்கிறது' என்கிறார். பலர் கூடி வேத கோஷம் செய்யும்போது கேட்பவரும் இத்தனை நன்மைகளையும் பெறமுடியும் என்பது சரிதானே!

ஆயுஷ்ய சுக்தம், அபிமிருத்ய சுக்தம் போன்றவை இதற்கு ஆதாரம்.

இன்றைய நவீன விஞ்ஞானம் ஒலி அலைகளைப் பயன்படுத்தி சிறுநீரகக் கற்களை உடைத்து வெளியேற்றுகிறது. ஒலி இன்னும் என்னதான் செய்யாது? நமது உறுப்பு, எலும்பு, தசைத்துணுக்கு எல்லாமே எதிர் அதிர்வலை எழுப்பும் ஆற்றல் உடையவை. அதனால் வேத கோஷம், மங்கள இசை இவை கோயில்களில் முழங்கும்போது உடல் எல்லையற்ற நலன்கள் பெறமுடியும்.

18ஆம் நூற்றாண்டில் Ernest Chaldnin என்கிற ஜெர்மானிய ஆய்வாளர், வயலின் குறித்து ஆய்வு செய்தார். வயலின் வில் (Bow) எழுப்பும் விதவிதமான அதிர்வுகள், ஒரு தட்டில் தூவப்பட்டிருந்த மணல் துகளில் விதவிதமான ஜியோமிதி வடிவங்களை உண்டுபண்ணுகிறது என்று கண்டறிந்தார். மணலில் கூட இசை ஒலி அதிர்வு தாக்கம் செய்கிறது என்பது நிரூபிக்கப்பட்டது.

1960களில் ஜேம்ஸ் ஹென் என்கிற சுவிஸ் விஞ்ஞானி, கிளிசரின், பாதரசம், இரும்புத்துகள், வெவ்வேறு அடர்த்தி உடைய திரவங்கள் மீது ஒலியின் தாக்கம் குறித்து பத்து ஆண்டுகள் ஆய்வு செய்து அவற்றில் நிகழும் மாற்றங்களை புகைப்படங்கள் எடுத்து வெளியிட்டார். ஒலி அதிர்வுகளுக் கேற்ப விதவிதமான ஜியோமிதி வடிவங்களை ஒவ்வொன்றும் பெறுகின்றன என்பது கண்டறியப்பட்டது.

தொடர் ஆராய்ச்சிகளின் விளைவாக, பாரிஸில் ஓர் அரிய உண்மை வெளிப்பட்டது. ஆரோக்கியமானவர்களின் உடலில்

இசைக்கருவிகளின் ஒலி அதிர்வுகள் ஹீமோகுளோபின் அளவைக் கூட்டுகிறது என்பதும், புற்றுநோய் செல்கள் அதிர்வுகளைத் தாங்கமாட்டாது உடைந்து உருக்குலைந்து விடுகின்றன என்பதும் நிரூபிக்கப்பட்டது. இசையின் ஒவ்வொரு ஸ்வரமும் ஒவ்வொரு விதமான மாற்றத்தை இரத்தத்தில் ஏற்படுத்தும் அதி அற்புதத்தை ஃபேபியன் மாமன் (Fabien maman) என்பவர் xylophone என்கிற இசைக்கருவி கொண்டு நிரூபித்தார்.

எல்லா இசைக் கருவிகளையும் விடவும் அதிக ஆற்றல் கொண்ட இசைக்கருவி மனிதனது குரல்வளையே என்பதையும் Fabien maman நிரூபித்தார். மனிதக் குரலின் கூடுதல் பலத்திற்குக் காரணம் அதன் ஆன்மிக சக்தி (spiritual resonance) என்கிறது அவரது ஆய்வு. அதிலும் பிறரது குரலை விடவும் சொந்த அவரவர் குரல், அவரவர் நோயைச் சொஸ்தப்படுத்தும் பலம் மிக்கது என்றும் நிரூபித்தார். இரத்த அணுக்கள் ஒலி அலைகளை, அதிர்வுகளை உள்வாங்கி நோயற்ற நிலை எய்துகின்றன என்று அவர் நிரூபித்துக் காட்டினார்.

இப்படி கருவிகளும் ஆய்வுக் கூடங்களும், மேசைகளும் கொண்டு மேற்கத்திய விஞ்ஞானம் குடைந்தெடுத்த இரகசியங்களை நம் ரிஷிகள், முனிவர்கள் எளிமையாக வெளிப்படுத்தினர். மிருத்யுஞ்சய் மந்த்ரம் போன்ற மந்திரங்கள், அதர்வ வேதத்தின் சில பகுதிகள் மூலம் நோயைச் சரிசெய்யவும் முடியும், உண்டாக்கவும் முடியும் என்று வெளிப்படுத்தினார்கள். கோயில் மணியின் மூலம்கூட ஓம்கார நாதத்தை உண்டுபண்ணி பலருக்கும் பயன்படும்படி பரப்பிக் கொண்டிருப்பதே நமது ஒலி மருத்துவத்தின் உண்மை நோக்கம்.

# SIVA DHARMA IN SANATANA DHARMA

Dr. R. Lambotharan
Saiva Siddhanta Peedam, Canada
www.knowingourroots.com

*The eternal* ***sanatana dharma*** *is three fold. It has no bound of time, place or even religion.*

***1.lOga dharma:*** *This worldly dharma is enforced from others or outside. As such there is no choice but to agree and follow. Eg: traffic rules, paying taxes etc. Failing this risks you with fines, lawsuits and punishments by the state. This worldly* ***dharma*** *enforced externally is self centered. This common* ***dharma*** *is observed individually and in groups. This is to maintain the law and order in the family, society and country. It is a must for all and there is no choice. Ancient* ***smritis*** *have prescribed this. They talk about various do's and dont's for this. They laid down the foundation for the current laws and legislations. This can be amended time to time to suit the time, place and circumstances. Government is responsible for the execution and preservation of this dharma through the forces. We part take in this responsibility through democracy.*

***2. Vaidhika dharma:*** *Unlike common worldly* ***dharma*** *which is enforced from out side this* ***vaidhika dharma*** *is voluntarily self enforced. This* ***Vaidhiga dharma*** *puts others interest first before our own. Unlike our self centered worldly* ***dharma*** *which is governed by rules, regulations,legislatures,laws and bylaws, the* ***vaidhika dharma*** *is governed by ethics and morals prescribed in* ***vEdic*** *scriptures. Thus it is also called* ***vedic dharma****. Not only Hindu* ***vEdas*** *but Scriptures of all religions prescribe this* ***dharma.*** *This is further expanded in moral texts like* ***Thiru kuRaL, Aaththi soodi, Naaladiyaar*** *etc. Again this* ***Dharma*** *is a choice and no one can force it upon you.*

***3. siva dharma:*** *As this is the Supreme Merit which finally leads to spiritual liberation it is called as* ***Supreme dharma.*** *God centered activities in any religious path is this* ***siva dharma*** *or* ***siva puNya****. This Supreme* ***Siva dharma,*** *unlike self centric* ***loga dharma*** *or socio centric* ***vaidhika dharma*** *is God centric dharma. Although this* ***dharma*** *is described in* ***vEdas*** *they are extensively elaborated in* ***Siva-agamas****.* ***Aagamas*** *elaborate this Supreme Merit of God centered* ***dharma*** *into four steps.*

- *I.* ***chariya*** *is the enforced God centered activities done by us physically and in initial stages mechanically.*
- *II.* ***kriya*** *is our God centered activies done physically with some mental involvement.*
- *III.* ***Yoga*** *is our self imposed God centered activies with much mental focus and commitment. Yoga itself goes through the eight stages of* ***yama*** *(physical disciplines),* ***niyama*** *(mental disciplines),* ***pratyaakaara*** *(focus within),* ***dhaaraNa*** *(concentration),* ***praNayaama*** *(breath regulation),* ***Aasana*** *(stretches to ease the body),* ***dhyana*** *(meditation) and* ***samaadhi*** *(stilled in the tranquil peace). But this is not the end.*
- *IV.* ***jnana*** *is the final step towards* ***mukti,*** *the ultimate liberation. It also unfolds through four stages.*
    - *a.* ***kEddal / sravaNa*** *- Listening, in the days of oral tradition of the scriptures, now equal to learning scriptural messages from the qualified bonafide Guru.*

b. ***sinthiththal / nididhyaasana*** - *contemplation of the message learned.*
c. ***theLithal*** - *conflict free comprehension and assimilation of the Truth learned*
d. ***nishta*** - *directly experiencing the Truth by the self while shut off from the instruments of body-mind-sense complex made out of 36 tattvas.*

*Though all four steps of **Siva dharma** described in **Agamaas** to be followed and practiced by our self effort until the final two steps in **Jnana** which are possible ONLY by His Grace.*

புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும்,
புகல் மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்,
அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத
சிரப் பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர்; இதில் சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்.

Having gone through the atheistic religions,
Entered the orthodox fold, plodded through the paths of morals
Of the do's and dont's explained as dharma in the scriptures of smritis,
And their prescribed duties for the various stages of life,
Practiced stunning austerities of tapas for mundane gains,
Learned many arts and sciences, mastered various vEdic scriptures,
Realized the Excellency of the puraNas,
Attained the stage of perfect understanding of
The summit of the vEdic scriptures, the vedanta, and steps beyond
(through many human births) only,
One will be able to reach the realm of Saiva Siddhanta.
In this having completed the Supreme Spiritual Virtues of Siva puNya
Known as chariya, kriya, yoga only then
One will reach the blissful feet of Siva by jnAna,
The Supreme Intelligence imparted.

**- Siva JnAna SiddhiyAr 263**

# வேதசிவாகம ஆலயவழிபாட்டு மரபில் சிவாச்சாரியார்கள் பெறும் முக்கியத்துவம் -ஓர் நோக்கு

இந்துப் பண்பாட்டு மரபில் வேதங்களும் ஆகமங்களுமே ஆதர்சமான இலக்கியங்களாகும். சைவசமயத்தைப் பொறுத்தமட்டில் வேதங்கள் பொது நூல்களாகவும், சிவாகமங்கள் சிறப்பு நூல்களாகவும், சிவாகமங்கள் சிறப்பு நூல்களாகவும் கொள்ளப்படுகின்றன. ஒரு சைவ சமயியின் வாழ்வின் அனைத்தையும் வரையறுத்து சட்டங்களாக இவை விபரித்துக் கூறுகின்றன. இவை இரண்டையும் இறைவனே நேரடியாக அருளாளர்களுக்கு அருளியதால் இந்நூல்களின் புனிதத்தன்மை கருதிப் போற்றுகின்றனர். உலகியலின் அனைத்து விடயங்களையும் கொண்டுள்ள போதும் ஆன்மீக வழிபாட்டு மரபே இதன் தலையாய விடயமாக உள்ளது. இதில் இறைவன் வழிபடும் முறை, வழிபடுத்துவோன், வழிபடுவோன் என்ற வரிசையின் விடயங்கள் எடுத்தாளப்படுகின்றன. வழிபடுத்துவோன் என்ற முறையில் சிவாச்சாரியர்கள் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது.

பொதுவாக எல்லோரும் நினைப்பது போல சிவாச்சாரியார்கள் என்பவர்கள் இலகுவான வாழ்க்கை வாழக்கூடியவர்கள் அன்று. அவர்களுக்கான கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும் வாழ்வியல் கடமை பொறுப்புக்களும் மிகமிக அதிகம். இதனை மூலநூல் கற்றல் செய்தோர் நன்கறிவர். ஆதிசைவ சிவாச்சாரியர்களின் ஒழுக்க நிலைபற்றி திருக்குறள் கூறுகையில்,

"மறப்பினும் ஒத்துக் கொள்ளலாம் பார்ப்பான்

பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

அதாவது வேதங்களைக் கற்பதை மறந்தாலும் பரவாயில்லை, அவற்றைப் பின்னரும் கற்கலாம். ஆனால் தங்களது பிறப்பொழுக்கத்தை விட்டொழித்தால் பிராமணர்கள் சென்ற நிலையிலிருந்தும் விலகிவிடுவர், என்பார் பரிமேலழகர். எத்தனை தூரம் சிவாச்சாரியார்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்பதற்கு இதனைவிட வேறு சான்றுகள் தேவையில்லை. இதனால் தான் இன்றும் எமது சமூகத்தவர்கள் சிவாச்சாரியார்களை வணக்கத்திற்குரியவர்களாகப் போற்றுகின்றனர். ஒரு சில தனி மனிதர் வாழ்க்கையில் ஏற்படும் பிறழ்வுகளைச் சமுதாயச் சீர்கேடாக சித்தரிக்க முயல்வது முடத்தனமே.

பிராமணர்களின் தோற்றம் பற்றி வேதங்கள் கூறும்போது புருஷ சூக்கத்தில் இவர்கள் பிரம்மாவின் தலையில் இருந்து தோன்றியவர்கள் என வருவது உயர்வால் மட்டுமன்று. பிராமணர்கள் என்போர் சமூகத்தின் சமய அறிவியல் சார்ந்த இனக்குழு. எனவே இவர்கள் வேதம் முதலான ஞான நூல்கள் கற்றலையும் கற்பித்தலையும் பிரயோகித்தலையும் சமூகத்திற்கு கற்றுத்தரும் பொறுப்பில் உள்ளவர்கள். எனவே இவர்களுக்கு அறிவே பிரதானம் என்பதால் தலை தரப்பட்டது. பிராமணர்களின் ஆறு தொழில்களான ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஏற்றல், ஈதல் இதனை விளக்கும். இவற்றின் வாழிவியல் நிகழ்வுகளை புராண, இதிகாச வரலாறுகள் கதைகளாகக் காட்டுகின்றன.

"பிராமணஸ்ய முகமாசித் பாகூரா ஜன்யக் கிருதஹா" என்பது அவ்வேத வாக்கியமாகும். இது போல் ஆகமங்கள் சிவப்பிராமணர்களின் தோற்றம் பற்றிக் கூறுகையில் காரணாகமத்தில்

"சிவேத ஸ்தாபிதம் சைவம் - சைவேன ஸ்தாபிதம்

சிவம்/சிவசைவ விசுத்தாயம் சிவப்பிராமண உச்யதே"

என வருவது சிவனால் சைவமும் சைவத்தால் சிவனும் தோன்றியது. இந்த சிவசைவ ஐக்கியத்தில் சுத்தாத்மாவாக சிவப்பிராமணர் தோன்றினர் என கூறுகிறது. அதனால்தான் குருவை மும்மூர்த்திகளாக பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரனாக வழிபடுகின்றோம்.

இப்படியான குருவுக்குரிய தகுதிப்பாடுகள் பற்றியும் ஆகமங்கள் கூறத்தவறவில்லை. இவர்கள் எல்லா சாஸ்திரங்களிலும் உள்ள தத்துவங்களைப் புரிந்தவர்களாகவும், ஆலய சம்பந்தமான கலைகளில் தேர்ச்சி உடையவர்களாகவும், நான்கு தீட்ஷைகளைப் பெற்றவராகவும், குடுமி, பூணூல், உருத்திராட்சம், தலைப்பாகை, உத்தரியம், விபூதிதிலகம் முதலிய பஞ்சமுத்திரைகளோடு, பஞ்சகச்சம் அணிந்தவர்களாகவும் இருக்கவேண்டும் என காரணாகமம் -குமாரதந்திரம் முதலியன கூறுகின்றன. மேலும் தேவம், ஆகமம், சித்தாந்தம் ஆகியவற்றில் நன்கு பாண்டித்தியம் உள்ளவராகவும், சமயம் சொல்லும் ஆசார ஒழுக்கமுடையவராகவும், பஞ்சமஹா பாபங்கள் அற்றவராகவும், கண், கை, கால் போன்ற எல்லா அவயங்களும் பின்னமில்லா நேர்த்தியாக உள்ளவராகவும், எப்பொழுதும் கண்டத்தில் ருத்திராட்சம் அணிந்தவராகவும் திருமணம் செய்து மனைவி, குழந்தைகள், உள்ளவராகவும் இளமையானவராகவும் உள்ளவர்களே ஆலயங்களில் குருவாக இருக்கும் தகுதியுடையவர்கள் என ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன.

## ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வோல்தம்ஸ்ரோ - SHREE KARPAHA VINAYAGAR TEMPLE

"அற்புத அருள்புரி கற்பகக் கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்"








இலவச ஆங்கில கல்வி நிலையம்



இலவச கணனி பயிற்சி நிலையம் - முலம்காவில்





இலவச கணனி பயிற்சி நிலையம் - ராமநாதபுரம் - கிளிநொச்சி





## ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், வோல்தம்ஸ்ரோ - SHREE KARPAHA VINAYAGAR TEMPLE

"அற்புத அருள்புரி கற்பகக் கணபதி பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்"






















"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

# SHRI KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10-08- 1991 Charity No: 1014409
5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: **020 8810 0835 020 8840 0485**
www.ammanealing.org Email: info@ammanealing.org

## கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது

1. இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் – பதுளை
2. இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் – திருப்பழுகாமம்
3. இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் இல்லம் – செட்டிப்பாளையம்
4. திலகவதியார் இல்லம் – மட்டக்களப்பு
5. யோகர் சுவாமி சிறுவர் இல்லம் – மட்டக்களப்பு
6. விபுலானந்தர் இல்லம் – மட்டக்களப்பு
7. விபுலானந்தர் இல்லம் – அக்கரைப்பற்று
8. அம்மன் மகளிர் இல்லம் – அம்பாறை
9. யோகர்சுவாமி சைவ மகளிர் இல்லம் – மட்டக்களப்பு
10. சிவன் அருள் இல்லம் – மன்னார்
11. இந்து வித்தியாபிருத்திச் சங்கம் – யாழ்ப்பாணம்
12. அன்பகம் – வவுனியா
13. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் – வவுனியா
14. ஸ்ரீ சத்தியசாமி இல்லம் – வவுனியா
15. மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம்
16. கன்னியர் மடம் பெண்கள் சிறுவர் இல்லம் – கிளிநொச்சி


மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்கு **£92,000.00** பவுண்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£2,390,600.00** பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.













**ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!**
**அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!**

"Ammanai Saran Addainthal Athika Varamperalam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.com Email: info@ammanealing.org

கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமதிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது.

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய பல்கலைக்கழக உயர்கல்வித் திட்டம்



இன்று நீங்கள் உயர்கல்வி
கற்க மாணவர்களுக்கு வழங்கும்
பண உதவி எமது தாயகத்தின்
எதிர்கால சுபிட்சத்திற்கு வழிவகுக்கும்




"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"
- பாரதியார் -









## உங்கள் பேராதரவை வழங்கி உதவுங்கள்





முச்சக்கர வண்டி ஒன்றிற்கான பெறுமதி £50 பவுண்கள்.
ஆலயத்தின் சார்பாக 100 வண்டிகள் வழங்கி
உதவும் நோக்கத்தில் அடியவர்களின்
நன்கொடைகளை எதிர்பார்த்துள்ளோம்.

அவயங்களை இழந்து வலுவிழந்து துயருறும் ஈழமக்களின்
வாழ்வைக் கட்டி எழுப்ப உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்.





லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தால்
கஞ்சிகுடியாற்றில் குடிநீர் கிணறு அமைக்கப்பட்டது.





லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தலைவரால்
வன்னியில் கணனி பயிற்சி நிலையம் அமைக்க
அடிக்கல் நாட்டப்பட்டது.















ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!

ஓம் சக்தி

வட இலண்டன்

# திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

HINDU TAMIL CULTURAL ASSOCIATION (ENFIELD) (CHARITY -1143043)

# ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE

**59-69 Church Lane, Edmonton, London N9 9PZ, Tel:0208 884 3333 | Info@ambaal.org | www.ambaal.org**

நூதன கருங்கல் ஆலய உத்தமோஉத்தமபட்ச 33 குண்டசகித ஸ்வர்ணபந்தன

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

Exquisite Granite Temple Uththamo Uththama Bakasha 33 kunda Sakitha
Maha kumbabishekam [Consecration ]

*Consecration Rituals Starts - 27.05.2017 Saturday Morning*

*Consecration Yaagaha Starts - 31.05.2017 Wednesday Evening*

*Temple Open Ceremony - 01.06.2017 Thursday Morning*

*Ennaikappu (Oil bath) - 01.06.2017 Thursday at 01 pm - 03.06.2017 saturday 5pm*

Maha Kumbabishekam - 04.06.2017 Sunday 10 am

*Mandalapishekam - 05.06.2017 - 06.07.2017*

**மஹாகும்பாபிஷேகம் - 04.06.2017 ஞாயிறு காலை 10 மணி**

அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக.

**Free Car Park & Shuttle Bus Service Aballable**


Ragu Travels Ltd
Ragu Estate Agents
World Wide Travel Agent
Air Tickets,
Transportation,
Travel Insurance
Visa Arrangements for India
R
Sale,
Lettings,
Mortgages
Constructions
Property Managment
நம்பிக்கையான நாணயமான மற்றும்
தரமான சேவைக்கு இன்றே நாடுங்கள்
Ragu Travels on : 020 8586 2323 | 020 3490 9187 | Fax: 020 8490 9187
Fax : 020 3490 9187
258 High Street North, Manor Park, London E12 6SB
Email: ragu_travel@hotmail.com | Web: www.ragutravel.co.uk

# Shri Guru Datta Shirdi Saibaba Sanasthan UK

GURUR BRAHMA
GURUR VISHNU
GURUR DEVO MAHESHWARAH
GURUR SAAKSHAAT PARA-BRAHMA
TASMAI SHRI GURUVE NAMAH

Jai Gurudev Datta! Jai Sai Ram!

Dear all devotees,

We are blessed to open the first temple for **Shri Guru Dattatreya** in the UK. We would like to keep you all updated about our new temple, please 'LIKE' our Facebook page for information and updates about the grand opening of our Dattatreya Temple.

Guru Dattatreya:

Dattatreya is a saint well known in Puranas. He was the son of Anasuya and Maharshi Atri. The name 'Dattatreya' can be divided into two words- 'Datta' and 'Atreya', where the former means given (by Vishnu) and the latter refers to Sage Atri, His father. He is the incarnation of the Trinity- Brahma (creator), Vishnu (preserver) and Siva (destroyer) – a Trimurti Avatar.

Shri Datta Guru 'the ascetic' helps the devotees in times of calamity and leads them to Moksha (freedom from the cycle of death and rebirth) and hence is worshipped widely by the masses.

Sincerely



Bhoopalan N
Chairman
Shri Guru Datta Shirdi Saibaba Sanasthan UK
Like DattaSaiUK
Website: www.shrigurusanasthan.org
Email: info@shrigurusanasthan.org


Veena's
Quality! Variety!! Satisfaction!!!
CASH & CARRY
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com

# ஜோதி

நலமான உள்ளம் மகிழ்வான வாழ்வு

## HELP LINE & COUNSELLING SERVICES

உடலுக்கு மட்டுமல்ல
உள்ளத்திற்கும்
நெருக்கடிகளுண்டு!!!
விபரீதம் ஏற்படும்
முன் உதவியை
நாடுங்கள்!!!



☎ 0203 3710 006

1.00 pm - 9.00 pm

**இது ஒரு இலவச அந்தரங்க சேவை**

**Ahilan Foundation, Charity Number : 1134912**

# PARAM & COMPANY LTD

Chartered Certified Accountants &
Registered Auditors
30 Years in Practice

## FOR EFFICIENT PROFESSIONAL SERVICE IN:

* Preparation of Accounts
* Auditing
* Taxation
* Corporate Finance
* Personal Financial Planning
* Business Acquisition
* VAT
* Paye

**Tel: 020 8571 9594/Fax:020 8571 9094**

**e-mail:audit@paramco.co.uk**

**First Floor, 44-50 The Broadway, Southall,**
**Middlesex UB1 1QB**



# S.Satha & Co
## SOLICITORS

Est.1997
www.satha.co.uk

*We are authorised by the legal service Commission to undertake Criminal Defence Services*

- Serious and Complex Crime
- Fraud, Business Crime and Confiscation
- Criminal Defence including 24 hrs Police Station Assistance
- Immigration, Asylum & Nationality
- Residential & Commercial Property Conveyancing
- Family & Children
- Civil Litigation
- Landlord and Tenant
- Wills & Probate

We are glad to inform that

**S.Satha & Co**
**SOLICITORS**

have moved to our new offices at

358 High Street North,
Manor Park,
London E12 6PH

which is about 10 doors away.
Business will continue as usual.
Apologise for any inconvenience.

Tel. 02084719484

24 hours emergency assistance:


**07956288671**

Email: info@satha.co.uk
www.satha.co.uk

Criminal Litigation
Criminal Defence Service
Conveyancing Quality
Community Legal Service
Immigration Law
Lexcel
Law Society Accredited

- Sales
- Lettings
- Mortgages
- Maintenance

**'Select** your next move with us'



**Guaranteed Rent throughout London**

**In-house property maintenance team**

# 0208 470 1500

**288 High Street North**
**London, E12 6SA**

**www.select.gb.com**

OFT

NAPIT


ELECSA
Part of the ECA Group

rightmove.co.uk

Zoopla.co.uk

# Thurai & Co

*Accountants and Registered Auditors*



Personal Tax
Corporation Tax
Value Added Tax
Capital Tax
Business Advice

216 Headley Way, Headington
Oxford OX3 7TA

Tel: 01865 762988

THE FRIEND OF THE INDEPENDENT RETAILER
ABRA WHOLESALE LTD
ESTABLISHED 2003

# ABRA WHOLESALE LTD


member of
LANDMARK WHOLESALE
LONDON CHAMBER of COMMERCE AND INDUSTRY

## LONDON'S LEADING WHOLESALER & EXPORTER

ALCOHOL
TOBACCO
GROCERY
CONFECTIONERY
SOFT DRINKS
TOILETRIES
HOUSEHOLD

CHIVAS REGAL 12
SMIRNOFF
Budweiser
COURVOISIER
JACK DANIEL'S
Grant's SCOTCH WHISKY
volvic
BOOST
pepsi
BELL'S
Lucozade
Coca-Cola
WALKERS
Domestos
Mars
evian
FLORA
PRINCES
Pampers
Nestlé
DURACELL
Colgate
WRIGLEY'S
Kellogg's
RIZLA+
NUROFEN
Red Bull

**NO. 5 | PICKETTS LOCK LANE | EDMONTON | LONDON N9 0AS**
tel.: **+44 20 8887 9303** | fax.: **+44 20 8887 9304**
e-mail: **sales@abrawholesales.co.uk** web: **abrawholesales.co.uk**


Chennai
Dosa
Finest South Indian Restaurant Chain
>Pure Vegetarian
Restaurant
> We do catering for all occasions
PARTY HALL AVAILABLE
Banquet Facilities for 150-200 Guests
at Chennai Dosa
177 High Street North
London E6 1 JB.
> Live Appam
> Live Dosa
We are specialised in
Indian & Sri Lankan Vegetarian Cuisine
chennaidosa-vegetarian.co.uk
Tel: 0207 998 0370 | Mob: 07956 919 511
339 High Street North, Manor Park, London E12 6PQ

JR Print
www.jrprint.com

* Arangetram Books
* Letter Heads
* Bill Books
* Visiting Cards




* Rubber Stamps
* Wedding Cards
* Banners
* Cake Boxes
* Short Eat Boxes
* Color Printing
* Raffle Tickets
* Photocopying
* High Speed Copier
* Menu, Posters
* Sign Board

* Popup Banner
* Compliment Slips
* Souvenirs & Invoices
* Invitation Cards
* Sign Boards, Leaflets
* Birthday Cards
* Rich Cakes
* Short eat Bags
* Lamination
* Translation Services
* Fax

Sign Board

020 8503 6643

61, Hoe Street, Walthamstow, London E17 4QR

E-mail: ravi@jrprint.com Fax : 020 8521 3967

VIBSU

NOW IN LONDON!!



Visit VIBSU.COM to experience the app revolutionising minicab booking!!!

ANDROID APP ON Google play

Available on the iPhone App Store

VIBSU LIMITED

# Clayhall Osteopathic Health Clinic



## Are You in Pain ?

**Headaches** | **Frozen shoulders** | **Arthritis**
**Back pain** | **Lower limb pains** | **Neck pain**
**Disc problems** | **Whiplash injuries** | **Tennis elbow**

Ms. S. Muralitharan BSc (Hons) Ost.Med

&

Associates

***REGISTERED OSTEOPATHS***

*(Practitioners available by appointment)*

NHS
REFERRALS ACCEPTED

**SPINAL HEALTH CHECK 25 % OFF**
**(Please Quote : OSTEO17)**

420 Clayhall Avenue, Ilford, IG5 0SH

# 020 8220 4254




** T&C's applies. Visit the web for more information.
Lycaremit is the trading name of Lycamoney Financial Services Limited, and is regulated and authorised by the Financial Conduct Authority. Registration number 900153. Registered office: Walbrook Building, 195 Marsh Wall, London, E14 9SG. Company Registration number 08662355 ***The collection method will vary depending on the destination country for the money transfer, visit lycaremit.com for more information.

LMFS



Athavan
ATHAVAN MEDIA
AthavanTV
Athavannews.com
Athavanradio
News | Movies | Music | Entertainment | Sports | Live Events | Life Style | Spritual | Dramas
ஆதவன் TV உங்கள் இல்லத்திரை
லண்டனில் இருந்து உலகெங்கும் 24 மணிநேரமும்
இயங்கும் தமிழர்களுக்கான தனித்துவ அலைவரிசை
Satellite
Eurobird 9a | Freq 11766
Vertical Symbol Rate 27500 | FEC ¾
ஆதவன் இணையத்தளம்
இலங்கைச் செய்திகள்
உலகச் செய்திகள்
இந்தியச் செய்திகள்
விளையாட்டுச் செய்திகள்
சினிமாச் செய்திகள்
சிறப்புக் கட்டுரைகள்
ஆன்மீகம்
www.athavannews.com
ஆதவன் வானொலி தமிழர்களின் உலகம் தழுவிய குரல்
DAB
ATHAVAN
DAB
Digital Audio Broadcasting
ON AIR 0044 208 144 6927
Satellite
Eurobird 9a | Freq 11766
Vertical Symbol Rate 27500 | FEC ¾
விளம்பர தொடர்புகளுக்கு
Mobile: +44 7459 300554
Email : sales@athavantv.com
You Tube
www.athavantv.com | www.athavannews.com | www.athavanradio.com

இவ்வாறன சிவாச்சாரியார்களே ஆன்மார்த்தமான பூஜைகளுடன் நாட்டுமக்களுக்காக செய்யப்படும் ஆலய பரார்த்த பூஜைகளையும் செய்தல் வேண்டும் என காரணாகம நித்யார்சனாவிதி படலத்தில் கூறப்பட்டுள்ளது.

"ஆத்மார்த்தஞ்ச பரார்த்தஞ்ச ஆதிசைவேரு பூஜிதம்"

இந்த அர்ச்சகர்களுடைய உண்மையான பாவத்தினாலும் பூஜையினுடைய விஷேஷத்தினாலுமே அழகான சிலைகள் தெய்வத்தன்மை உடைய விக்கிரஹங்களாகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. இது வருமாறு:

"அர்ச்சகஸ்ய பிரபாவேன அர்சநஸ்ய பாயநாத்
அபிரூப்பியாச பிம்பானாம் சிலாபவதி தேவகீ"

எனக்கூறப்படுகின்றது. ஏனென்றால் சிவப்பிராமணர் களின் நித்திய வழிபாட்டால் அவர்கள் உலகெங்கும் தெய்வத்தன்மை உடையதாகின்றது. இதனை "பிராமனோணு சர்வாதேவதாகா..." என்ற வேதவாக்கினால் உணரலாம். இதுபோல் பூர்வ காரணாகமத்திலும் ஆதிசைவ அந்தணரின் உள்ளங்கையிலேயே விநாயகர், சிவன், தந்த, பார்வதி, முருகன், அக்கினி, சூரியன் முதலானோர் உள்ளார் என விபரிக்கிறது. மேலும் இதனை சுயாயம்பூவம் விரிவாகக் கூறுகின்றது. சப்தலிங்கங்களுள் சிவாச்சாரியாரும் ஒரு லிங்கம் எனவும் ஆகமங்கள் கூறுகின்றன. இதனையே வேதம் பிராமணனே பிரம்மா என்பது விழிக்கின்றது. இங்கு அர்ச்சகருடைய தவவலிமையே இவற்றிற்கு காரணமாகின்றது. இதனை

"அர்ச்சகஸ்ய தபோயோகாத் தேவசானித்யம்ருச்சதி"

என்ற வாக்கினால் நோக்கலாம்.

இவ்வாறு வேத சிவாகமங்களால் சிவாச்சாரியார்கள் மரபு சிறப்புறுவதனாலே திருமுறைகளிலும் தமிழ் இலக்கியங்களிலும் அந்தணர்கள் போற்றப்படுகின்றனர். சமூக அக்கறை கொண்டவர்கள் இவர்கள் என்பதை தமிழ் இலக்கணம் செய்ய வந்த தொல்காப்பியன் இப்படிச் சொல்வார்.

"பொய்யும் களவும் தோன்றிய பின்னே
ஐயர் யாத்தனர் கரணம் என்பர்"

ஆன்மீகத்தை மட்டுமன்றி சமூக நடைமுறைக்கும் ஏன் அரசுக்குமே இவர்கள் பொறுப்பானவர்களாக வைக்கப்பட்டதனை வரலாற்றில் காணலாம். மக்களின் அறியாமையை போக்கி ஞானத்தை கொடுத்ததனாலேயே இறைவனிலும் மேலாக மதிக்கப்பட்டனர். நடமாடும் சிவனாகவும் கணிக்கப்பட்டனர். இறைவனுக்கு பழிசெய்தால் குருமூலம் பிராயச்சித்தம் வேண்டலாம், குருவுக்கே பழி செய்தால் யார் தீர்ப்பார் என அஞ்சினார். திரு மூலரும்

"தத்தம் சமய தகுதி நில்லாதவரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமும் செய்யும்..."

எனக்கூறுவது சிவன் சொன்ன ஆகமநெறி வழுவினால் ஆகமதே தண்டிக்கும் என்பதை விளங்குகிறது.

இவ்வாறாக வேதசிவாகம மரபில் ஆலய வழிபாடுகளை ஆற்றவதற்காய் சிவாச்சாரியார்கள் பல்வேறு பரீட்சைகளைக் கடந்து புடம் போடப்பட்டு தகுதி உடையவர்களாக வருவதனாலேயே முக்கியத்துவம் பெறுகின்றனர்.

"வேதாகமவித்தகர்" அலங்கார சிரோன்மணி
சிவஸ்ரீ.சௌபாக்கிய.சசிகுமாரக் குருக்கள் B.A (Hons)
பிரதமகுரு –கொவன்றி ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்
பெரிய பிரித்தானியா.

# வேத சிவாகமங்களும் ஆலய வழிபாடுகளும்

**பன்னிரு திருமுறைத் தோத்திரங்களும் பதினான்கு சாத்திரங்களும்**

**ஆலய வழிபாட்டுக்குரிய நூல்கள்**

**முனைவர் ந. முருகையன், சென்னை**

**முன்னுரை**

வடமொழியில் உள்ள வேதங்களான இருக், யதுர், சாம, அதர்வண வேதங்கள் எழுதாக் கிளவி. திரு முறைகளின் மகுடம் என்று கருதத்தக்க நூலைத்தந்த சேக்கிழார் பெருமான் திருஞான சம்பந்தர் தேவரத்தைக் எழுது மறை என்று கூறுவது போல நம்முடைய ஞாயிறை ஒத்த தன்னேரில்லாத தமிழில் உள்ள வேதங்கள் (Scriptures) 'எழுது மறை' எனும் தொடர் குறிக்கும். தமிழ் மறைகளை (வேதங்களை) இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை திரு முறை அல்லது தோத்திரங்கள் என்று முதலாவதாகவும். இரண்டாவதாக திரு நெறி அல்லது சாத்திரங்கள் (சாஸ்திரங்கள்) அல்லது மெய்கண்டநூல்கள் என்றும் குறிக்கப்படுகின்றன.

**பன்னிரு திரு முறை (நாயன்மார் பாடிய திருப்பாடல்கள்)**

திரு முறை பன்னிரண்டாக அருள் மொழித்தேவன் என்ற சிறப்புப்பெயர் கொண்ட முதலாம் இராசராச சோழனால் திரு நாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பியின் துணையுடன் தில்லைவாழ் அந்தணர்களின் தடையைத் தகர்த்து மூல நூல்களைப்பெற்று பகுக்கப்பட்டதாக க. வெள்ளை வாரனார் பன்னிரு திருமுறை வரலாறு (1961) முதற்பகுதி என்ற நூலில் குறிப்பிடுகிறார். அவை முறையே திருஞான சம்பந்தர் தேவாரம் (4147 பாடல்கள்) முதல் மூன்று திருமுறைகளாகவும், 3070 பாடல்கள் உள்ளடக்கிய நான்கு, ஐந்து மற்றும் ஆறு திருமுறைகள் அப்பர் அல்லது திருநாவுக்கரசர் தேவாரமாகவும், 1026 செய்யுள்கள் கொண்ட ஏழாம் திருமுறையில் சுந்தரர் தேவாரமும் எட்டாம் திருமுறையில் மாணிக்க வாசகரின் நூல்களான திருவாசகமும் (முதற்பதிப்பு 1835), திருக்கோவையாரும் (முதற்பதிப்பு 1841) அமைக்கப் பட்டிருக்கின்றன. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு மற்றும் ஒன்பது நாயன்மார்களுடைய பிரபந்தங்கள் ஆகியவை ஒன்பதாம் திருமுறையில் அடங்குகின்றன. பத்தாம் திருமுறையில் திருமூலரின் திரு மந்திரத்தைக்காண்கிறோம். பதினொன்றாம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பியின் பத்து நூல்களும் மற்றைய ஒன்பது நாயன்மார்களின் பிரபந்தங்களும் (நூல்களும்), பட்டினத்தார் மற்றும் சேரமான் பத்ரகிரியார் ஆகியோரின் செய்யுள்களும் அடங்கும். பன்னிரண்டாம் திரு முறையான சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் திருறைகளின் கவசம் என்றும் திருமுறைகளின் மணிமகுடம் என்றும் போற்றப்படுகிறது. இது 63 சிவத் தொண்டர்கள் அல்லது நாயன்மார்கள் வரலாறு கூறும் திருத்தொண்டர் புராணம் ஆகும்.

இவற்றுடன் 14 சைவசித்தாந்த அல்லது மெய்கண்ட சாஸ்திரங்களும் (Sastras) சேர்ந்து சைவசித்தாந்த வேதங்களின் இரண்டாம் பகுதியாக ஆகின்றன. இந்த மெய்கண்ட சாஸ்திரம் அல்லது திரு நெறிகளில் உள்ள நூல்களை கீழ்க்காணும் வெண்பா பட்டியலிடுகின்றது:

உந்தி களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் – வந்தவருட்
பண்புவினா போற்றிக்கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பமுற்று.

மேற்கண்ட வெண்பாவில் உள்ள 'உந்தி' என்பது உய்யவந்த தேவரால் இயற்றப் பட்ட திரு உந்தியாரையும், 'களிறு' என்பது, அதே கவிஞரால் யாக்கப்பட்ட திருக்களிற்றுப்படியார் என்ற நூலையும், 'உயர்போத'மெனும் தொடர் மெய்கண்டதேவர் யாத்த சிவஞான போதத்தையும் (இது மொழிபெயர்ப்பல்ல; முதல் நூல்: சிவாகமங்களின் ஐயங்களைப்போக்கும் நூல்), 'சித்தியார்' எனும் தொடர் அருள்நந்தி சித்தியார் ஆக்கிய சிவஞான சித்தியாரையும் , 'இருப', 'உண்மை' ஆகிய தொடர்கள் முறையே அருள் நந்திந்தேவரின் இருப இருபதையும், மனவாசகம் கடந்த தேவரின் உண்மை விளக்கத்தையும் குறிக்கின்றன. மீதமுள்ள தொடர்களான 'பிரகாசம்', 'வந்த வருட்பண்பு', 'வினா', 'போற்றி', 'கொடி', 'பாசமிலா நெஞ்சு விடு' , 'உண்மை நெறி' , 'சங்கற்ப' ஆகிய தொடர்கள் முறையே சிவப்பிரகாசம், திரு அருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிறகரணம் என்ற நூற்றலைப்புகள் உமாபதி சிவாச்சாரியாரால் ஆக்கப்பட்ட எட்டு சாத்திரங்களையும் குறிக்கின்றன.

## சங்ககால சைவசமய கோவில்கள்

சைவ சமயம் சரித்திர காலத்துக்கு முற்பட்ட தென்னிந்திய மதம், ஆரியர் வருகைக்கு முன்பு தமிழர்கள் இதயத்தில் குடிகொண்டிருந்த மதம் என்றும் இந்தியாவில் பயன்பாட்டில் இருந்த மற்ற மதங்களைவிட சிறப்புமிக்கது என்றும் ஜீ. யூ. போப் திருவாசகத்தின் மொழிபெயர்ப்புக்கு அவர் அளிக்கும் முன்னுரையில் குறிப்பிடுகிறார். சைவம் தமிழர்களுடைய மதம் என்றும் மதக்கொள்கையாகவும் , வாழ்வில் உறுதியான நம்பிக்கை கொண்டதாகவும் தென்னிந்தியாவில் இருந்த மத அமைப்புகளில் மிகச் சிறந்தது என்றும் புனித திரு கௌடி என்பார் எழுதியுள்ளார். சைவசமயத்தைப்பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

அக்குறிப்புகளில் சைவசமயத்துக்கு முதலிடம் கொடுக்கப்படுவதை கீழ்க்கண்டவாறு ம. இராசமாணிக்கனார் உணர்த்துகிறார். 'சிலப்பதிகாரம் , மணிமேகலை, மதுரைக்காஞ்சி என்னும் நூல்களில் கோவில்களின் வரிசையைக்குறிக்கும் இடங்களில் எல்லாம் சிவபிரான் திருக்கோவிலே முதன்மை பெற்றுள்ளதைக் காணலாம் :

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும் (சிலம்பு, காதை 5 வரிகள் 169-72)

**நுதல்விழி நாட்டத் திறையோன் கோயிலும்**
உவணச்சேவல் உய்ர்த்தோன் நியமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச்சேவல் கொடியோன் கோட்டமும் (சிலம்பு. காதை 14 , வரி 7-10)

**நுதல் விழி நாட்டத் திறையோன் முதலாப்**
பதிவாழ் சதுக்கத்துப் பூத மீறாக மணி. காதை 1 வரி 54-55

நீரும், நிலனும் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
**மழுவாள் நெடியோன் தலைவனாக (மதுரைக் காஞ்சி 453 -455)**

**அன்பே சிவம்**

சைவ சித்தாந்தத்தின் அடிப்படைத் தத்துவமான அன்பே சிவம் என்பதை 10ம் திருமுறை நூலான திருமந்திரம் இனிதே விளக்கிடுகிறது:

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனவில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகம் குழைவார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே

'எலும்பை விறகு ஆக்கித் தசைகளைஅறுத்து நெருப்பில் இட்டு ப் பொன்போல் பொரியும் படியாக வறுத்தாலும் பயன் இல்லை. அன்போடு உருகி மனங்குழைவார் அல்லாமல் மற்றவர்கள் கடவுளையடைய முடியாது.'

**வழிபாட்டு வழிமுறைகள்**

மேற்கண்ட திருமுறை மற்றும் திரு நெறி நூல்கலெல்லாம் ஞான நூல்கள். சிவ பூஜைக்கேற்ற நூல்கள். இவற்றை முறைப்படி 'காதலாகி கண்ணீர் மல்கி ஓதுதலும், பிறரை ஓதும்படி செய்தலும், பிறர்சொல்லத் தான் கேட்டலும், பிறரைக்கேட்கும்படி தூண்டுதலும், ஞான நூல்களாகிய இவற்றின் பொருள் நலங்களை இடைவிடாது சிந்தித்தலும்' ஆகிய ஐந்து வகையாலும் பயின்று வழிபடுதல் வேண்டும் என்போர் பெரியோர். 'ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு ஞானத்தாய் உனை நானும் தொழுவனே' என்றாவாறு சிவஞானம் பெற்ற பெரியோர்கள் அருளிய திருமுறைகளைச் சாதனமாகக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனை வழிபட்டுப் போற்றும் முறை ஞான பூசையென பாராட்டப்படுகின்றது . இக்கருத்தை வலியுறுத்தும் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளின் செய்யுள் பின்வருமாறு:

ஞான நூல்களையோதல் ; ஓதுவித்தல்,
நற்பொருளைக் கேட்பித்தல் , தான் கேட்டல், நன்றா
ஈனமிலா பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை

இத் திரு முறைகளும் திரு நெறிகளும் காலங்காலமாய் ஓதுவார்களாலும் பக்தர்களாலும் இசையுடன் கோவில்களில் ஓதப்படுகின்றன . பிறவாத வரம் வேண்டி, இறவாத இன்ப அன்பு வேண்டி காலத்தால் முற்பட்ட ( கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ) காரைக்கால் அம்மையார் பேய்உருவம் கொண்டதால் பேயார் என்றழைக்கப்பட்டவர் தலையால் நடந்து சென்று சிவபெருமானிடம் வரம் கேட்டது பற்றிய

நட்டபாடை பண்ணில் அமைந்துள்ள கீழ்க்காணும் பாடல் வழிபாட்டுக்கொரு உன்னத இலக்கியமாயும் தமிழியல் மற்றும் தமிழிசை ஆகியவற்றின் தொடக்கத்தை உணர்த்திடும் சரித்திர ஆதாரமாகவும் திகழ்கிறது.

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## முடிவுரை

இக்கட்டுரையில் சுருக்கமாகக் குறிக்கப்பட்டுள்ள திருமுறை தொகுப்பு மற்றும் புனிதவதி எனும் பெயருடைய காரைக்கால் அம்மையார் பேயார் என்றானதற்காண காரணம் தமிழிசை பண்ணொடு தொடக்கம் ஆகியவற்றை தொடர்புடைய நூல்களில் இருந்து அறிந்து கொள்ளுதல் இக்கட்டுரையில் உள்ள செய்திகள் சிலவற்றை எளிதில் புரிந்து கொள்ள உதவியாய் இருக்கும்.

## குறிப்பேடுகள்

எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை, தமிழ் இலக்கியம் (ஆங்கிலத்தில்) , ஓய்வு பெற்ற ஆங்கிலப்பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழக மறு பதிப்பு, தஞ்சாவூர் , 1985, மூலம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு, 1929.

ம. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பூம்புகார் வெளியீடு, முதற்பதிப்பு, 2011

மு. வரதராசன் தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதமி, முதல் வெளியீடு 1972, பத்தாம் பதிப்பு, 1996

# பெரியபுராணத்தில் வழிபாட்டு மரபும் சைவ நெறியும்

முனைவர் இரா.சந்திரசேகரன்
தமிழ் உதவிப்பேராசிரியர்



அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
நாமக்கல்-637 002, தமிழ்நாடு.
**மின்னஞ்சல்:** tamilchandru@gmail.com

## முன்னுரை

பெரியபுராணம் ஓர் உயர்ந்த சமயநூல். பெரியபுராணத்தை ஒரு வரலாற்றுக்காப்பியம், சமூகக்காப்பியம், சீர்திருத்தக் காப்பியம் என்றெல்லாம் சிறப்பித்தாலும் அடிப்படையில் அது ஒரு சமயக்காப்பியம் என்பதனை மறுப்பதற்கில்லை. அறுபத்து மூன்று அருமணிகளைக் கோர்ப்பதற்குச் சேக்கிழார் பெருமான் எடுத்துக்கொண்ட இழை சைவம் ஒன்றுதான். திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு, அந்நூலின்றும் தொடங்கித் திருமுறைகள், திருக்கோயில்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், சாசனங்கள் ஆகியவற்றிலிருந்து அகச்சான்றும், செவிவழிச் செய்திகளால் அமைந்த புறச்சான்றும் தேடி நிறைவுசார் சமய நூலாக அவர் பெரியபுராணத்தைத் தந்துள்ளார். பெரியபுராணத்தில் பேசப்பெறாத செய்திகள் இல்லை. பக்தி என்ற ஆதார சுருதியை அடிப்படையாகக் கொண்டு, மனித குலத்திற்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் பெரியபுராணத்தில் பேசப்பெற்றுள்ளன. சேக்கிழார் பெருமான் சிந்தையின் நிறைவையே அளவுகோலாகக் கொண்டு திருநின்ற செம்மையுடையோர் வரலாற்றை வகைபட விரித்துச் சென்றுள்ளார். சமுதாயத்தின் அனைத்து மட்டத்திலும் அரனடிக்கு அன்பு பூண்டு விளங்கிய அனைத்துப் பெருமக்களின் வரலாற்றையும், எந்தவித வேறுபாடுமின்றி இயல்புற எடுத்துக்கூறியிருக்கிறார்.

சமய நெறிகளின் பெயர்களும், வழிபடும் கடவுளின் பெயர்களும்- பெறும் கோலங்களும் மாறுபட்டாலும் சமய நெறியின் அடிப்படை இயல்பு மாறிவிளங்க வழியில்லை. கடவுளை நம்புதல், ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப அன்பே தவமாகுதல், திருத்தொண்டில் இன்பமுடன் ஈடுபடுதல் ஆகியவை அனைத்துச் சமயங்களுக்கும் பொதுவான கொள்கை. இத்தகைய சமய நெறியில் வாழ்ந்த, தவமியற்றிய அருளாளர்களின் வரலாற்றை எடுத்துக்கூறுவதன் மூலம் பெரியபுராணம் ஒரு உலகப் பொதுச் சமயநூலாகத் திகழ்கிறது என்பர். எனினும் சேக்கிழார் பெருமான் தன் சிந்தையில் சார்ந்து நின்ற சிவப்பரம் பொருளையும், சிவநெறியின் அடிப்படைக் கொள்கைகளையும் விளக்கியே பெரியபுராணத்தை இயற்றியுள்ளார். சைவம்சார் வழிபாட்டு நெறிமுறைகளை சேக்கிழார் பெருமான் விரிவாகப் பாடியுள்ளார்.இதனை இக்கட்டுரையில் காணலாம்.

## புறத்தோற்றப் பொலிவு

எல்லாம் வல்ல சிவபெருமானைத் தலைவராகக் கொண்டு விளங்கும் சைவசமயத்திற்குரிய தலையாயப் பண்புகளுள் ஒன்று சிவச்சின்னமாகிய திருநீற்றினை அணிவது. சிவத்தொண்டர் அனைவரும் திருநீறு பூசுதலைத் தம் நெறிகளுள் ஒன்றாகக் கொண்டிருப்பர்.

"மாசிலாத மணிதிகழ் மேனிமேல்
பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" என்கிறார் சேக்கிழார் பெருமான்.
"அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளியால் நிறை தூய்மையால்"

என்ற வரிகளில் திருநீற்றின் தூய்மையினை சேக்கிழார் பெருமான் சிறப்பித்துப் பாடுகின்றார். சைவ அடியவர்களின் வெள்ளை உள்ளத்தை பூசப்பெருகின்ற வெள்ளை திருநீறு காட்டும். நால்வருள் ஒருவராம் திருஞானசம்பந்தர் திருநீற்றின் பெருமையை புகழ்வதற்கென்றே ஒரு பதிகம் அமைத்து "திருநீற்றுப் பதிகம்" எனப் பெயரிட்டார்.

இத்தகு பெருமைமிக்க திருநீற்றினைச் சைவ அடியார்கள் பக்தியோடு தரித்துக்கொள்வதை சைவப்பண்பாடாகக் கொண்டனர். முழுநீறுபூசிய முனிவர் புராணத்துள் மூன்று வகையான திருநீற்றினை சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார். கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்ற அந்த மூன்று வகையான திருநீற்றைச் செய்யும் முறையையும், நீறு அணியும் முறையையும் அதில் அவர் விளக்குகின்றார்.

சைவஅன்பர் உணவு உண்பதற்கு முன் திருநீறு பூசும் பழக்கம் உடையவராய் இருந்தனர். அப்பர் அப்பூதியடிகளின் இல்லத்தில் அமுது உண்பதற்கு முன்பு "மேதகு பூசிசாத்த" புதல்வரை அழைக்குமாறு அப்பூதியாரை வேண்டினார். புதல்வருக்கு அளிப்பதற்கு முன்பு,

"இருந்து வெண்ணீறு சாத்தி இயல்புடை இருவர்க்கும்
பொருந்திய நீறுநல்கி.........."

என சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். தாமும் அணிந்து கொண்டு தம்பதியருக்கும் திருநீறு அளித்ததாக கூறுகிறார். சிறுத்தொண்ட நாயனாரும் தம் இல்லத்திற்கு உணவு கொள்ள வந்த அடியார் நீறிட்ட பின்பே அவரும் திருநீறு பூசினார். உண்பதற்கு முன் திருநீறு இடும் இப்பண்பு இன்றும் சைவ அன்பர்கள் இல்லங்களில் காணப்படுகிறது. திருநீறு பூசிய பெருமக்களைத் தொகையடியாராக்கி "முழுநீறு பூசிய முனிவர் புராணம்" என சேக்கிழார் பெருமாள் நாயனார் முடிகவித்து திருவுலா வரும்பொழுது, எதிரே மழையினால் அமர்ந்து வந்த உவர்மண் மேனி முழுவதும் படிய ஒரு சலவைத்தொழிலாளி வரக்கண்டு, அவனை அடியவர் என வணங்கிய செய்தியும், பகைவரான முத்த நாதனை மெய்ப்பொருள் நாயனார் தம் அரண்மனையுள் வரவேற்று அவனிடம் ஆகமநூல் கேட்டதும், ஏனாதி நாத நாயனார் அதிசூரனைக் கொல்ல முனைந்தபோது, கொல்லாது நின்று தம்மை அவன் கொல்லுமாறு செய்ததும் திருநீறேயாகும். கூன்பாண்டியனின் வெப்புநோயை குணப்படுத்தியதும் திருநீறேயாகும்.

இவ்வாறு சைவ அடியவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பதும், அவர்க்குத் தொண்டு புரிவதும் சமயப் பண்பாடாக மக்கள் மேற்கொண்டனர்.

**இறை வழிபாடு**

உயிர் உய்வதற்குக் கடவுளை நாடுகிறது. இங்கு உயிரும் உருவமற்றது. உயிர் அடையத் துடிக்கும் கடவுளும் உருவமற்றவர். இங்கு கலப்பது உருவங்கள் அல்ல. உணர்வுகள்தாம். உயிர் உணர்வினால் அளாவி, பேரறிவாகவும், பேராற்றலாகவும் விளங்கும் இறைவனை நினைத்தல் மூலம் அந்த அறிவையும், ஆற்றலையும் தன்பால் ஈர்த்துத் தன்னை நிறைவு படுத்திக் கொள்ளும் சாதனையே வழிபாடு. இது ஓர் அறிவுப்பயிற்சி! உணர்வுப்பழக்கம்! இது எளிதில் கைவரப் பெறுவதன்று. அரிதில் முயன்று அடையக்கூடிய சாதனை. உணர்வுப் பயிற்சியை நோக்கமாகக் கொண்டே தொடக்க நிலையில் உருவப்பயிற்சி வழங்கப்படுகிறது.

உருவமற்ற ஒன்று, அனுபவத்தைப் பெற வேண்டுமானால், அனுபவத்தைத்தர வேண்டுமானாலும் உருவம் பெறுதலைத்தவிர வேறுவழியில்லை. காதல் உருவமற்றது. ஆனால் உருவமைதியில் காதல் நிகழும்பொழுதுதான் இன்பம் கிடைக்கிறது. காதலுக்கு உருவமில்லை என்பதும், காதலிப்பவர்க்கு உருவம் வேண்டும் என்பதும் பெறப்படுகின்றன. உயிர் உருவ அமைதியுடைய உடலைப் பெற்றே துய்ப்பினைப் பெறுகிறது. அஃது உருவத்தை இழக்குமானால் துய்ப்பில்லை. அதுபோலவே கடவுளும் அருவப்பொருள். உயிர்களின் துய்ப்பிற்குத் துணையாயிருக்கும் பொழுது உருவம் பெறுகிறது. விஞ்ஞான அடிப்படையில் கூட ஒலியலை உருவமற்றது. அது வானொலி என்ற உருவ வடிவத்தின் வழி இயங்கும்பொழுது செவிப்புலன் அனுபவத்திற்கு வருகிறது. மின்சக்தியும் அப்படித்தான். ஆகவே, உய்வுபெற வேண்டிய உயிர் மானுட வடிவத்திலும், உய்வுக்குத் துணை நிற்கும் வழிபாட்டிற்குரிய திருமேனி இறைவடிவத்திலும் கொண்ட உறவே திருக்கோயில் வழிபாடாக மலர்ந்தது. திருக்கோயில் வழிபாடு மனிதன் கடவுளைத் தோழமை கொள்ளும் களமாகவே அமைந்தது.

வழிபாடு என்பது ஒரு உயிர், தன் உயர்வுக்காகத் தானே செய்து கொள்ளும் ஒருவகை அறிவுப் பயிற்சி, உணர்வுப்பயிற்சி. ஒருவர் அறிவுபெற பிறிதொருவர் படிக்கமுடியாது. ஒருவர் பசிக்காக இன்னொருவர் உண்ண முடியாது. ஆனால், இன்றோ மக்களுக்காகச் சிலர் வழிபாடு செய்கிறார்கள்- இது எப்படிச் சாத்தியமாகும்? தண்ணீரைக்குடித்துச் செரித்த விதையால்தான் முளைக்கமுடியுமே தவிர, அண்டாவில் தண்ணீர் இருப்பதனால் அருகில் உள்ள விதை முளைத்துவிடாது. தண்ணீரைக் குடிக்கும் இயல்பில்லாத விதை தண்ணீரில் கிடந்தாலும் முளைக்காது. "ஆண்டாண்டு அழுதாலும் பிள்ளை அவளேதான் பெறவேண்டும்" என்ற பழமொழிக்கேற்ப, ஒவ்வொரு உயிரும் தத்தம் உய்வுக்குத் தாமே அழுது வழிபாடு இயற்ற வேண்டும். இதுவே சமயத்தத்துவத்தின் அடிப்படை. கடவுள் வழிபாட்டின் நோக்கம்.

பழங்காலத்தில் உய்யும் வழியறிந்த மாந்தர் அனைவரும் அவரவர்களே வழிபாடு ஆற்றியிருக்கின்றனர். ஒருவருக்காக இன்னொருவர் வழிபாடு செய்யும் வழக்கம் பழங்காலத்தில் இருந்ததில்லை. அதனால்தான் எளிதில் எல்லோரும் வழிபடத்தக்கவாறு, மணலில், சாணத்தில் இறைவனை எழுந்தருளச்செய்து வழிபாடு நிகழ்த்தும் வழக்கம் இருந்திருக்கிறது. பெரியபுராணம் காட்டுகின்ற உன்னதமான

இறைவழிபாடு இதுவேதான். தலந்தோறும் சென்ற அடியார் பெருமக்கள் தாங்களே பூவும், புனலும் சொரிந்து வழிபட்டதாகத்தான் பெரியபுராணம் பேசுகிறது. சண்டீசர் மணலில்தான் திருமேனி செய்து வழிபட்டார். திருக்கோயில்கள் தோன்றிய காலகட்டத்தில்கூட - ஏன்? அவை தோன்றிப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும்கூடத் தாமே பூவும், புனலும் சொரிந்து வழிபடும் உரிமை மக்களுக்கு இருந்தது. அதனால்தான் தமிழகத் திருத்தல வரலாறுகள் அனைத்தும் வாலி பூசித்தது, தருமன் பூசித்தது, இராமன் பூசித்தது, இராவணன் பூசித்தது, நளன் பூசித்தது என்று பேசுகின்றன. அதிலும் ஒருபடிமேலாக யானை பூசித்தது, குரங்கு பூசித்தது, எறும்பு பூசித்தது என்றெல்லாம்கூடத் திருக்கோயிற் தல புராணங்கள் கூறுகின்றன. இடைக்காலத்தில் திருக்கோயிலைத் தொழிற் கூடமாக்க நினைத்தவர்கள், மற்றவர்கள் வழிபடும் உரிமையை மறுத்தனர். அன்பு வழிபாடாகத் தொடங்கிய திருக்கோயில் வழிபாடு அர்ச்சகர் வழிபாடாக மாறத்தொடங்கிடது. சடங்குகளும், ஆச்சாரங்களும் கடவுளை நம்மிலிருந்து அந்நியப் படுத்தின. உண்மையான தமிழ்ச்சமய நெறியைப் பெரியபுராணம் உணர்த்துகிறது.

**வழிபாட்டின் பயன்**

வழிபாடு என்பது ஒரு நுண்ணிய கலை. நிரம்பிய அருளார்ந்த உயிருக்கு உதவும் ஓர் உணர்வுப்பயிற்சி. சிந்தனையின்றி அறிவில்லை. கட்டுப்பாடின்றி வழிபாடில்லை. மனத்தை கட்டுப்படுத்துவதே வழிபாட்டின் முதற்படி.

"ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை"

என்பார் திருநாவுக்கரசர்.

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்"

என்பார் வள்ளலார். உலகம் முழுவதையும் பால் பொழிந்து வளர்த்துக் காப்பாற்றும் பசுவிற்கு வாயுறை அளித்தல், உண்ண வேண்டியவர்களுக்கு உணவளித்தல், இனிய வார்த்தைகளைக் கூறுதல் இவையனைத்தும் சமய வாழ்வின் படிநிலைகள் எனத் திருமந்திரம் கூறுகிறது.

சமயவாழ்க்கை வழிபாட்டுணர்வில் வளர்ந்த வாழ்க்கை. அது முற்றிலும் பணிமயமானது. பணி என்பது ஓர் உயர்ந்த சொல். ஆனால் இன்று அந்த சொல் மிகச்சாதாரணமாக உலகியலில் சொல்லப்படுகிறது. பணியாளர், பணிமனை என்றெல்லாம் சொற்கள் வழக்கில் உள்ளன. பணி என்பது தன்முனைப்பு இன்றிச்செய்யப்படுவது . தாழ்வு நோக்கின்றி செய்யப்படுவது. பணி செய்கின்றோம் என்ற செருக்கு உணர்வின்றிச் செய்யப்படுவது பணி. அந்தத் தன்னலமற்ற பணியே தொண்டாகப் பரிணாமம் பெறுகிறது. அத்தகைய தொண்டுகளை சமயவாழ்வின் அறங்களாகப் பெரியபுராணம் பட்டியலிடுகிறது.

**திருவிளக்கேற்றுதல்**

இறைவன் ஒளி வடிவாக இருக்கின்றான். அருள்நிறை வடிவாக இருக்கின்றான். உலகிற்கே ஒளி தரும் ஞாயிறும், திங்களும் மக்களால் இறைவடிவங்களாக வழிபடப்பட்டன.

திருவிளக்கேற்றுதல் ஒரு சமய அறமாகவும், சமயத் தொண்டாகவும் நாயன்மார்களிடத்தில் விளங்கின். திருவாரூருக்கு அண்மையில் உள்ள திருஏமப்பேரூரில் அவதரித்த நமிநந்தி அடிகள் திருவாரூர் நாதனைத் தொழுது வழிபாடு செய்த நேரத்தில் விளக்கேற்ற எண்ணினார். இரவு கவிழ்கின்ற நேரமாக இருந்ததால் ஊருக்குள் சென்று நெய் கொண்டு வர இயலாது என்பதால் அருகாமையில் உள்ள ஒரு மனையிற் சென்று நெய் கேட்டார். அவர் அணுகிய மனை அமணர்மனை என்பதால் அங்குள்ளோர் நாயனாரது திருத்தொண்டை இகழ்ந்து, நீரைமுகந்து விளக்கு எரிக்கச்சொல்ல, நாயனாரும் அவ்வாறே செய்தார்.

வடவெள்ளாற்றுத் தென்கரையில் உள்ள இருக்குவேளூரில் பிறந்த கணம்புல்ல நாயனார் திருப்புலீச்சரத்து இறைவருக்கு விளக்கு எரிப்பதைக் கடப்பாடாகக் கொண்டார். நாள்தோறும் விளக்கு எரிக்கும் தன் கொள்கையினால், இல்லத்தில் இருந்த செல்வங்களையெல்லாம் விற்றார். விற்பதற்கு இனி ஒன்றும் இல்லை என்னும் நிலை வந்தது. அயலவர்பால் இரப்பதற்கும் அவர் அஞ்சினார். ஆனால் தனது கொள்கையினை விட்டு விடவில்லை. கணம்புல்லை அரிந்து கொண்டுவந்து விற்று, அப்பணத்தில் நெய் வாங்கி விளக்கு எரித்தார். ஒருநாள் அதற்கும் சோதனை வந்தது. அப்புல்லும் அன்று விலை போகவில்லை. அப்பொழுதும் நாயனார் அப்புல்லையே விளக்கிட்டு எரித்தார். அப்புல்லும் எரிப்பதற்குப் போதவில்லை. அப்பொழுதும் கொள்கை வழுவா அந்நாயனார் தனது திருமுடியையே விளக்காக எரித்தார் என்ற செய்தியை சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டுள்ளார்.

திருவொற்றியூரின் கண் வாழ்ந்த கலிய நாயனார் அவ்வூரின்கண் இருந்த கோயிலின் உள்ளும் புறமும் பகலும் இரவுமாக விளக்கு எரித்தார். செல்வம் அனைத்தையும் திருவிளக்கு இடுவதற்காகச் செலவழித்தார் செல்வம் தேய்ந்தபோது எண்ணெய் விற்ற கூலியைக் கொண்டு விளக்கெரித்தார். கூலியும் கிடைக்காதபோது, செக்காட்டும் தொழில் செய்து அதனால் வரும் கூலிபெற்று விளக்கு இட்டார். அதுவும் இல்லாதபோது, விளக்கு எரிப்பதில் முட்டுப்பாடு இருத்தல் கூடாது என்பதற்காகத் தம் மனைவியையே விற்கத்துணிந்தார். மனைவியைப் பெற்றுக்கொண்டு தனம் தருவோரும் எவருமில்லாத நிலையில் தன் மிடற்றினையே அறுக்கத்துணிந்தார்.

"மணிவண்ணச் சுடர் விளக்கு மாளில்யான் மாள்வன் எனத்

துணிவு உள்ளம் கொள நினைத்து அவ்வினை முடிக்கத் தொடங்குவார்"

என்பது சேக்கிழார் பெருமான் வாக்கு. கொண்ட கொள்கைக்காக எதையும் செய்யத் துணிந்தவராகக் கலிய நாயனார் காட்சி தருகின்றார்.

**முடிவுரை**

பெரியபுராணத்தில் வரும் நிகழ்ச்சிகள் யாவும் நிகழ்ந்தவை. இன்றும் முயன்றால் நிகழக்கூடியவை. ஆனால் இன்றைய உலகின் சமய வாழ்க்கை ஊற்றெழுச்சி உடையதாக இல்லை. உள்ளக் கிளர்ச்சி உடையதாக இல்லை. பொறிகளில் சமயத்தோற்றம் காணப்படுகிறதே தவிரப் புலன்களில் சமய ஒழுக்கம் இல்லை. இந்தக்குறை எங்கிருக்கிறது- எங்கு இல்லை என்பதை பகுத்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை. இன்றைக்குப் பெரியபுராணம், நம்முடைய வாழ்க்கை வீழ்ச்சியினால் வியப்பதற்குரிய வெறும் அற்புதமாகத் தெரிகிறது. நாம் பெரியபுராணத்தை ஓதுகிறோம். ஆனால் பொருளின் பயன்உணர்வு நம்மிடத்தில் இல்லை. ஏழாம் நூற்றாண்டில் திருக்கோயில்களில் திருத்தொண்டுகளாக இருந்தவை- அடியார்களால் தொண்டுள்ளம் கொண்டு செய்யப் பெற்ற தொண்டுகள் அனைத்தும் இன்று தொழில் மயமாகிவிட்டன. முப்போதும் திருமேனி தீண்டுவார் பரம்பரையில் தோன்றியவர்கள் ஊதியத்திற்காக இப்போது அதைச் செய்கிறார்கள். எல்லாவற்றையும் பூசனைகளால் பெற்றநிலை மாறி, பூசிப்பவர்களே பேரம்பேசி இரக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. நமது ஆன்மீக வீழ்ச்சி அசாதாரணமாகிவிட்டது. ஆரவாரம் மிக்க சடங்குகளே நடைபெறுகின்றன. அகனமர்ந்த காதல் வழிபாடு அருகிப்போய்விட்டது. நம் அடியார்களும், இறைவனும் இதுதான் சமயநெறி- இதுதான் வாழ்க்கை நெறி என்று சுட்டிக்காட்டிய நெறியை நாம் உளமாரப் பின்பற்றவில்லை. முன்னோர் வரலாற்றைச் சேக்கிழார் நமக்கு எடுத்துத்தந்தது படித்து மகிழ்வதற்கு மட்டுமன்று; வாழ்ந்து பயன் கொள்ளவுமாகும். தமிழகத்தின் சமய இயக்கம் நாயன்மார்கள் நிகழ்த்திய தொண்டுகளைத் தொடர்ந்திருக்குமானால் இன்றிருக்கும் அவலநிலை தினையளவு கூடத் தோன்றியிருக்காது. அப்பரடிகள் காலத்தில், திருக்கோயிலில் திருவலகிடுதல் ஒப்பற்ற திருத்தொண்டாக இருந்தது. அப்பரடிகளே உழவாரத்தொண்டு செய்திருக்கிறார். இன்று அந்த நிலை இல்லாமற் போய்விட்டது. அகநலமும், புறநலமும் கெட்டு, திருவலகுப் பணியைத் தொண்டராகச் செய்யாமல் பிழைப்பாகச் செய்து வருகிறார்கள். இதே நிலையில்தான் மற்ற தொண்டர்களும் இருக்கின்றனர். அடியார்களுக்குப் பிறகு, அவர்கள் செய்த தொண்டினை நாம் வழிவழிச் செய்யத் தவறிவிட்டோம். அந்தத் தொண்டின் நெறியை ஒல்லும் வகையெல்லாம் உயிர்பிக்கவேண்டும். அடியார்கள் செய்த தொண்டினைச் செய்கின்ற இயக்கங்கள் பெருகி வளர வேண்டும். அந்த அடியார்களிலும் பலர், மனித உருவில் நடமாடியவர்களுக்குத்தான் தொண்டு செய்தார்கள். பின்புதான் மனித உருவிலேயே கடவுள் வந்து அதை ஏற்றுக்கொண்டார். மனிதர்களுக்கு மட்டுமல்ல- மனிதர்களிலும் எளியவர்க்கே தொண்டு செய்தனர். சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்தில் அடியார்களோடு உறவுகொள்ளச் சிவபெருமான் எழுந்தருளியபோதெல்லாம் பெரும்பாலும் மனித உருவில் வந்ததைத்தான் பாடுகின்றார். மனித உருவிலும் எளிய உருவமே படைத்துக் காட்டுகிறார். இன்றுள்ள சமய அமைப்பிலே எளியோர்க்கு இடமில்லை. ஆடம்பரமும், ஆரவாரச்சடங்குகளுமே ஆளுமை செலுத்துகின்றன. பெரியபுராணம் விதைத்த அன்பு வழிபாடு- தொண்டு வழிபாடு- பணிவு வழிபாடு போற்றப்பட்டால்தான் சமய உலகம் புனிதப்படும். சமயநெறி போற்றப்படும்.

# வேத சிவகாம மரபு

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**
B.A.(Hons.), P.G. Dip.in Edu.,M.Phil.- Sanskrit.
தலைவர்,
சமஸ்கிருதத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(padmanaban73@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

சைவம் சிவசம்பந்தமுடையது. சைவமரபின் முதல் நூல்கள் எனச் சிறப்புப்பெறுவன வேதங்களும், சிவாகமங்களும் ஆகும். வேத மரபினை வைதிகம் என்றும் சிவாகமம் சார்ந்த மரபை சைவசித்தாந்த மரபு என்றும் அழைப்பர். அந்நிலையில் வைதிகம் சிரௌதம் என்றும் சைவசித்தாந்தம் என்றும் அழைக்கத்தக்க சிறப்பும் பெறுகின்றன. இந்நிலையில் சிரௌதம், சைவசித்தாந்தம் சிவஞானம், ஸ்வந்திரம் எனும் உயர்வுகளினைப் பெறுகின்றன. இந்நிலையில் வேதங்களினாலும் சிவாகமங்களினாலும் உயர்வு பெற்ற மரபு வைதிக சைவம் எனும் சிறப்புப்புடையதாக விளங்குகின்றது. சைவமரபையும் வைதிகமரபையும் பிரித்தறிய முடியாத சிறப்பு காணப்படினும் வைதிகமரபின் தெளிவு சைவதத்துவமான சைவ சித்தாந்தத்தில் நிலைபெற்ற தன்மை அதனது படிநிலை மலர்ச்சியை எடுத்துரைக்கின்றது. இத்தகைய மரபு வேதங்கள் பொது நூல்கள் என்றும், ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்றும் உயர்ச்சி பெறுகின்றன. இத்தகைய தன்மையின் மலர்ச்சி வேதாந்த தத்துவமலர்வின் தெளிவே சைவசித்தாந்த தத்துவம் எனும் உயர்விலக்கிற்குரியனவாக விளங்கக் காணமுடிகின்றது.

திறவுச் சொல் :- வேதம், வைதிகம், சிவாகமம், சைவசித்தாந்தம், சிரௌதம்.

**அறிமுகம்**

வேதம், 'வித்' எனும் வினையடியிற்பிறந்த சொல் ஆகும். அது 'அறிவு' என பொருள் தருவதோடு அறிவு நூல் என்னும் 'புலமைசார் விஞ்ஞானம்' என்றும் மெஞ்ஞான அறிவு என்றும் பலபொருள் தருகின்றன. சிவாகமம் என்பது சிவசம்பந்தமுடையது. சிவம் எனினும் சைவம் என்றும் ஆகமம் என்பது சிவனிடமிருந்து வந்தது என்றும் பொருள்தருகின்றன. அந்நிலையில் சிவனிடமிருந்து வந்த புலமைசார் விஞ்ஞானமே சிவகாமங்களாகின்றன. இந்நிலையில் வேதங்கள் வைதிகம் என்னும் சிவாகமம் சித்தாந்தம் என்றும் கொள்ளப்படுகின்றன. அந்நிலையில் வேதசிவாகமங்கள் இறைவன் நூல் என்றும் உயர்வில் வேதங்கள் சைவசமய மரபிற்கே பொதுநூல் என்னும் சிவாகமங்கள் சிறப்பு நூல்கள் என்றும் உயர்வு பெறுகின்றன.

**வேதசிவாகமங்களின் தோற்றம்**

சைவமரபின் அடிப்படையில் சதாசிவவடிவம் முக்கியத்துவமுடையதாகும். சதாசிவ வடிவத்தின் ஐந்து முகங்களிலிருந்தே வேத சிவாகமங்கள் தோன்றின என்பது சிறப்பம்சமாகும்.

**வேதங்களின் தோற்றம்**

வேதங்கள் நான்கு ஆகும். அவையாவன இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாகும். வேதங்கள் இறைவனது மூச்சுக்காற்று என்றும் சிறப்புப் பெறுகின்றன. வேதங்களை கண்டவர்கள் ரிஷிகள் ஆவார். ரிஷிகள் கண்ட வேதங்கள் உயர்ந்த புனிதத்துவமுடையனவாகும். மந்திரங்கள் எனப் போற்றப்படும் வேதங்களைக் கண்டவர்களே ரிஷிகள் ஆவர். இதன் காரணமாகவே ரிஷிகள் 'மந்திர த்ரஷ்டா' என்று மந்திரங்களைக் கண்டவர்கள் - அழைக்கப்படுகின்றனர். வேதங்கள் நான்கும் சிவனது சிறப்பான வடிவமான சதாசிவ வடிவத்தின் தற்புருஷம் அகோரம், வாமதேவர் சத்யோஜாதனம் என்னும் முகங்களிலிருந்து முறையே இருக்குவேதம், யசுர்வேதம் சாமவேதம், அதர்வண வேதம் என்பன தோற்றம் பெற்றதாகும்.

வேதமந்திரங்களுள் சிவனை நூறுபெயர் கொண்டு போற்றும் மந்திரம் 'சதருத்ரீயம்' ஆகும். இங்கு சிவன் ருத்ரனாகப் போற்றப்படுகின்றார். இச்சதருத்ரீயத்தின் நடுநாயகமாக விளங்குவது சிவனது பஞ்சாக்ஷரமந்திரமாகும். அதனை சதருத்ரீயம்,

ஓம் நம : சிவாயச சிவதராயச

என்று போற்றுகின்றது. இத்தகைய பஞ்சாக்ஷரமந்திரச் சிறப்பினையே தேவார முதலிகள் பஞ்சாக்ஷரப்பதிகங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

நாதன் நாமம் நமசிவாயவே
சொல்லும் நாமம் நமசிவாயவே
நமசிவாய வாழ்க நாதன்தான் வாழ்க.

போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம். இந்நிலையில் வேதங்களின் தோற்றமும், பஞ்சாக்ஷர மந்திரச்சிறப்பும் வேதங்களில் சிறப்புடன் விளங்குவதனைக் காண முடிகின்றது. மேலும் வைதிக மரபின் சிவனது பெருமைகளையும், சிவ சின்னங்களின் மேன்மைகளை ஸ்வேதாஸ்வதர உபநிடதம், பஸ்மஜாபால உபநிடதம், போன்றன கூறி நிற்பதனைக் காணலாம்.

சிவாகமக்கிரியைகளிலும், சிறப்பாக ஆவாஹனம் அபிமந்திரணம், புரோக்ஷணம் தீபாராதனம், சேவனம் என்பவைகளில் வேதமந்திரங்களே செயற்படுத்தப்படுகின்றமை சிறப்புடையதும் சுட்டிக்காட்டத்தக்கதுமாகும்.

சாஸ்திரம் எனும் நிலையிலும் வேதங்கள் முதநூல் என்றும், பொது நூல் என்றும் அழைக்கப்படுவதனைக் காணமுடிகின்றது. இந்தனைய சிறப்பினைத் திருமந்திரம்

முதலாகும் வேத முழுதா கமமாகப்
பதியான வீசன் பகர்த்த திரண்டு என்றும்
வேதமோ டாகமம் மெய்யா மிறைவனுல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் நுள்றுக
நாத னுரையிவை நாடிலி ரண்டந்தம்
பேத தென்னிற் பெரியோர்க் கபேதமே. என்றும் சிறப்பிக்கின்றது.

**சிவாகமங்களின் தோற்றம்**

சிவாகமங்கள் சதாசிவ வடிவத்தின் ஈதிசானம், தற்புருஷம், அகோரம் வாமதேவம், சத்யோஜாதம் எனும் ஐந்து முகங்களிலிருந்தும் தோன்றியன என சிவாகமங்கள் கூறுகின்றன. இதன் சிறப்பினை சிவாகமங்களின் தந்திராவதார பாடங்களில் விரிவுபடக் காணலாம்.

சிவாகமங்கள் மூல சிவாகமங்கள் உபாகமங்கள் என இரு பிரிவுகளை உடையன. இவற்றுள் மூலசிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளமீறா இருபத்தெட்டாகும். உபாகமகங்கள் வக்தாரம் முதல் விஸ்வாத்மகம் வரையாக இருநூற்றேழு ஆகும். இச்சிவாகமங்கள் உபதேசச் சிறப்பினால் சிவபேதம், ருத்ரபேதம் எனப்போற்றப்படும் சிறப்புடையனவாக விளங்கியிருக்கின்றன. இதன் விரிவினை நோக்குவோம்.

சதாசிவ வடிவத்தின் சத்யோஜதமுதத்திலிருந்து காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம் எனும் ஐந்து ஆகமங்களும், வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், சூக்ஷ்மம், சஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் எனும் ஐந்து ஆகமங்களும், வாமதேவ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம் எனும் ஐந்து ஆகமங்களும், ஈசான முகத்திலிருந்து புரோத்கீதம், லலிதம், சித்தம், சந்தானம், சர்வோதயம், பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் எனும் எட்டு ஆகமங்களும் தோற்றம் பெற்றன. இச்சிவாகமங்களுள் காமிகம் முதல் சுப்பிரபேதம் வரையான பத்தும் பிரணவர் முதல் சசி வரையாக ஒவ்வொரு சிவாகமத்திற்கும் மூவர் வீதம் முப்பது சிவாகமங்களுக்கு உபதேசிக்கப்பட்டமையால் அவை சிவபேதம் எனப்படுகின்றன. விஜயம் முதல் வாதுள மீறாக பதினெட்டும் அநாதிருத்ரர் முதல் மஹாகாளர் வரையாக ஒவ்வொரு சிவாகமத்திற்கும் இருவர் வீதம் முப்பத்தாறு ருத்ரகணங்களுக்கு உபதேசிக்கப்பட்டமையால் ருத்ர பேதம் எனப்படுகின்றன.

சிவாகமங்களை உபதேசமாகக் கேட்டவர்கள் அறுபத்தறுவர் என்பதனை சித்தாந்த சாராவளி கூறும் அதேவேளை திருமந்திரம்.

அஞ்சன மேனி யரிவையோர் பாகத்த
னஞ்சொ டிருபத்து மூன்றுள வாகம
மஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி வரும்பொருள் கேட்டே எனக் கூறுகின்றது.

இச் சிவாகமங்கள் உபதேசச்சிறப்பினால் ஆறு வகையான சம்பந்தங்களைத் தெரிவுபடுத்துகின்றது. இதன் வழி சதாசிவரால் அனந்தேஸ்வரர், ஸ்ரீகண்டர், முனிவர், மனிதர், மனிதன் என்றவாறாக இச்சிவாகமங்கள் குரு பரம்பரையாகவும் உபதேசச் சிறப்புடனும் சிவதீக்ஷையின் மேன்மையுடனும் உலகிற்கு பரவும் தன்மையைப் பெற்றனவாகின்றன. இதனைச் சிவஞான சித்தியார்.

ஆரண மாகமங்க ளருளினை லுழுவு கொண்டு
காரண மருளா னாகிற் கதிப்பவ ரில்லை யாரு
நாரணன் முதலா யுள்ள சுரர்தரர் நாகர்க் கெலிலாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியுஞ் சென்றிடாவே தெளிவுபடக் கூறுகின்றது.

சதாசிவ வடிவத்தின் ஈசான முகத்திலிருந்து இருபத்தெட்டு சிவாகமங்களும் தோற்றம் பெற்றதாகவும்; தற்புருஷம், அகோரம் வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய நான்கு முகங்களிலிருக்கும் இருக்கு யசுர், அதர்வணம், சாமம் ஆகிய வேதங்கள் தோற்றம் பெற்றதாகவும் சுப்ரபேதாகமம் கூறுகின்றது.

**வேத சிவாகமச் சிறப்பு**

வேதம் பொது நூல் என்றும், சிவாகமம் சிறப்பு நூலென்றும் சிறப்புப் பெறுகின்றன. இம்மரபில் வேதம் பல தெய்வவழிபாட்டுத் தன்மையில் சூத்திரமாக விளங்கி நீதி நெறியில் சிவனின் பரத்துவத்தை விளக்குகின்றது. சிவாகமம் ஞான நெறியில் வேதங்களுக்கு உரை நூலெ தன்மையில் சிவனையே ஆராதிக்கும் சிறப்பில் சிறப்பு நூலாகின்றது.

சுப்பிரபேதாகமம், மகுடாகமம் ஆகியன கூறுகையில்,

'வேதசாரமாதலின் சைவசித்தாந்தம்' என்றும்,

'இந்தச் சித்தாந்தம் வேதசாரம்' என்றும் கூறிநிற்க சிவப்பிரகாசம்,

'வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்' எனக் கூறுகின்றது.

வேதங்களுக்கும் சிவாகமங்களுக்கும் எதுவிதமான வேறுபாடும் கிடையாது என்பதனை ஸ்ரீகண்டர் தமது பிரம்ம சூத்திர உரையில்,

'வேத சிவாகமங்களுக்கு பேதம் காண்கிலோம்;

வேதமே சிவாகமம்' எனத் தெளிவுபடக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

வேதங்களின் ஞானபாதக் கருத்துக்கள் சிவாகமங்களிலும் கூறும் தன்மையில் தெளிவுபடச் சுட்டப்படுவதனையும், அதன் விரிவுகள் சிவாகமங்களில் தெரிவு படுத்தப்படுவதனையும், சிவாகமக் கருத்தியல்களின் தெளிவு தெய்வீகவியல் வரலாறாக புராணங்களினூடாக தெளிவுபடுத்தப் படுவதனைக் காணமுடிகின்றது. திருமுறைகளுள் தேவாரங்கள் வைதீக கருத்தியலுக்கு முரணாகாதவையென்பதனை காசிவாசி செந்திநாதையரின் 'தேவாரம் வேதசாரம்' என்பதும் வைதிகக் கருத்தியலே சிவாகம சாரம் என்பதனை காசிவாசி செந்திநாதையரின் சைவ வேதாந்தம்; மற்றும் பிரம்ம சூத்திரத்தின் ஸ்ரீகண்ட பாடியம் தெளிவு படுத்துகின்றன. சிறப்பாக திருவாசகத்தில் உபநிடதச் சிந்தனைகள் இழையோடியிருக்கும் தன்மை உரையாசிரியர்களால் தெளிவுபடுத்தப்பட்டுள்ள சிறப்புடையனவாகும்.

சிவாகமங்களின் ஞானபாதயச்சிறப்புக்களை தமிழில் பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்கள் - மெய்கண்ட சாஸ்திரங்கள் கூறும் அதேவேளை சம்ஸ்கிருதத்தில் அஷ்டப்பிரகணங்கள், சித்தாந்த சாராவளி, சைவபூஷணம், முதலாக தெளிவுபடுத்துகின்றன.

## நிறைவுரை

வேத சிவாகம மரபுகள் போற்றத்தக்க தன்மையிலேயே சைவத்தின் உயர்வு போற்றப்படுகின்றது. இதனை சேக்கிழார்.

'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை, விளங்க'

எனப் போற்றுகின்றார்.

இன்றார் இத்தகைய மரபின் உயர்வுடனே 'வைதிகசைவம்' எனும் மரபு சிறப்புப் பெறுவதனைக் காணமுடிகின்றது.

இவ்வாறாக இறைவன் நூல் எனும் சிறப்பில் வேதங்களும் சிவாகமங்களும் சிறப்புப் பெறுகின்றன. வைதிக மரபின் தொடர்ச்சி சமய மரபிலும், கிரியைமரபிலும், யோகமரபிலும் சிறப்புப் பெற்று வைதீகமரபில் தோற்றம் பெற்ற சிந்தனைகள் சிவாகம மரபில் தெளிவு பெற்றதும் விரிவுபெற்றதுமான சிந்தனைகளாக வளர்ச்சியும் தொடர்ச்சியுமுடையனவாக விளங்குவதனைக் காண முடிகின்றது.

வேத சிவாகமங்கள் அனைத்துமே சதாசிவ வடிவத்தின் ஈசானம் முதலான முகங்களிலிருந்து தோன்றின என்பதனை சிவாகமங்கள் சுட்டுகையில் சுப்பிரபேதாகமம் ஈசான முகத்திலிருந்து சிவாகமங்கள் இருபத்தெட்டும், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் ஆகிய முகங்களிலிருந்து முறையே இருக்கு, யசுர், அதர்வணம், சாமம் ஆகிய வேதங்கள் தோற்றம் பெற்றமையைத் தெளிவுபடக் கூறுகின்றது.

## உசாத்துணை நூல்கள்


மூல நூல்கள்

1. காமிகாகமம் (1977) – பூர்வலாகம், தமிழில் சந்திரிகையுடன், சுவாமிநாதசிவாச்சாரியார் (பதி) தென்னிந்திய அர்ச்சகர் சங்கம், சென்னை.
2. காரணாகமம் (1921) பூர்வலாகம் - அழகப்ப முதலியார் (பதி.) சிவஞான பேதயந்திர சாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை.
3. சுப்பிரபேதாகமம் (1907) அழகப்ப முதலியார் (பதி.) சிவஞானபோதய நிபிசாலை, சிந்தாரிப்பேட்டை, சென்னை.

ஏனையவை

1. கைலாச நாதக்குருக்கள் கா; (1961) வடமொழி இலக்கிய வரலாறு (வைதிக இலக்கியம்) கலாநிலையம், கொழும்பு.
2. கைலாச நாதக்குருக்கள், கா., (1963) சைவத்திருக்கோவிற் கிரியை நெறி, இந்து கலாவிருத்திச் சங்கம், கொழும்பு.
3. கோபாலகிருஷ்ணஐயம், ப; (1992) இந்துப்பண்பாட்டு மரபுகள் சில சிந்தனைகள், ஸ்ரீவித்யா பிரசுரம்; யாழ்ப்பாணம்.
4. பத்மநாபன், ச., (2017) சிவாகமமரபு – நிலைத்தனவும் அழிந்தனவும், ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானம், சிலாபம்.



**LONDON SRI SELVA VINAYAGAR TEMPLE**

இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் – இல்பேர்ட்

299-303 Ley Street, Ilford, Essex 1G1 4BN Tel : 0208 911 8934

உ

## இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்
## சைவ ஆகம மரபும் பூஜை விதி முறைகளும்

எல்லாம் வல்ல ஸ்ரீ செல்வ விநாயகர் திருவருள் துணைகொண்டு, ஆடானைநாதர் துணைநின்று எனது குருவும், தந்தையுமாகிய மறை திரு Dr.M.ஐயாமணி சிவம் அவர்களின் பாதங்களை வணங்கி ஆகம முறையைப் பற்றியும், ஆகம தோத்திர விரதம், மற்றும் இன்றய நாளில் பூஜா விதிமுறைகளை ஆகமத்தின் மூலம் அணுகுவதைப்பற்றியும் ஒரு சில விடயங்களை சொல்ல விழைகிறேன்.

"ஸத்யோஜாத முகாஜ்ஜாதா: பஞ்சாத்யா: காமிகாதாய :।
வாமதேவ முகாஜ்ஜாதா தீப்தாத்யா: பஞ்ச ஸம்ஹிதா :
அகோர வக்த் ராதுத் பூதா : பஞ்சாபி விஜயாதய:
பும்வக்த்ரா தபி சோத்பூதா: பஞ்சவை ரௌரவாதய:
ஈசான வதநாஜ்ஜாதா : ப்ரொத்கீதாத்யகஷ்ட ஸம்ஹிதா:

சர்வேஸ்வரனாகிய சிவபெருமானின் ஐந்து முகங்களில்
1) ஸத்யோஜாத முகத்தினின்று காமிகம், யோகாஜம், சிந்தியம், காரணம், அஜிதம், எனும் ஐந்து ஆகமங்களும்
2) வாமதேவ முகத்திலிருந்து தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமாந், சுப்ரபேதம் எனும் ஐந்து ஆகமங்களும்,
3) அகோர முகத்திலிருந்து விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம் ஆக்னேயம் வீரம் எனும் ஐந்து ஆகமங்களும்
4) தத்புருஷ முகத்திலிருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்து ஆகமங்களும்
5) ஈசான முகத்திலிருந்து புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம் சர்வோக்தம், பாரமேச்வரம் , கிரணம் , வாதுளம் எனும் எட்டு ஆகமங்களும் மொத்தம் இருபத்தெட்டு ஆகமங்கள் ஈஸ்வரன் முகத்திலிருந்து தோன்றின என காரணாகமம் கூறுகின்றது.

“ஆகம” என்ற சொல்லுக்கு “வந்தது” என்று பொருள், சிவனிடமிருந்து வந்ததால் சிவாகமமாகி ஞானத்தினால் நமது மலத்தை நீக்க உதவுவது ஆகமம். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நீக்கினால் இறைவனை (ஞானத்தை) அடையலாம் என்ற குருவடிவாகிய தக்ஷணாமூர்த்தியின் சின் முத்திரையே இதற்கு சாட்சியாகும்.

ஆகம பேதத்தை பற்றி அறிந்துகொள்ள உதவும்
---------- விந்திய கிரேர்தாக்ஷியை பூமிகா ।
சைவந்த திவிவிதம் ஞயம் கலாகல விபேதத:

விந்திய மலை தென்மேற்பகுதி இப் பூவுலகாகும். சைவம் என்பது கலம், அகலம் என இரண்டு பிரிவாக உள்ளது. கலம், என்ற ஆகமம் சிவபெருமானால் வழங்கப்பட்டது. அகலம் என்ற ஆகமம் ரிஷிகளால் தரப்பட்டது. பிரதிஷ்டை , ஸ்தாபனம், நித்யபூஜை , ப்ரோக்ஷணம், உத்ஸவம் முதலான அனைத்தும், மற்ற காம்ய பூஜைகள் அனைத்தும் கலம் ஆகம முறைப்படி செய்ய வேண்டும் . சாஸ்தாபூஜை பிரதிஷ்டை , உக்ரதேவதைகள் , கிராம காவல் தேவதை பிரதிஷ்டைகள் அனைத்தும் அகலம் என்ற ஆகமத்தால் செய்ய வேண்டுமென்று காரணாகம நித்யார்ச்சன வித்யில் கூறியுள்ளது.

---

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சம் போலவே
சூரிய காந்தஞ்சூழ் பஞ்சைச் சுடமாட்டா
சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல
சூரியன் நோந்த முறைந்த மலங்களே

திருமந்திரம்

தசகாரியங்கள் : தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுந்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், எனப்பாகருமம், பசுவும் தனித்தனி மும்மூன்றாகவும், பதிநான்காகவும் பிரிக்கப்பட்டுள்ளது.இந்த தச காரிய ஞான மார்க்கம் காமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே மலங்களை போக்கக்கூடிய மாமருந்தாக ஆகமங்கள் விளங்குகிறது என்பதை அறிவோம்.

ஆகமம் என்பது ஆன்மாக்கள் மோக்ஷமடைய மலநாசஞ் செய்விப்பது என்று பொருள்.

ஐஸ்வர்யம், வீரியம், கீர்த்தி, காந்தி, ஞானம், வைராக்யம், என்ற ஆறுக்கும் பக என்று பெயர். இவ்வாறு குணங்கள் நிறைந்த சிவனை பகவான் என்று கூறுகிறோம். இன்னும் எளிமையாக கூற வேண்டுமானால், எல்லாவற்றையும் கடந்து உள்ளே இருப்பதால், அவருக்கு கடவுள் என்று பெயர்.

வேதத்தின் சாரமாக உள்ளது சித்தாந்தம் எனப்படுவது. அவற்றில் சைவ சித்தாந்தமே உயர்ந்தது.

ஞானபாதத்தால் பதி, பசு,பாச லக்ஷணம் அறியப்படுகிறது.
கிரியா பாதத்தினால் கரிஷணம் முதல் பிரதிஷ்டை வரை கிரியைகள் உத்ஸவம், பிராயச்சித்தம், நித்ய, நைமித்திய, கரம்ய பூஜைகளும், சமய, விஷேஷ, நிர்வாண தீக்ஷைகளும் வர்ணாச்ரம தர்மங்களும் கூறப்படுகிறது.
யோகபாத்தினால் ப்ராணாயமம், முதலிய லக்ஷணங்களும், ஆத்மசுத்தி, அந்தர்யாகம் முதலியவை அறியப்படுகிறது.
சந்த்யா பாதத்தினால் பூஜைக்குரிய உபகரணங்களும், முறைகளும் கூறப்படுகிறது.

**ஆசார்யலக்ஷணம்**

பூஜிக்கிறவனான ஆன்மா தனது நிலையை அறிந்தும், பூஜிக்கப்படுகிறவனான இறைவனுடைய தன்மையை உணர்ந்தும், பூஜ்ய, பூஜகர்களுடைய இடையில் நிற்கும் மலங்களுடைய குணம், பலம் இவைகளையும் தத்துவ குணங்களையும் அறிந்தால்தான் இறைவனை சரியான படி பூஜிக்க முடியும். முதலாவதாக ஞானப்பாதத்தினைச் சுருக்கமாக விளக்கும் இது.

கிரியாபாதம் மூன்று வகைப்படும்.
1) மந்திரம் 2) கிரியை 3) பாவனை

**மந்திரம்**

பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், சம்திதா மந்திரம் அஸ்திர மந்திரம் முதலிய மந்திரங்கள் குருமூலமாக உணரத்தக்கது.

தேவதாஸ் தாபனம், யஜனம், ஸ்நானம், ஹோமம், தர்ப்பணம், பிராயச்சித்தம், தீக்ஷை முதலிய எல்லாக் கிரியைகளும் மந்திரத்தால் செய்ய வேண்டும், மந்திமன்னில் தனி கிரியை கிடையாது, என்று காரணாகமம் கூறுகிறது.


மேலே குறிப்பிட்டவை கொண்டு குருமுகமாக, சிவபெருமான் திருவருள் துணை கொண்டு சைவ ஆகம மரபைப் பேணி பூஜை வித்தைகளை பின்பற்றுவது உத்தமம் என்பது சான்றோர் வாக்கு.

“கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு” என்ற ஔவை வாக்கை மனதில் கொண்டு இச் சிற்றுரையை நிறைவு செய்கிறேன்.

இங்கனம்
இலண்டன் செல்வ விநாயகர் ஆலய
பிரதமகுரு ஈசானசிவம் என்கிற S.முத்துகுமாரசாமிக் குருக்கள்
மற்றும் ஆலய நிர்வாகம்.




**B. Vasantha Gurukkal BA (Hons)**
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்
**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**
கற்பகபதி ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
18 Chingford Road, Walthamstow, London, E17 4PJ
Home: 02085233802 |Temple: 02085273819 |
Mob: 07903707878 | Email: Vasanthan@live.co.uk

## வேத சிவாகமங்களிலும் ஆலய வழிபாட்டு மரபிலும் விளங்கும் யாகம், தர்ப்பை,கும்பம் பற்றிய தத்துவ சிந்தனைகள்

### வழக்கங்கள் நடைமுறைகள்

உலகப் பரப்பில் பரந்து விளங்கும் எமது சைவ சமயம் பல நல்ல நெறிமுறைகளையும் அதேவளை ஒவ்வொரு செயலுக்கும் உள்ளேயும் விஞ்ஞானம் ,மற்றும் வாழ்வியல் தத்துவ சிந்தனையையும் தாங்கிக்கொண்டு விளங்கி வருகிறது இவற்றை ஒழுங்கு படுத்தி சொல்வதில் வேதங்களும் சிவாகமங்களும் பெரும் பங்களித்துள்ளன.இவை சமயம் என்றில்லாமல் சகல சமூகத்திற்கும் பொருந்தும்.இதனால் வேதம் அகிலஸ்ய தர்ம மூலம் என்று சொல்லப்படுகிறது. வேதம் எனின் அறிவு என்பதே பொருள்
.காலையில் எழுதல் காலைக்கடன்களை நிறைவேற்றுதல் இறைவழிபாட்டில் சிறிது நேரம் மனத்தை நிலை நிறுத்தல் நல்லிசைகள் இறை பாடல்களைக் கேட்டல் அன்றாட கடமைகளுடன் அறப்பணி ஆற்றுதல் பெரியோரை மதித்தல்முன்னோர்களை தொழுதல் , நல்ல அறிவு நூல்களைக் கற்றல்போன்றவை எமது கடன்கள் ஆகும் இங்கு காலைக்கடன் என்பது பொதுவாக எல்லோர்க்கும் தெரியும்.மற்றது கடன் கழித்தல் என்பது ஒவ்வொருவர்க்கும் முக்கியமானது.எமக்கு மூன்று கடன்கள் அதாவது கடமைகள் உண்டு ஒன்று தேவ கடன் இரண்டாவது ரிஷி கடன் மூன்றாவது பிதிர் கடன் இதனை ரினத் திரயம் என்று சொல்வார்கள்.ஒருவரிடம் இருந்து பெற்றதை திருப்பிக் கொடுத்தல் கடனைக் கழிக்கும் முறை.அந்த வகையில் இறைவனை வழிபடுவதன் மூலம் தேவ கடனும் ,வேதமந்திரங்களை கேட்பதன் மூலம் ரிஷி கடனும் ,முன்னோர் வழிபாடுகளின் மூலம் பிதிர் கடனும் கழியும் என்பார்கள்.
தேவகடன் என்பதில் வேத மந்திரங்களைக் கேட்டல் மாத்திரமின்றி இறைவனால் அருளப்பட்ட ஆகமச் செயல்களை விதிமுறைப்படி ஆற்றுதல் தேவார திருமுறைகளை ஓதுதல் அவற்றை கேட்டல் போன்ற பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.தேவ என்பதற்கு ஒளி பொருந்திய என்பதே கருத்து.வேத என்றால் அறிவு அத்துடன் ஒலியோடு கூடியது.இறைவனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஒளி வடிவமாகவும் ஒலி வடிவமாகவும் அமைகிறது. வேதங்களில் முதல் வேதமாகிய ருக் வேதத்தில் அக்னி மீளே புரோஹிதம் யக்ஞஸ்ய தேவம் ருத்விஜம் ஹோதாரம் என்று பாடல் தொடங்குகிறது.இறைவனுக்கும் எமக்கும் முன்னுக்கு நின்று உதவி செய்பவர் அக்னிபகவான்,அதனானல் அவரை நாம் இறைவனின் தூதுவராக கருதுகிறோம்.அக்னிம் தூதம் விருநீமஹெ எனவும் வேதம் குறிப்பிடுகிறதுஹோதாரம் ருத்விஜம் என்பது மந்திர ஓசைகளை எழுப்புபவர்கள் அக்னி ஒளிரூபமாகவும் மந்திர ஓசை ஒலி ரூபமாகவும் அமைகிறது..இதனால் ஆலய வழிபாடுகளில் அக்னி வழிபாடு தேவ கடனைக் கழிப்பதற்கு பயன்படுத்துகிறோம்.யாக வேள்விகள் செய்தல் வேதங்களுக்கு மதிப்பு கொடுப்பதற்காகவும் அதேவேளை இறைவனுக்கு பல்வேறு தீபங்கள் ஒளி வடிவில் ஆராதனை செய்தல் ஆகமங்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதையாகும்.கோவில்களில் விளக்கேற்றுதல்தீபம்காட்டுதல் யாகம் செய்தல் இவைஒளி வடிவில் இருப்பதும் மந்திரங்கள்,மணி ஓசை,சங்கின் ஒலி மங்கள வாத்தியங்கள் .திருமுறைகள் போன்றவை ஒலி மூலமாகவும் அமைவதைக் காணலாம்.

இவை இரண்டும் சமுதாயத்திற்கு மிகவும் அவசியமானது ஒளி ஒலி இரண்டும் இல்லாமல் உலகம் இயங்கவே முடியாது.இதனை விஞ்ஞான உலகமும் ஏற்றுக்கொள்ளும்.வேதத்தில் தொடங்கும் ஒளி ஒலி சிந்தனைகள் ஆகமத்தின் வழியாக உலகத்திற்கு நன்மையை செய்கின்றன.விஞ்ஞானக் கருவிகளுக்கு கூட இவை இரண்டும் இல்லாமல் இயக்கமுடியாது.அறிவியல் சிந்தனையின் அடிப்படை நுணுக்கத்தை வெளிப்படுத்தியதில் வேத சிவாகமங்கள் முன்னிற்கிறது.எதனை நாம் இறைவனுக்கு சமர்ப்பணம் செய்தாலும் தீபம் காட்டுகிறோம் மந்திரங்கள் சொல்கிறோம் தேவ கடனையும் ரிஷி கடனையும் நிறைவேற்றுகிறோம்.

இதனை ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே எனவும் தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே எனவும் நாயன்மார்கள் கூறிவைத்துள்ளனர்.இதன் அடிப்படையில் தான் எந்த ஒரு காரியம் தொடங்கினாலும் மங்கள விளக்கு ஏற்றுதல் இறை வழிபாடு செய்தல் போன்ற முறைகள் உள்ளன.
ஆலய வழிபாடுகளில் யாக வழிபாடுகளும் கும்ப வழிபாடுகளும் இடம் பெறும். இக்காலங்களில் தரப்பை எனப்படும் புனித பயிரின் புல்லு பயன்படுத்தப்படும்.யாகத்தில் வளர்க்கபப்டும் தீ அங்கு வரும் புகை என்பன மருத்துவ குணம் உள்ளவை.மூலிகைப் பொருட்களை அங்கு சமர்ப்பணம் செய்து வேண்டிய தெய்வங்களுக்கு வழிபாடு செய்யும்போது ஆன்மீக அருள் கிடைப்பதோடு எமது கன்ம வினைகளில் தீய வினைகள் எரிக்கப்பட்டு நல் வினைகள் வளர்க்கப்படுகின்றன.அத்துடன் யாகம் நடைபெறும் சூழல் புனிதமடைகிறது.தெய்வீக மயமாகிறதுபதினெண் புராணங்களில் அக்னிபகவானால் சொல்லப்பட்ட அக்னிபுரானமும் ஒன்று..ஒளி எப்போதும் மேல் நோக்கியே இருக்கும்.ஒளியின்ஒரு சுடரில் இருந்து எத்தனை சுடர்களையும் ஏற்றலாம்.எப்பொழுதும் பூரணமானதும் புனிதமானதும் அக்னி.இதனால் நாமும் மேல் நோக்கி எல்லா நன்மைகளையும் அடைய வேண்டும் என்பதற்காகவும் எமது வாழ்வில் இருக்கும் துன்ப இருள் அகல வேண்டும் என்பதற்காகவும் இவ்வேள்வி வழிபாடுகள் இடம் தருகின்றன.

தர்ப்பை மருத்துவ குணம் உள்ள மூலிகை இறைவனால் புனித காரியத்திற்கும் அதேவேளை இறைசம்பந்தமான வழிபாடுகளுக்கு பயன்படுத்தவும் தரப்பட்டது.அது நீரில் சேரும்போது அதிகம் பலம் பெறுகிறதுநெருப்பில் அதனை பொடியாக்கி நெய்யில் சேர்த்து நெற்றியில் இட்டு வரஇதய நோய்கள் சிறுநீரக நோய்கள் குணமாகும் என்பர்.

யாக காலங்களில் இவ்வாறான செய்கைக்கு ரக்ஷை என்பர் ரக்ஷை என்றால் பாதுகாப்பு.நமது உடலையும்உள்ளத்தையும் பாதுகாப்பாக இது வைத்திருக்கும்.விபூதிக்கும் ரக்ஷை என்று பெயர் அதுவும் எம்மை இறைவனோடு தொடர்பு படுத்தும் சாதனம் மட்டுமின்றி அதனை அக்னியின் வடிவமாகவே கூறப்படுகிறது.இறைவன் ஜோதி வடிவமானவன் என்பதால் இறைவனுக்கு தீபம் காட்டுவதும் அவரை யாகத்தில் பூஜிப்பதும் எமது கடமை.பூஜைகள் நிறைவடைந்தவுடன் ஜோதி வடிவமான விபூதி பிரசாதமாக வழங்கப்படுகிறது. அத்துடன் பூஜை நேரத்தில் கூட விபூதியை இறைவனுக்கு மும் முறை காட்டி தீபத்தில் சமர்ப்பணம் செய்வதை அவதானிக்கலாம்.

பூஜை நிறைவேறிய உடன் விபூதியை இரு கைகளால் நாம் வேண்டி அணிய வேண்டும் என்பதே முறை.எமது கை எம் நெற்றியில் விளங்கும் பைந்தவ அக்னியில் விபூதி மூலம் சேர்க்கும் போது இதயம் மூளை மற்றும் ஜடர அக்னி என்பவற்றை தொடர்பு படுத்துகிறது.ஆகவே பூஜையில் ஒன்றிப் போய் இருக்கும் எமது மனம் உடல் எல்லாவற்றையும் பலம் பெற செய்வதற்கு இவ் விபூதி வழங்கப்படும்.எமது கை நெற்றியில் வைக்கும்போது அங்கு ஒரு வட்டம் உருவாக்கப்படுகிறது.ஜடராக்னி இதயம்(இங்கும் ஒரு அக்னி இருப்பதாக வேதம் சொல்லும்.) பைந்தவாக்னி ஆகிய மூன்று அக்னியையும் விபூதியாகிய அக்னியால் தொடர்பு படுத்தப் படுகிறது.சிவாச்சாரியார்களை கொண்டு அணியும் பழக்கமும்.உண்டு.அங்கு இவ்வாறான தொடர்பு இல்லை எனினும் குருவின் ஆசியாக அணிவிக்கின்றனர்.ஆசீர்வாத காலங்கள் போன்றவற்றில் அணிவித்தாலும் பரார்த்த பூஜை நிறைவில் இரு கைகளாலும் ஏற்று நாம் அணிவது தான் நன்று. கீழே சிந்தாமல் இருப்பதற்காக குழந்தைகளுக்கு பிறர் அணிந்து விடலாம்.

தர்ப்பை இறைவனின் கையெழுத்து போல நாம் எண்ணி செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அவரது தொடர்பு வேண்டும் என்பதற்காக பயன்படுத்த வேண்டும்.இதற்க்கு குசம் என ஒரு பெயரும் உண்டு மற்றும் இது புனிதமானது என்பதால் ஆண் பெண் அனைவரும் வலது கைகளில் அணிவதுதான் பலன் தரும்.உண்மையில் தம்பதிகளாக அமரும் பூசை வழிபாடுகளில் கணவன் மட்டும் அணிந்தால் போதும்.இதனால் பெண்களுக்கு தர்ப்பை அணிவிக்கும் வழக்கம் இல்லை.நாளடைவில் வரலட்சுமி பூஜை கேதார கௌரி பூஜை என பெண்களின் விரத வழிபாடுகள் தொடங்கும் காலங்களில் அவர்களும் தர்ப்பை அணிந்து சங்கல்பம் செய்யும் முகமாக அணியத் தொடங்கலாயிற்று

. பெண்கள் இடப் பாகத்திற்கு உரியவர்கள் என்னும் நிலையில் போற்றப் பட்டாலும் காப்பு கட்டுவது மாத்திரம்இடக்கையில் கட்டலாம் ..அதிலும் வர லட்சுமி காப்பு வலது கையில் கட்டவேண்டும் என்பது விதி.ஆனால் பவித்திரமாகிய தர்ப்பையை வலதுகையில் அனைவரும் அணிய வேண்டும் என்பதை பலர் தற்காலத்தில் ஆதாரங்களுடன் விளக்கியுள்ளதை நாமும் ஏற்று செயல்படுத்த வேண்டும்.விபூதி வாங்கும் கை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வலது கையே பயன்படுத்துகிறோம் ஏனெனில் அது பவித்திர ஹஸ்தம் அக்கையிலேயே அனைவரும் தர்ப்பைஅணிய வேண்டும்.ஆண்கள் அணிந்தாலே போதும் தேவையைப் பொறுத்து பெண்களும் வலதுகையில் அணிவதே நன்று.இதனால் நாம் தீர்த்தம் முதலியன அருந்தும் போது புனிதமான தர்ப்பை கழட்டி வைக்க வேண்டும் அதனை வாய்க்கு அருகில் கொண்டு செல்லக்கூடாது..சிலர் வலது காதில் செருகி வைப்பார்கள் காரணம் அது கங்கைக்கு சமமானது.தர்ப்பை உள்ள இடத்தில் கங்கை மகிழ்கிறாள். அதேபோல் பொட்டு அணியும்போதும் அணிவிரலாகிய மோதிர விரலாலேயே அணிய வேண்டும்.இது குளிர்மையான விரலாகவும் ஞான விரலாகவும் சொல்லப்படும்

தர்ப்பை வலதுகை மோதிர விரலில் அணியும்போது மூளை இதயம் என்பன ஒருநிலைப்படும்.எந்தக் காரியம் செய்தாலும் நாம் மனதை ஒருமுகப்படுத்தி செய்தாலே வெற்றியும் பலனும் உண்டு,இதனால் அபர காரியங்களிலும் தர்ப்பையை பயன்படுத்துகிறோம்.அத்துடன் தரப்பை உடலில் உள்ள சூட்டை உறிஞ்சி குளிர்மைப்படுத்தும்.வாத பித்த நோய்களைக் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தது.தர்ப்பையில் தாம்ர சத்து இருப்பதாக ஆயுர்வேத வைத்தியம் நிரூபிக்கிறது.எனவே சுவாமியின் திருவுருவங்களை தர்ப்பைபொடியினால் விளக்கும் செயலும் இருந்தது.கிரகண காலங்களில்.மற்றும் அமாவாசை காலங்களில் தர்ப்பைக்கு அதிக வீரியம் உண்டு.இதனால் கிரகண காலத்தில் தர்ப்பையை உணவில் போட்டு வைப்பார்கள்.இதனால் கிரகண காலம் அமாவசை காலத்தில் தர்ப்பணம் பண்ணுவதற்கு தர்பையை பயன்படுத்துவார்கள்.

பூஜை காலங்களில் அணியப்பெறும் பவித்திரம் எனப்படும் தர்ப்பையை நாம் வெற்றிலையில் வைத்து எம்மாலான தக்ஷனை வைத்து அத்துடன் ஒரு சில்லறை காசும் வைத்து வழங்கும்போது அதன் மேல் நீர் விட்டு பெறும் மரபு சிறந்த தத்துவத்தை குறிக்கிறது.சில்லறை அக்னியின் வடிவமாகவும் அங்கு விடப்படும் நீரால் நீரின் வடிவமும் சேர்த்து வழங்கப்படுகிறது.ரெத்தினம் பொன் வெள்ளி போன்றவை அக்னியின் வடிவம் என ஆகமம் சொல்லும்.ஆக்னேயம் இஷ்டாமணி தீபத்யாபரனாதி என்பது சித்தாந்த சாராவளி கூறும் மந்திரம்.யாகம் கும்பம் இவற்றின் வழிபாட்டின் பலனைப் பெற அவ்வழியே காணிக்கை வழங்கப்படும் செயலை காணலாம்.,எப்படி ஒளியும் ஒலியும் எமது சிவாலய வழிபாட்டு மரபில் போற்றப்படுகிறதோ அதேபோன்று நீரும் நெருப்பும் போற்றும் முறையையும் வேதங்களும் ஆகமங்களும் எடுத்துரைக்கின்றன. பௌதிக உலகில் பயன்படுத்தப்படும் பிரதான பொருட்களுடன் ஆன்மீக இணைப்பைத் தரும் பெரும் ததுவத்தை வேத சிவாகமங்கள் தந்து விஞ்ஞான உலகுடன் ஒத்துப்போகும் பெருமையை அறியலாம் ஒளிக்கும் ஒளியானே என்றும் நீராய் உருக்கிஎன் ஆருயிராய்

நின்றானே என மணிவாசகர் ஒப்பிடுவார். தர்ப்பை இவை இரண்டையும் இணைக்கிறது இது புண்ணிய பூமியில் மட்டுமே வளரும்.ஆகவே தர்ப்பை இருக்கும் இடம் புண்ணிய பூமியாக கருதப்படுகிறது.நாமும் தெய்வீக சக்தியை வரவழைக்கவும் நாம் உள்ள இடத்தை புனிதப் படுத்தவும் தர்ப்பையை பயன்படுத்துகிறோம்'

கும்பம் பூரணமான வடிவம் இதனால் நிறை குடம் என்றும் சொல்வார்கள். உலகத்தில் நீரே அதிகம் உண்டு பூமியில் மூன்றில் இரண்டு பங்கு நீர் ஆகும்.எமது உடலிலும் மூன்றில் இரண்டு பங்கு ரெத்தமாகிய நீர் தான் உண்டு.ஆகம வழிபாடுகளில் இறைவனை வரவழைக்கவும் அவர் அருள் பெறவும் கும்பம் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.கோவில் கட்டியவுடன் நடைபெறும் முதலாவது நிகழ்வே கும்பாபிஷேகம் என்பதன் மூலம் கும்பத்தின் பெருமையை நாம் உணராலாம்.அதேபோல் உற்சவங்களின் நிறைவில் தீர்த்தத்திருவிழா என்ற வகையில் புனித நீருடன் தொடர்பு படுத்தி விழா நிறைவுறும். நாம் சங்கல்பம் செய்யும்போதும் முதலில் கைகழுவுவது போல நீர் தருவார்கள் உண்மையில் அது கைகழுவுவது அல்ல அப உப ஸ்பிருஷ்ய என்பதுதான் ஆகம வாக்கியம் இதன்பொருள் நீரை மேல் தொட்டுக்கொண்டு சங்கல்பமாகிய உறுதி வாக்கியத்தை சொல்ல வேண்டும்.நீர் அங்கு சாட்சிப் பொருளாக இருக்கும்.மற்றும் ஒரு சந்தர்ப்பம் நாம் அவதானித்தால் கல்யாண வேளைகளில் கன்னிகாதானம் செய்யும்போதும் நீரை மும்முறை விடுவார்கள் இது தாரை வார்த்தல் எனப்படும்.அங்கு முக்கிய சாட்சியாக நீரே பயன்படுகிறது .நீர் அழுக்கைப் போற்றுவதும் அதேவேளை எமக்கு உணவை ஆக்கித் தருவதும் அத்துடன் உணவுப்பொருளாகவும் உள்ளது.

அடுத்து விநாயகரைக் குட்டி கும்பிட்டு பிர்ரர்த்தனை செய்வோம். இதுவும் ஒருவகை அமிர்த நீருடன் தொடர்புடையது.இங்கும் குட்டிக் கும்பிடும்போது அமிர்த நீர் சுரந்து எமது உடலை சுத்தப்படுத்தி எம்மை சுறு சுறுப்பாக இயங்கச் செய்யும் எனவே இதுவும் உடலியல் சார்ந்த செய்கையோடு இறைத் தொடர்பை ஏற்படுத்தும் முறையாகும்.குட்டிக் கும்பிடும்போது கைகளை மாறிக் குட்டிக் கும்பிடக் கூடாது வலப்பக்கத்து நெற்றி ஓரத்தை வலக்கையாலும் இடப்பக்கத்து நெற்றி ஓரத்தை இடக்கையாலும் குட்ட வேண்டும்.இதுவே தேவ குட்டு என்பார்கள். தோப்புக்கரணம் போடுவதற்கு மட்டுமே கை மாறி பிடிக்க வேண்டும்.அதுவும் இடது கையை உள்ளே வைத்து வலது கையை மேலே வைத்து இடது கையால் வலது காதையும் வலது கையால் இடது காதையும் பிடித்து முழங்கால் மடிய இருந்து எழுதல் வேண்டும்.தோப்புக்கரணம் போடுவதற்காக ஆயத்தப்படுத்தும் கையை முன்னதாகவே குட்டிக் கும்பிடுவதற்கு பயன்படுத்திய பழக்கம் வழக்கமாகவே வந்துவிட்டது போலும் .சிவாச்சாரியார்களை அல்லது பழைய பெரியவர்களை கேட்டால் நேராக குட்டிக் கும்பிட்டு கைமாறி தோப்புக்கரணம் போடுதலே சரி என்பார்கள்.குட்டிக்கும்பிடுவதால் உடல் புத்தி நேராக நற்காரியங்களில் ஈடுபட வழிவகுக்கும் ,தோப்புக்கரணம் உடம்பை சமநிலைப் படுத்தி புத்திக் கூர்மையை அதிகரிக்கும்.யானைகூட தனது உடற் சம நிலைக்கு காதை அசைத்துக் கொண்டு இருப்பதை அவதானிக்கலாம்.

பல சந்தர்ப்பங்களில் நீர் தெளிக்கும் கிரியைகள் இங்கு கைக்கொள்ளப்படும் சில தோஷங்களைப் போக்குவதற்கு மந்திர ஜபம் செய்யப்பட்டநீர் தெளிக்கப்படுவது நாம் காண்கிறோம் இதனால் எமது தோஷங்கள் அகல்வதாக நாம் நம்புகிறோம்.ஆலயங்களிலும் ஆரம்ப வழிபாட்டில் புண்ணியாக வாசனம் என்ற கிரியை மூலம் செய்யப்படும் வழிபாட்டில் நீருக்கு அதிபதியான வருண பகவான் பூஜிக்கப்பட்டு அந்நீர் தெளிக்கப்படும் மரபு உண்டு.கும்பாபிஷேக காலங்களிலும் மற்றும் தீர்த்த திருவிழா நேரங்களிலும் புனித நீர் தெளிக்கப் படுவதால் எமது ஆன்மா தெய்வ அருளைப் பெறுவதுடன் புனிதப்படுத்தப்பட்ட நிலையை உணர்கிறோம்.இறைவனுக்கு அபிஷேகம் செய்த நீர் அருந்துதல் எமக்கு இறை அருளைத் தருவதுடன் அக்கும்ப நீருக்குள் ஆயுள் வேத மூலிகைகளே இடுவதால் உடலுக்கும் ஆரோக்கியமே வரும்.ஆலய வழிபாடுகளில் இறைவனுக்கு பாத்யம் அர்க்கியம் ஆசமனியம் என மூன்று முறை நீர் விட்டு அவருக்கு உரிய மரியாதை செய்கிறோம்.இவ்வாறு நீரின்றி ஆலய வழிபாடே கிடையாது. ஆகம வழிபாட்டில் அபிஷேகம் அதிகம் இடத்தைப் பெறும் ருத்திராபிஷேகம் ஸ்நபன அபிசேகம் சங்காபிஷேகம் போன்ற அபிசேக வகைகளையும் இன்னும் பல அபிஷேக நெறி முறைகளையும் ஆகமங்கள் விபரித்துள்ளன.அத்துடன் பால் தயிர் பஞ்சாமிர்தம் இளநீர் போன்ற பல அபிசேக முறைகளால்உலகம் குளிர்மை அடைவதுடன் எமது தீய வினைகள் கரைந்து நல்ல பலன் வளர வழி கிடைக்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் புலம்பெயர்ந்து இங்கு வந்தாலும் நாம் அபிஷேக மரபுகளை பேணிவரும் ஒழுங்குகளை பல ஆலயங்களில் காணலாம்.நீர் எவ்வளவு பெருமை உடையது என்பதை ஆகமங்கள் செப்புகின்றன.

எமக்கும் நீர் இல்லாமல் வாழ முடியாது.உலகமும் இயங்காது.இதனையே வள்ளுவரும் நீரின்றி அமையாது உலகம் எனவும் சிறப்புடன் பூசனை செல்லாது வானம் வறக்கும் மேல்எனவும் நீரின் பெருமையை உணர்த்தினார்.பூஜைகளின் நிறைவில் விபூதி கொடுப்பது அக்னியின் அடையாளம் என்பது கூறப்பட்டது.அடுத்து தீர்த்தம் நீரின் அடையாளமாகவே வழங்கப்படுகிறது.யாகம் கும்பம் இரண்டிற்கும் உள்ள பெரும் தொடர்பைநாம் பல சந்தர்பங்களில் ஆலய வழிபாட்டு மரபுகளில் அறியலாம். இல்ல வழிபாடுகளிலும் இவை பிரதான இடம்பெறுகின்றன

கும்பத்திற்கு நூல் சுத்துவதில் இருந்து அதற்க்கு கூர்ச்சம் ஆகிய தர்ப்பை போடும் வரை உள்ள விதி முறைகளோடு எந்த வகையில் மூர்த்திகளை ஆவாகனம் செய்வது எவ்வாறு அபிஷேகம் செய்வது என்பது

வரை ஆகமங்கள் விரிவாகக் கூறியுள்ளன.எந்த எந்த மந்திர ஒலிகளுடன் அவற்றை செய்ய வேண்டும் எனவும் விளக்கியுள்ளன.அவற்றை முறைப்படி செய்தலே நாம் இறைவன் அருளால் எமக்குத் தரப்பட்ட ஆகமங்களுக்கு கொடுக்கும் உபசாரம் ஆகும்.

பூஜைகளின் நிறைவில் புஷ்பாஞ்சலி என யோபாம் புஷ்பம் வேத என்ற மந்திர ஒலியை நாம் அடிக்கடி கேட்போம்.இங்கு நீரின் பெருமையே கூறப்படுகிறது .அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது நீரேயாகும்.யோபாம் ஆயதனம் வேத என சொல்கிறது இம்மந்திரம் எவன் அனைத்திற்கும் ஆதாரமாக இருக்கும் நீரை அறிகிறானோ அவன் புஷ்பவான் பிரஜாவான் பவதி அதாவது மகிழ்ச்சியாகவும் பல நன் மக்களோடு கூடியவனாகவும் இருப்பான்.

விஞ்ஞான உலகமும் நீரில் இருந்து மின்சாரத்தை கண்டு பிடித்து பல சாதனைகளை செய்கிறது. நீரில் மந்திர சக்திகள் மன எண்ணங்களை உள்வாங்கும் தன்மை உண்டு

நீரின் சிறப்பு இயல்புகளில் ஒன்று மேலிருந்து கீழ் நோக்கி விரைவாக பாயும் இறைவன் அருளும் எம்மை நோக்கி மேலிருந்து அருள் நீராக வரும்.எந்த பாத்திரத்தில் இருக்கிறதோ அந்த பாத்திரத்தின் வடிவத்தைப் பெறும் இறைவனும் எந்த மனதில் எந்த அளவிற்கு பக்தி உண்டோ அந்த அளவிற்கேற்ப அருள் வடிவமாக இருப்பார்.நீர் எமது அழுக்குகளைப் போக்குவது போல் இறைவனும் எமது கன்ம தீய வினைகளை போக்குகிறார்.நீருக்குள் எந்த நிறத்தைப் போட்டாலும் அந்த நிறமாக மாறிவிடும் .எமது எண்ணத்தின் வண்ணத்தில் இறைவன் காட்சி கொடுப்பார்.

ஆகவே வேத சிவாகம மரபுகள் ஆலய வழிபாட்டில் மிகச் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டியவை.வேதங்கள் போற்றும் யாக வழிபாடு ஆகமங்கள் போற்றும் கும்ப வழிபாடு இவை இரண்டையும் இணைக்கும் தர்ப்பை போன்றவற்றின் மூலங்கள் வடமொழி சார்ந்த நூல்களே வெளிப்படுத்தியுள்ளன.அவற்றை அந்தஅந்த வழியில் பின்பற்றுவோமாக .

மொழிபெயர்ப்புகளை விளங்கி கொள்ளலாம்.மூலங்கள் மூலமாகவே பாவிக்கப் பட வேண்டும்.ஆலய வழிபாடு பரார்த்தபூஜைஅதாவது அனைத்து அடியார்களுக்கும் வேண்டி செய்யப்படும் பூஜை என்பதால் விதி முறைகள் சரியாக செயற்படுத்த வேண்டும் என்ற வகையில் தீட்சை செய்து .முப்புரிநூல் தரித்து ஆதிசைவராக இருக்கவேண்டும் என்ற ஆகம நியதிகள் மரபு வழியில் போற்றப்படும் வழக்கம் உண்டு.

நிறைவாக எல்லா பூஜைகளிலும் வீடுகளிலும் இறைவனுக்கு அல்லது மங்கலப் பொருளாக வெற்றிலை பாக்கு பழம் தேங்காய் என்பன பயன்படுத்துகிறோம் .இவற்றில் கூட அரிய தத்துவத்தை எமது சமயம் வைத்துள்ளது.வெற்றிலை கொழுந்து அதாவது மிக இளகிய பசுமையான நிலை அடுத்து பாக்கு இளமையான வலிமையான நிலை வாழைப் பழம் மிருதுவான பழுத்த நிலை எந்த நிலையில் நாம் இருந்தாலும் இறைவனை வழிபட வேண்டும்.வாழைப்பழம் வாழையடி வாழையாக எமது மரபு போற்றப்படவேண்டும்என்பதையும் .தேங்காய் நன்றிப் பொருள்.அவ்வையார் கூட நன்றி ஒருவர்க்கு செய்தால் அந்த நன்றியை தேங்காய் இளநீராக தருகிறது.என நன்றிக்கு அத்தாட்சியாக தேங்காயை குறிப்பிட்டார். இறைவனுக்கு நன்றி சொல்வதற்காக தேங்காயை பயன்படுத்துகிறோம்.ஆகவே இந்த மங்கலப் பொருட்களில் ஒன்றாகிய வாழைப்பழத்தில் ஊதுபத்தி ஏற்றி வைக்கும் பழக்கம் தவறாக வந்து விட்டது.அது உணவுப்பொருள் நிவேதனப் பொருள் அதில் ஊதுபத்தி ஏற்றி வைத்து நாம் சாப்பிட மாட்டோம்.அக்காலத்தில் ஒருவர் ஊதுபத்தி குத்தி வைக்க ஒன்றும் இல்லாத இடத்தில் வாழைப்பழத்தில் குத்தி வைக்க அது மரபாக வருவது எவ்வளவு தவறு.ஆகவே தற்காலத்தில் பல உலோக சாதனங்கள் ஊதுபத்தி தாங்க வந்துள்ளன அவற்றைப் பயன்படுத்துவோம்.இவ்வாறு பல நல்ல தத்துவ குறிப்புகளுடன் ஆலய வழிபாடு வேத சிவாகம மரபுப்படி நடைபெற வழி தொடர்வோம்

மூவகை தீட்சை செய்து முப்புரி நூல் தரித்து
ஆவகை ஐந்திேனாடுஆகம அருங்கடன் ஆற்றி
பூவகை கையில் கொண்டு புனிதர் பதம் போற்றி
நாவகை வேதம் நவில நாடு நலம் பெறுமே

உ

# ஆலய வழிபாட்டில் காலம், இடம், அளவு

# (சிவாகமங்களின் சான்று)

**சிவஸ்ரீ. இரகு கமலநாதக்குருக்கள் BA (Hons)**

**பிரதமகுரு, என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம், இலண்டன்**

நாம் செய்யும் எந்த ஒரு விடயமும் உரிய காலத்தில் உரிய இடத்தில் செய்யப்படும் போது தான் அது சரியான பலனைத் தரும் என்பதனை " பருவத்தே பயிர் செய்" எனும் முதுமொழி உணர்த்துவதாகும். அன்றாட வாழ்வில் நாம் ஓர் அளவு இவ்விடயத்தை கைக்கொண்ட போதும் அதனுடைய முக்கியத்துவம் பலருக்கு புரிவதில்லை அல்லது அறிந்திருக்கவில்லை எனலாம். விஞ்ஞான அறிவியலின் படி ஏற்றுக்கொள்ளப்பட்ட வானியலலோடு தொடர்புடைய சோதிட சாஸ்திர கருத்துக்கள் பல சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டவை. சிவாகமங்கள் இந்துக்களின் புனித நூல் தெய்வீகத்தன்மை பொருந்தியது. எனவே சிவாகமங்கள் கூறும் காலமும் இடமும் அளவும் பற்றிய சிந்தனை இங்கு தரப்படுகின்றது.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்

ஞானத்தில் மாணப் பெரிது". என்கிறார் வள்ளுவர்

ஒரு மனிதனால் எக்காரியமும் காலத்தினை அறிந்து செய்யுமிடத்து அக்காரியத்தின் சிறப்பு பற்றி கூறுகின்றார். ஓர் அனுபவம் வாய்ந்த விவசாயி பருவ காலங்களுக்கு ஏற்ப விவசாயம் செய்வான். விவசாயியின் முயற்சி விதையின் தன்மை, பசளை, நீரின் தன்மை என்பன ஒருங்கே உரிய காலத்தில் இணையுமிடத்து உரிய பலனைப் பெறுகிறது.

சிறிய உதவியையும் பெரிதாகக் காட்டும் இயல்பு காலத்திற்கு உண்டு. இதுபோலவே சமய கிரியைகளின் போது சரியான காலத்தையும் நல்லிடத்திலும் செய்யுமிடத்து நல்ல பலனை பெறலாம் என்று சோதிட நூல்களும் சிவாகமங்களும் சிறப்பாக கூறுகின்றன.

சூரிய காந்த கல்லினூடாக வருகின்ற சூரிய ஒளிக்கு எரிக்கும் சக்தி உண்டு. ஆனால் சரியான குவிய தூரத்தில் வைக்கும் போதுதான் பஞ்சு எரிகின்றது. இந்நிகழ்வை காலை மாலை நேரங்களை விட மதிய நேரத்தில் செய்வதால் பஞ்சு எரியும். இங்கு காலமும் இடமும் மிக அவசியமாகின்றது. ஆலயம் வழிபாடோ, அல்லது இல்லறக்கிரியையாகினும் சங்கல்பம் மிக மிக அவசியமாகும். சங்கல்பம் செய்வதன் நோக்கம் கிரியை நிகழும் இடம், காலம், அளவு என்பதனை உறுதிபடுத்தல் ஆகும். எந்தக்காரணத்திற்காக, எந்தந்த கிரியைகள் எக்காலத்தில் செய்ய வேண்டும் எங்கு செய்கின்றோம் என்பதனை கூறி மன உறுதியுடன் ஈடுபடல் சங்கல்பம் ஆகும்.

"ஆத்ய பிரம்மணஹ த்விதிய பரார்த்தே" எனத் தொடங்கும் சங்கல்பப் பகுதியில் முதல் பிரம்மாவின் இரண்டாவது பரார்த்தத்தில் ஸ்வேத வராகரின் கல்பத்தில் வைவஸ்வத மனுவின் காலத்தில் ௨௮ பகுதியில் கலியுகத்தில் முதல் கால் பகுதியில் எனக்

கூறுகின்றார்கள். தொடர்ந்து காலம் நிர்ணயிக்கப்படுகின்றது. வருடம், அயனம், மாதம், வாரம், பட்சம், திதி, யோகம், கரணம், நட்சத்திரம் என்பன நிர்ணயிக்கப்படுகின்றது. சாதாரணமாக ஒரு இடத்திற்கு போய் சேர வேண்டுமோ அல்லது கடிதம் அனுப்புவதாக இருந்தாலோ அல்லது மின்னஞ்சல் அனுப்புவதாக இருந்தாலும் முகவரி மிக அவசியம். பெயர், வீட்டு இலக்கம், தெருப் பெயர், அப்பிரதேச பெயர், அப்பிரதேசத்தின் குறியீட்டு எண் என்பது அவசியம். இது போன்றதே வழிபாட்டிலும் கைக்கொள்ளப்படுகின்றது.

வருடம் பற்றிக் குறிப்பிடுகையில் 60 வருடங்களுள் விபவ முதல் அட்சய வருடம் வரையுள்ள வருடங்களும் நடப்பாண்டு, நடப்பு மாதம், சூரியனை சுற்றி வருகின்ற பாதையைக் குறிக்கும் அயனங்கள், மாதந்தோறும் வரும் பட்ச (சுக்ல, கிருஷ்ண) பற்றிய விபரங்கள் நாட்கள் ஆகிய பற்றி விரிவாக சங்கல்பத்தில் கூறுகின்றோம் இவற்றோடு யோகமும் கரணமும் கூறப்படுகின்றது.

கிரியை செய்யும் போது உள்ள கால நேரங்கள் சுபமாக அமைய வேண்டியும் "சுபயோக சுபகரண" என்னும் தற்செயலாக தோஷம் ஏற்படுமிடத்து அவை சிவனருளாக சிவமயமாக அமைய வேண்கின்றோம்.

"திதி சிவஸ் ததாவாரோ நட்சத்திர சிவஏவச

யோகஸ்ச கரணம் சைவ சர்வம் சிவமயம் ஜகதி"

எனவும் தர்ப்பை அணியும் போது

அதுவே லகனம் நல்ல தினம் நற்பலனை கொடுக்கும் சுபவேளை அதுவே சந்திரபலத்தாலும், சிவபலத்தாலும் நல்லதாக அமையப்படும் என பிரார்த்தனை செய்யப்படுகின்றது.

இக்காலத்தைக் குறித்து நிற்கும் இடம் பற்றி ஆராய்கையில் நாம் எங்கே எப்போது செய்கின்றோம் என்பதனை அடுத்து வரும் பகுதியாகவும், ஏழாம் வேற்றுமையில் அமைந்துள்ளதைக் காணலாம். உதாரணம் "ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரத கண்டே" என வரும்பகுதி ஒருகாலத்தில் இப்பூமி அனைத்தும் ஒரே கண்டமாக இருக்கின்றது என்றும் அதனால்தான் மேருமலையை கொண்டு அதற்கு தெற்காக உள்ள கண்டத்தை பரதகண்டம் என கூறப்படுகின்றது. இப்போ உலகம் ஐந்துகண்டமாக உள்ளதால் அவ்வவ் கண்டங்களையும் நாடுகளையும் பிரதேசங்களையும் குறிப்பீடப்படுகின்றது.

நித்திய கர்மா எனப்படும், காலையில் எழுந்து இரவு நித்திரை செய்யவுள்ள செயல்பாடுகளை காமிகாகமம் ௨9வது ஸ்நான விதி படலத்தில் விரிவாக காணலாம். பல் துளக்குதல் அதற்கான குச்சி வகைகள் மற்றும் ஸ்நான வகைகளைக் கூறி சந்தியாவந்தனம் செய்து சிவ வழிபாடு செய்யும் காலம் பற்றி விரிவாக கூறுகின்றது.

பத்தாவது படலமாக நிமித்த பரீட்சாவிதி அமைகிறது. சோதிடத்தின் ஓரங்கமாக சகுன சாஸ்திரம் இங்கு விவரிக்கப்படுகிறது. "முதலில் காலத்தைப் பரீட்சித்து அதன் பின் சகுனங்களை ஆராய்ந்து கருமங்களைச் செய்ய வேண்டும்" என இப்படலம் கூறுகிறது.

பூர்வ காரணாகமத்தில் மூன்றாவதாக அமையும் வாஸ்து விஞ்ஞான படலத்தில் "காலத்தையும் பூமியையும் முதலில் பரீட்சித்து தேர்ந்தெடுத்து உழுத பின் வாஸ்து முறைப்படி பதவின்யாசம் செய்ய வேண்டும்" என்று கூறுகிறது. அடுத்து உத்தராயண காலம் சிறப்பானது என்றும் மாசி, மார்கழி இரண்டு மாதங்களும் விலக்கப்பட வேண்டும்" எனவும் கூறுகிறது. அளவிடுதல் சம்பந்தமாகவும் அளவுகோல் சம்பந்தமாகவும் மிக நுணுக்கமான சில விபரங்களும் நூலடித்தல் பற்றிய செய்திகளும் இப்படலத்தில் காணலாம். மேலும் லிங்க லட்சணம், பிரதிமாலட்சணம், தசதாலம் பற்றிய செய்திகளில் அளவுப் பிரமாணங்களைக் காணலாம்.

உத்தரகாரணாகமத்தில் காலம் இடம் பற்றிய பல செய்திகள் உள்ளன. ஆலயம் அமைக்கும் இடம் பற்றிய செய்திகளை விரிவாகக் காணலாம். மேலும் காலத்தின் செய்தி பற்றி " சுக்கில, விரோதி, மன்மத, கீலக, விச, துர்முகி ஆகிய வருடங்களும் ஆடி, மார்கழி, மாசி, புரட்டாதி ஆகிய மாதங்களும் பிரதிட்டைக்கு விலக்கப்பட வேண்டும். இதே போல நட்சத்திரங்கள், வாரங்கள் சம்பந்தமாகவும் பலன்கள் தரப்பட்டுள்ளன. ஒரு கிரிகை ஆரம்பிக்கும் போது தேங்காய் உடைப்பது பற்றியும் அதன் சகுன பலன் பற்றியும் நெய்வேத்தியவிதிப் படலத்தில் நிவேதனப் பொருட்கள் தயாரிக்கும் பொழுது கவனிக்கப் பட வேண்டிய அளவுப் பிரமாணங்கள் வியப்பூட்டும் செய்தியாக அமைந்துள்ளது. "சிவனுக்குரிய நெய்வேத்திய அரிசியின் அளவு குருணி அதைவிடக் குறைவாக செய்யக்கூடாது. அவிசு தயாரிக்க இரண்டு நாழிகை சொல்லப்படுகிறது. சகல மூர்த்திகளுக்கும் நெய்வேத்தியம் இரண்டு நாழிக்கு அதிகமாக இருக்க வேண்டும்." எனக் காமிகாகமம் கூறுகிறது. பாயசம், சக்கரைப்பொங்கல், பருப்புப்பொங்கல், மஞ்சள் அன்னம், கறிச்சாதம், எள்ளோரை என்பவற்றை தயாரிக்கும் முறையும் அவற்றில் சேர்க்கப்படும் மிளகு, உப்பு முதலியவற்றின் அளவுகள் எல்லாம் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் அக்கினிகாரியம், பூஜைக்குரிய உபகரணங்கள், ஸ்னபனம் முதலியவற்றின் காலங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மகோற்சவம் மாதாந்த உற்சவங்கள் என்பனவும் விரத நியமங்கள், மந்திரஜெபங்கள் எவ்வெவ் காலங்களில் செய்யப்பட வேண்டும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

இவ்வாறு காலம், இடம், அளவுப்பிரமாணம் என்பன பற்றி சிவாகமங்களில் சிறப்பாகக் காணலாம். சிவாகமங்கள் கூறும் மரபிலும் சோதிட மரபிலும் மரபுகளின் அடிப்படையிலும் பின்பற்றும் விடயங்கள் இன்றளவும் காணலாம். ஆனால் விளக்கமில்லாத கண்மூடித்தனமான சில பின்பற்றல்களும் தவறான சில நடைமுறைகளும் நம்மிடையே இன்றும் காணப்படுகிறது. சிவாகமம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுமிடத்து இவற்றை சீர்செய்து கொள்ள முடியும் என்பது உயர்ந்த கருத்தாகும்.

ஓம்
சிவமயம்

# பெரிய புராணத்தில் சேக்கிழார் காட்டும் வாழ்க்கை நெறி

திரு.இ.குணசிங்கம்
தலைவர்
ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்
ஸ்ரோன்லி

சேக்கிழார் பெருமான் தான் அருளிச்செய்த பெரிய புராணத்தில் சமயமும் சமுதாயமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இயங்க வேண்டும் என்று எமக்கு தெரிவிக்கிறார். மேலும் சமயமும், சமுதாயமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாமல் தன் போக்கிலே இயங்குமாயின் அதனால் ஒன்றுக்கும் ஒரு பயனும் இல்லை என்கிறார். சமயத்தை சமுதாயத்தின் ஒரு அங்கமாவே கருத வேண்டும். சமுதாயம் சமய வளர்ச்சிக்கு ஆக்கமும், அதற்கு உரிய காவலும் தர வேண்டும். சமயம் சமூகத்தில் நல்லறங்களும், ஒழுக்கங்களும் சிறக்க ஒரு சிறந்த அரணாக அமைதல் மாண்புடையதாகும் என்கிறார் சேக்கிழார் பெருமான். சமயம் ஒவ்வொரு தனி மனிதனையும் நல்வழிப்படுத்துவதின் மூலம் சமூக நலத்தை பேணி வளர்க்கிறது. சமயம் சமூகத்தில் இணைக்கம் வேண்டப் பாடுபடுவதைத் தவிர ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தி ஆள முயல்வதை சேக்கிழார் விரும்பவில்லை. சமூகத்தில் தனிமனிதன் மீது ஆதிக்கம் செலுத்தி ஆட்சி செய்யும் உரிமை சமய நெறியாளர்களுக்கு கூடாது என்பதில் அவர் திடமான கருத்துக் கொண்டிருந்தார்.

தன் கருத்துக்களை தகுந்த ஆதாரங்களுடன் அறியத்தந்தவர் சேக்கிழார் பெருமான். சேக்கிழார் வரலாற்றை அறிய உதவும் நூல் திருத்தொண்டர் புராண வரலாறு. திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர் சந்தானாசாரியர்களுள் ஒருவரான கொற்றவன்குடியில் வாழ்ந்த *உமாபதி சிவாச்சாரியார்*. இவர் மறைஞானசம்பந்த சிவாச்சாரியாரை தன் குருவாகப் கொண்டவர். தில்லையில் பிரமோற்சவ காலத்தில் ஏறத் தடைபட்ட கொடியை கொடிக்கவி பாடி ஏற்றியவர். இவர் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பற்றிய வரலாற்றை பாயிரம் உட்பட நூற்றுமூன்று செய்யுளாகப் பாடியுள்ளார். சோழ மன்னன் ஒருவன் குன்றத்தூர் பகுதியில் நாற்பத்து எண்ணாயிரம் வேளார் குடும்பங்களைக் குடியேற்றினான். தொண்டை நாட்டு வேளார் குடும்பங்களுள் ஒரு குடியினர் சேக்கிழார் மரபினர் என்று அழைக்கப்பட்டனர். இம்மரபில் வந்தவர் தான் சேக்கிழார் என்று அழைக்கப்படும் அருண்மொழித்தேவரும் அவர் தம்பி பாலாறாவாயரும். கல்விக் கேள்விகளில் சிறந்த அருள்மொழித்தேவரை சோழமன்னன் அழைத்து அவரை தன் முதன்மந்திரியாக்கிக் கொண்டான். சேக்கிழார் பெருமான் திருநாகேச்சுரம் என்னும் திருத்தலத்தில் எழுந்திருளிய சிவன்பால் அளவிளா பக்தி கொண்டவர். அங்கு சிவனுக்கு ஆலயம் எழுப்பி எம்பெருமானுக்கு, 'நாகேச்சுவரர்' என்று திருநாமம் சூட்டினார்.

வாழ்க்கையில் எதிர்பார்ப்புக்களும் அதனால் எழும் விமர்சனமே இலக்கியம் என்பர் ஆன்றோர். பண்பண்ட கவிஞர்கள் படைக்கும் இலக்கியத்தில் காலத்தின் சாயலும், சமுதாய வாழ்வியல் நிலைகளும் இடம்பெறுதல் இயல்பான ஒன்று. அவ்வகையில் சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் அவர் தரும் வரலாற்றுகளில் அக்கால சமுதாய நிலையினையும் வாழ்வியல் நெறிகளையும், நாம் காணலாம். நாயன்மார்களின் வரலாறுகளைச் திரட்ட அவர் நடந்த பாதையை நாம் கற்பனையிலும் எட்டிப்பார்க்க முடியாதவொன்று. இங்கே சமுதாயம் நன்றாக வாழவேண்டும் என்ற தொலைநோக்குடையவர் சேக்கிழார் பெருமான். *"சமுதாயம் நன்கு வாழவேண்டுமானால் வாழ்வில் குறிக்கோள் வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை கொலை வாழ்வு"* என்கிறார் திருமங்கை ஆழ்வார். நல்ல சமுதாயம் உருவாக இம்மைக்கும், மறுமைக்கும் இன்பம் பயக்கவல்ல சிவகதைகள் பல இருக்க, நாட்டை ஆளும் மன்னன் அவக்கதைகளைக் கேட்டு நாட்டைப் பரிபாலனம் செய்வதை சேக்கிழார் சுவாமிகள் விரும்பவில்லை. சமணத்துறவி "திருத்தக்க தேவனால்" இயற்றப்பட்ட *சீவகசிந்தாமணி* என்னும் பெரும் காப்பியத்தை மன்னர்பிரான் தினமும் கேட்பதை அவர் விரும்பவில்லை.

இதனால் வேதனையுற்ற சேக்கிழார் பெருமான் தருணம் கிட்டும்பொழுதெல்லாம் சோழ மன்னனுக்கு நாயன்மார்களின் அருள் வரலாறுகளையும் அவைகள் நடந்த முறையையும் எடுத்துரைத்தார். திருநாரையூரில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பிகள் சிவன் அடியார்கள் வரலாற்றைப் பற்றிப் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி பற்றியும், அந்நூல் பெருமைகளை உணர்ந்த திருமுறைகண்ட முதலாம் இராஜராஜசோழன் கேட்டு மகிழ்ந்ததையும் மன்னனுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மங்கையொருபாகன் திருவிளையாடல்களையும், அவரின் திருவருளால் பேறடைந்த நாயன்மாரின் சிறப்புக்களையும் அவர்களின் தொண்டுகளையும் கேட்டு நெஞ்சம் தழைத்த மன்னன் அவர் தம்பெருமைகளையும் பற்றிய நூல் ஒன்றை இயற்றும்படி சேக்கிழார் பெருமானை கேட்டுக் கொண்டார். மன்னன் இட்ட பணியை இனிதே ஆரம்பிக்கவெண்ணி சேக்கிழார் பெருமான் சிதம்பரம் சென்று சிற்றம்பலவன் திருமுன் நின்று உள்ளமுருக வழிபட்டார். எம்பெருமானே நாயன்மார்களின் திருக்காப்பியத்தைப் பாட முதல் அடி எடுத்துத் தருமாறு வேண்டினார். சிவனருளால் "உலகமெல்லாம்"

என்ற அசரீரிப் பேரொலி சிற்றம்பலத்திலிருந்து அனைவர் செவிகளையும் நிறைத்தது. அந்த திருச் சொல்லே தான் இயற்றும் காப்பியத்திற்கு அடியாகப் கொண்டு,

" உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்"

தில்லை அம்பலவாணனைப் போற்றி, திருத்தொண்டர் புராணம் என்னும் அருளியல் காப்பி யத்தை இயற்றினார் சேக்கிழார் பெருமான். '*செயற்கரிய செய்வாரைப் பெரியர்*' என்ற திருவள்ளுவரின் கூற்றின்படி இப்புராணம் '*பெரியர் புராணம்*' என்று அருளார்களால் போற்றப்பட்டு பின்பு நாளடைவில் பெரிய புராணம் என்று மருவியது என்பார்.

அறுபத்திமூன்று அடியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூற வந்த சேக்கிழார் பெருமான் அவர்கள் வாழ்ந்த இடங்களை தேடிக் கண்டுபிடிப்பதில் முனைகிறார். தேவார திருமுறைகளை தந்த சிதம்பரத்தை நினைவுகூறுகிறார். ஆம் திருவாசகம் தந்த மாணிக்கவாசகரை தந்தது சிதம்பரம். சைவசிந்தாந்த சாத்திரங்களை தந்த ஒருவரான உமாபதி சிவாச்சாரியாரை பெருமையை சைவப்பெருமக்கள் வியக்கும்படி செய்தது சிதம்பரத்தில் ஆடும் தில்லைக்கூத்தன். திருவிசைப்பா பாடிய சேந்தனார், திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர் முதலியோரை ஏற்று வரவேற்ற சிதம்பரத்தில் நித்திய தாண்டமாடும் நடராஜாப் பெருமானை தரிசித்துவிட்டு தன் தலயாத்திரையை தொடங்கினார் சேக்கிழார் பெருமான். சைவ மக்கள் தொண்டர் தம் பெருமை பரவவும், தமிழ் தாய்க்கு நல்லதொரு அணிகலன் அணியவும் புறப்பட்டவர் சேக்கிழார் பெருமான். சேக்கிழார் பெருமானின் கவித்துவ பெருமையை உலகறியச் செய்தது அவர் செய்த திருத்தொண்டர் புராணம் அன்றோ. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டர் தொகையன்றோ சேக்கிழார் சிறப்புக்குக் காரணம். இதை சேக்கிழார் பெருமான் "மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தர" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளை நினைவு கூறுகிறார்.

பரவையைக் கண்டு மோகித்தார் சுந்தரர். பரவையோ கணிகையர் குலத்தில் தோன்றியவள். அவளை திருமணம் செய்ய எண்ணிய சுந்தரரின் ஆசையை நிறைவேற்ற, இறைவனே தாமே சுந்தரரின் தோழர் என்று பிரகடனப்படுத்தி நம்பியும், பரவையும் நல்ல ஜோடி என்று திருவாரூர் மக்கள் வியக்கும்படி திருமணமும் செய்துவைத்தார். சராசரி ஆணுக்குப் பெண் போகம் என்பது உடலின்பம். ஆனால் இறைநெறி நிற்கும் அரனடியாருக்கு அது உடலின்பம் அன்று; யோகம். ஆரூரர் கொண்ட போகமும் அதுவே. இங்கே இறைவன் ஒரு புரட்சித் திருமணத்தை செய்து வைக்கிறான்.

" பொன்னாரும் முலை ஓங்கல் புணர்குவடே சார்வாக
பண்ணாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினான்"

என்ற சேக்கிழார் தம் வாக்கை பெரிய புராணத்தில் கோடிட்டு காட்டுகிறார். தம்பிரான் தோழனை தில்லைக்கு வரும்படி எம் பெருமான் அழைக்கிறார். தில்லையை அடைந்த தம்பிரான் தோழர் அங்கிருந்த சிவனடியார் கூட்டத்தைக் கண்டு பக்தி பரவசமாகி

" இவர்களுக்கு அடியவனாகும் நாள் எந்நாளோ"

என்று மனம் வெதும்புகிறார். இறைவன் திருமுன் சென்றார். இப்பொழுதும் இவரின் பரவசத்தை உணர்ந்த உமையவள் பங்கினன், மீண்டும் துணைக்கு வருகிறார். அவர் தம்பிரான் தோழர் அல்லவா, ஆம் மீண்டும் அவரே சுந்தருக்கு அடியெடுத்து

" தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்"

கொடுக்க ஈசன் அருளால் வந்த, ஈசன் அருள் பெற்ற சிவனடியார் பற்றி செந்தமிழ் பயனாய் வந்த திருத் தொண்டத்தொகை பிறந்தது. சொல்லற்கரிய தொண்டர்தம் பெருமையை உலகறிந்தற்கு இதுவே காரணமாயிற்று. இதை சேக்கிழார் பெருமானும்

" தம்பிரான் தோழரவர் மொழிந்த தமிழ் முறையே
ஏம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்த லுறுகின்றேன்"

என்று அருளிச் செய்கிறார். மேலும் தில்லைக்கூத்தன் முன் மனம் ஒன்றி நிற்கும் சுந்தரரை எண்ணினார். ஈசன் அருளால் சேக்கிழார் திருவாயினின்று கவிதை பிறந்தது. அவர் நின்ற நிலையை அழகாக எடுத்தியம்புகிறார் பின்வரும் பாடலில்

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்

சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலந்தார்"

மேலும் பின்வரும் பாடலில் வன்றொண்டர் கூறியதாக தம் கருத்தை பதிவு செய்கிறார் சேக்கிழார் பெருமான்.

"தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமும் ஆகும்
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியத்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்"

இப்படி வன்றொண்டர் பாடிய திருப்பதிகம் கிடைக்கவில்லை. சேக்கிழார் தம்பணியில் ஆளுடைய பிள்ளையும், அப்பர் சுவாமிகள், காரைக்கால் அம்மையார் போன்ற சைவம் தழைத்தோங்க நின்ற பெரியோரை நிலைநிறுத்துகிறார்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூதபரம் பரைபொலிய புனிதவாய் மலர்தழுத"

என்று சேக்கிழார் அருளிச் செய்வதிலிருந்து, சைவத்தின் வெற்றி தமிழ்ப்பண்பாட்டின் வெற்றியே என்பது வெளிப்படையாக உணர்த்தப்படும் இடம் திருஞானசம்பந்தர் புராணம்.
" *வேதம் நான்கினும் மெய்பொருளாவது*" நமச்சிவாய என்கிறார் ஆளுடைபிள்ளையார்.

"மந்திர நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓதிய செம்மை வேதியருக்கு
அந்தியின் மந்திரம் அஞ்செ ழுத்துமே"

என்னும் பலசமயக் கோளரி, தான் அருளிச்செய்த தேவாரங்களில் 22 வகைப் பண்களை அமைத்துப் பாடியுள்ளார். தமிழ் முரசு கொட்டித், தமிழ்க்கொடி ஏந்தித் தமிழ்க் கவிதையால் தமிழ்க் கடவுளைப் பாடி, தூங்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்பிய வீரத்தமிழர் ஒருவர் உண்டு என்றால் அவர் ஞானசம்பந்தரல்லாமல் வேறு யார்? வேற்றவர் ஆட்சியால் வறுமையும், வெறுமையும் கண்டு அல்லற்பட்ட தமிழரை வீறுகொண்டு எழச்செய்தவர் தலைமகனாகி நின்ற ஞானசம்பந்தன், காழி வேந்தன்று தம்மையை கூறும் அவர் அன்றும் இன்றும், இனிவரப் போகும் ஒவ்வொரு தமிழர் உள்ளத்திலும் ஆட்சிசெய்வார் என்பதில் ஐயமில்லை. அன்று ஞானசம்பந்தர் இத்தமிழ் இனத்தைக் காப்பாற்றவில்லையானால், இன்று தமிழர் என்று கூறிக்கொள்ள ஓர் இனமே இல்லாமல் வீடற்றுப் போயிருக்கும். ஆகவே காழிவேந்தர் வரலாற்றிலும் கவிதைகளிலும் மூழ்கித் திளைத்த வன்றொண்டர், தமிழர் அல்லாத ஏனையவரைத் தம் திருத்தொண்டர் தொகையில் குறிப்பிடாததில் வியப்பு இல்லை. சைவமும் தமிழும் செழிக்கும் விதமாக மக்களிடையே சென்று சைவக்கொள்ளைகளைப் பக்தி இயக்கத்தின் மறுமலர்ச்சி மூலமாக வளர்த்தவர் தென்னகத்தின் முதல் தமிழ்த்தலைவன் அருந்தமிழ் ஞானசம்பந்தன்.

பிறப்பில் அந்தணராகிய அம்மையின் ஞானப்பாலை உண்ட திருஞானசம்பந்தரை ஒருமுறை தன்னும், " ஐயர்" என்று பாடாத சேக்கிழார் பெருமான் மற்றொரு புதுமையையும் தன் பெரிய புராணத்தில் செய்துள்ளார். பிறப்பால் ஐயராகிய திருஞானசம்பந்தர், "ஹரிஜனர்" ஆகிய, "திருநீலகண்ட யாழ்பாணரை" மூன்று முறை, "ஐயரே" என்று அழைக்குமாறு செய்கிறார், அது மட்டுமல்லாமல் தில்லைவாழ் அந்தணராகிய பெருமக்கள் திருநாளைப்போவாரை (நந்தனாரை) "ஐயரே" என்று அழைக்குமாறு தன் காப்பியத்தில் பாடிச்செல்கிறார். தமிழ் மண்ணில் பிறந்தவர்கள், இறைவன் பால் மாறா அன்பு பூண்டவர்கள். யாராக இருப்பினும் அவர்கள் யாவரும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், வேறுபாடற்றவர்கள், ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தன் கருத்தைப் தான் இயற்றிய பெரியர் புராணத்தில் பதிவு செய்து நம் மனத்தில் அதைப் பதியுமாறு செய்துள்ளார் சேக்கிழார் பெருமான்.

திருநாவுக்கரசு சுவாமிகள் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர், ஆனால் சேக்கிழாரோ பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கால வேறுபாடு கலாச்சாரம் பண்பாடுகள் இவற்றால் தமிழகம் மாறுபட்டிருந்தாலும், பக்தியோடு கலந்த கற்பனைத் திறத்தால் எம் மனக்கண்முன் அவரை நிறுத்துகிறார். திருநாவுக்கரசர் பெருமானை அவர் நேரடியாகப் காணவில்லை. ஆனால் அப்பெருமான் நடந்து வரும் காட்சியை இந்த நூற்றாண்டில் வாழும் நாம்கூட அவரை நேரில் காண்பவர் போல அவர் தம் பாடல்களில் சித்தரிக்கிறார்.

"தூயவெண்ணீறு துதைத்தபொன்
மேனியுந் தாழ்வடமும்,
நாயகன் சேவடி தைவருஞ்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி
கண்ணும், பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே."

என்று உழவாரப் திருப்பணி செய்யும் அப்பர் பெருமானை மேலும் அழகாக வருணிந்து தனக்கு அவர்மேல் உள்ள பக்தியை கூறாமலே கூறிச்செல்கிறார்,

" மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவும், மதுர வாக்கில்
சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும், செம்பொன் தாளே
சார்வான திருமனமும், உழவாரத்
திருப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரயச் செல்வார்"

இப்படி பக்திச்சுவை சொட்டப்பாடும் சேக்கிழார் பெருமானின் கவித்திறத்தால் இந்த நூற்றாண்டில் வாழும் நாமும் அவரைக் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் நாவுக்கரசரை நடுநிலை தவறிய மகேந்திரப்பல்லவன் சமணர்களது சொற்கேட்டு விசாரணை இன்றிப் பலவாறு துன்புறுத்தினான். பின்பு உண்மையை உணர்ந்த பல்லவ மன்னன் சமணர்கள் வாழ்ந்த பள்ளிகளையும், பாளிகைகளையும் தகர்த்து, அக்கற்களைக் கொண்டு சிவனார்க்கு '*குணபரவீச்சரம்*' என்னும் திருக்கோயிலை அமைத்து வழிபட்டான். இங்கே ஒர் உண்மையை சேக்கிழார் பெருமான் நம் மனக்கண் முன் நிறுத்துகிறார். அப்பர் பெருமான் தீமையை எதிர்க்கவில்லை. மாறாக இறைவன்பால் மனம் ஒன்றி நின்றார். இவர் தீமையினின்றும் காக்கப்பட்டார். தீமை செய்த மன்னனும் திருந்தினான். களங்கம் இல்லாத தூய மனத்தோடு வருவனவற்றை இறைவன் பால் ஒன்றி நின்றால் எற்படும் பயன் இதுவென்பதை திருநாவுக்கரசர் எமக்கு தெளிவுபடுத்துகிறார்.

சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணத்தில் அறுபத்துமூன்று அடியார்களது வாழ்க்கை வரலாற்றை பதிவு செய்துள்ளார். இவர்கள் அனைவரும் ஒரு காலத்திலோ ஒரு இடத்திலோ வாழவில்லை, ஒரு வகையான தொழிலையும் செய்யவில்லை. எனினும் இவர்கள் அனைவரினதும் வாழ்க்கை வரலாறுகள் சேக்கிழார் பாடிய பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளது ஏன்? பல்வேறு இடங்களில் பல்வேறு காலங்களில் பல்வேறு தொழில்களைச் செய்த இவர்கள் அனைவரினதும் வாழ்வில் ஒரு பொதுத் தன்மையுண்டு. இப் பொதுத்தன்மை காரணமாகவே இவர்கள் அனைவரும் அடியவர்கள் என்ற ஒரு பொதுப்பெயரால் அழைக்கப்பட்டனர். தான் பெற்ற மகனை அரிந்து கறி சமைத்துப் போட்டார் அப்பர் அடிகளுக்கு. மற்றொருவர் இருந்த இடத்தில் இருந்து கொண்டு "நம்பியாரூரர்" என்ற திருநாமத்தை உச்சரித்தபடியே இருக்கிறார் ஒருவர். இவர்கள் இருவரும் ஒரே வீடுபேறு பெற்றார்கள். இது எப்படி முடிந்தது. அடியார்கள் வாழ்க்கை முழுவதும் இடம் பெறும் பொதுத்தன்மை இதுதான். இதைத் தான் நாம் அவர்கள் வாழ்க்கையில் கொண்ட இலட்சியம், அல்லது குறிக்கோள் என்று நாம் கூறுகிறோம்.

இறுதியாக சமயம் ஒவ்வொரு தனி மனிதனையும் நல்வழிப்படுத்துவன் வழி சமூ நலத்தை பேணி வளர்க்கிறது. சமய – சமூக நல் இணக்கம் வேண்டுமென்று கருதினாலும் சேக்கிழார் பெருமான் அவை ஒன்றை ஒன்று ஆட்சி செய்வதை விரும்பவில்லை. தனிமனிதன் மீது ஆதிக்கம் செய்யும் உரிமை ஆட்சியாளருக்குக் கூடாது என்பதிலும் அவர் உறுதியான கொள்கையை கடைப்பிடித்தார். மனுநீதி கண்ட வேந்தனை, அவர் உலகில் உயிர் வாழும் உயிர்களுக்கெல்லாம் தலைவன் என்று கூறாமல்,

" மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கு எல்லாம்
கண்ணும் ஆவியுமாம் பெருங்காவலன்"

என்னும் தன் தன் கருத்தை மனுநீதி கண்ட சோழன் மேல் ஏற்றிப் பதிக்கிறார். மேலும் அவன் கண்கள் வழியாகவே சமூகம் யாவற்றையும் காணும் உண்மையை, அவனை கண் போன்றவன் என்கிறார். அவன் நாடாண்ட திறத்தை கூறவந்த வந்த சேக்கிழார் பெருமான்,

"அறம் பொருள் இன்பமான அறநெறி வழாமல் புல்லி
மறம் கடிந்து அரசர் போற்ற வையகம் காக்கும்" என்கிறார்

மேலும் மனுநீதி கண்ட சோழனை தன்வாயிலாக

"மாநிலங் காவலன் ஆவான் மன்உயிர் காக்கும் காலை
தான் அதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்ளவரால் உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து ஆறம் காப்பான் அல்லனோ"

மக்களைக் காக்கும் காவலன் எப்படி இருக்கவேண்டும் என்பதை எம்கண் நிறுத்துகிறார். உலக வரலாறுகளை உற்றுநோக்கி மேலே தரப்பட்ட ஐந்து காவலில் ஒன்று குறைந்தால் உயிரினங்களுக்கு எற்படும் பேரழிவுகளை சேக்கிழார் பெருமான் பதிவு செய்துள்ளார். இப்பாடலின் வாயிலாக ஒரு குலம், ஓர் இனம் என இவற்றின் நீதி நூல்களை அறிஞர் போற்றல் வேண்டும். ஒரு குற்றம் புரிந்த ஒருவனுக்கு ஒரு தண்டனை, அதே குற்றத்தை செய்த ஒருவனுக்கு அவன் பிறந்த குலத்தின் உயர்ச்சி காரணமாக இல்லை. அது இன்றும் நிலவுவதை நாம் திரைப்படமூலமாக காணக்கூடியதாகவுள்ளது. அதை சேக்கிழார் பெருமான் வெறுத்தார். இன்றைய காலக்கட்டத்தில் இவை நடைபெறும் பொழுது சேக்கிழார் வாழ்ந்த பன்னிரண்டாம் நூற்றாட்டில் இவை எப்படி இருந்திருக்கும் என்பதை நாம் உணரக்கூடியதாகவுள்ளது. ஆட்சித் தலைவன் நீதி வழங்கும்போது உறவு, நட்பு என்று பார்த்தல் அறமன்று. அறம் தன் பாதையில் பயணிப்பதற்குத் தடை பயக்கும் அதிகாரம் ஆட்சியாளருக்கு இருக்கப் கூடாது என்பதை பெரிய புராணத்தில் மூலம் சேக்கிழார் தன் குறிக்கோளை பதிவு செய்துள்ளார்.

எனவே தமிழ் மொழியும், தமிழ்ப்பண்பாடும் புலம்பெயர்ந்த மண்ணில் தழைத்திருக்கும் காலம் வரை சைவசமயம் நிலைபெற்று நிற்கும். தமிழர்களுக்கு, தமிழர் விழுமியங்களை, பண்பாடுகளை காலத்தால் அழியாது காக்கும் சைவ ஒன்றியமும், சைவ ஆலயங்களும் சிறப்பாக இயங்க அன்னை இராராஜேஸ்வரி அம்பாள் அருளை நாமும் யாசிப்போம்.

அன்புடன்
ஸ்ரீஇராஜராஜேஸ்வரி தேவஸ்தானம்
ஸ்ரோன்லி

# சைவாகமங்கள் கூறும் திருக்கோயில் உற்சவங்கள்

திரு.T.கணேசன்; புதுச்சேரி.

உத்ஸவங்கள் என்பன விழாக்கள்; அவை மக்களின் மனமகிழ்ச்சிக்காகவும், புத்துணர்ச்சிக்காகவும் கொண்டாடப்படுவன; ஏனெனில் மனிதனுடைய அடிப்படைத் தத்துவமான ஆன்மா ஆனந்தமயமானது என்றும், எல்லாச் சக்திகளும் பொருந்தியது என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. அவ்வாறு விழாக்களைத் தம்முள் கொண்டாடி மகிழ்ச்சியடைவதைக் காட்டிலும் தான் வணங்கிப் போற்றும் கடவுளைப் பலவிதமான கொண்டாட்டங்களுடன் மகிழ்விக்க ஆசைப்பட்டது மனிதனுடைய ஆன்மீக வளர்ச்சியே; அடுத்து, அதற்கும் மேலாக அவற்றை வீடுகளில் நிகழ்த்துவதைக் காட்டிலும் இறைவனின் உறைவிடமான ஆலயங்களில் நடாத்தி, மக்களை ஒன்றுகூட்டித் தானும் மனம் மகிழ்ந்து இறைவனையும் மகிழ்விக்கத் தொடங்கியது மனிதனின் இறைத்தன்மை வெளிப்பாடு எனக்கொள்ளலாம்.

அவ்வாறு நடத்தப்படும் உற்சவங்களும் பலவகையானவை; அவற்றை முறைப்படுத்திச் சடங்குகளை மேற்கொள்ளும் வழிகளை வகுத்துக் கொடுப்பன சைவாகமங்களாகும். இந்த வகை நூல்கள் எல்லாம்வல்ல சிவபெருமானால் இவ்வுலகத்தைத் தோற்றுவிக்கும் போது தேவர்களாகிய நந்தி, இந்திரன் முதலானோர்க்கும், ஸநகர், ஸநத்குமாரர் முதலான முனிவர்களுக்கும் அருளப்பட்டவை. பின்னர் அவர்கள் தங்களுடைய சீடர்களுக்கு அவற்றை உபதேசித்து அருளினர்.

இக்கட்டுரையில் சைவாகமங்கள் சிலவற்றுள் விளக்கிக் கூறப்படும் சில உற்சவங்களைப் பற்றி நாம் சிறிது ஆராய்வோம். ஆகமங்கள் பொதுவாகச் சிவபெருமானுக்குக் கோயில்களில் நடத்தப்படும் உற்சவங்களைப் பலவகையாகப் பிரிக்கின்றன. அவை தினசரி நடத்தப்படும் நித்யோத்ஸவம், பதினைந்து தினங்களுக்கொருமுறை நிகழ்த்தப்படும் ப§க்ஷ¡த்ஸவம், ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் மாஸோத்ஸவம், ஆண்டுக்கொருமுறை கொண்டாடப்படும் மஹோத்ஸவம் (பிரம்மோற்சவம்) முதலியன. பொதுவாகக் காமிகம், காரணம் முதலான மூலாகமங்களில் பலவிதமான உற்சவங்கள் விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. ஆயினும், ஒவ்வொரு ஆகமும் சில புதிய உற்சவங்களை நமக்குக் கூறுகின்றது; நமது கட்டுரையில் இதுவரை பதிப்பிக்கப்படாத சில சைவாகமங்களிலிருந்து உற்சவங்களைப் பற்றிய சில முக்கிய செய்திகளை நோக்குவோம்.

**அம்சுமதாகமம்:** மார்கசீர்ஷ மாதத்துக் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியன்று சிவபெருமானுக்குச் சிறப்புப் பூசைகள் செய்வது மிக்க நலம் பயக்கும் என அம்சுமதாகமம் கூறுகிறது. அவ்வாறே, நடராசப்பெருமானுக்குகந்ததான மார்கழி மாதத்தில் திருவாதிரை உற்சவத்தையும், நாட்டை ஆளும் அரசரின் நலனுக்காகவோ அல்லது ஒரு தனிமனிதரின் நலன் கருதியோ பத்ரபூஜை (pனSக்mனயுனன) என்னும் விசேஷ பூசையையும், பலவிதமான நறுமணம் மிக்க மலர்களையும், மற்றும் பழவகைகளையும் கொண்டு பெருமானுக்கு திங்கள் அல்லது வெள்ளிக் கிழமைகளிலோ, அல்லது நவமி திதியிலோ செய்யப்படும் சின்னபூஜையையும் (சுNள்ஜனmனயுனன) அம்சுமதாகமத்தில் நாம் காண்கிறோம்.

**யோகஜாகமம்:** இந்த ஆகமத்தில் சிவபெருமானுக்கு மஹோத்ஸவம் 16 தினங்களுக்குச் செய்யும் முறை விளக்கப்படுகிறது. பொதுவாக நடைமுறையில் தற்சமயம் 9 தினங்களுக்கு மஹோத்ஸவம் கொண்டாடப்படுகிறது. துவஜாரோஹணத்திற்கு அங்கமான விருஷயாகம் செய்வதற்கு ஸ்தண்டிலம் அமைக்கும் போது பல வேதமந்திரங்களை ஓதவேண்டுமென இவ்வாகமம் விதிக்கிறது. உற்சவம் நடைபெறும் நாட்களில் தினமும் ஆலயத்தைச் சுற்றி ஒவ்வொரு திசையிலும் ஆவாஹனம் செய்யப்பட்டுள்ள தேவதைகளுக்குப் பலியிடுதல், அதற்குத் தினமும் பலவிதமான உணவுவகைகள், அதற்கான மந்திரங்கள் ஆகியனவும் இங்குக் கூறப்படுகின்றன .

மேலும் உற்சவத்தின் பொழுது பெருமானுக்கு முன்னர் ருத்ரகணிகையர்களின் நாட்டியம், புஷ்பாஞ்ஜலி, அவ்வமயம் இசைக்கவேண்டிய ராகங்கள் முதலியனவும் இந்தப்படலத்தில் விரித்துக் கூறப்படுகின்றன. ருத்ரகணிகையர்களுக்குச் சிவதீ¨க்ஷ செய்விக்கும் முறையும் இங்குக் கூறப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் நடத்தப்படவேண்டிய கிருத்திகாதீபத் திருவிழாவும் அடுத்துக்

கூறப்படுகிறது. நடராசப்பெருமானுக்காக நிகழ்த்தப்படும் நடேசோத்ஸவத்தையும் யோகஜாகமத்தில் நாம் காணலாம்.

**சிந்த்யாகமம்:** சிந்தியாகமமென்னும் மூலாகமம் ஒவ்வொரு மாதமும் செய்ய வேண்டிய மாஸோத்ஸவத்தை விளக்கிக் கூறுகிறது. பூர்வ காரணாகமம், உத்தரகாரணாகமம், ஸ்வாயம்புவாகமம் ஆகிய வற்றிலும் இந்த உற்சவம் சிறப்பாக விரித்துரைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு ஒவ்வொரு மாதமும் சிவ பெருமானுக்கு ஒவ்வொருவிதமான சிறப்பு வழிபாடும், உற்சவமும் நடத்தப்படுவதை திருஞானசம்பந்தப் பெருமானின் திருமயிலைப் பதிகத்தினின்றும் நாம் நன்கு அறியலாம் . ஞானசம்பந்தப் பெருமான் தம் பதிகத்தில் ஐப்பசித் திருவோண உற்சவத்திலிருந்து தொடங்குகிறார்; மேற்கூறிய ஆகமங்க ளெல்லாம் மார்கழி மாதத்துத் திருவாதிரை உற்சவத்திலிருந்து தொடங்குகின்றன. மேலும், ஒவ்வொருமாதமும் சிவபெருமானுக்கு உற்சவசமயத்தில் சமர்ப்பிக்கவேண்டிய திரவியங்கள் குறித்து ஆகமங்களுக்குள் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சித்திரை முதல் நாள் (மேஷவிஷ¤), ஐப்பசி முதல் நாள் (துலாவிஷ¤), தைமாதம் முதல் நாள் (உத்தராயணம்) மற்றும் ஆடிமாதம் முதல் நாள் (தக்ஷிணாயனம்) ஆகிய நான்கு முக்கிய புண்ணிய தினங்களிலும் விஷ¤வாயன பூஜை என்னும் சிறப்பு உற்சவத்தை சிந்த்யாகமம் கூறுகிறது. பூஜை முடிவில் சிவபெருமான் திருவுருமுன்னர் விண்ணப்பிக்கவேண்டிய சிறிய ஸ்தோத்திரத்தையும் இவ்வாகமத்தில் நாம் காணலாம். இது ஒரு அரிய செய்தி.

சிவபெருமானைத் தேவியுடன் அலங்கரித்து திருக்குளத்திற்கோ, கடலுக்கோ எழுந்தருளச் செய்து, அங்கு மீன்களைப் பிடிக்கும் உற்சவத்தைக் (மத்ஸ்யலீலா) கொண்டாடும்படி இவ்வாகமம் கூறக் காண்கிறோம். அப்பொழுது பல இன்னிசைக் கருவிகளுடன் நாட்டியம் முதலான கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படவேண்டும். அவ்வாறே, மௌக்திக க்ரஹணம் -- முத்துக் குளித்தல்-- என்னும் உற்சவம் கடலில் நடத்தப்படவேண்டுமென்னும் விதியையும் இவ்வாகமத்தில் காண்கிறோம். அடுத்து, அச்சில் வராத மற்றொரு ஆகமமான ஸ்வாயம்புவாகமத்தைச் சிறிது நோக்குவோம்.

**ஸ்வாயம்புவாகமம்:** மாஸபூஜை அல்லது ஒவ்வொரு மாதமும் செய்யவேண்டிய சிறப்பு வழிபாட்டினையும் ஒரு படலம் வீதமாகப் பன்னிரண்டு படலங்களில் விரித்துரைக்கிறது. கம்பளத்தில் நெய்யைத் தோய்த்துப் பூசைகள் செய்து சிவலிங்கத்திருமேனியில் சார்த்துவது கிருதகம்பலபூஜை எனப்படுவது; இது மாகமாதத்திய சிறப்பு வழிபாடாகும். பால்குன மாதத்தில் பெரிய மண்பாண்டத்தில் தயிரை நிரப்பி, வழிபட்டு அதைப் பெருமானுக்கு நிவேதனம் செய்தல்; வைசாக மாதத்துக் கந்தபூஜையில் நறுமணமூட்டிய நீர் மற்றும் மணம் நிறைந்த மகிழம்பூ முதலிய மலர்களைப் பெருமானுக்கு அர்ப்பணித்தல், ஐப்பசியில் அன்னபூஜை; இப் பூஜையில் நிறைய அளவு சமைத்த சோற்றையும், காய்கனி களையும் சிவலிங்கத்திருமேனியில் சாற்றி அலங்கரிப்பது. இது தற்சமயம் அன்னாபிஷேகம் எனப்படுகின்றது. மேலும் அந்தந்த மாதத்து உற்சவத்தை நடத்தும் போது இசைக்கவேண்டிய ராகம், தாளம், நடனம், மற்றும் ஆலயத்தில் வரையவேண்டிய மண்டலங்கள் முதலியவற்றையும் சிறப்பாக ஸ்வாயம்புவாகமத்தில் நாம் காணலாம்.

விநாயகப்பெருமானுக்கு நிகழ்த்தப்படும் உற்சவத்தை ஒரு படலம் முழுதும் விரிவாக எடுத்துரைக்கிறது இவ்வாகமம்; கொடியேற்றம் (துவஜாரோஹணம்), பேரீதாடனம் முதலிய எல்லாக் கிரியைகளும் இங்குக் கூறப்படுகின்றன. மஹோற்சவத்தின் போது சிவ பெருமானை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாஹனத்தில் எழுந்தருளிவித்து ஊர்வலம் செல்வதுபோல் விநாயகப் பெரு மானையும் ஒவ்வொரு விதமான வாஹனத்தில் அலங்கரித்து எழுந்தருளுவிப்பதை இவ்வாகமம் கூறுகிறது .

ப்ரஸன்னயஜனம் என்னும் சிறப்புப் பூஜையை ஸ்வாயம்புவாகமம் சற்று விரித்துக் கூறுகிறது; பெரியம்மை முதலிய கொடுமையான நோய்களிலிருந்து மக்களைக் காப்பாற்றவும், அரசன் முதலா னோர்க்கு நன்மை பயக்கவும், பொதுவாக கிராமமக்களின் நலனுக்காகவும் இந்தச் சிறப்பு வழிபாடு செய்யப்படுகிறது. முந்தைய தினம் விநாயகப் பெருமானுக்கு இசை, நாட்டியம், பற்பல இசைக்கருவிகளுடன் கூடிய இன்னிசை ஆகியன அடங்கிய சிறப்பு வழிபாட்டுடன் இந்த வழிபாடு தொடங்குகிறது; பின்னர் ஆகமங்களில் கூறியவாறு ஐந்து ஆவரணங்களுடன் கூடிய சிவபெருமானுக்குச் சிறப்பு வழிபாடுகளை (பஞ்சாவரண பூஜை) நடத்தி அதன் பின்னர் மிக அதிக

அளவில் நறுமணம் மிக்க மலர்களும், வாசனைத் திரவியங்களும், பலவகையான உணவு களும் சிவபெருமானுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஐந்து ஆவர ணத்தில் ஒவ்வொரு தேவதைக்கும் அந்தந்த மந்திரங்களுடன் தனித்தனியாகப் பூஜித்து நிவேதனங்களை அளித்துப் பூஜை செய்யப்படுகிறது. முன்னர் ஸ்தண்டிலத்தில் அலங்கரித்துப் பூஜை செய்யப்பட்ட சிவகும்பம், வர்த்தனீ ஆகியவற்றைப் பரிசாரகர் தலையிலமர்த்திப் பிரதக்ஷிணம் செய்து சுவாமிக்குச் சிவகும்பத் தினின்றும் அம்பாளுக்கு வர்த்தனியினின்றும் நீரால் அபிஷேகம் செய்து பின்பு அலங்கரித்து தூபம், தீபம், சிறப்பு நிவேதனங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும். மஹோத்ஸவபடலம் சுமார் 400 சுலோகங்களுடையது; உத்ஸவங்களின் செய்முறை மிக விரிவாக இங்குக் கூறப்படுகிறது.

**விஜயாகமம்:**விஜயாகமமென்னும் மூலாகமம் துர்கையம்மனுக்கு நடத்தப்படும் மஹோத்ஸவத்தை மிக விரிவாகக் கூறுகிறது ; மேலும், தற்சமயம் நமக்குக் கிடைத்துள்ள இந்த ஆகமச்சுவடியிலும், கையெழுத்துப் பிரதியிலும் துர்கை வழிபாட்டைப் பற்றிய செய்திகள் மட்டுமே உள்ளன; ஒரு படலம் மட்டும் விநாயக உற்சவத்தையும், மற்றொன்று ஆருத்ரா உற்சவத்தையும் கூறுகின்றன. துர்கா உற்சவத்தின் ஒவ்வொரு சடங்கும் மிக நுணுக்கமாகவும் பிழை யின்றியும் விளக்கிக் கூறப்படுவது இங்கு நோக்கத்தக்கது. இவ் வாகமம் உற்சவத்தை (துர்கா உற்சவத்தை) உத்தமம், மத்தியமம், அதமம் என மூவகையாகப் பிரிக்கிறது :

அடுத்து, துவஜாரோஹணத்திற்காக நல்ல மரங்களைப் பரி சோதித்து அவற்றைக் கொண்டு துவஜஸ்தம்பம் செய்து அதன் மேல் துவஜத்தை ஏற்ற வேண்டும்; இதற்கு தாருஸங்கிரஹணம் என்று பெயர். இதற்குத் தகுந்த மரங்கள் எவையெனில் அவை பின்வருமாறு: துவஜாரோஹணத்திற்கு முன் அந்தக் கிராமமும், தேவியின் ஆலயமும் நன்கு சுத்தம் செய்யப்படவேண்டும் என்னும் விதியையும் நாம் இங்குக் காண்கிறோம். துவஜத்துணியில் துர்கையின் வாஹனமான ஸிம்ஹம் அழகாக வரையப்பட வேண்டும்; முன்னர்க் கூறிய வ்ருஷ யாகத்திற்குப் பதிலாக ஸிம்ஹயாகம் என்னும் சிறப்பு வழிபாடு செய்து, துவஜத்தை ஏற்றவேண்டும். பின்னர் பேரீ தாடனம் என்னும் பேரியை ஒலித்தல் சடங்கு நிறைவேற்றப்படவேண்டும். அதே சமயம் படஹத்வஜம், மத்தளம், சங்கம், வீணை, காஹளம், கொம்பு வாத்தியங்கள், தோல்வாத்தியங்கள் முதலிய மற்ற இசைக் கருவிகளும் ஒலிக்கப்படவேண்டும்.

அடுத்து ஒவ்வொரு நாளும் ஆலயத்தைச் சுற்றிப் பல தேவதை களுக்குச் சிறப்புப் பலி (பலி என்னும் வடமொழிச்சொல்லுக்குப் பூஜை என்பது பொருள்) செய்யவேண்டும். ஒன்பது சக்திகள், எட்டு துவஜதேவதைகள், ஒவ்வொரு திசைக்கும் எட்டுச் சக்திதேவதைகள் அடங்கிய குழுவீதம் பத்துத் திசைக்கும் பத்துக் குழுக்கள் ஆகியவற்றிற்குத் தினமும் பலியிடுதல் நடைபெற வேண்டும். ஒன்பது நாட்களில் ஒவ்வொரு நாளும் சிறப்பு வாஹனத்தில் சிவபெருமானுடன் கூடிய துர்காதேவியை அலங்கரித்து வீதிவலம் எழுந்தருளுவித்தல் கூறப்படுகிறது. ஒன்பதாம் நாள் ரதயாத்திரை; இதிலும் சிவபெருமானுடன் கூடிய துர்காதேவியின் திருவுருவத்தை அலங்கரித்து, எழுந்தருளச்செய்து, ரதத்தினுடைய நான்கு சக்கரங்களிலும் பல தேவதைகளை ஆவாஹனம் செய்துப் பூஜித்துப் பின்னர் வீதிவலம் வருதல் கூறப்படுகிறது.

ஆருத்ரா உற்சவத்தில் சிவபெருமானையும், துர்காதேவியையும் அலங்கரித்து ஊஞ்சலில் எழுந்தருளுவித்து, மணம் மிக்க மலர்களையும், பலவகை நிவேதனங்களையும் சமர்ப்பிப்பது இங்கு கூறப்படுகிறது. ஊஞ்சலில் ரதடோலா, சக்ரடோலா, வாஜீடோலா, ஸ்தம்படோலா, யுக்மடோலா எனப் பலவகையை இவ்வாகமம் கூறுகிறது. விஜயாகமத்தில் மேலும் நாம் ஜலக்ரீடை (க்ரீடா என்னும் வடசொல் விளையாட்டு எனப் பொருள்படும்) என்னும் உத்ஸ வத்தையும் காண்கிறோம்; தேவியுடன் கூடிய சிவபெருமான் திருவுருவத்தை அலங்கரித்துத் திருக்குளத்திற்கோ அல்லது கடலுக்கோ பக்தகணங்கள் புடைசூழ இன்னிசையுடன் எழுந்த ருளுவித்து தெய்வத்திருமேனிகளையும் நீரில் மூழ்கச்செய்து விளையாடுவது இவ்வுற்சவத்தின் நோக்கம். வ்ருஷபம், விருச்சிகம், கும்பம், ஸிம்ஹம் ஆகிய நான்கு மாதங்களுள் ஒன்றில் சிவபெரு மானுக்கும் தேவிக்கும் நடத்தப்படும் தெப்போற்சவத்தையும் (உடுபோத்ஸவம்) இவ்வாகமம் விரித்துக் கூறுகிறது.

**விஜயோத்தராகமம்:**உத்ஸவம் என்னும் சொல்லுக்கு விஜயோத்தராகமம் ஓர் அரிய விளக்கத்தைத் தருகிறது:"அஞ்ஞானமென்னும் மலத்தில் மூழ்கி உழன்று கொண்டிருக்கும் உயிர்களுக்கு ஞானத்தை

உண்டாக்குவதே உத்ஸவம் எனப்படும்". மற்றொரு முக்கிய செய்தியையும் நாம் இவ்வாகமத்தில் காணலாம்: மஹோத்ஸவத்தின் பொழுது சிவபெருமான்வீதியுலா வருகையில் வைதிகம், மஹாவிரதம், காபாலம், பாசுபதம், பைரவம், கௌலம் முதலிய சமயத்தைச் சேர்ந்தவர்கள் அவரவர் கொள்கைக் கேற்றவாறு பல துதிகளைத் துதித்து வணங்கலாம் என்பது. இதே கருத்தை அப்பர் பெருமானின் திருவாரூர்ப்பதிகத்தில் நாம் காணலாம்:

அருமணித்தடம் பூண்முலை அரம்பையரொடு அருளிப்பாடியர்
உரிமையில் தொழுவார், உருத்திரபல்கணத்தார்,
விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், கபாலிகள்
தெருவினில் பொலியும் திருவாரூர் அம்மானே.
(நான்காம் திருமுறை, 20 ம் பதிகம், மூன்றாம் பாட்டு)*10.

*10திருவாரூர் அம்மானின் திருவாதிரை நாள் உற்சவத்தைக் கண்ணாரக்கண்டு ரசித்த அப்பர்பிரான் அடுத்த பதிகத்தின் (21 ம் பதிகத்தின்) முதற் பாட்டில்,

முத்து விதானம் மணி பொன் கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப் பின்னே
வித்தகக் கோல வெண்தலைமாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம் .

எனச் சிவராஜதானி--சைவர்களின் தலைநகரம்--எனத் திகழ்ந்த திருவாரூரில் சைவத்தின் பலதுறைகளைச் சார்ந்தவர்களும் எம்பெருமானை எந்தவிதப் பிணக்குமின்றி வழிபட்டு வந்த செய்தியை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார். இதிலிருந்து சைவவரலாற்றின் மற்றொரு முக்கிய செய்தியையும் நாம் அறிகிறோம். அப்பர் பிரான் காலத்தில் திருக்கோயில் வழிபாடு வைதிக முறையிலோ (ஞானசம்பந்தப்பெருமானின் ஒவ்வொரு பதிகமும் இதற்குச் சான்று) அல்லது சைவத்தின் ஒரு குறிப்பிட்ட துறையைச் சார்ந்தோ நிகழ்ந்து வந்தாலும் காபாலிகர்கள், பாசுபதர்கள், மாவிரதியர் முதலான சைவத்தின் மற்ற துறையைச் சார்ந்தவர்களும் மக்களுடன் ஒன்றுகூடிப் பெருமானைத் தத்தம் முறைக்கேற்ப வழிபட்டு வந்துள்ளனர் என்றும், அவர்களுக்குள் உட்பூசல்களோ, ஒருவர் வழிபடும் மூர்தியை மற்றவர் தீண்டினால் அதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும் என்னும் விதியோ காணப்படவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. சைவத்தின் பலதுறைகளைச் சார்ந்தவர்களுக்குள் பிணக்குகள் பெரும்பாலும் இல்லாமலிருந்தன என்று கல்வெட்டுக்களின் வாயிலாகவும் நாம் அறிகிறோம்: பத்தாம் நூற்றாண்டில் கலசூரி என்னும் வம்சத்து மன்னர்கள் ஆண்ட தற்சமயம் மத்தியப்பிரதேசமென அழைக்கப்படும் தேசத்தில் அவர்களுக்கு ராஜகுரு வாகத்திகழ்ந்தவரும், சிவபக்தி, கடும்தவம் ஆகியவற்றில் சிறந்தவருமான பிரசாந்த சிவாசாரியாரென்னும் சைவ ஆசாரியர் தம்முடைய மடத்தில் பாசுபதக் கொள்கைகளில் தேர்ச்சி பெற்ற பல அறிஞர்களைத் தம்முடன் வாழச்செய்து அவர்களுடன் சமயக் கொள்கைகளைப் பற்றிப் பேசிவந்தார் என்பது. (இந்தக் காலத்திய கல்வெட்டுக்கள் புத்தகவடிவில் பதிப்பிக்கப்பட்டுள்ளன)

உற்சவகாலத்தில் வீதியுலாவிற்கு எழுந்தருளும் உமையம்மையுடன் கூடிய சிவபெருமான் (உமாஸஹிதமூர்த்தி) திருமேனி அழகை கவிதை ரசனயுடனும் சைவசித்தாந்தக் கருத்து வெளிப்படும் வகையிலும் இவ்வாகமம் வழங்குவதை நாம் சற்று ரசிப்போம்:

"கௌரி என அழைக்கப்படும் உமையம்மையுடன் சேர்ந்து அமர்ந்திருக்கும் பெருமானின் வலக் கடைக்கண் பார்வையால் தெருவினில் கூடியுள்ள மக்களின் மனவிருப்பங்களை நிறைவேற்றுகிறார்; அதே சமயம் பெருமான் தன்னுடைய இடப்பக்கக் கடைக்கண்ணால் அழகு பொருந்திய கௌரியின் முகத்தையே நோக்குகிறார். இவ்வாறு அவர் வீதிவலம் வருகையில் கதிரவன் தன்னுடைய பொற்கிரணங்களால் தாமரை மொட்டுக்களை மலரச்செய்வது போல மலம், மற்றும் மோஹம் என்னும் ஆழ்ந்த உறக்கத்திலுள்ள உயிர்களுக்கு ஞானத்தைப் போதிக்கிறார்" என்பது. மஹோற்சவத்தில் ஒவ்வொரு நாளும் வீதியுலாவுக்காக திரிபுராரி, சந்திரசேகரர், ஸோமாஸ்கந்தர், விருஷேச்வரர் முதலிய மஹேச்வரவடிவங்களுள் ஒன்றை எழுந்தருளச் செய்யலாமென்பதையும் இங்கு நாம் காண்கிறோம்.

<u>ஸஹஸ்ராகமம்:</u> ஸஹஸ்ராகமமென்னும் மூலாகமம் நடராஜப் பெருமானுக்காக நடத்தப்படும் உற்சவத்தைக் கூறுகிறது; இது ந்ருத்தபங்கோத்ஸவம் எனவும் வழங்கப்படுகிறது. அவ்வாறே,

ஸோமாஸ்கந்தப் பெருமானுக்காக நடத்தப்படும் தனி உற்சவத்தை ஆதிபங்கோத்ஸவமென்றழைக்கிறது._ஸித்தாகமம் என்னும் மூலாகமம் உத்தராயணம், தக்ஷிணாயனம் ஆகிய புண்ணியதினங்களில் செய்யவேண்டிய சிறப்பு வழிபாட்டை அயனோத்ஸவமென்றழைக்கிறது.

இவ்வாறாகச் சைவாகமங்கள் சிவாலயங்களில் நடத்தப்பட வேண்டிய பலவிதமான உற்சவங்களை மிக விரித்துக் கூறுகின்றன. நாம் மேலே கண்டவை பெரும்பான்மை அச்சில் வராத ஆகமங்களுள் கூறப்பட்ட சில உற்சவங்களே; இன்னும் பல உள்ளன. அவற்றை எம்பெருமான் திருவருள் துணையுடன் பின்னர் நோக்குவோம். அவற்றுள் பல தற்காலத்தில் பலகாரணங்களினால் வழக்கொழிந்துவிட்டன. காலப் போக்கில் பல புதிய உற்சவங்கள் இப்போது கொண்டாடப்படுகின்றன.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று". பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்திருக்கின்றது ஆனாலும் பசுவின் மடியிலிருந்து பாலைப் பெறுகிறோம், கம்பிகளில் மறைந்து நிற்கும் மின்சார ஆற்றல் மின்விளக்கின் மூலம் வெளிப்படுகிறது போல எங்கும் மறைந்து நிறைந்திருக்கின்ற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்கள் மூலம் பெறுவது எளிது.ஆலயங்கள் சென்று வழிபடுவோர் உள்ளத்தை ஆலயமாகக் கொண்டு இறைவன் எழுந்தருள்கின்றான்."கோபுர தரிசனம் கோடி புண்ணியம்". கோபுரத்தை ஸ்தூல லிங்கமாகவும், இறைவனின் பாதங்களாகவும் பாவித்து வணங்கிக் கோயிலுக்குகள் புக வேண்டும்.கோயில்கள் நமது உடம்பின் வடிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனை திருமூலர்"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே" என்று கூறுகிறார்."தேஹா தேவாலய: ப்ரோக்தோஜீவோ தேவ: ஸநாதன:த்யஜேத் அஞ்ஞான நிர்மால்யம்ஸோஹம் பாவேன் பூஜயேத்"என்ற வேத வாக்காலும் இதனை அறியலாம். சிவா திருச்சிற்றம்பலம்.

<u>ஆலயப் ப்ரகாரங்கள்:-</u>மூன்று ப்ராகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம் என்ற மூன்று கோசங்களையும் உணர்த்துகின்றன.ஐந்து ப்ராகாரங்கள் இவற்றோடு விஞ்ஞான மயம்,ஆனந்த மயம் எனும் கோசங்களையும் குறிக்கின்றன.ஏழு ப்ராகாரங்கள் ஸ்தூல சூக்ஷமங்களை விளக்குகின்றன.

**மனித உடலும் ஆலயமும்:-**ஒரு மனித உடலமைப்பை ஆதாரமாகக் கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வழிபாட்டுக்குரிய அமைப்பாக மதிக்கப்படுகிறது. ஆலயத்தை "ஆ"+"லயம்" என பிரிக்க வேண்டும். "ஆ" என்றால் உயிர் என்றும், "லயம்" என்றால் லயிக்கின்ற என்றும் பொருள்.உயிர்கள் லயிக்கின்ற இடம் ஆலயம் எனப்படும். மனிதனின் இரண்டு பாதங்கள் கோயில் வாசல் கோபுரங்கள். கொடி மரத்தில் 32 வளையங்கள் இருக்கும். இது மனித உடலின் முதுகுத் தண்டில் உள்ள 32 எலும்பு வளையங்களைக் குறிக்கும். மனிதனின் நாபி ஸ்தானத்தைக் குறிக்க நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தீய குணங்களை இதயத்திலிருந்து நீக்கி பலியிடுவதைக் காட்டும் வகையில் பலி பீடம் அமைக்கப்பட்டுள்ளது. புருவ மத்தியை கர்ப்ப கிரகம் என்கிறார்கள்.

சிவா திருச்சிற்றம்பலம்

மனித உடலில் ஆறு ஆதாரங்கள்:-
மூலாதாரம் - ஓம் ஸ்ரீ விநாயகர்
சுவாதிஷ்டானம் - ஓம் ஸ்ரீ பெருமாள்
மணிபூரகம் - ஓம் ஸ்ரீ முருகன்
அனாகதம் - ஓம் ஸ்ரீ சிவபெருமான்
விசுத்தி - ஓம் ஸ்ரீ சூரியன்
ஆக்ஞை - ஓம் ஸ்ரீ அம்பிகை
சிவா திருச்சிற்றம்பலம்.

**ஆலய வழிபாட்டின் அவசியம் :-**

"இறைவன் எங்கும் நிறைந்திருக்கிறான். ஆதலால் நாம் இருக்கும் இடத்திலேயே வணங்கினால் போதாதா? ஆலயத்துக்குச் சென்றுதான் வணங்கவேண்டுமா?" என்று வினவுபவர் பலருண்டு.

பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்திருக்கின்றது. பாலைப் பெற முயலுகின்ற ஒருவன் அதன் கொம்பையோ, காதுகளையோ, வாலையோ வருடினால் பால் கிடைக்குமா? எனவே, பால் பெற விரும்புபவன் பசுவின் மடியை வருடிப் பால் பெறுவது போல, இறைவனின் அருளைப்பெற விரும்;புவோன் ஆலயத்திற்குச் சென்று இறைவன் திருமுன் நின்று வழிபட்டு திருவருளைப் பெறவேண்டும்.

இறைவனின் திருவருளைப் பெற்று, இறைவனுடன் உறவாடிய நால்வர்களும், ஆழ்வாராதிகளும் திருத்தலங்கள் தோறும் நடந்துசென்று ஆலயவழிபாடு செய்யும் நியதியை மேற்கொண்டிருந்தனர் என்றால் அதன் பெருமையும், முக்கியத்துவமும் அளவிடற்கரியதன்றோ?

ஆலயங்கள்தோறும் சென்று வழிபடுவோரின் உள்ளத்தை இறைவன் தனக்கு ஆலயமாகக் கொண்டு எழுந்தருளுகின்றான் என்பதை திருமூலர் இப்பாடல் மூலம் விளக்குகின்றார்:

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்த சிவபெருமா னென்று
பாடுமின்: பாடிப் பணிமின்: பணிந்தபின்
கூடி நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே"

மனிதனைப் புனிதனாகச் செய்வது ஆலயம். தெய்வ அருளாற்றல் அங்கே நிலவிக் கொண்டு இருக்கின்றது. அங்கு சென்று வழிபடுவோரது வினைகளாகிய பஞ்சுப் பொதிகள், திருவருளாகிய அறைபொறியால் வெந்து சாம்பராகின்றன. இகபர நலன்களை எளிதில் எய்துகின்றன.

அருட்பயன் பெற்ற ஆன்றோரும் வாசனா மலம் தாக்காதிருக்கும் பொருட்டு ஆலய வழிபாடு புரிவது இன்றியமையாதது என்று இயம்புகின்றது கீழ்க்காணும் சிவஞானபோதம் நூலின் 12 வது சூத்திரம்:

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" (நன்றி : வாரியார் சுவாமிகளின் 'அறிவுரையமுது' நூலிலிருந்து)

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'...'கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'... சும்மாவா சொன்னார்கள் ? நம் இந்து கோவில்கள் வெறும் வழிபாட்டுத் தலங்களா ? அதன் சிறப்பைக் கூறி ...வெறும் வழிபாட்டுத்தலங்கள் இல்லை என்கிறது ஆலய சிவ ஆகமும், சைவ சித்தாந்தங்களும்... சரி ஆலய சிறப்பை அதன் அமைப்பை வைத்து பார்ப்போம். உடம்பில் பாதங்கள் கோபுரமாகவும், முழங்கால் ஆஸ்தான மண்டபமாகவும், தொடை நிறுத்த மண்டபமாகவும், கொப்பூழ் (தொப்புள்) பலி பீடமாகவும், மார்பு மகா மண்டபமாகவும், கழுத்து அர்த்த மண்டபமாகவும், சிரம் (தலை) கருவறையாகவும் கோயிலாய் எழுந்துள்ளது என்பது ஆகம மரபு. கோயில் அமைப்பில், உடலில் அன்னமய கோசம், பிரணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்த மய கோசம் ஆகிய ஐந்து உள்ளது போல கோயிலில் ஐந்து பிரகாரங்கள் உள்ளன. தூல சரீரம், சூட்சும சரீரம், குண சரீரம், அஞ்சுக சரீரம், காரண சரீரம் போல ஐந்து சபைகள் உள்ளன. ஆகம விதிப்படி ஆலயங்கள் கருவறை, ஒன்று முதல் ஐந்து பிரகாரங்களுடன் கூடிய ராஜகோபுரம், பலி பீடம், கொடிமரம், யாகசாலை, நந்தி முதலியவற்றுடன் விளங்கும். மேலும் நம் உடல் தோல், இரத்தம், நரம்பு போன்ற ஏழு வகை தாதுக்களால் ஆனது போல் ஆலயமும் செங்கல், காரை, கல், போன்ற ஏழு வகையான பொருள்களால் ஆனது என்கிறது நமது சாத்திரங்கள். கோயில் என்பதை கோ-இல் எனப் பிரித்து 'கோ' என்றால் இறைவன். −ல்என்றால்இருப்பிடம்என்கிறார்கள். ஆக, கோயில் என்பது இறைவனின் இருப்பிடம் என்றும் ஆலயம் என்பதை 'ஆ' ஆன்மா என்றும் லயம் சேருமிடம் என்றும் பொருள்படுகிறது. மனிதனின் வடிவமாகச் சிவாலயத்தை ஒப்பிடும்போது (1) கருவறை- தலை, (2) அர்த்த மண்டபம் - கழுத்து, (3) மகா மண்டபம் - மார்பு, (4) யாகசாலை - நாடி, (5) கோபுரம் - பாதம் என்றும் கூறுவர். அதே போல் (1) ஆலயம் - உடல், (2) கோபுரம் - வாய், (3) நந்தி - நாக்கு, (4) துவஜஸ்தம்பம் (கொடிமரம்) - உள்நாக்கு, (5) தீபங்கள் - பஞ்சேந்திரியங்கள், (6) கருவறை - −தயம், (7) சிவலிங்கம் -உயிர் என்றும் கூறுவர். உள்ளமே கோவில் என்று 'தத்துவார்த்தமாக' உணர்ந்து சொல்லி இருக்கிறார்கள் அல்லவா ? படிப்பதற்கே மெய் சிலிர்கிறது. இதன் 'சூட்சமம்' தெரியாமல் கோவில்கள் கூடாது என்கிறார்கள் நாத்திகர்கள்.

உ

# திருமுறைகள் கூறும் ஆகமவழிபாட்டுமுறைகள்

சைவப்புலவர் சிவஸ்ரீ. பால. இந்திரக்குருக்கள் (M.A) Sydney Australia

மண்ணுலகில் வாழும் ஆன்மாக்களை நல்வழிப்படுத்தி மேலான நிலையை அடையச் செய்வது வழிபாடாகும். நல்வழிகள் வாழ்வின் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சேர்க்கின்றது. அவ்வாறு நல்வழிகளையும் சைவ வழிபாட்டு முறைகளையும் நெறிப்படுத்த சிறந்த இடம் ஆலயமாகும். ஆலய அமைப்பும் வழிபாட்டு முறைகளையும் இருபத்தெட்டு ஆகமங்கள் கூற அதன் விளக்கமுறைகளை பன்னிரண்டு சைவத்திரு முறைகள் எடுத்துரைக்க அவையிரண்டும் ஆலயங்களில் இன்றியமையாதனவாயிற்று. ஆகமங்களுக்கும் திருமுறைகளுக்கும் உள்ள தொடர்பு மிக நெருக்கமானது

ஆகமங்கள் இறைவனால் அருளப்பட்டது என்னும் பெருமையை தெளிவாக விளக்கும் நூல்களுள் திருமுறைகளே முதலிடத்தைப் பிடிக்கின்றன. இறைவனே உமையம்மைக்குக் குருவாக இருந்து உபதேசம் செய்த வரலாறு திருமுறைகளில் பேசப்படுகிறது.

"மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்னஆகமம் தோற்றுவித்தருளியும்" எனவும்

"மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும் மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து உற்றஐம் முகங்களால் பணித்தருளியும்" என மாணிக்கவாசகர்

குறிப்பிடுகிறார். "மகேந்திரப்பொன் மலையால் மலைமகளுக்கு அருளும் குரு நீ"
எனத் திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர் குறிப்பிடுகிறார்.
பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"நங்கை உன் நிறை காதலை நோக்கி நாயகன் திருஉள்ளத்தில் மகிழ்ந்தே
அங்கன் எய்திய முறுவலுடன் தோன்ற அடுத்து நின்பால் என வினவ
இங்குநாத! நீ மொழிந்த ஆகமத்தின் இயல்பினால் உனை அர்ச்சனை புரிய
பொங்குகின்றது என் ஆசை என நினைந்து போக மார்த்தபூண்முலையாள் போற்ற"எனவும்
"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து" (திருக்குறிப்புத் தொண்டர்புராணம்)

இவ்வாறு இறைவியே சிவனைப் பூசனை செய்த சிறப்புக் கூறப்படுகின்றது.
இறைவனே ஆகமமாகியும் அதனை மொழிபவனாகவும் இருக்கிறான் என்பதை திருமுறைகள் தெளிவாகத் தெரியப்படுத்துகின்றது.

"ஆகமச் செல்வனார்"–சம்பந்தர் (திருவொற்றியூர்ப்பதிகம்)

"அண்டர் தமக்காக ஆகமநூல் மொழியும் ஆதி" – சுந்தரர்

"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" – மாணிக்கவாசகர்

"எண்ணில் ஆகமம் இயம்பினான் ஈசன்" – திருமந்திரம்

சைவத்திருக்கோயில் வழிபாட்டில் முதலில் நம்மைத் தூய்மைப்படுத்தி இறைவனைத் தூய்மையாக வழிபட வேண்டும் என்பது நமது பாரம்பரிய முறை. அதனை ஆகமங்கள் நன்கு வலியுறுத்துகின்றன. நம்மை சிவனாக பாவனை செய்து நமக்குள் இருக்கும் ஆன்மாவை பரமாத்மா என உணர்வதற்காகவே உடலையும் உள்ளத்தையும் தூய்மையடையச் செய்கிறோம்.

திருநாவுக்கரசர் "காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி லிங்கமாக" எனக் குறிப்பிடுகிறார்.

திருமூலர்" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" – (திருமந்திரம்)எனக் குறிப்பிடுகிறார்.

ஆலயவழிபாட்டிலே விபூதி, பஞ்சாட்சரம், உருத்திராக்கம், சிவநந்தி வழிபாடுகள் முதன்மைப்படுத்தப் பட்டுள்ளன. ஒருவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு அவை மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. சைவ நாயன்மார்கள் அவற்றை பெருமைப்படுத்திக் கூறிப் பெருமை கொள்கின்றனர்.

"பூச இனியது நீறு"–சம்பந்தர் "பூசுவதும் வெண்ணீறு"–மாணிக்கவாசகர்

"வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே"–சம்பந்தர்

"நற்றுணையாவது நமச்சிவாயவே" –அப்பர் திருநீறும் ஐந்தெழுத்தும் செப்பாராகில்"–அப்பர்

"நற்றவாஉனை நான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே"–சுந்தரர்

"நமச்சிவாய வாழ்க" –மணிவாசகர் "கங்காளன் பூசும் கவசத் திருநீறு"–திருமந்திரம்

இவ்வாறு பல இடங்களில் திருநீறு திருவைந்தெழுத்தின் பெருமைகளைக் கூறும் திருமுறைகள் சிவலிங்க வழிபாட்டையும் சிறப்பாக பேசுகிறது.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீனாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்" (சாக்கிநாயனார் புராணம்) எனவும் "மலர்ந்த அயன்மால் உருத்திரன் ஈசன்

புலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம் நலந்தரும் சக்தி சிவன் வடிவாகிப் புலந்தரும் லிங்கம் பராநந்தியாமே"
- திருமந்திரம் தந்திரம் 07

மேலும் லிங்கவழிபாட்டில் ஆனமார்த்தமாக வழிபாடு செய்வதற்கு இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருட்களை

சிவலிங்கமாகக் கொள்ளலாம் எனவும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"துன்னும் தயிர், நெய், பால் துய்ய மெழுகுடன் கன்றிய செம்பு, கனல், இரதம், சந்தம்

வன்நிறல் செங்கல், வடிவுடை வில்வம், பொன் தென் திருக்கொட்டை தெளி சிவலிங்கமே"

இறைவன் பஞ்சபூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்துடனும் தொடர்பு கொண்டுள்ளான் என்பதை ஆகம வழிபாட்டு நெறிகளில் காணலாம்.

இறைவனைப் பஞ்சபூதங்களோடு தொடர்புபடுத்துகிறார் அப்பர் சுவாமிகள்

"இருநிலனாய் தீயாகி நீருமாகி இயமானனாய் எரியும் காற்றுமாகி" (அப்பர்)

"நீலநீர் நெருப்புயிர் நீர் விசும்புநிலாப் பகலோன் புலனாய மைந்தனொடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றானே"- என்றும் வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி" என்றும் கூறுகிறார் மணிவாசகர் இறைவனை வழிபடுவதற்கு பூவும்,நீரும் சிறப்பானதாகும் "கற்றுக் கொள்வனவாயுள நாவுய இட்டுக் கொள்வன பூவுள நீருள"–அப்பர்

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்"–அப்பர்

பூக்கையாலாட்டிப் போற்றியென்னாத- இவ் ஆக்கையால் பயனென் - அப்பர் "வாசமலர் செய்திமையோர் நாடோறும் மலர் தூவ" "விண்டமாமலர் கொண்டு விரைந்துநீர் ஆண்டநாயகன் தன்னடி சூழ்மின்கள் பண்டுநீர் செய்த பாவம் பறந்திடும் வண்டுசேர் மொழில் வான் மீயுரசீ னே"–அப்பர்

ஆலய வழிபாட்டிலே அபிஷேகம் மற்றும் தீபாராதனை மிகமிக முக்கியமானதொன்றாகும். ஒரு நிறைவான பூசையால் அபிஷேகமும் தீபாராதனைகளும் நிறைந்திருப்பதே சிவாகம வழிபாட்டு முறை. அபிஷேகத்திற்கு பெரும்பாலும் பசுவினால் உண்டாகும் பால், தயிர், நெய் என்பன முக்கியமாகக் கருதப்படும். திருமுறைகளில் இதன் சிறப்பு பலவாறு பேசப்படுகின்றது.

"பாலினால் நறு நெய்யாய் பழத்தினாற் பயின்றாடி "–சம்பந்தர் "ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பல நாடினாய் மறையோடும் பல்கீதமும் பல் சடைப்பணி காலகதிர் வெண்டிங்கள்"–சம்பந்தர் "ஆவாகி ஆவினிலைந்துமாகி"–அப்பர்

"செய்ய மேனியன் தேனோடு பால் தயிர் நெய்ய தாடியநீலக்குடியான்"–அப்பர் "பாவமும் பழிப்பற்றற வேண்டுவரீ ஆவின் ஐஞ்சுகந்தாகும் வன்கழல் - அபப்ர் "ஆவின் மேவிய ஐந்து அமர்ந்தாடுவான் தூவெண்ணீறு துதைந்த செம்மேனியான்

மேவ நூல்விரி வெண்ணியின் தென்கரைப் பூவனூர் புகுவார் வினை போகுமே"–அபப்ர்

ஆலயங்களில் தீபாராதனை வழிபாடு முக்கியமாகக் கருதப்படுகிறது. நாயன்மார்கள் சோதியாக இறைவனைக் கருதி வழிபட்ட முறைகளை பாடல்கள் மூலமாக அறியமுடிகிறது.

"சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே"–மணிவாசகர்

"ஆதியும் அந்தமும் அல்லா அருட் பெருஞ்சோதி"–மணிவாசகர்

மாசற்ற சோதியே மலர்ந்த மலர்ச்சுடரே"–மணிவாசகர் "தேச விளக்கெலாமானாய் நீயே"–அப்பர்

"ஒளிவளர் விளக்கே"–திருவிசைப்பா "கற்பனைக் கடந்த சோதி"–பெரியபுராணம்

ஆலய வழிபாட்டு முறைகளில் அக்னி வழிபாடு சிறப்பானதொரு இறைவனை யாக வழிபாட்டின் மூலமாக ஆன்மாக்களின் என்பது சம்பந்தர் வாக்கு.

இடத்தைத் துன்பம் பிடிக்கின்றது. அகற்றப்படும். "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே"–சம்பந்தர் புந்தியினான் மறை வழியே புற்பரப்பி நெய்சமித்தை கையில் கொண்டு வேந்தழலின் வேட்டுலகின் மிக அவிப்போர் சேரும் மிழலையாமே"–சம்பந்தர் "வேதியர் வேள்வி ஒழியாது மறைநாளும் ஓதி அரன் நாமம் உணர்த்திடும் நள்ளாரே"–சம்பந்தர்

"பூமென் கோதை உமையோடு பாகனை ஓமஞ்செய்தும் உணர்மின் கண் உள்ளத்தால்" - அப்பர்

"அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும் செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தர"–சம்பந்தர்

"வட்டக் குண்டத்தில் உரிவளர்த்து ஓம்பிமறை பயில்வார்"–சுந்தரர் (7. 18. 2) "நாத்திறன் மறையோர்ந்து ஓமகுண்டத்து நறுநெய்யால் மறையவர் வளர்த்த

தீத்திறள் அருள்பும் பெரும் பற்றுப்புலியூர்"–திருவிசைப்பா இறைவனை நாளும் துதித்து வழிபாடு செய்யும் இறைநாமங்களின் சிறப்பைச் சைவத்திருமுறைகளில் காணலாம்

பூ நாளும் தலைசுமப்ப புகழ் நாமம் செவிகேட்ட

நாநாளும் நவின்றேத்த பெறலாமே நல்வினையே"- சம்பந்தர்

பூவனூர் புனிதன் திருநாமத்தான்

நாவினூறு னூறாயிரம் நண்ணினார் பாவமாயின பாரில் பரியவே தேவர்கோவினுன் செல்வர்களாவரே -அப்பர்

"பேராயிரம் பரவிவானோர் ஏத்தும் பெம்மானே"–அப்பர்

"ஒரு நாமம் ஒரு உரு ஒன்றுமிலார்க்கு

ஆயிரம் திருநாமம் பாடிநாம் தெள்ளோணம் கொட்டாமே- திருவாசகம்

எனவே இவ்வாறு ஆகம வழிபாடுகளில் காணப்படும் இன்னோரன்ன சிறப்பான விடயங்களை எல்லாம் சைவத் திருமுறைகள் எமக்கு சிறப்பாகவும், தெளிவானவும் எடுத்துக் காட்டியுள்ளது. ஆதலால்தான் இன்றும் ஆலய ஆகம கிரியை வழிபாட்டு முறைகளையும் திருமுறைகள் ஓதும் நெறிகளையும் பிரிக்க முடியாத ஒன்றாக திகழ்கிறது எனலாம்.

# ஓம் முருகா
# வேத ஆகம ஆலய வழிபாடு

சாவகச்சேரியூர் டாக்டர் க.கதிர்காமநாதன்

உடலும் உயிரும் உள்ளதுதான் மனித வாழ்க்கை. உடலுக்குப் பொருள் உயிருக்கு அருள் தேவை. உயிர்கள் ஆகிய ஆன்மாக்கள் ஒன்றாக சேர்ந்து இறைவனை வழிபட காரணமாகின்ற புனித இடம் ஆலயம் என சைவ சித்தாந்தம் கூறுகிறது.

ஆலயம் ஸ்ரீ ஆன்மா லயம் ஸ்ரீ ஒடுங்கல்

சிவபெருமான் ஆன்மாக்களுக்காக அருளிச் செய்த நூல்கள் வேதம், சிவாகம்(ஆகமம்) ஆகும். இவை புண்ணியங்களைப் பற்றி கூறுகின்றன. புண்ணியங்களில் முதன்மை பெற்றது ஆலய வழிபாடு ஆகும்.

வேதம்- வித் எனும் வடமொழிச் சொல்லடியிலிருந்து தோன்றியது. வித் என்றால் அறிதல் என்ற பொருளாகும். ஆகமங்கள் ஆலயம் அமைத்தற்கான இடம், ஆலய அமைப்பு முறை, தெய்வ சிலைகள் வடிக்கும் இலக்கணம், சிலைநிலை நாட்டும் விதி, வாகனங்கள் அமைக்கும் முறை, அருச்சகர் ஒழுக்கம், அடியார் நடைமுறை, ஆலய தரிசனம், பூசை விழாக்கள் செய்யும் முறை அவற்றின் பலன்கள் கூறுகின்றன. வேதமும் ஆகமும் அடிப்படையில் வேறானவை. வேதம் ஆலய வழிபாட்டு முறைகள், சமய நம்பிக்கைகளையும் கூற ஆகமம் திராவிட மக்களின் கடவுட் கொள்கைகளையும் வழிபாடு முறைகளையும் கூறுகின்றன. திருமந்திரம் ஒன்றே தமிழில் கூறும் ஆகம நூலாக திகழ்கிறது.

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப்பணிமின், பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வனே – திருமந்திரம்

தேடித் திரிந்து கோயிலை வழிபடுங்கள் என்பதே இதன் பொருள்.

கோயில் வழிபாட்டில் முதல் வழிபட வேண்டியது கோபுரமாகும்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

கோபுரத்தை தூலலிங்கம் என்பர். தூலம் என்றால் பார்க்கக் கூடியது என்பதாகும். கோபுரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்க முடியுமோ அவ்வளவு தூரமும் 'பூலோக கைலாயம்' என அழைக்கப்படும். கோயிலுக்கு வர முடியாதோர் தொலைவில் இருந்து தரிசித்து இறைஅருள் பெறுவர்.

கோபுரத்தில் பல சிறப்புக்கைகள் காணலாம். ஆகம முறைப்படி தேவர்கள், பிராணிகள், மனிதர்கள், ரிஷிகள், பூதங்கள் போன்ற உருவங்கள் உள்ள பிரபஞ்ச அமைப்பில் யாருவருக்கும் இடமுண்டு என்பதே இதன் கோட்பாடு. அடியில் அகலமாகவிருந்து படிப்படியாக ஒடுங்கிப் போவது கோபுரமாகும். இதே போன்று இரு கைகளையும் தலை மேல் குவித்து ஒன்று சேர்த்து வணங்கும்போது கோபுர அமைப்பு உண்டாகிறது. இது இறைவனை அடைய, அருள்பெற புலனடக்கம், மனஅடக்கம் தேவை என்பதை உணர்த்துகிறது. மேலும் வலது கரம், இடது கரத்திலும் பார்க்க வலுவாய் இருக்கும். இரண்டும் இணையும்போது இறைவன் முன்னிலையில் ஏற்றந்தாழ்வு இல்லை என்பதாகும். ஆணவம், கன்மம், மாயையை குறித்து இருப்பது மூன்று அடுக்குள்ள கோபுரம், இதே போன்று ஐம்பொறிகள் குறிப்பது ஐந்து அடுக்கு கோபுரம், இவற்றுடன் மனம், புத்தியை சேர்த்துக் காட்டுவது ஏழு அடுக்கு கோபுரமாகும். கோபுரம் இறைவனது திருவடியாகும். பாதங்களாக நினைத்து வணங்கி உட்செல்ல வேண்டும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் ஜீவன் சிவலிங்கம்
கள்ளம் புலனைந்துங் காளா மணிவிளக்கே – திருமந்திரம்

கோயில் மனித உடம்பு போல் அமைந்துள்ளது. கோபுரம் = திருவடி, ஆஸ்தான மண்டபம் = முழங்கால், நிருத்த மண்டபம் = துடை, பலிபீடம் = தொப்புள், மகாமண்டபம் = மார்பு, சார்த்த மண்டபம்(நந்தி) = கழுத்து, கர்ப்பக்கிரகம்(மூலஸ்தானம்) = சிரம், தட்சணாமூர்த்தி = வலதுசெவி, சண்டிகேசவரர் = இடதுசெவி, வாசல் = வாய், வாசல் மண்டபம் = மூக்கு, லிங்கம் = புருவமத்தி, விமானம் = தவஉச்சி.

நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, விபூதி, உருத்திராட்சமணிந்து கோயிலுக்குச் செல்ல வேண்டும். அங்கே கை, கால், கழுவி வெளிவீதியை வலம் வரம் வேண்டும். வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாக, இது பூமி வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் சுழலுகிறது என்பதையும், உட்பிரகாரத்திலும் பார்க்க மும்மடங்கு நன்மை தரவல்லது என்பதையும் குறிக்கும்.

வெளிபிரகார வலம் முடிந்த பின்னர் கோபுர வாசல் ஊடாக உட்செல்ல வேண்டும். அதன்பின் உள்வீதியை வலம் வந்து அங்குள்ள தெய்வங்களை வணங்க வேண்டும். இதன் பிறகு வாசலுக்குச் சென்று கொடிமரத்தை வணங்க வேண்டும். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

கொடிமரம் சூக்குமலிங்கமாகும். சூச்சுமம் = மனிதனின் முதுகுத் தண்டில் இருக்கும் 32 எலும்பு வளையங்கள் போன்று, வளையங்கள் வைத்து அமைக்கப்பட்டுள்ளது. இது இறைவனைக் குறிக்கும். இதன்பின் பலிபீடம் - பத்ரலிங்கத்தை அருகில் சென்று வழிபடும்போது நமது காம, குரோத, மத, மோக குணங்களை பலி கொடுப்பதற்காக உறுதி செய்தல் வேண்டும். பலிபீடம் இறைவனின் பாதங்களை தாங்கிய தாமரை வடிவம் ஆகும். சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்றவையில் பாசத்தை குறிப்பதாகும். கோயிலில் எட்டு மூலைகளிலும் எட்டு பலிபீடங்கள் உண்டு. இவை எல்லாவற்றிற்கும் தலைமைப் பீடமே பலிபீடமாகும்.

பின்னர் இறைவன் ஒருவனே என் அறிவுறுத்தும்துவார பாலகரை வணங்கியதுடன், உடன் நந்திதேவரை வழிபட வேண்டும். ஆனந்த நிலையில், சைவர்களின் முதற்குருவாக இருக்கும் இவரிடம் இறைவனை வழிபட அனுமதி பெறல் வேண்டும்.

கன்னி மூலையில் வீற்றிருக்கும் விக்னம் தீர்க்கும் விநாயகரிடம், முதலில் செல்லல் வேண்டும். இங்கு வலக்கையால் நெற்றியில் வலது புறமும், இடக்கையால் இடது புறமும் ஐந்து முறை குட்டல் வேண்டும். இதன்பின் மூன்று முறை தோப்புக்கரணம் தோப்பு கைகள், கர்ணம் காது, இடதுகையால் வலது காதையும், வலது கையை இடது காதையும் இறுக்கப்பிடித்துக் கொண்டு நன்றாக இருந்து எழும்ப வேண்டும். வலது காதினை இடது கையால் பிடித்து இழுத்து அமரும் போது இடது பக்க மூளை புத்துணர்ச்சி பெறுகிறது. அதே போல் இடது காதை பிடிக்கும்போது வலது பக்க மூளை புத்துணர்ச்சி பெறுகிறது. இதை ஒரு அக்குப்பஞ்சர் வைத்தியமுறை தொழிற்பாடு என கருதுகின்றனர். எது எப்படியோ தோப்புக்கரணம் போட்டபின் சோம்பல் நீங்கி உற்சாகம் வருவது அனுபவ உண்மை.

மூலஸ்தானம் - சதாசிவலிங்கம் - ஆலயத்தின் முக்கிய இடமாகும். கோபுரம் இறைவனது திருவடி என்றால் மூலஸ்தான கிரகமாகும். இதன் மேல் பகுதி விமானமாகும். மா என்றால் சமஸ்கிருத சொல்லுக்குஅளத்தல் என்ற பொருள். விமானம் விஷேட கவனம் செலுத்தி அளந்து அமைக்கப்படுவது இதன் மேற் கூரை சிகரம் இல்லது ஸ்தூபி.

தெய்வசக்தி விண்ணிலிருந்து வருவதாக கருதப்படுகிறது. இது விமானத்தின் மேல் உள்ள கலசத்தின் மூலம் கிரகிக்கப்பட்டு பின்னர் இறைவனில் பட்டு அங்கிருக்கும் பக்தர்களிடம் அருள் பாலிக்கிறது. மூலஸ்தானத்தின் திரை, நீக்கு மட்டும் காத்திருந்து பயபக்தியாய் வணங்கி, நன்றி கூறுதல் வேண்டும். திரையானது ஆன்மாவை மறைந்திரக்கும். மாயை ஆகும். இதை நான் என்ற அகங்காரம் என்றும் கூறுவர். அகங்காரத்தை நீக்கி இறைவனை வழிபடல் வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

மூலஸ்தானத்தில் இருக்கும் மூலவரை வணங்கி பின்னர் அம்பாளை, நடராசரை, தட்சணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சுப்பிரமணியர், முதலியோரையும், சமய குரவர், நால்வரையும் வழிபடல் வேண்டும்.

சண்டேசுவரர் வழிபாடு: வழிபாட்டின் நிறைவு ஆகும். எப்போதும் இறைவனது தியானித்தில் இவர் அமர்ந்திருப்பதால் அருள்பெற மும்முறை கைத்தாளம் (கைதட்டல்) செய்து, விரல்களால் சொடுக்க வேண்டும். தரிசன பலனை தருமாறு பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

வேதம் கடவுள் வேள்விச்சடங்குகள், வாழ்க்கை நெறி, முறைகளைப்பற்றி கூறுவது இதில் மந்திரம், பிராமணம், உபநிடதம் அடங்கும். மந்திரம் தெய்வத்தை நோக்கிச் செய்யும் துதிப்பாடல்கள். பிராமணம்: மந்திரத்தை உச்சரிக்கும் போது பின்பற்ற வேண்டிய செயல்களை கூறுவது உபநிடதம். மந்திரமும் பிராமணம் இரண்டையும் சார்ந்து எழும் தத்துவங்களை ஆராய்வது வேதமும் ஆகமும் கலந்து தரும்போது வேதசிகாமம் ஆகிவிட்டது.

வழிபாட்டில் இறைவனை அடைய நாலுவழிகள் உள்ளன. சரிகை, கிரிகை, யோகம், ஞானம் ஆகியன.

சரிகை – கடவுளுக்கு தொண்டதக பணிபுரிவது. உழவாரப்பணி, கோயில் கூட்டல், கழுவுதல் போன்றவை- தாச தார்க்கம் - அப்பர். கிரியை - இறைவனை அர்சித்தல், அடிமைநெறி, மகன்மை நெறி – சற்புத்திர மார்க்கம் - சும்பந்தர். யோகம்: நண்பனைப்போல இறைவனோடு பழகப் சகதார்க்கம் - தோழமை நெறி – சுந்தரர். ஞானம் -இறைவனோடு இரண்டறக் கலத்தல் - காதலன் காதலி போல் - காதன்மை நெறி – சன்மார்க்கம் - மாணிக்கவாசகர். இவையை முறையாக அனுட்டித்து வழிபட்டால் விருப்பு வெறுப்பற்ற தன்மை ஓட்டையும் பொன்னையும் சமமாக எண்ணக்கூடிய தன்மை அடையலாம்.

உற்சவங்கள் ஸ்ரீ உத்-மேலான தவம்-ஐந்தொழில் இது இறைவனின் ஐந்தொழிலைக் குறிக்கும். கிராமத்தில் நடைபெறும் உற்சவ நாட்களில் கிராமமே பக்தி பூர்வமாக ஒற்றுமையாக, இறையருளைப் போற்றும். கொடி ஏற்றம் அன்று இவர்களின் மகிழ்ச்சி ஏற்றத்திற்கு எல்லையே இல்லை. இறைவன் ஆன்மாவோடு சேரும் நேரம் கை கூப்பி, வணங்குதே தெய்வீகத் தன்மையாகும். இறைவன் ஒலி வடிவானவன், மணிஓசை, வேதகோஷம், தேவாரம், பஜனை, மேளம், மௌனம் யாவுமே உமக்கு அபூர்வ சக்தி கொடுப்பன.

எம்மைவிட ஒரு மேலான சக்தி உண்டு. அந்த பரம்பொருளுக்கு யாவரும் அடக்கம். அந்த இறைவனை வழிபட்டால் அருள் கட்டாயமாகக் கிடைக்கும்.

வேத சிந்தாத்தத்தால் ஐந்தொழில்களால், ஐம்பூதங்களையும்(நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம்) ஆண்டு நிற்கும் இறைவனை எம் ஐம்பொறிகளையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) அடக்கி வழிபடல் வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாகும்.

யாத்திரை செய்வது, புனித தலங்கள், முத்தி தலங்கள், ஜோதிலிங்கங்கள், தலம் தீர்த்தம், மூர்த்தி கொண்ட ஆலயங்கள் செல்வதும் கடவுள் வழிபாடாகும். பல ஞானிகள், சித்தர்கள், ஆன்மீக வாதிகள். மக்கள் தங்கள் துயர்நீங்கிஅ ருள் பெறுவதை இன்றும் காணலாம்.

இறைவனை திரை போட்டிருக்கும் போதும், அபிஷேகம் நடைபெறும் போதும், பூசை நடக்கும் போதும் வழிபடக் கூடாது.

நிறைவு. சண்டேசுவரரை வழிபட்டபின்னர் கொடிமரத்தை அடைந்து சாஷ்டயங்கமாக நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்னர் கோபுர வாசற்படியில் சற்று நேரம் தரிசிக்க மூர்த்திகள் அகக்கண் கொண்டு வந்து நிறுத்தி தரிசிக்க முயல வேண்டும்.

சற்று வாசலில் இருந்து ஆறி, பின்னர் சென்று வருகிறேன்-போய் வருகிறேன் என விடைபெற வேண்டும். வீட்டிற்கு வந்த பின்னரும் சிறிது நேரம் இருந்து ஆறி பின்னர், கால், கை, கழுவ வேண்டும்.

நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி – கண்ணதாசன்

உசாதுணை: கலசம் இதழ்கள் திருமந்திரம் சைவசமயம்

# சைவம் - தமிழ் - இலக்கியம்

**கலாநிதி பொன் பாலசுந்தரம்**

**ம**க்களின் வாழ்க்கையின் உடன்பிறப்பான ஒரு அம்சம் இலக்கியம். அது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் ஒரு காலக்கண்ணாடி.

சமயம் தோன்றிய காலம் தமிழோடிசை பாடல் மறந்தறியாத காலம்.

இலக்கிய மகிமை சமயத்துடன் இரண்டறக் கலந்து வளர்ந்து வந்திருக்கிறது.

சமயத்தோடு தமிழ், தமிழோடு சமயம். இந்த இரண்டினுடனும் இலக்கியம் உறவுகொண்டு வளர்ந்து வந்திருப்பதற்கு சங்ககால இலக்கியங்கள் சான்றாக உள்ளன. உவமை, சிறப்பு. சீர், உருவகம் போன்ற பொருளணிகள் பொதிந்திருமையால் மக்கள் மனதைக் கவர்ந்து பக்தி மார்க்கத்தை வளர்த்து வந்திருக்கிறதெனலாம்.

பரந்து, விரிந்த அளவில் பல ஊரினர், பல பிரிவினர், பல்வேறு தொழிலினர், பல்வேறுபட்ட மரபினரான 63 நாயன்மார்களின் வரலாற்றை 13 சருக்கங்களிலும், 4286 விருத்தப் பாக்களிலும் மக்கள் இலக்கியமாகப் படைத்துத் தந்திருக்கும் சேக்கிழார் பெருமானின் பெரிய புராணம் பல ஆய்வுகள் உருவாகுவதற்குப் பக்கபலமாக இருந்து வந்திருக்கிறது.

தமிழ் மொழியில் உள்ள சிறந்த படைப்புக்கள் யாவும் இலக்கியச் சிறப்பொடு கூடியவைகளே. இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக் கோவை, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், சிறுபஞ்சமூலம், திரிகடுகம் உட்பட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம். திருக்குறள். சிந்தாமணி. சிலப்பதிகாரம் போன்ற பழைய இலக்கியங்கள் தமிழ் இன்பத்தையும் சமய உறவையும் தம்மகத்தே கொண்டிருப்தனால்தான் சமயத்திற்கு நலிவேற்பட்டபோது, தமிழும் நலிந்தது. அதனால் இலக்கியச் செழிப்பும் வாடிற்று.

சமயம் வளர்த்த குரவர்களின் வரலாற்றைப் பதிவாக்கிய சேக்கிழார் பெருமான், அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி அவர்கள் மூலம் சமய இலக்கியப் பணிக்கு வித்திட்டார். சமய, இலக்கியப் பரவலுக்கு இவ் அறுபத்து மூவரும் பரந்து பட்டிருந்ததும் ஒரு காரணம்.

நாயன்மார்களுடைய வரலாறு கி.பி. 7ம் நுற்றாண்டுக்கும் 12ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதே. அதாவது, 600 ஆண்டுக்காலம். இக்கால இடைவெளியில் முப்பத்தேழ்வர் தமிழகத்தின் சோழ வளநாட்டைச் சேர்ந்தவர்கள். சேரநாட்டவர் இருவர். மலை நாட்டவர் இருவர். பாண்டி நாட்டவர் ஐவர். நடுநாட்டவர் எழுவர். தொண்டை நாட்டவர் எண்மர். வடநாட்டவர் இருவர்.

இப்படிப் பரந்துபட்டு வாழ்ந்து வந்திருக்கும் நாயன்மார்களின் வரலாறு 600 ஆண்டுகால இலக்கியமாக இன்றும் நம் மத்தியில் நிலைத்திருக்கிறது.

இலக்கியத்திற்கு எண் சுவைகள் உள. இச்சுவைகளுடன் பக்திச் சுவையும் சேர்ந்துவிட்டால் ஆனந்தமயமாகிவிடும். இறைபக்திக்கும், வாயார வாழ்த்துவதற்கும் இலக்கியச் சுவை தேவை. அற நூல்கள் இலக்கியச் சுயைுடன் இருக்க இது ஒரு காரணமாக இருக்கலாம். இப்படிப் பார்த்துக்கொண்டு போனால் தமிழுக்கும் இரசனை வேண்டும். சமயத்திற்கும் இரசனை வேண்டும். இவை இரண்டையும் இலக்கியச் சுவைதான் தருகிறது.

தமிழ் இலக்கியத்தில் சிவ தாண்டவம் பெருமளவில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். இலக்கண நூலாக மதிப்புப் பெற்ற தொல்காப்பியம் இறைவனை கந்தழி எனக்குறிப்பிடுகின்றது. சிவதாண்டவத்தைக் குறிப்பாக வைத்துக் கூறும் நூலான சேந்தன் திவாகரம் நாடகம், நத்தம், ஆடல், இலயம், நிருத்தம், கூத்து, நடனம், துாக்கு, நாட்டியம், நர்த்தனம் போன்ற பல பெயர்கள் இதற்கு இருப்பதாகக் கூறுகிறது.

ச, ரி, க, ம, ப, த, நி இசைச் சுரங்களில் இருந்து ஏழு தாண்டவங்களும் தோன்றியதாகவும், அதை ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம். திரிபுர தாண்டவம், காளி தாண்டவம் அல்லது ஊர்த்துவ தாண்டவம், முனி தாண்டவம், சம்ஹார தாண்டவம் என அழைக்கப்படுவதாக திருப்பத்துார் புராணம் கூறுகிறது.

சிதம்பரத்தில் உள்ள நடராசருடைய ஆடல் அரங்கத்தில் காணப்படும் நர்த்தனக் காட்சிகள் சிற்ப சாஸ்திரக் கலைக்கமைய அமைந்ததாகும். அவை நுணுக்கங்களை வெளிப்படுத்தி ஆகம இலக்கிய மரபை பிரதி பலிக்கின்றன.

துடியோடு தோற்றம் மிகும், எடுத்தகால் அருள் காட்டும்
அடியென்றும் மறைத்தல் தரும், அழிவென்று கனலாடும்
விடிவென்று கரம் காட்டும், வாழ்வென்னும் அருள்
முடிகொண்ட புனலாட்டம், அறிவாகும் மதியாட்டம்
படங்காட்டும் அரவு ஆடும், பதியவனின் திறம் கூறும்
இடங்கொண்ட மங்கையவன். இசைந்தாட உலகாடும்

இலக்கிய ரசனை சைவத்தில் பொதிந்திருப்பதை இங்கு காணலாம். கிரியைகளின் குறிப்புகள் இவை.

"பனித்த சடையும், பவளம்போல் மேனியும்" என்கிறார் அப்பர் அடிகள். திருமூலரோ "ஆதி பரனாட, அங்கை கனலாட, ஓதுஞ் சடையாட" என்று சிறப்பிக்கிறார்.

இனி, பன்னிரு திருமுறைகளும் சைவ இலக்கியத்திற்கு துணை நிற்பதைக் காணலாம். திருமுறை ஆசிரியர்கள் இருபத்தேழ்வரில் திருஞான சமபந்தர் அருளிய 386 பதிகங்கள் **திருக்கடைக்காப்பு** எனவும், திருநாவுக்கரசரின் 312 பதிகங்கள் **தேவாரம்** எனவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 100 பதிகங்கள் **திருப்பாட்டு** எனவும் பதியப்பட்டுள்ளன.

மணிவாசகப் பெருமான் அருளிய தேனமுதமான **திருவாசகமும் திருக்கோவையாரும்** எட்டாம் திருமுறையாக இருப்புக்கொண்டு இலக்கியச் சுவை தருகின்றன.

இவற்றுள் எதை ஆய்வு செய்தாலும் பக்தி இலக்கியச் சுவையை அனுபவிக்கலாம்.

சைவம் அதாவது சமயம், தமிழ் அதாவது மொழி. சுவை அதாவது இலக்கியம் ஆகிய மூன்றும் வரலாற்றுச் சான்றுகளின் துளிர்கள். மொழிகளின் தோற்றம் வரலாற்றுக்கும் முந்தியது எனலாம். இவைகள் யாவும் மக்களின் வாழ்க்கையைப் பிரதி பலிப்பனவாக இருந்து வருகின்றன. இதற்குத் துணை நிற்பன அதில் பொதிந்துள்ள மரபும். அணிகளும், சொற்களும், யாப்பமைப்புக்களுமாகும்.

காப்பியம் என்பது இலக்கியத்தின் பிரதிபிம்பமானது. காப்பியப் பெருமைகளைப் பகர்வதில் தலை தூக்கி நிற்கும் இலக்கியம் எல்லா நய கோட்பாடுகளையும் தன்னகத்தே பதிய வைத்திருப்பதால் சுவைத்து இன்பமுற வைக்கிறது.

இன்புறுத்தல் என்பது இலக்கியத்தின் முதன்மை நோக்கங்களில் ஒன்றாகும். மகிழ்வுறுத்தற் கூறுகளே இலக்கியச் சுவைகளுக்கு ஏற்ற காரணங்களாக அமைந்துள்ளன. கம்பனது காவியத்தை மனக்கண் முன்னர் நிறுத்தி ஒவ்வொரு பாத்திரத்தையும் மனத்திரையில் பதித்து அந்தப் பாத்திரங்களுடன் இலக்கியப் பகிர்வு செய்தால் தானாகவே இலக்கிய இரசனை சொட்டும்.

பக்தி இலக்கியப் பரிமாணம் வெற்றுச் சொற்களையும், அலங்காரச் சொற்களையும் கொண்டிருப்பதில்லை. உற்றுக் கவனித்தால் அதில் ரசனை குன்றா நயம் இருப்பதைக் காணலாம். அருணகிரிநாதரின் திருப்புகழைப் பாடுபவர்கள் அதன் சுவையில் மெய் மறந்து விடுகிறார்கள். மனோ நிலையை தன்பால் கவரக்கூடிய சக்தி பக்தி இலக்கியத்திற்குத்தான் உள்ளதெனலாம்.

ஆதியும் அந்தமும் இல்லாத சைவ சமயத்தையும், மொழிகளுக்கு எல்லாம் முதல் மூத்த மொழியாக விழங்கும் தமிழையும், இந்த இரண்டுடன் பாலும், தெளிதேனும், பாகும், பருப்புமாகவும், மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளுடைய சுவைகளைத் தாங்கி இவைகளுடன் இரண்டறக் கலந்துள்ள பக்தி இலக்கியம் பற்றிய ஒரு சிறு துளி நோக்குத்தான் இந்தச் சிறிய படைப்பு.

# வேதமும் ஆகமமும் (ஒரு நோக்கு)

சி.கஜேந்திரகுமார்



"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதூம் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதம் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் மெய்யோர்க் கபதமே"

வேதமும் ஆகமும் ஆதியும் அந்தமும் இல்லா இறைவனால் அருளிச் செய்யப்பட்ட இறைவன் உண்மையை எடுத்துரைக்கும் நூல்களிலுல் "வேதம் பொது நூல் என்றும் ஆகமம் சிறப்பு நூல் என்றும் கொள்ளப்படும் பெருமைக்குரியவை திருமந்திரத்தை ஆக்கித் தந்த திருமூலநாயனார் மேற்சொன்ன பாடலில் இதை விளக்கியுள்ளமை குறிப்பிட தக்க தொன்றாகும். "வேதத்தின் முடிவான வேதாந்தமும் ஆகமத்தின் முடிவான "ஆகமாந்தமும்" (அதாவது சித்தாந்தமும்) வேறுபட்டவை என்று கூறுவராயிம் உண்மைப் பொருள் தெளிந்த ஞானிகளுக்கு இரண்டுமே வேறுபாடு இல்லாதவையாகும். எனினும் வேதத்தையும் ஆகமத்தையும் ஆராய்ந்த ஆராட்சியாளர்கள் அவை பல இடங்களில் ஒன்றுபட்டும் சில இடங்களில் மாறுபட்டும் அதாவது தனிப்பட்டும் செல்வதை தமது நூல்கள் வாயிலாக வெளியிட்டுள்ளார். இவை பற்றி ஆராய்வோமாயின்.............

நாம் குறிப்பிடத்தக்கது போன்று "வேதம் பொது நூல் ஆகமம் சிறப்பு நூல்"என்று இரண்டு பிரிவுகளில் வைத்து எண்ணப்படுகின்றது. அதாவது வேதம் "வைதீக கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டு திகழ்வதனால் வேதம் பொதுநூல்" என்றும் ஆகமம் "சத்தினி பாதத்தை அடைந்தவர்களுக்கு மட்டும் அருளப்பட்டதால் சிறப்பு நூல்' என்றும் அழைக்கப்படுகிறது. எனவே இவ்விரண்டு நூல்களும் தம்முள் விளக்கப்படும் கருத்தின் அடிப்படையிலும் மாறுபட்டுள்ளன.

காலத்தின் அடிப்படையில் அவதானிக்கும் போது ஆகமங்கள் வேதங்களுக்கு மிகவும் பிற்பட்டவை என்பது தெளிவு, வேதங்கள் "சந்தஸ்" எனப்படும் பழைய ஆரிய மொழியில் அமைந்திருக்க ஆகமங்கள் "பா'ா" எனப்படும் பிற்கால ஆரிய வழக்கு மொழியிலே அமைந்து காணப்படுகின்றன. இதிகாச புராண காலத்தில் ஒருபுறம் சமயத்தை வளர்க்கும் முகமாக புராணங்கள் தோன்றி சிறு சிறு கதைகளாக சமயத்தை வளர்க்க, மறுபால் சமய தத்துவங்களையும் வழிபாட்டு முறைகளையும் விளக்கும் ஆகமங்கள் தோன்றின. இந்த ஆகமங்கள் நூல் வடிவம் பெற்றது பிற்காலமாயினும் அவற்றில் காணப்படும் கருத்துக்கள் பழமையானவை.

இரண்டு காலங்களிலும் காணப்படும் வழிபாட்டு முறைகளை நோக்குமிடத்தும் வேதமும் ஆகமும் மாறுபட்டு செல்வதனை காணமுடிகிறது. வேதகாலத்தை பொறுத்த வரை அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையை கண்டு பயந்தனர். அவ்வியற்கை சக்தியால் தமக்கு ஆபத்து வந்து விடலாம் என அஞ்சினர். இதன் காரணமாக இயற்கை சக்திகளான "மழை, இடி, காற்று, சூரியன்" என்பவற்றை தமது தெய்வங்களாக ஏற்று வழிபட்டு வந்தனர். அது மட்டுமன்றி வேதத்தின் முற்பட்ட காலத்தில் தெய்வங்களை

ஐ மண்ணிற்குரிய தெய்வம்
ஐஐ விண்ணிற்குரிய தெய்வம்
ஐஐஐ இடைவெளிக்குரிய தெய்வம்

என பிரித்து வழிபட்டமையால் இக்காலத்தில் " பல தெய்வ வணக்க முறை" காணப்பட்டது. ஆனாலும் கூட வேதத்தின் இறுதிப் பரப்பில் இது "ஒரு தெய்வ வழிபாட்டு" முறையாக பரிணாம வளர்ச்சி பெற்றது. இக்கருத்திற்கு ஆதாரம் சேர்ப்பதாக "ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி" என்ற சுலோகம் காணப்படுகிறது. ஆனால் ஆகமம் கூறும் கடவுட் கொள்கை பற்றி நோக்கும் போது இங்கு முழுமுதற் கடவுளாகிய "சிவத்திற்கு" வழிபாடு ஆற்றும் முறை ஒன்றையே பல இடங்களிலும் எடுத்தியம்பி செல்கின்றது. அதாவது சிவனிற்குரிய பூஜைகள், அபிடேகங்கள் தீட்சை முறைகள் என்பனவும் இறைவனால் அடியவர்கள் ஆட்கொள்ளப்படும் விதமும், இறைவனின் அருட் கொடையும் குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள் சைவக்கோயில்களின் அமைப்பு என்பன எல்லாம் விளக்கப்படுகின்றன. இங்கு "உருவ வழிபாடு" சிறப்புப் பெறுகின்றது. எனவே வேதம் " இயற்கை வழிபாட்டை" விளக்க ஆகமம் "விக்கிரக வழிபாட்டை" விளக்குகின்றது. இவ் ரீதியில் இவ்விரண்டு நூல்களும் வேற்றுமைப்படுகின்றன.

இவ்விரண்டு நூல்களிலும் கூறப்படும் "கடவுட் கொள்கை பற்றி நோக்கும் போது வேதகாலத்தைப் பொறுத்தவரையில் இங்கு முன்னணியில் நிற்கும் தெய்வமாக "இந்திரன்" காணப்படுகின்றான். வேதத்தில் சிவன் நேரடியாக வழிபடவில்லை ஆயினும் "உருத்திரன் " என்ற பெயரில் இவன் வழிபடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் ஆகமங்களின் கடவுட் கொள்கையை நோக்கும் போது வேதத்தில் ஒரேவிடத்து அரிதாய்க் காணப்பட்ட "சிவ வழிபாடு" ஆகமங்களில் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. இதனை மாணிக்கவாசகப் பெருமான்

**வேதங்கள் ஜயாவென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே......**

என்று வேதத்தின் அறிவுத் தன்மையைக் கூறி **"ஆகம மாகநின் (று) அண்ணிப்பான் தாள் வாழ்க."** என ஆகமத்தின் பெருமையைப் பாடுகின்றார். இவ்வாறே அருணந்தி சிவாச்சாரியார்.

**"மறையினால் அயனால் மாலா மனத்தினால் வாக்கால்**

**மற்றும் குறைவிலா அளவினாலும் கூறொணாதாகி நின்றஇறைவனார்"** என வேத்தின் தன்மையைக் கூறி "அருளினால் ஆகமத்தே அறியலாம்"என ஆகமத்தின் சிறப்பையும் எடுத்துக் கூறிச் செல்கின்றார். இவ்வாறு தமக்குரிய தெய்வங்களை கூறும் அடிப்படையிலும் வேதமும் ஆகமும் வேறுபடுகின்றன.

அடுத்து நாம் நோக்க வேண்டியது "கிரியை வழிபாட்டு" முறைகளாகும். அதாவது வேத முறைப்படி தேவர்களை மகிழ்விற்பதற்காகவும் இறைவனிடம் இருந்து தாம் வேண்டிய வரங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் யாகசாலைகள் அமைத்து வேள்விகள் செய்து அங்கு ஆகுதிகளை சொரிந்து வழிபடுவதை வேதம் ஏற்றுக்கொள்கின்றது. ஆனால் யாகம் செய்து வழிபடும் முறை உண்டு. இவ்வாறு வழிபாட்டு முறையிலும் பலமாறுகள் காணப்படுகின்றன. அடுத்து வேதத்தில் யாக வழியாடு முதன்மை பெற்றதை போல ஆகமத்தில் கிரியை வழிபாடே முதன்மை பெறுகின்றது. அதாவது ஆகம முறைப்படி பூஜை மேற்கொள்ளும் ஆலயங்களில் மூன்று காலப்பூஜை, ஆறுகாலப் பூஜை பன்னிரெண்டு காலப் பூஜை என வரையறைக்கு உட்பட்டுக் காணப்படுகிறது. வேதத்தின் எவ்வாறு அக்கினி வழிபாடு முதன்மை பெறுவது போல ஆகமத்தில் அர்ச்சனை வழிபாடு சிறப்புப் பெறுகின்றது இவ்வகையிலும் வேதமும் ஆகமமும் சில ஒற்றுமையுடன் செல்கின்றன. என்பது நோக்கக்கூடியதாக உள்ளது.

தத்துவக்கருத்துக்களைக் கூறும் அடிப்படையில் பார்க்கும் போது வேதம் "ஏகம் ஸத்" அதாவது உள்ள பொருள் ஒன்று என கூற ஆகமம் இதற்கு மாறான கருத்துக்கூறும் போது சிவனே சைவத்தின் முழுமுதற்கடவுள் என்பதை ஏற்கின்றது அதாவது ஆகமம் கூறும் மகாவாக்கியம் சிவோகம் என்பது ஆகும். சிவலோகம் என்பது ஞான வழியிலே சாதகன் சிவனே நான் என்று பாவனை செய்கின்றான் என்ற தனது சித்தாந்த கருத்தின் ஊடாக சிவனை முதன்மைப்படுத்தி ஆகமம் காட்டுகின்றது.

அடுத்து இவை இரண்டும் மாறுபட்டு இடம் கோயிலமைப்பு பற்றிக் கூறும் கொள்கையில் ஆகும். வேதம் இயற்கை வழிபாட்டை முதன்மைப்படுத்தியமையால் கோயில் அமைக்கும் முறை பற்றி எதுவும் கூறவில்லை என்றே கூற வேண்டும் ஆனால் ஆகமத்தில் விக்கிரக வழியாடு முதன்மை பெற்றமையால் கோயிலமைப்பும் உன்னத நிலையில் பேணப்பட்டது. ஆகமத்தின் சிலாசங்கரணம் என்ற பகுதியில் கோயில் அமைப்பிற்கும் விக்கிரகம் அமைப்பிற்கும் கல்லை தேர்ந்தெடுக்கும் முறைபற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்வகையிலும் இரண்டும் மாறுபாட்டை தமதாக்கிக் கொள்ளுகின்றன.

வேதத்தில் வர்ணப்பாகுபாடு முதன்மை பெறுகின்றது வேதத்தின் பத்தாம் மண்டலமாகிய புருசசூத்தம் என்ற பகுதியில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய வர்ணத்தார் பற்றியும் அவரவரது கடமைகள் பற்றியும் கூறப்படுகின்றது. இங்கு வர்ணப்பாகுபாடு ஓர் இறுக்கமான நிலையிலேயே காணப்படுகின்றது. ஆனால் ஆகமத்தை பொறுத்தவரை அவ்வளவு தாரம் இறுக்கமானதாக காணப்படவில்லை என்றே கூறலாம். ஆகமத்தை பொறுத்தவரையில் யார் எக்குலத்தில் பிறந்தவர் என்றாலும் சிவனடியார் என்ற ரீதியில் அனைவருக்கும் சமன் என்று மதிக்கப்பட்டனர். எனவே இச்சூழ்நிலையிலும் வேதமும் ஆகமும் தம்முள் முரண்பட்டே செல்கின்றன.

இவை யாவற்றுக்கும் மேலாக வேதங்கள் வர்ணனை முதன்மைப்படுத்தி உலக ஈடேற்றம் பற்றிக்கூறும் ஆகமங்கள் சிவ சின்னங்கள், குருவழிபாடு, சங்கம வழிபாடு என்பவற்றை கூறி ஆத்மீக ஈடேற்றம் பற்றி விளக்கிச் செல்கின்றது. எனவே இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் வேதமும் ஆகமும் தம்முள் மாறுபட்டுச் செல்கின்றமை கண்கூடு.

ஆகமும் வேதமும் மேற்கூறிய விதத்தில் தம்முள் மாறுபடுவதை போல சில இடங்களில் ஒன்றுபட்டும் செல்கின்றன. அவை பற்றி நோக்கும் போது வேதமும் ஆகமும் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட நூல்கள் என்ற ரீதியில் ஒன்று படுகின்றன.

**"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"**

என்றே கூற்றின் மூலம் திருமந்திரம் மேற்சொன்ன கருத்தை உறுதிப்படுத்துகின்றது.

வேதத்தின் சிவவழிபாடானது உருத்திரன் என்ற பெயரில் ஒரேவிடத்தில் அரிதாய்க் கூறப்பட ஆகமத்தில் சிவவழிபாடு சிறப்பாக் பேசப்படுகிறது. எனவே சிவன் பற்றிக் கூறும் போது இவை ஒன்றுபடுகின்றன. அடுத்து வழிபாட்டு ரீதியில் நோக்கும் போது சில இடத்தில் வேதமும் இறைவனுக்கு நூறு திருநாமம் ஆயிரம் திருநாமம் இட்டு வழிபடும் முறை காணப்படுகின்றது. அதே போல ஆகமங்களிலும் சிவனுக்குப் பலபெயர்கள் மந்திரங்கள் சொல்லி வழிபடும் மரபு காணப்படுகின்றது. இந்த வகையில் வேதமும் ஆகமமும் ஒன்றுபடுகின்றன.

தத்துவக்கருத்துக்களை இரண்டு நூல்களும் கொண்டு விளங்குகின்றது. வேதத்தில் ஏகம் ஸத் என்ற சுலோகம் ஊடாக உள்ள பொருள் ஒன்று என விளக்கப்பட ஆகமத்தில் சிவோகம் ஊடாக ஞான வழியில் செல்லும் ஒருவன் சிவனே நான் என்று பாவனை செய்கிறான் என்ற கருத்தை முன்வைக்கின்றது. இவ் வகையில் தத்துவக்கருத்துக்கள் கூறப்பட்டமை கவனிக்கக் கூடியது.

இது மட்டுமின்றி மும்மலங்கள் புருடார்த்தங்கள் பற்றி ஆகமங்கள் விரிவாக விளக்கினாலும் வேதத்தில் இக்கருத்துக்கள் இலைமறைகாய் போல பலவாய் சுருங்கிய நிலையிலே இக் கருத்துக்கள் பல இடங்களிலும் பலவாறாய் சிதறிக் காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வேதமும் ஆகமமும் ஏதோவொரு வகையில் ஒன்று படுகின்றமை நோக்கற்பாலது.

இவை யாவற்றையும் ஒன்று திரட்டி நோக்கும் போது இறைவனால் அருளப்பட்ட பெருமைக்குரிய வேதமும் ஆகமும் தமது கருத்துக்களை கொள்கைகளை பூஜை முறைகளை வழிபாட்டு அம்சங்களை பல்வேறு அம்சங்களை கடவுட் கொள்கைகளை தத்துவக்கருத்துக்களை என பல்வேறு அம்சங்களை உள்ளடக்கி காணப்பட்டாலும் அவை விளக்கப்படும் ரீதியில் வேதமும் ஆகமமும் சில இடங்களில் ஒற்றுமைப்பட்டு பல இடங்களில் வேற்றுமைப்பட்டும் செல்கின்றன என்பது வெள்ளிடைமலை.

# தமிழ் மந்திரம் காட்டும் சமயம்

திருமந்திரம் ஒரு பெரிய கடல். அதன் ஒரு மூலையில் அள்ளிப் பருகியவற்றில் சிறுதுளிகளை உங்களுடன் பகிர்து கொள்ள ஆவல்.

தவயோகி திருமூலர் திருவாடுதுறையிருள்ள அரசமரத்தடியில் தியானத்தில் அமர்ந்தார். மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்த இவர் ஆண்டுக்கொருமுறை கண் விழிக்கின்ற போது கூறிய வாக்கியங்களே திருமந்திரமாகும். தமிழ் ஆகமம் என்றும் போற்றப்படுகின்றது. இதில் தமிழிலுள்ள வாழ்வியற் கருத்துக்கள் இருப்பதுடன் முக்திக்கு வழிகாட்டும் பெருஞானக் களஞ்சியமாகவும் உள்ளது. திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருமந்திரத்தின் பாடல்களில் கடவுள் வாழ்த்து, வேதாகமச்சிறப்பு திருமூலர் வரலாறு என்பனவும், முதலாம் தந்திரத்தில் உபதேசம் யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, கல்லாமை முதலியன கூறப்பட்டுள்ளது. இரண்டாம் தந்திரத்தில் அட்டவீரட்டம் இலிங்கபுராணம் பஞ்சகிருத்தியம் தர்பபக்கிரியை, சிவநிந்தை ஆகியன கூறப்பட்டுள்ளது. மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகம், அட்டமா சித்தியாகும். அட்ட சித்திகள் தீதகற்றல், நன்றாற்றல், இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை நிகைத்தல் என்பதாகும். நான்காவது தந்திரம் திருவம்பலச்சக்கரம், நவகுண்டம், வயிரவ மந்திரம் ஆகியனவும் ஐந்தாம் தந்திரத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆறாம் தந்திரத்தில் குரு தரிசனம் திருநீறு துறவு தவவேடம் ஞானவேடம் முதலியனவும் ஏழாந்தந்திரத்தில் சிவபூசை குருபூசை, சமாதிக்கிரியை பசு இலக்கணம் முதலியனவும் எட்டாம் தந்திரத்தில் அவத்தைகள் வாய்மை, அவாஅறுத்தல், பக்தி ஆகியனவும் ஒன்பதாம் தந்திரத்தில் பஞ்சாட்சரம் சிவதரிசனம், சூனிய சம்பாவுனைத் தோத்திரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளது.

சிவனை வழிபடுவது செந்தமிழனாலேதான் என்றும், அதுவே மாதவம் செய்த தென்திசைப் பிறந்தோர் பெறும் பயன் என்பதும் சிவபெருமானின் திருவுள்ள குறிப்புமாம் என்பதனை இப்பாடல் வரிகள் காட்டுகின்றது.

152 பின்னைநின் றென்னை பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்திலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

தமிழ் வழங்கும் நாடே சிவனடி சேர்ப்பிக்கும். அப்படிப்பட்ட நாட்டில் இருந்து சிவனை நினைக்காதவர்கள் மீண்டும் பிறப்பெடுப்பர். தவஞ்செய்தவர்கள் சிவனைச் சிந்திப்பர். திருமூலர் தனது தவவலிமையினால் இறைவனைத் தமிழால் பாடக்கிடைத்தது என்கிறார்.

183 தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தால் தானே.

கடவுள் அருளினால் சிவகுருவின் திருமேனியைக் காணலாம். சிவனின் திருப்பெயரினைத் திறம்பட நாளும் சொல்லுதல் நோன்பாகும். திருவைந்தெழுத்தாகிய சிவாயநம என்னும் மந்திரத்தை உள்ளத்திற் கொள்ள வேண்டும். காண்டல் செப்பல் புறம்பாகவும் கேட்டல் சிந்தித்தல் அகமாகவும் கொள்ள வேண்டும். குருவின் அருள் பற்றிக் கூறிய திருமூலர் அன்பின் பெருமையை இப்பாடலில் கூறுகிறார்.

257 அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்.
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

அன்பாகிய அருளும் சிவனும் மணியும் ஒளியும் போல ஒன்றேயாகும். அன்பே சிவமாகும். இவ்வுண்மையை பலரும் உணர்ந்திலர். அன்பே சிவம் என்று தெளிந்தவர்கள் சிவமாகவே இருப்பர்.

261 என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிய பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.

இப்பாடலில் உள்ளன்பு உருக்கி கள்ளமில்லாது தெள்ளத் தெளிவாகத் திருமுறைகளால் சிவனை ஏத்துங்கள். எந்த விதப்பற்று இல்லாமல் அன்பால் சிவனை என்றும் பாருங்கள் அப்போது நந்தியெம் பெருமான் அருள் கிட்டும் என்கிறார்.

275 ஈசன் அறியும் இராப்பகலுந் தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களைத்
தேசுற் றறிந்து செயலற்றிருந்திடில்
ஈசன் வந்தெம்மிடை ஈட்டி நின்றானே.

இரவும் பகலும் இடையறாது சிவனை நினைத்து வழிபட்டால் அவர்கள் எல்லாச் செயலும் சிவன் செயல் என்று அமைதியாக இருப்பர். அப்படியான பக்தியாளருடன் சிவன் சேர்ந்திருப்பார். இப்படி எம்முடன் ஒன்றாக இருக்கும் சிவனை மாயை மறைக்கின்றது என்கிறார்.

உள்ளத் தொருவனை உள்ளூறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே.

உயிருக்கு உயிராய் உள்ளத்துள் நீங்காது நிற்கும் சோதியான சிவன் ஒவ்வொரு உள்ளந்தோறும் விலகாது நின்றருள்கிறான். சிவன் உடனாக இருந்தாலும் உயிர்தன் சிற்றறிவினால் சிவனைக் காணமாட்டாமல் இருக்கின்றன. இன்றைய வறட்சி கொடுமைகள் யாவற்றிற்கும் காரணங் கூறுகிறார் திருமூலர்.

500 ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான் திருக்கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

இன்று இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முனேஸ்வரம், நகுலேஸ்வரம் இவ்வளவு சிவன்கோயில்கள் இருந்தும் வரட்சியும் நோயும் கொடுமைகளும் தலை விரித்தாடுகின்றன. அடுத்த பாடலிலும் இதனையே வலியுறுத்துகின்றார். சூலை நோயால் பாதிக்கப்பட்ட மன்னனை சிறுவனாக இருந்த திருஞானசம்பந்தர் தேவாரம் பாடி நீறு போட்டு மன்னன் நோயை நீக்கினார். சொர்க்கபூமியிலிருந்து கொண்டு கடவுளை மறந்து செயல்படுவதனால் என்றும் துன்பமே.

501 முன்னவ னார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னார்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினி
என்னருந் நந்தி எடுத்துரைத் தானே.

பூசைகள் ஒழுங்காக இல்லாவிட்டால் தீங்குகள் விளையும் என்றார் திருமூலர். ஆனால் இன்று கோயில்கள் சிதைக்கப்பட்டு சிலைகள் கடத்தப்படுகின்றது. "அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்ற முதுமொழிக்கிணங்க எமது கோயில்கள் திரும்ப எழும் அமைதி கிடைக்கும் என்று நம்புவோம். அது மட்டுமன்று அடுத்த பாடலில்

515 பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டென்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈதுசதா நந்தி ஆணையே.

நாடு விட்டு நாடு வந்து இங்கும் கோயில்கள் அமைக்கப்பட்டு எமது சமயம் உலகம் முழுவதும் பரவி இருக்கின்றது. "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" சமயம் வளர்ந்தாலும் எமது சமுதாயம் குறைந்த வயதிலேயே உயிரைப் போக்குகிறார்கள். அவர்கள் தம்மைச் சிந்தித்து தன்னைப் பாதுகாத்து எப்படி வாழலாம் என்பதை இப்பாடலில் பார்க்கலாம்.

552 எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டன வஞ் செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே.

எங்கே இருந்தாலும் பிராணாயாமப் பயிற்சியில் தலை சிறந்தவனாகலாம். இடைகலை, பிங்கலை ஊடாக மூச்சை எடுத்து விடுவதும் கும்பகத்து சேர்க்கப்படும் ஒட்சிசன் உடலைப் பாதுகாப்பதுடன் இறைவனும் எம்முடன் இருக்கிறார். உயிர் பாதுகாப்பதுடன் உடலையும் பாதுகாக்க வேண்டும் என்பதை திருமூலர் சில பாடல்கள் மூலம் உடம்பின் பாதுகாப்பைப் பற்றி சில பாடல்கள் கூறியிருக்கிறார்.

704 உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்றும்.

705 உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான்னென்று
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே.

உடம்பின் அருமையையும் அதனை எப்பவும் பாதுகாக்க வேண்டும் என்பதுடன் ஞானத்தைப் பெற வேண்டுமானால் உடம்பு நன்றாக இருக்க வேண்டும். அப்போதுதான் உடலிலுள்ள உறுபொருளாகிய சிவனை காணமுடியும்.

826 தெளிதரும் இந்தச்சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊன மொன்றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களி தருங் காயங் கனகமதாமே.

தெளிவைத் தருகின்ற இந்தச்சிவநீர் ஆகிய அமிழ்தத்தைப் பருகினால் ஓராண்டுப் பயிற்சியில் சிவனொளி மேலோங்கும் உயிர்ப்பில் மனமும் ஒடுங்கும். உடல் பொன்மேனியாகும்.

827 நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயிராமே.

829 அளக நன்னுத லாயோ ரதியங்
களவு காயங் கலந்த இந்நீரில்
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே.

830 வீரமருந்தென்றும் விண்ணோர் மருந்தொன்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள் செய்தான்
ஆதி மருந் தென்றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே

சிறுநீர் எப்படி எம்மைப் பாதுகாக்கின்றது என்பதைப் இப்பாடல் காட்டி நிற்கின்றது. உடம்பிலுள்ளே உறுபொருள் கண்ட திருமூலர் புறச் சின்னங்களாகிய திருநீறு, உருத்திராட்சம் பற்றியும் கூறுகின்றார். ஔவையார் "நீறில்லா நெற்றி பாழ்" என்றார். "மந்திரமாவது நீறு" என்றார் திருஞானசம்பந்தர். இறைவனே பூசிக்கொள்ளும் உடலுக்கு கவசமாகிய திருநீற்றைத் தடையில்லாமல் உடலுக்கு பூசி வந்தால் தீவினைகள் விலகும். மோட்சங் கிடைக்கும். இறைவனது அழகிய திருவடிகளை அடையலாம்.

1638 கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாதில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வாரே.

இன்று திருநீறு பூசுவதற்கு வெட்கப்படுகிறார்கள். ஆனால் அதன் நெருமை அறிந்தால் இப்படி வெட்கப்படமாட்டார்கள். நடராசர் வடிவமே பஞ்சாட்சர வடிவமாகும். "சிவாயநம" எனும் பஞ்சாட்சரத்தை உணர்ந்து ஓதினால் இறைவன் நேரடியாகக் கருணை புரிந்து அருள் செய்வான் பஞ்சாட்சர மந்திரங்களின் மகிமையை பின்வரும் திருமந்திரப் பாடல் எடுத்து இயம்புகிறது.

960 நம்முதல் ஓர் ஐந்தின் நாடும் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முதல் உள்ளே தெளிய வல்லார்கட்குத்
தம்முதல் ஆகும் சதாசிவம் தானே.

எமது இன்றைய கஷ்டமான காலங்களில் "சிவாயநம" என்னும் மந்திரத்தை நினைத்துக் கொண்டு சென்றால் பாதுகாப்பாகவும் இருக்கும். மனதை உயர்த்தி மனிதரை தேவராக்குவதுடன் உயிருடன் இரண்டறக் கலந்து நிற்கும் சிவனை வெளிகாட்டுவதும் மந்திரமாகும். மனிதன் முழு மனிதனாக வாழ்வதற்கு உடற்பலம், மனோபலம், ஆத்மபலம், மூன்றும் அவசியம். தீயவற்றை விலக்கி நல்லவழியில் செய்வதற்கு மந்திரம் வழிகாட்டுகின்றது . "அரகர அரகரா" அரோகரா என்ற சொல்லின் பெருமையை திருமூலர், இப்பாடல் காட்டி நிற்கின்றது.

896 அரகர என்ன அரியஅதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே

அரகர என்று உள்ளன்புடன் ஓதுவார்க்குத் திருவருள் துணை முன்னிற்பதால் செயற்கரிய செயலென்று ஒன்றும் இல்லை அரகர என்று ஓதச் சிவவுலகப் பெரும் பேற்றினராவர். அரகர என்று ஓத பிறப்பற்றுச் சிறப்புற்றுப் பெருவாழ்வு வாழ்வர்.

1418 நாடு நகரமும் நாற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக கொள்வேனே.

யாத்திரை செய்வதைப்பற்றி இப்பாடல் குறிப்பிடுகின்றது. நாட்டின் நிலைமையினால் காசியிலிருந்து இராமேஸ்வரம் வரையும் உள்ள சிவன் கோயில்கள் செல்லக்கூடியதாக இருந்தது. திருவண்ணாமலை சிதம்பரம் கும்பகோணம் கும்பமேளா நடைபெற்றபோது அதில் கலந்து கொள்ள திருவருள் கிடைத்தது. அது மட்டுமன்று சிவனொளிபாதமலையில் சென்று வழிபடக் கிடைத்தது. அது மட்டுமன்று சிவனொளிபாதமலையில் சென்று வழிபடக் கிடைத்தது. திருக்கோணஸ்வரக் கோயிலில் தொண்டு செய்ய பாக்கியங் கிடைத்தது. அது மட்டுமன்று பாடசாலைக் காலங்களில் எமது மறைந்த அதிபர் செல்வி சரவணமுத்து என்பவர் ஒவ்வொரு சிவராத்திரிக்கும் எங்களை அழைத்துச் செல்வார். ஒவ்வொரு முறையும் சென்று பாலாவியிலிருந்து குடங்களில் நீர் எடுத்து வந்து அங்குள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகம் எமது கையினால் செய்யும் பெரும்பேறு கிடைத்தது. எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். மந்திரங்கள் போன்று முத்திரைகளும் எம்மை உய்விக்கும் இதனை இப்பாடல் கூறுகின்றது.

1586 முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின் பால்
வைத்து கலை கால் நான் மடங்கான் மாற்றி
உய்த்துவத் தானந்தத்தொன் குரு பாதத்தே
பெத்த மறுத்தோர் பிறந்திறவாரே.

1602 சிவனரு ளாற்சிலர் தேவருமாவர்
சிவனரு ளாற்சிலர் தெய்வந் தோடொப்பர
சிவனரு ளால்வினை சேரகிலாமை

சிவனருள் கூடின் அச்சிவலோகமாமே.டி படைத்தல், காத்தல், துடைத்தல், விண்ணாடுபுரத்தல் முதலிய இறைமைத் தொழில்களை ஆருயிர்கள் சிவன் அருளால் புரியும் செயல்கள் அவர்களை தேவர்களாக மாற்றுகின்றது. சிவனருளால் தெய்வமாக மாறுகின்றனர். வினைகளும் சேரமாட்டாது. சிவபெருமான் திருவடி கூடப்பெற்றால் சிவவுலகு வாழ்வு சேர்வதுறுதி.

1787 விளக்கினை யேற்றி வெளியை அறிமின்
விளக்கினை முன்னே வேதனை மாறும்
விளக்கினை விளக்கும் விளக்குடையார்கள்

விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

சிவனை உணருங்கள் ஒளி முன் பிறவி காரணமாக ஏற்பட்ட துன்பங்கள் யாவும் நீங்கும். திருவருளாகிய இயற்கை அறிவு விளக்கைப் பெற்றுள்ளவர்கள் விளக்கினைத் திருமேனியாகக் கொண்டு ஒளிர்ந்து விளங்கும் விளக்காகிய சிவத்துள் ஒடுங்கிச் சிவமாய்த் திகழ்வர்.

1792 உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் கானா மணிவிளக்கே.

உள்ளமாகிய நெஞ்சமே திருக்கோயிலாகும். ஊனாலாகிய உடம்பும் கோயிலாகும். சிவனுக்கு வாய்மை ஐந்தெழுத்து ஓதுவதாகிய வாய் கோபுர வாயிலாகும். ஐம்புலன்களும் அழகுமிக்க மணிவிளக்கே.

1979 சீவ னெனச் சிவ னென்னவே றில்லை
சீவ னார் சிவ னாரை யறிகிலர்
சீவ னார் சிவ னாரை யறிந்தபின்
சீவ னார் சிவ னாயிட்டிங் கிருப்பாரே.

“சீவ னென்னச் சிவனென்ன வேறில்லை” என்பதற்கிணங்க சிவனும் சீவனும் ஒன்றாகும். ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்ததில்லை. ஆனால் திருவருள் கிட்டினால் சிவனை அறியலாம்.

2264 வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளியாமே.

செல்லும் இடத்து கோபப்பட வேண்டாம். கோபத்தை விடுத்து உங்கள் முழு சிந்தையையும் சிவனிடத்தில் செலுத்துங்கள் அத்துடன் தொண்டு புரிந்தால் அகங்காரம் அற்று திருவருள் பிறக்கும்.

2667 சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவ சிவ என்றிடத் தேவருமாவர்
சிவ சிவ எனச் சிவகதி தானே.

தீவினையாளர் சிவசிவ என்று ஓதமாட்டார். தீவினை இல்லாமல் போக வேண்டுமானால் இடையறாது சிவசிவ என்று ஓதவேண்டும். சிவசிவ என்று ஓதிக்கொண்டிருந்தால் தேவருமாவர். இப்பாடலை பன்னிரண்டு முறை ஓதினால் நூற்றெட்டுச் சிவம் ஓதியதாகும்.

2669 சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே யடினமய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தே
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

“சிவாயநம” என ஓதத் தம் சித்தத்தினைச் சிவன் உறையும் இடமாக்க வேண்டும். தொடர்ந்து சிவசிவ என்று எண்ணிக் கொண்டிருப்பதனால் சித்தம் ஒடுக்கும் நிலையாகும். எத்தகைய இடர்கள் வரும்போது இத்திருவைந்தெழுத்தினை ஓதி வந்தால் இடர்கள் நீங்குவது மட்டுமன்று உண்மையறிவு ஏற்படுவதுடன் பேரின்பப் பெருவாழ்வு பெறலாம்.

2674 எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமாயிருத் தலால் எங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன் விளையாட்டதே.

சிவனுக்கு திருமேனி சிவசக்தியாகும். சிவனின் அருளாற்றல் எங்கும் நீங்கமற நிறைந்துள்ளது. சிவன் செய்யும் தொழில்கள் யாவும் சிவசக்தியின் வாயிலாகவே தொழிற்படுகின்றது.

எங்கும் சிவமாகவே இருத்தலால் எல்லா உயிர்களும் எல்லா உலகெங்கும் எல்லா உலகியற் பொருட்களும் சிவனனிறையில் சேர்ந்துள்ளது. எல்லாம் சிவம் மயமே. சிவனை நம்பினார்க்கு ஞானம் குரு மூலமாகவோ இறைவன் மூலமாகவோ கிட்டும் அஞ்ஞானமாகிய நான் ஒரு சீவன், உடம்பே ஆத்மா, கடவுள் உலகம் சீவன் எல்லாம் வேறானவை, நான் கடவுள் அல்ல உடல் ஆத்மா அன்று எது என்று அறியாமல் இருத்தல் போன்றவற்றால் தடுமாடுகின்றான். இத்தடுமாற்றத்திலிருந்து விடுபடுபவனே ஞானத்தைப் பெறுகின்றான். தன்னுடனும் ஏனைய உயிர்களிடத்திலும் எல்லா உலகத்திலும் இறைவனைக் காண்பவன் ஞானியாகிறான். ஞானியாகும் போது என் உடலும் அதன் உறுப்புக்களும் என் ஆழ்மனத்தின் முடிவில்லா சக்தியினால் உருவாக்கப்பட்டவை என்னைக் குணப்படுத்த வேண்டும் என்று அதற்குத் தெரியும் அதனுடைய ஞானம் எனது அனைத்து உறுப்புக்களையும் திசுக்களையும் தசைகளையும் எலும்புகளையும் வடிவமைத்தது. எனக்குள் இருக்கும் முடிவில்லாக் குணமாக்கும் சக்தி என் உடலின் ஒவ்வொரு உயிரணுவையும் உருமாற்றி என்னை முழுமையானவனாகவும் சீரானவனாகவும் ஆக்குகிறது. இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் குணமாதலை நான் உணர்கிறேன். என்னுள் இருக்கும் படைப்புச் சக்தியின் வெளிப்பாடுகள் வியக்க வைப்பவை. உண்மையில் எனது அன்னையின் அறிவுரையும் எனது கடந்தகால நிலமைகளும் சிவனை எந்நேரமும் நினைத்துக் கொள்வேன். இப்போது சிவன் என்னிருந்து வழிகாட்டுவதாகவே நினைக்கிறேன்.

திருமதி இராசேஸ்வரி ஈஸ்வரஞானம்.

# SYSTEMATISATION OF WORSHIP IN THE SAIVA AGAMAS

- A STUDY -

DR. R. GOPALAKRISHNAN

PROF. & HEAD, DEPT.OF PHILOSOPHY, UNIVERSITY OF MADRAS, CHENNAI—600 005

Saiva religion and philosophy recognize and deeply rely upon certain fundamental texts, treatises, devotional outpourings and revelations both in Sanskrit and in Tamil. In the former language we have the Vedas, Puranas and Agamas and in the latter we have the Sathira and the Thoathira literature. The latter scriptures invariably refer to the former especially the Vedas and the Agamas are revealed by the gracious Siva for the benefit of the devotees and the seekers after Truth for worship in a systematic fashion of the Holy Feet of Siva in the temple and obtain wisdom to attain Enlightenment. Though both the Vedas and the Agamas are the revelations of Siva, the former is the generic literature while the latter the specific one. The reason is that the Vedas contain prescriptive and injunctive statements, while the Agamas envisage explanatory and descriptive statements.

Thirumular elucidates that the Lord with His consort revealed through His Fifth face the twenty eight Agamas being enjoyed by the twenty eight enlightened persons which extensively deal with the three realities of Saiva faith. The number of the holy texts granted by the gracious Lord is beyond calculations. The celestials who live through the pure maya in the sky region also expound the grandeur of Sivaperuman through this text. Such a grand scripture of Siva's benediction can seldom be understood even by the celestials. If we do not understand the merit of this text which paves the way for realizing the Truth of the true substance, then the immeasurable revelations would remain like the letters written on water. Sivaperuman, as the transcendental and the immanent being abundantly extended the wisdom of His holy feet to the genuine aspirants through this sacred text. He also endeavoured to substantiate the truth that of all the virtues pertaining to Siva, the worship of Siva is the most prominent one in this world. He Himself performed worship as to be sincerely, seriously and systematically adored by His ardent devotees in in this venture, Nandhi Dheva also assured them redemption through the agamic adoration. All the divine deities had handed over the texts which are nine, but totally there are twenty eight Agamas. These texts are devoid of delusion and consist of three major divisions of karma kaandam, upasanai kaandam and gnana kaandam. They respectively point out the Saiva temples, idols, daily celebration, special festivals etc. (Thirumanthiram—68-74)

According to Professor Devasenapathi, the term 'Agamas' are so called because 'a' means Sivagnana, 'ga' means moksha sadhana and 'ma' means mala nasam. Again,'a' represents pathi, the Lord, 'ga' indicates pasu, the soul and 'ma' refers to pasam, the bonds. Further, the essential requisites of significant utterance such as expectancy, compatibility, juxtaposition and knowledge of the intention of the speaker fall into three divisions: tantra, mantra and upadesa.

2. The tantra part of the Agamas consists in understanding the primary and secondary signification of words and the existence of objects dealt with in the karma kaandam by formulating in a single sentence the essence of the text. These tantric utterances teach Vedic ritual like agnishtoma sacrifices and agamic ritual like Sivapujai. This procedure comprises of cariyai and kiriyai stages of worship.
3. The mantra part of the Agamas relates to the yoga-stage of worship and it helps the devotee by instructing him the ways of meditation, the seer of the hymn, the metre, the

presiding deity, the essence of the hymn, and the application of the hymn relative to the worship. This method enables the devotee to understand that in the contemplation of the self as the Lord whom it worships the above mentioned ways.

4. The upadesa part of the Agamas deals with the existence and nature of the three truths---Pati, pasu and pasam. The Pati is the Lord whose nature is Intelligence, beginning less and is above birth and death; the pasu has a body and is subject to birth and death; the pasam or the bonds are responsible for birth and death.

The followers of certain sections of Indian Philosophy hold that Vedas alone are valid and not the Agamas for the following reasons: Vedas are not of human origin and have no author at all; they are accepted by the majority of worthy people. The agamas have an author and hence they are not eternal and free from faults; they are not based on the Vedas and are not accepted by the majority of worthy people; there are contradictory statements in the Agamas.

But the Siddhantin maintains that since the Agamas are based on the Vedas of the aforesaid nature, they are also valid. As the Vedas are composed of sounds, they are not eternal and as they are included in the world, they are also liable to destruction. Only figuratively they are called as eternal since they are created by Siva the highest reality. His work does not depend upon similarity or continuity for its permanence. According to the Siddhantin, Siva is the highest and, He is the most trustworthy. The trustworthiness and pervasiveness increase when we go higher and diminish as we come down. All the scriptures which do not conflict with the Sivagamas are valid; and all those that conflict with them are invalid. (Devasenapathi, Saiva Siddhanta, pp. 37--43).

Another controversy with regard to the composition of the Agamas is in which language they have been delivered? According to some authoritative scholars of the Tamil tradition, they have been originally come into existence in Tamil language which also has been authored and governed by Lord Siva. Later they have been translated into Sanskrit which are randomly available now, while the original Tamil Agamas were either lost in the midst of history or destroyed deliberately. The Agamas give room for Agamic Saivism which is exclusively of the Tamils and they had existed mostly in South India, in the Tamil country in palm leaf manuscript book form. The Saiva priests known as the Sivacacharyas preserved the Agamas since they had specialized in these scriptures and also had been entrusted with the assignment of organizing and performing the consecration and the congregational worship (parartha pujai) in the Siva temples over two and a half millennia.

Further, all the Agama manuscripts are available in the script known as 'grantha', one which had been invented by the Tamil people for writing their Sanskrit scriptures, more than fifteen hundred years ago. The Vedas have been written in the nagari script which is of later origin and the grantha script was much earlier than the nagari one. The grantha script was not in use in the north, and the devenagari script of the north was unknown in the South till the beginning of the twentieth century. Since Sankara did not deal with the Agamas as he utilized the Upanishads, his followers also deemed the Agamas to be alien to them. The Agamas deal with upasana whereas the philosophy of Sankara, an Absolute Monism, did not patronise upasana. "The agamas though written in Sanskrit were considered to highlight the Tamil (often called the Dravida) culture and so the Aryans dominated north would not recognise this Dravida culture. But the Tamilians, though they were the most ancient people among the Dravidians and the most ancient people of the whole of bharat, meekly submitted to the

supremacy of the Aryan views and did not boldly champion their own cultural continuity and great uniqueness." ( Arunachalam, M., The Saivagamas, p.ix)

Unlike the Vedic Aryans, the Saiva Agamas concerned themselves with all society, with the common man and his needs, both social and spiritual. The Agamas generally consist of four parts:

1. Cariyai—the method of physical worship in the temple, cleaning the temple premises offering objects of worship like flowers etc.
2. Kiriyai—the method of constructing temples and performing rituals with utmost devotion etc.
3. Yogam—the method of performing internal adoration through physical, moral, psychological and mystical by installing Siva in the temple of the heart.
4. Jnanam—the method of worship through wisdom with pure devotion by invoking the grace of Siva.

The Agamas serve as the encyclopaedia of religious life, particularly in the realms of devotion, dedication, service, sacrifice etc. A study of the Agamas is most valuable for understanding the scriptural sanction and regulation for all that the temple stands for, and for helping their upkeep in all their varied religious and cultural aspects.

# சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் தோன்றிய வரலாறு

நடராசா சச்சிதானந்தன்



1997ம் ஆண்டு தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் உலக சைவப் பேரவையின் ஆதரவில் நடைபெற்ற உலக சைவ மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகளாரைச் சந்தித்தேன். அச்சமயம் அவரிடம் "பிரித்தானியாவில் சைவ மாநாடு ஒன்று நடாத்த விரும்புகின்றேன். அதில் தாங்கள் வந்து தலைமைதாங்க வேண்டும் என்ற விருப்பத்தினைத்" தெரிவித்தேன். அதற்கு அடிகளார் சம்மதம் தெரிவித்தார்கள்.

அக்காலத்தில் இலண்டனிலுள்ள கோயில்களில் எமது சமய விரத நாட்களும், விழாக்களும் வெவ்வேறு நாட்களில் நடந்து வந்தன. இதனால் சைவ மக்கள் குழப்பம் அடைந்திருந்தனர். இப்பிரச்சனையைத் தீர்க்கும் பொருட்டு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் எனச் சிந்தித்தேன்.

இக்கருத்தினை அமரர் ஏ. ரி. எஸ். இரத்தினசிங்கம் (விம்பிள்டன் ஸ்ரீ விநாயகர் ஆலயம்) அவர்களையும், திரு. நா. சீவரத்தினம் (இலண்டன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்) அவர்களையும் சந்தித்து இவ்விடயத்தைத் தெரிவித்திருந்தேன். இருவரும் வேண்டிய ஒத்துழைப்புத் தருவதாக ஊக்கமளித்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி ஆலயம், உயர்வாசற்குன்று முருகன் ஆலயம், ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம், இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம், இலண்டன் சிவன் கோயில் ஆகியவற்றின் அறங்காவலர், நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தேன்.

இலண்டன் முருகன் அலயத்தைத் தவிர ஏனைய கோயில்களின் அறங்காவலர்கள் இலண்டன் சிவன் கோயிலில் நடந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர். இக்கூட்டத்திற்கு திரு. இரத்தினசிங்கம் அவர்கள் தலைமை தாங்கினார்

இக்கூட்டத்தில் பிரித்தானிய சைவத்திருக்கோயிலகள் ஒன்றியம் உருவாக வேண்டும் என்னும் தீர்மானத்தை திரு. இரத்தினசிங்கம் அவர்கள் முன்மொழிந்தார். திரு. சீவரத்தினம் அவர்கள் வழிமொழிந்தார்கள்.

அன்றைய தினம் ஒன்றியத்தின் தலைவராக திரு. இரத்தினசிங்கம் அவர்களும், செயலாளராக திரு. ந. சச்சிதானந்தன் அவர்களும், பொருளாளராக திரு. சொ. கருணைலிங்கம் அவர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் ஒன்றியம் சிவசக்தி வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டியை உபயோகிப்ப தெனவும், வருடாவருடம் சைவ மாநாட்டினை நடத்த ஏற்பாடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்துக்கமைய 1998 ஜூலாய் மாதத்தில் முதலாவது மாநாடு நடைபெற்றது. கற்போர்டில் அமைந்த லூயிசம் தியேட்டரில் இருநாட்கள் நடைபெற்ற மாநாட்டுக்கு **தினமும் 7.50 பவுண்ட்ஸ் கட்டணம் செலுத்தி** மக்கள் கலந்து கொண்டனர். அத்துடன் மாநாட்டின் பெரும்பகுதிச் செலவை திரு. இரத்தினசிங்கம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இம்மாநாட்டில் தவத்திரு. இராமசாமி அடிகளார், தஞ்சாவூர்ப் பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர். கருணாகரன், பேராசிரியர் லோகநாதன் - மலேஷியா, பேராசிரியை சரஸ்வதி இராமநாதன (தமிழ்நாடு), திருமதி. வசந்தா வைத்தியநாதன் (இலங்கை), தமிழருவி சிவகுமாரன் (இலங்கை) உட்பட் மற்றும் பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

மாநாடு இரு தினங்களும் சிறப்பாக நடைபெற்றன. மாநாட்டில் - மலர் வெளியீடு, பேச்சுப் போட்டிகள், தமிழ்ப் பாடசாலைகளின் கலை நிகழ்ச்சிகள், போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

கடந்த 17 மாநாடுகளில் இலங்கை, இந்திய ஆதீன கர்த்தர்கள், சைவத் தமிழ்ப் பேறிஞர்கள். சைவ இலக்கிய மேதைகள். அறிஞர்கள் உலகின் பல பகுதிகளிலுமிருந்து வந்து மாநாடுகளைச் சிறப்பித்துள்ளனர்.

அன்று **ஆறு** திருக்கோயில்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றியத்தில் இன்று 21 கோயில்கள் அங்கம் வகிப்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். ஒன்றியத்தின் வளர்ச்சிக்குக் கடந்த மூன்று வருடங்களாக ஒன்றியத் தலைவராகப் பணயாற்றிய வோல்த்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலய அறங்காலர்

திரு. மு. கோபாலகிருஷ்ணன் அவர்கள் மேற்கொள்ளும் பணி பராட்டுதற்குரியது.

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் தனது பணிகளை மேன்மேலும் சிறப்புற ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் துணைநிற்பானாக.

# எமது விரதங்களும் விழாக்களும்

"சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம்" இந்நாட்டில் உள்ள சைவத் திருக்கோயில்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் விரதங்களை அனுஷ்டிக்கவும், விழாக்களை நடத்தவும் வேண்டும் என்னும் நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

ஒன்றிய ஆரம்பக் கூட்டத்தில் எமது கோயில் அறங்காவலர் சபை, நிர்வாக சபை அங்கத்தவர்கள் பங்குபற்றி இருந்தனர். இக் காரணத்தினால் **"சைவத் திருக்கோயில்கள் ஒன்றிய ஆரம்ப உறுப்பினர்"** என்ற பெருமை எமது கோயிலுக்கு உண்டு.

இக்கூட்டத்தில் இலண்டன் நேரத்திற்கெனக் கணிக்கப்பட்ட சிவ சக்தி வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டியை உபயோகிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அதே காலத்தில் இந்நாட்டிற்கெனக் கணிக்கப்பட்ட திருக்கணித பஞ்சாங்கமும் வினியோகத்தில் இருந்தது. சிவசக்தி வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிக்கும், திருக்கணித பஞ்சாங்கத்திற்கும் விரத நேரங்களில் எந்தவித மாறுபாடுகளும் இருக்கவில்லை.

நாட்காட்டியை அச்சிடுவதற்கு 1994ம் ஆண்டில் ஒன்றியத்திற்குச் சிவசக்தி வாக்கிய பங்சாங்க நாட்காட்டிக் கணிப்புக் கிடைக்கவில்லை. அதனால், மட்டுவில் திருக்கணித பஞ்சாங்க கணிதரைத் தொடர்புகொண்டு அவர்களின் கணிப்புப்படி 1995ல் நாட்காட்டியை வெளியிட்டது.

எமது கோயிலும் பல வருடங்களாக திருக்கணித பஞ்சாங்க கணித நாட்காட்டிகளை உபயோகித்தும் விநியோகித்தும் வந்தது.

எதிர்பாராத விதமாக எமது கோயில் நிர்வாக சபை, இரகுநாத ஐயர் வாக்கிய பஞ்சாங்கத்தினை உபயோகிப்பதென முடிவுசெய்து நாட்காட்டிகளையும் அச்சிட்டு வெளியிட்டது.

இதனால் சைவ மக்கள் ஒரே நேரத்தில் விரதங்களை அனுஷ்டிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டனர். இந்நிலை எனக்குக் கவலையாக இருந்தது.

தற்பொழுது ஒன்றியத்தில் எமது கோயிலையும் சேர்த்து 21 கோயில்கள் அங்கம் வகிக்கின்றன.


வாக்கிய பஞ்சாங்க கணிதர் (கொக்குவில்) 2018ம் ஆண்டிலிருந்து இந்நாட்டுக்காக கணிக்கப்படும் தமது பஞ்சாங்கத்தில் மாற்றங்கள் வரவிருப்பதாக எமது கோயிலுக்கு அறிவித்துள்ளார். பெரும்பாலும் இக்கணிப்புக்கள் திருக்கணிதக் கணிப்புக்களோடு ஒத்ததாக இருக்குமெனத் தெரிவித்துள்ளார்.

இக்காரணங்களினால் சைவத் திருக்கோயில்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் விரதங்களை அனுஷ்டிக்கவும், விழாக்களை நடத்தவும் வாய்ப்பாக இருக்கும்.

கலாநிதி அப்பையா தேவசகாயம்
இணை ஸ்தாபகர்
**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்**

# பஞ்சாங்கம் என்பது என்ன?

ஜோதிட கலாநிதி
அமரர். சிவனாசி. சிதம்பரநாதக்குருக்கள்



பஞ்சாங்கம் என்பது என்ன? பஞ்சாங்கம் எவ்வாறு கணிக்கப்படுகின்றது? அது எவ்வகையில் எம்மைப் பாதிக்கின்றது? என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் 1987இல் மட்டுநகரில் நிகழ்ந்த சோதிட மாநாட்டில் குருக்களவர்கள் சமர்ப்பித்த கட்டுரைத் தொகுப்பு இங்கு தரப்படுகின்றது.

## பஞ்சாங்க அடிப்படைகளும், வேறுபாடுகளும்

ஜோதிஷ் என்ற வடமொழிச் சொல் ஜோதிஷம் என்றாகி தமிழ் மொழியில் சோதிடம் என வழங்கப்படுகிறது. ஜோதி என்பது ஒளி. ஜோதிஷம் என்பது ஆகாயத்தில் ஒளியுடையனவாகப் பிரகாசிக்கும் சூரியன், சந்திரன் கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலிய ஒளியுடைய வானஜோதிகளையும் அவற்றைப் பற்றிய விஞ்ஞான கணிதங்களையும் குறிக்கும். இதனால் இது வேதாங்க ஜோதிஷம் எனப்படும். காரணம் வேதாங்கங்கள் ஆகிய சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தம் என்னும் ஆறினுள் சோதிடமும் அடங்குகின்றது. சோதிடம் வேதபுருஷனின் கண்கள் என வருணிக்கப்படுகின்றது. உடம்புக்குக் கண் எவ்வளவு அவசியமோ அவ்வளவு முக்கியம் வாய்ந்தது வாழ்க்கைக்குச் சோதிடம்.

சோதிடமானது கணிதம், சங்கியை என இரு பிரிவுகளை உடையது. கணிதமானது வானஜோதிகளின் நிலை, அசைவு முதலியவற்றை அவதானித்துக் கணிக்கப்படுவது. சங்கியை என்பது சுத்தமாகக் கணிக்கப்பெற்ற கிரக நிலைகள், அவற்றின் பார்வைகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு நிகழவிருக்கும் பலாபலன்களைக் கூறுதாகும். இது தற்காலத்தில் மானிட ஜோதிடம், உலக ஜோதிடம், கைரேகை சாஸ்திரம், எண் சாஸ்திரம் எனப் பலவாறாக வழங்கப்படுகிறது.

மனிதன் ஒரு பாதையில் செல்வதற்கு அவனுடைய கண்களானவை எவ்வளவு முக்கியமாக உபயோகிக்கப்படுகின்றதோ அதேபோல மனித வாழ்வில் நிகழவிருக்கும் பலாபலன்களை அறியும் சோதிடத்திற்குக் கணிதம் மிகவும் முக்கியமானது. நடந்து செல்லும் ஒருவனுக்கு கண் சரியான பார்வையில் இல்லாவிடத்து அவனடைய பிரயாணம் எவ்வளவு சிக்கலை உண்டு பண்ணுமோ அதேபோல் சோதிட கணிதமும் சரியாக இல்லாவிடத்து அதை அனுசரித்துக் கூறப்படும் பலாபலன்களும் வாழ்வில் பல இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதைச் சொல்லாமலே விளங்கும். உதாரணமாக ஒரு பஸ்சில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் உயிர் சாரதியின் கண்களிலேதான் தங்கியுள்ளது. பஸ்ஸைச் செலுத்தும்போது சாரதி சற்று கண்ணயர்ந்து விட்டால் அதன் நிலமை...? மணிக்கூட்டை எடுத்துக் கொள்வோம். நாம் அன்றாட கருமங்களைச் செய்வதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது கடிகாரமே. குறிப்பிட்ட ஒரு பிரயாணத்துக்கோ அல்லது ஒரு கருமத்துக்கோ செல்வதற்கு அந்த மணிக்கூட்டை நம்பியே செயற்படுகிறோம். மணிக்கூடு சரியான நேரத்தைக் காட்டாதிருந்தால் அதை அனுசரித்து மேற்கொள்ளும் கருமங்கள் விபரீத பலனையே தரும். பிழையான மணிக்கூட்டை நம்பி எக்கருமத்தையும் மேற்கொள்ள முடியுமா?

ஜாதகம் கணிப்பதற்கு வேண்டிய கிரகநிலைகள், கிரக உதயாஸ்தங்கள், சஞ்சாரங்கள், வக்கிரகங்கள் முதலிய பல தரவுகளை நமக்குத் தருவது பஞ்சாங்கமே. விரதாதி விசேடங்களுக்குத் தேவையான வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து உறுப்புக்களை உள்ளடக்கும் உறுப்புக்களுக்கு பஞ்சாங்கம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. ஆனால் இந்த ஐந்து அங்கங்களுடன் சோதிடத்திற்குத் தேவையான கிரகநிலைகள், இராசிப்பிரமாணங்கள், சூரிய சந்திர உதய, உச்ச அஸ்தமனங்கள், கிரகணங்கள், சந்தரணங்கள், சமய வழிபாட்டுக்குரிய விசேட தினங்கள், முதலிய வாழ்க்கைக்குத் தேவையான பலவிஷயங்களையும் நாம் பஞ்சாங்கம் மூலம் அறியத்தக்கதாக இருக்கின்றது. எனவே சோதிடத்துக்குப் பஞ்சாங்கம் ஆதார நூலாக விளங்குகின்றது.

பஞ்சாங்கத்தைச் சுத்தமாகக் கணிப்பதற்கு இந்திய வானசாஸ்திரகள் சூரிய சித்தாந்தம், சித்தாந்த சிரோன்மணி, ஆரியப்பட்டீயம் முதலிய பலநூல்களை காலத்துக்கு காலம் ஆதார

நூல்களாக இயற்றியுள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட காலம் ஆதார நூல்களாக இயற்றியுள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட இந்திய வானசாஸதிரிகள் ஆரியப்பட்டர். வராஙிமிகிதர், பிரமகுப்தர், பாஸ்கரர், கணேசர், கேதகர், முதலியோராவர். இவர்களெல்லோரும் தத்தமக்கு முன் கைக்கொண்ட வானியல் கணித சாஸ்திரங்களை ஆராய்ந்து கோள்நிலைகளின் காட்சிக்கும் கணிதங்களுக்கும் காலகதியில் ஏற்படும் வேறுபாடுகளை உணர்ந்து, அவ்அவ் காலத்திற்கேற்ற கணித திருத்தங்களை தமது நூல்களில் கூறியுள்ளார்கள். அதனால் இந்திய சோதிட கணிதம் ஏறக்குறைய பதின்நான்காம், பதினைந்தாம் நூற்றாண்டு காலம்வரையும் வளர்ச்சியடைந்தே வந்தது. ஆனால் அதன்பின் இந்தியாவில் கிரேக்கர் முகலாயர் போன்றவர்களின் படையெடுப்பினாலும், ஐரோப்பியரின் தாக்குதலாகும் இந்திய வானியற் கணித வளர்ச்சி பாதிப்படைந்தது. இதனால் பஞ்சாங்க கணிதர்கள் காலத்துக்குக் காலம் செய்ய வேண்டிய கணித திருத்தங்களைச் செய்யாமல் ஆரியப்டீயத்தை முதனூலாகக் கொண்டு அமைந்த வரருசி வாக்கிய கணித முறையையும் அதினின்றும் தோற்றிய பரகிதம் என்னும் நூலையும் ஆதாரமாகக் கொண்டு பலகாலமாக திருத்தங்களின்றி பஞ்சாங்க கணிதத்தை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கி இந்தியாவில் ஸ்திரமான ஆட்சி ஏற்பட்டபின் 19-ம் நூற்றாண்டின் மத்தியில் கேதகர், திலகர், சிந்தாமணி இரகுநாதாச்சாரியர் போன்ற பெரியார்கள் தோன்றினார்கள். இவர்கள் தமது வழமையான வானநூல் கணித முறைகளையும் மேல்நாட்டு கணிதமுறைகளையும் ஒப்பிட்டு அவற்றில் காலப்போக்கில் ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கேதகர் கணிதம், சிந்தாந்த கௌஸ்துகம் போன்ற சில புதிய கணித முறைகளை ஆக்கி வைத்தார்கள்.

அவ்வாறு செய்தவர்களுள் சென்னை அவதான நிலையத்தில்(Observatory) அதிபராக இருந்த சிந்தாமணி இரகுநாதாச்சாரியார் அவர்கள் சென்னை அரசாங்கப் பணிப்பின் பேரில் திருக்கணித முறைப்படி பஞ்சாங்கத்தை வெளியிட்டார். இது வெளியிட்டது ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு முன்பாகும். அவருக்குக் கணிதத்தில் உறுதுணையாக இருந்தவர் அக்காலத்தில் திருவையாறு சமஸ்கிருத கல்லூரியில் கணித பீடத் தலைவராகவிருந்த சுந்தரேஸ்வர சிரௌதிகள் ஆவார். அவர் கும்பகோணமடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் மடத்தின் ஆஞ்ஞையின் பேரில் 1876-ம் ஆண்டு முதல் திருக்ஸித்த பஞ்சாங்கம் வெளியிடத் தொடங்கினார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தி. சிதம்பரநாத சாஸ்திரிகள் அவர்கள் வாக்கிய முறைப்படி கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தில் குறைபாடுகளிருப்பதை உணர்ந்து கும்பகோணமடத்துப் பஞ்சாங்கத்தின் கணித சுத்தத்தினை அறிந்து அதன் ஆசிரியராகிய சுந்தரேஸ்வர சிரௌதிகளிடம் தமது மருகர் ஹே. கார்திகேய ஐயர் அவர்களை அனுப்பி திருக்கணித முறையைக் கற்பித்து இற்றைக்கு 128 வருடங்களுக்கு முன் 1887ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தில் திருக்கணித பஞ்சாங்கம் வெளியிட்டார். இதன் தொடர்பிலேயே 95ம் வருடப் பிரசுரமாக துந்துபி வருஷ திருக்கணித பஞ்சாங்கம் எம்மால் வெளியிடப்பட்டுள்ளது.

“திருக்கணித பஞ்சாங்கம்” இந்தியாவில் வெளியிடப்பட்ட காலத்தில் இந்தியாவில் மலையாளம், சென்னை, மைசூர், பூனா, ஆந்திரப் பிரதேசம் போன்ற பல இடங்களிலும், தென் இலங்கையிலும் அவ்அவ் இடங்களுக்குரிய மொழிகளில் “திருக்கணித பஞ்சாங்கம்”வெளியிடப்பட்டு பவனிவரத் தொடங்கியது. தென் இலங்கையில் சிங்கள மொழியில், திருக்கணித முறைப்படி வெளிவரும் பஞ்சாங்களான ‘இரநம’ ‘ஏப்பா’ ஆகிய பஞ்சாங்கங்கள் இன்றும் வெளியிடப்படுவது யாவரும் அறிந்ததே.

இப்படி “திருக்கணித பஞ்சாங்கம்” வெளிவந்து செல்வாக்கைப் பெறத் தொடங்கியதும், ‘வாக்கியப் பஞ்சாங்கம்’ வெளியிட்டு வந்த வாக்கிய கணிதர்களுக்கும், அதைக் கைக்கொள்பவர்களுக்கும் புதிய திருக்கணித பஞ்சாங்க கணிதர்களுக்கும், அதைக் கைக்கொள்பவர்களுக்கும் இடையில் சிறுசிறு சர்ச்சைகள் தலைதூக்க ஆரம்பித்தன. இச்சர்ச்சைகளைத் தீர்த்து, பொது மக்களுக்கு உண்மையைப் புரியவைக்கும் முகமாக நாட்டின் பல பாகங்களிலும் பல மகாநாடுகளும், கருத்தரங்கு ஆய்வரங்குகளும் ஆங்காங்கே நடைபெற்றன.

### கல்லடி ஆலயத்தில் திருக்கணித முறை ஏற்பு

இப்படியான பஞ்சாங்க மகாநாடுகளில் இந்தியாவில் உள்ள கல்லடி ஆலயத்தில் ஒரு கருத்தரங்கும், மகாநாடும் நடைபெற்றது. இந்த மகாநாட்டில் திருக்கணித பஞ்சாங்க கணிதர்கள், அதைக் கைக்கொள்பவர்கள், வாக்கிய பஞ்சாங்க கணிதர்கள், அதை அனுசரிப்போர் என்ற ரீதியில் ஒரு பெரும் பிரிவினர் கூடினர். நீண்ட பெரிய அம் மகாநாட்டில் பஞ்சாங்க கணிப்பு முறைபற்றி காரசாரமான விவாதங்கள் நடத்தப்பட்டன.

இந்த நீண்ட மகாநாட்டின் முடிவில் அதில் கலந்துகொண்ட பண்டிதர்கள், நல்லறிஞர்கள், கணிதர்கள் அனைவரும் ஒரே முகமாக திருக்கணித பஞ்சாங்க கணிப்பு முறையே சரியானது என ஏகோபித்து ஏற்றுக் கொண்டனர். திருக்கணித பஞ்சாங்கத்திற்கு ஒரு மதிப்புரையும் வழங்கினர்.

1934ம் ஆண்டில் மைசூரில் நடைபெற்ற வானசாஸ்திர மகாநாட்டில் உலகப் பேரறிஞர்கள் கூடிப் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. அத்தனை தீர்மானங்களிலும் திருக்கணித பஞ்சாங்க கணிதமே சரியானது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது. இதில் முக்கியமாக 'திதி'' நட்சத்திரம்' இவைகளின் விருத்தி கூடிய நாழிகைகளின் அளவை (Maximum and minimum duration) வான சாஸ்திர கணிதப் பிரமாணம் கொண்டே நிச்சயிக்கப்பட வேண்டும் என்ற இத் தீர்மானமே முக்கியமானது.

## கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?

இலங்கையைப் பொறுத்தளவில் திருக்கணித பஞ்சாங்க கணிப்பு முறையா? வாக்கிய பஞ்சாங்க கணிப்பு முறையா சரியானது? என்ற சர்ச்சைகள் இன்றுவரை தலைவிரித்துத் தாண்டவமாடுவதை சோதிடப் பெருமக்கள் அறிஞர்கள் அறியாததொன்றல்ல. இருந்தும் இலங்கையில் பல அறிஞப் பெருமக்கள், சோதிடப் பெருமக்கள், கல்விமான்கள் 'திருக்கணித பஞ்சாங்க' கணிப்பே சுத்தமானது சோதிடக்கலைக்கு ஏற்றது. சரியான பலாபலன்களைக் கொடுக்கக் கூடியது என்று ஒரே முகமாகக் கூறியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இலங்கை சோதிட ஆய்வுமன்றம் இதுபற்றித் தீவிரமான ஆய்வு நடத்தியது. இறுதியில் திருக்கணித பஞ்சாங்க கணிப்புத்தான் சரியானது என்ற முடிவுக்கு வந்தது. இந்த முடிவை திட்டவட்டமாக வெளியிட்டது.

## ஏன் இந்தச் சர்ச்சை

சில பஞ்சாங்க கணிதர்கள் கணிதத்திற்குரிய ஆதார நூல்களில் வலியுறுத்தப்பட்ட திருத்தங்களை காலத்திற்கேற்ப கைக்கொள்ளத் தவறியதே இச்சர்ச்சைகளுக்குக் காரணமாகும். இதுபற்றி 1978ம் ஆண்டு ஆடி, புரட்டாதி மாதங்களிலும், 1979ம் ஆண்டு ஆனிமாதம், 1980ம் ஆண்டு பங்குனி மாதம் வெளியான 'சோதிடமலர்'களில் போதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் கூடி இன்றும் 'வாக்கிய', 'திருக்கணித' பஞ்சாங்கங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் என்ன? என்ற கேள்விக்குறி எழுப்பியவண்ணமிருக்கிறார்கள்...?

## வாக்கிய கணித வேறுபாடுகள்

சூரியன், சந்திரன், பூமி ஆகியவை தமது ஈர்ப்புச் சக்திகளும் சேர அவ்வப்போது மாறுதல் அடைகின்றது. இந்த நிலையில் மற்றைய கிரகங்களின் ஈர்ப்புச் சக்திகளும் சேர அவ்வப்போது வித்தியாசமாகி சந்திரனுடைய கதியில் மாற்றம் உண்டாவது தவிர்க்க முடியாததாகும்.

வாக்கிய கணிதம் ஏற்பட்ட காலத்தில் நமது முன்னோர் கண்டுபிடிக்காத காரணத்தாலோ ஏதோ இவைகளை வாக்கிய கணிதத்தில் சேர்க்காது விட்டுள்ளனர். ஆனால் திருக்கணித பஞ்சாங்கத்தில் இவைகள் சேர்க்கப்பட்டு கணிக்கப்படுகின்றன. இதன் காரணமாகவே நட்சத்திரம், திதி, யோகம் முதலியவற்றில் திருக்கணிதத்திற்கும் வாக்கியத்திற்குமிடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பூமி, சந்திரன், சூரியன் ஆகியவை ஒரே நேரில் வரும் பொழுது உண்டாகும் அமாவாசை, பூரணை நெருங்கிய நாட்களில் இந்த வேறுபாடுகள் சிறிதாகவும், அட்டமி, நவமிகளை நெருங்கும் காலத்தில் சுமார் 6 அல்லது 6 4/3 மணித்தியால வித்தியாசமும் ஏற்படுகின்றன. இந்த காரணமாகவே திருக்கணிதம் வாக்கியத்திற்கிடையில் விரதாதிகளில் வித்தியாசங்கள் வருகின்றன. இவைகளை சோதிடர்களும், சமய தேவஸ்தானங்களும் கவனத்திலெடுத்து சரியான காலங்களில் பொதுமக்கள் விரதாதிகளை அனுஷ்டிக்க வழிவகுக்க வேண்டும். இந்த வழியிலும் விரத காலங்களை 'திருக்கணித பஞ்சாங்கமே' சரியாக உரிய காலத்தில் வெளியிடுவதை யாவரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள் என்பதை நான் கூறவேண்டியதில்லை.

## கிரகண காலங்களில்.....!

கிரகணம் சம்பவிக்கும் காலங்களில் அமாந்தம், பறுவாந்தம், முதலியன வாக்கிய கணித பஞ்சாங்கங்களில் வேறுபட்டிருந்தும் கூட, வாக்கிய கணித பஞ்சாங்கங்களில் கிரகண நேரங்கள் மட்டும் சரியாக வெளியிடப்படுகிறது என்றால் அதன் உண்மை என்ன? வாக்கிய கணிதர்கள் தமது வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்ட அமாந்தம், பறுவாந்த முடிவுகளை வைத்து கிரகணம் குறித்தால் கண்டிப்பாக அது பிழையாகும். இதை எந்தக் குழந்தை கூடத் திட்டவட்டமாக் கூறும். ஆகவே வாக்கிய பஞ்சாங்க கணிதர்களின் அமாந்தம் - பறுவாந்த முடிவுகள் அவர்களின் கிரகணத்தின் சரியான நேரத்தைக் கொடுக்க முடியாது.

அப்படியென்றால் பொதுமக்கள் இந்த உண்மையை அடிப்படையாக வைத்து சிந்திக்க ஆய்வுசெய்யக் கடமைப்பட்டுள்ளனர். சரியாகச் சிந்தித்து உண்மையை ஆராய்ந்தால் வாக்கிய கணிதர்கள் கிரகண விடயத்தில் 'திருக்கணிதத்தையே' கையாளுகின்றார்கள் என்ற உண்மை பளிச்சிடுகிறது. இந்த உண்மையை மறைக்கவோ, மறுக்கவோ அவர்களால் முடியாது. "வெள்ளியால் பூண் போட்டாலும் வெள்ளரிக்காய் பழுத்தால்...

# Panchāngams

Panchāngams are published in India by many learned authors, societies, academies, and universities. Different publications differ only minutely, at least for a casual or un-trained reader. They forecast celestial phenomena such as solar eclipses, forecast weather (rain, dryspells) as well as more mundane occurrences.

The study of Panchāngams involves understanding *Rasi phala* (also pronounced 'Rashi phala'), the impact of the signs of the zodiac on the individual. Astrologers consult the Panchāngam to set auspicious dates for weddings, corporate mergers, and other worldly activities as per religion.

The actual casting of a Panchāngam involves elaborate mathematical work involving high level of spherical geometry and sound understanding of astronomical phenomena, such as sidereal movements of heavenly bodies. However, in practice the tabulation is done on the basis of short-cut formulations as propounded by ancient Vedic sages and scholars.A typical Panchāngam may state tabulations of positions of Sun, Moon, and other planets for every day of the year on a fixed place (longitude, latitude) and time of day (in 24-hour format IST). The users calculate the remaining data using their relative difference from this fixed place and time.

There are several panchāngas that contain information for more than one year. There is one Vishvavijaya Panchāngam that is for 100 years.The theories propounded in the two scriptures, Surya Siddhanta and Grahalaghava formed the basis for the myriad calendars or Panchāngas in the past in different regions of the country - a culturally complex system.

The Grahalaghava was compiled some 600 years ago and Surya Siddhanta was available ages before that. But these had become outdated and did not tally with actual astronomical events and did not tally with each other also. Hence, a committee was appointed by the Government of India with experts in the field drawn from various parts of the country who were involved with preparation of Panchāngam in local languages to draw up a reliable Panchāngam in which the mathematical calculations provides the positions of grahas (the planets) and nakshatras (constellations) in the sky as they are observed.

Thus, the Government of India has prepared the National Panchānga or the Indian national calendar in 1957 (was proposed by Saha and Lahiri in 1952), which is used in predictive astrology. The Lahiris Ephemeris published annually is the most widely used English almanac in Vedic astrology apart from the many Panchāngas published in local languages, which are mostly based on the National Panchānga.

Chilakamarthi Prabhakar Chakravarthy Sarma has written worlds first English panchangam .Chilakamarthi Prabhakar Chakravarthy did M.tech(Engineering). Currently,working as engineer written several books like Panchangam,Books on rivers,pushkaras and vaastu shastra.Chilakamarthi Panchangam has been kept free of cost in www.chilakamarthi.com for people who are interested in jyotishya shastra.

## Drigganita

**Drigganita**, also called the **Drik system**,is a system of astronomical computations followed by several traditional astronomers, astrologers and almanac makers in India. In this system the computations are performed using certain basic constants derived from observations of astronomical phenomena. The almanacs computed using the methods of Drigganita are referred to as Drigganita Panchngas. In Tamil speaking world, they are also known as *Thiru-ganita Panchangas*.

The Drigganita system is in contrast to the method followed by some other almanac makers who use the values given in the ancient astronomical treatise known by the name Surya Siddhanta. The almanacs computed using this treatise are known as*Sydhantic Panchangas*. They are also known as *Vakya Panchangas*.

In the history of astronomy in India, two different Drigganita systems have been introduced at two different points of time and at two different geographical locations. The first system was introduced by the Kerala astronomer-mathematician Parameshvara(1380-1460) in the fifteenth century. Incidentally, *Drigganita* is also the title of a book authored by Parameshvara through which the Drik system was promulgated. In the nineteenth century, a second Drigganita system was introduced byChinthamani Ragoonatha Chary (1822 – February 5, 1880) an Indian astronomer attached to the then Madras Observatory.

## Drigganita of Paramesvara[edit]

The Drigganita system propounded by Parameshvara was a revision of the *Parahita* system introduced by Haridatta in the year 683 CE. No new methodology was introduced as part of the Drigganita system. Instead, new multipliers and divisors were given for the computation of the Kali days and for the calculation of the mean positions of the planets. Revised values are given for the positions of planets at zero Kali. Also the values of the sines of arc of anomaly (*manda-jya*) and of commutation (*sighra-jya*) are revised and are given for intervals of 6 degrees.

A large number of manuals have been composed describing the Drik system. Since the results obtained using the Drigganita system are more accurate, the astronomers and astrologers use the system for casting horoscopes, for conducting astrological queries and for the computations of eclipses. However, the older parahita system continues to be used for fixing auspicious times for rituals and ceremonies.

## Drigganita of Ragoonatha Chary[edit]

Chintamani Ragoonathachary, a native astronomer took the initiative to modify and publish a new almanac and thereby introduced a change in the calendrical system followed in the Tamil region. It was clear during the middle of the nineteenth century that the traditional calendars were way off the mark. Not only were there errors in the position of stars, the old system predicted eclipses when there would be none. As the traditional almanac was seen to be quite inaccurate, Chatre and Khetkar in Bombay, Venkatakrishna Raya and Ragoonathachari in Madras proposed Drigganitha Panchang to replace the traditional Panchang computations based on the Vakya Panchang. Ragoonathachari had to face the criticism of the traditionalists who argued against such improvements and criticized him for his scientific zeal. Ragoonathachary's Drigganitha Panchang not only provided the traditional five calendarical elements but also provided concordance with English months and dates. Therefore, this Panchang was of more practical utility; native officials working in government establishments or those dealing with government found it handy. At the end of a lot of, often acrimonious, Drig vs. Vakya debate, a meeting was called at Sankara Mutt at Kumbakonam and the meeting arrived at the conclusion that the Drig system needs to be followed and a new almanac to be prepared on those lines. Accordingly, the head of the Mutt, issued a *srimugam* (message of blessing) in 1877 affirming support for the Drig system. From then on a Drig almanac began to be published under the auspices of Kanchi Sankaracharya Matt in the name of 'Sri Kanchi Math almanac'.

# சமூகசீலர் அமரர் திரு செல்லத்துரை செல்வராஜா அவர்கள்



திரு செல்வராஜா அவர்கள் யாழ்ப்பாணம் அளவெட்டியிலே பிறந்தார்.
அருணோதயா கல்லூரி, சீனன்கலட்டி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார். அங்கு (சங்கிலியன் வேடமேற்று)நாடக நடிகனாகவும், உதைபந்தாட்ட வீரனாகவும் திகழ்ந்து பல பரிசில்கள் பெற்று பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்தார். தன் குலதெய்வமாக பிள்ளையாரை என்றும் தொழுதேத்தி வந்தார்.
அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார், அழகொல்லை விநாயகர் ஆலயம் மற்றும் புட்கலை உடனுறை ஐயனார் ஆலயத்தின் திருப்பணிகளுக்குப் பேருதவி செய்தார். லண்டனில் நம்நாடு என்ற வாரப்பத்திரிகையைத் திறம்பட நடாத்தினார்.
லண்டன் சைவ மக்களின் ஆன்மீகத் தேவையைப் பூர்த்தி செய்ய லண்டன் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தை அமைத்தார். தனது ஆலய மேல்மாடி மண்டபத்தை மிகக்குறைந்த கட்டணத்திலும், தாயக நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளுக்கு இலவசமாகவும் பலமுறை தந்துவினார். கலை நிகழ்ச்சிகள் நடாத்தவும், தமிழ் நடன வகுப்புக்கள் நடாத்தவும் தன்னாலான உதவிகள் செய்தார். இடக்கரம் கொடுப்பதை வலக்கரம் அறியாத் தர்மவானாகத் திகழ்ந்தார்.
2013 இல் இலண்டனில் உலகத்தமிழியல் ஆய்வு நடுவத்தை நிறுவி மாபெரும் தமிழியல் மாநாட்டை தன் சொந்தச் செலவில் மிகச்சிறப்பாக நடாத்தினார்.
உலகெங்கும் இருந்து பல தமிழ் அறிஞர்களை வரவழைத்து அவர்களின் ஆழ்ந்த தமிழ் அறிவை புலம்பெயர் மக்களுக்குக்கிடைக்க வழி செய்தார்.
திருக்குறள் மாநாட்டை லண்டனில் நடாத்தி தமிழக அறிஞர்களை வரவழைத்து சொற்பொழிவாற்ற வைத்தார்.
2013 இல் பிரித்தானிய சைவத் திருக்கோவில்கள் ஒன்றியத்தின் தலைவராக விளங்கி ஆக்கபூர்வமான பணிகளைச் செய்தார். எமது தமிழ்த்தேசியத்தை ஆழமாக நேசித்தார்.
நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் பொறுப்பான பதவி வகுத்தார்.
வடக்கிலும் கிழக்கிலும் பல ஆன்மீக மனிதநேயத்திட்டங்களை முன்னெடுத்தார்.
குறிப்பாக மாங்குளத்தில் பல பெண் தலைமைத்துவ, மாற்றுத்திறனாளிக் குடும்பங்களுக்கு இயற்கை வேளாண் பண்ணைகளை உருவாக்கக் காரணமானார். அகில இலங்கை சைவ மகாசபை மனித நேயர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.
தாயக மக்களின் விடுதலைக்காகப் பல தடவைகள் தன் பேச்சாற்றலாலும் செயலாற்றலாலும் தன் கடமையைச் சிறப்புடன் செய்தார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும், தமிழீழ விடுதலையிலும் நெருக்கமுள்ளவராகத் திகழ்ந்தார்.

பல தொலைக்காட்சியில் சிறந்த முறையில் தர்க்க ரீதியாகப் பேசுவதிலும், ஆன்மீகத்துடன் கலந்த அரசியல் பேசுவதிலும் சாணக்கியர். சமயத்தின் வழிகாட்டியாய், தமிழ் சமூகத்தின் குரலாய், அரசியல் முகவரியாய், வணிகத்தின் உட்பொருளாய், கர்ம வீரனாய், பாரி வள்ளலாய், நிறைந்த மனித நேயமுள்ளவராய், இப்படிப் பல முகங்கள் கொண்டு சேவையாற்றிய அமரர் திரு செல்வராஜா அவர்களை பிரித்தானிய சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம், சமூகசீலர் என்று கௌரவிப்பதில் அப்பட்டம் பெருமை கொள்கின்றது.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

## *திரு சபா மகேசனின் சேவையும் பொதுப் பணியும்*



ஈழத்தில் யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நல்லூரில் திரு அப்புத்துரை பொன்னம்மா தம்பதிகளின் புதல்வி காந்திமதிதேவியை திருமணம் செய்து கொண்டார்.

இவர் தனது ஆரம்பப் பாடசாலையினை கொக்குவில் நாமகள் வித்தியாலயத்திலும் ,பின்பு உயர்தரக் கல்வியினை தற்போதைய பல்கலைக்கழகமாக விளங்கும் யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். 7வயதில் நாமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற காலத்திலேயே சைவ தீட்சையும் பெற்று விட்டார். அவர் வீட்டு வளவுக் கிணற்றடியில் ஓர் வைரவ சூலம் உள்ளது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பாடசாலைக்குப் போகுமுன் அவ்விடத்தை கூட்டி சுத்தம் செய்து அபிஷேகித்து பூ வைத்து வணங்குவது வழக்கம். அது அவருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது தனது 10ஆவது வயதில் கொக்குவில் நந்தாவிலில் உள்ள கற்புலத்து மனோன்மணி அம்மனுக்கு தினமும் காலை 6 மணிக்கு கோயில் பிரதானக் குருக்கள் நடராஜ ஐயரின் வேண்டுகோளுக்கிணங்க தினமும் ஆலயத்திற்குப் பூக்கள் கொடுப்பது வழக்கம் . இவை எல்லாம் அவருக்கு உற்சாகத்தை அளித்தது.

மேலும் இந்து சமயத்தில் நாட்டம் கொள்ளச் செய்தது. மகேசனின் தந்தை சபாரத்தினமும் பேத்தியார் செல்லம்மாவும் மறக்க முடியாத தெய்வங்கள் என்றார்.அவரது 18ஆவது வயதில் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சில கஷ்டங்களினால் அவரது உயர் படிப்பை இடை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.ஆதலினால் அவரது தந்தையின் உடன் பிறவாச் சகோதரன் நீர்ப்பாசன அத்தியட்சகர் திரு S.M .ஆறுமுகம் அவர்களின் உதவியுடன் நீர்ப்பாசன இலாகாவில் தற்காலிக மேற்பார்வையாளராக கடமையாற்றினார். பின் மகேசனின் கடின உழைப்பினால் தொழில்நுட்ப அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று ஈழத்தின் பல பாகங்களிலும் பணிபுரிந்து வந்தார்.

திரு மகேசன் அவர்கள் ஈழத்திலும், லண்டனிலும் தொழில் புரிந்த வேளையிலும் பகுதி நேரமாகவோ,அன்றி முழு நேரமாகவோ சைவத்திற்கும்,பொது மக்களுக்கும் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். அவற்றில் சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்வேனெனில் அவரது குல தெய்வமான கற்புலத்து அம்மனின் ஆலயத்தில் சிறு வயதிலேயே தொடங்கிய தொண்டுகளைத் தொடர்ந்து, மட்டக்கிளப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் தேவார பஜனை நடாத்தி வந்தார். பின்னர் கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தில் தொண்டுகள் செய்த வேலையில் 4ம் திருவிழாவிற்கு உபயகாரர்களைத் தேடிச் சிரமப் பட்ட வேளையில் தானே முன்னின்று பொறுப்பெடுத்து நடாத்தி வந்தார்.அதனைத் தொடர்ந்து இரணைமடு கனகாம்பிகை ஆலயத்தில் பரிவார மூர்த்திகள் இல்லாமல் பூஜை நடை பெறுவதைக் கண்டு அதற்குரிய நடவடிக்கையில் இறங்கி பரிவார மூர்த்திகள் உள்ள ஓர் பூரண ஆலயமாக மாற்றினார். அத்துடன் இவ்வாலயத்தில் வரும் நிதிகள் யாவும் தனியார் கைகளுக்கு செல்வதைக் கண்டு அதை உடன் நிறுத்தி முதற் தடைவையாக யாப்பு ஒன்றைத் தயாரித்து இலங்கை வங்கியில் கணக்கையும் ஆரம்பித்து ஆலய வரவு செலவுகளை செவ்வனே நடத்திய பெருமை திரு மகேசனிற்கே சேரும். மேலும் நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக முன்னாள் பா.உ.திரு சிவசிதம்பரம் தலைமையில் உப தபால் நிலையம் ஒன்றையும் திறந்து மக்களின் நன் மதிப்பைப் பெற்றார். அத்துடன் நல்லை ஆதீனம் இன்று தற்போதைய இடத்தில நிரந்தரமாக இருப்பதற்கு சுவாமி தம்பிரான் தலைமையில் பல முக்கியஸ்தர்களை ஒன்றிணைத்து அன்றே பாடுபட்ட பெருமையும் அவருக்கே உரியும். அன்றைய நல்லூர் கந்தன் ஆலயத்திலும் தொண்டுகள் பல செய்து தேவையான சில உபகரணங்களையும் அன்பளிப்புச்செய்தார்.

யாழ் K.K.S வீதியில் அமைந்துள்ள சிவதொண்டன் நிலையத்தில் அங்கத்தவனாக இருந்து அன்றிலிருந்து இன்றுவரை சிவ தொண்டுகள் புரிந்தவண்ணம் உள்ளார். மற்றும் நல்லூர் செட்டித்தெரு தண்ணீர் பந்தலிற்கு இன்றும் இங்கிருந்து தனது பங்களிப்பைச் செய்த வண்ணமே உள்ளார். அன்றே நாம் இறுதியாகச் செல்லும் செம்மணி மயானத்திற்கு ஒரு நிரந்தர மண்டபம் கட்டுவதற்கு பாடுபட்டார். லண்டனில் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயத்தில் அங்கத்தவனாய் இருந்து சமய கலை கலாச்சார நிகழ்வுகளில் பங்கு பெறுவதோடு மட்டுமல்லாது சிறு தொண்டுகளும் செய்து வந்தார். லண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்திலும் அங்கத்தவனாகவும் முழு நேர அடிமைத் தொண்டனாகவும் கடந்த காலங்களில் சமய கலை கலாச்சார உப தலைவராகவும்,கந்த சஸ்டிக் காலங்களில் கந்த புராண வாசித்தலை முன்னின்று நடத்துபவரும்,ஆலய நூலகத்தில் தேவையான புத்தகங்கள்,பத்திரிகைகளை விநியோகப்பதில் அவருக்கினை யாருமில்லை. யாழில் *நல்லூர்மகேசன்* கிளிநொச்சியில் *இரணைமடு மகேசன்*, லண்டனில் ஆச்சுவே *மகேசன்* என்றழைக்கப்படும் இவரின் சுயநலமற்ற சமூக சேவையினை பாராட்டிட வார்த்தைகள் வேறு இல்லை.

*"எம் கடன் அவர் புகழ் தழைத்தோங்குவதே"*

# Rathina Iyer Pathmanaba Iyer



Pathmanaba Iyer is a well-known personality in the world of Tamil literature world. He has played a key role in establishing a symbiotic relationship between Indian Tamil literature and SriLankan Tamil literature. Because of him, Tamil scholars in India came to know about Srilankan Tamils' contributions for Tamil literature.

Pathmanaba Iyer was born on August 24th 1941 in Vannarpannai, Jaffna, Sri Lanka. He graduated in Mathematics and Physics from the University of Peradeniya, Sri Lanka. He has worked as a Divisional Officer in the Land Commissioner's Department from 1972 to end of 1989 when he left for the United Kingdom.

He pioneered Sri Lankan Tamil digitization efforts in collaboration with Project Madurai in 1999. He is a well known publisher and founded and operates Tamiliyal Publications. His contribution to the Sri Lankan Tamil Literature spans more than four decades. Pathmanaba Iyer was instrumental in bringing creative works with diverse point of views to the fore.

In 2004, he was awarded with *Iyal Viruthu*, an award organized by the South Asia Studies Centre of the University of Toronto and Tamil Literary Garden, for his lifetime achievements.

He is the chairperson and founder of Noolaham foundation which is now contributing in documenting, preserving and disseminating texts and sources that speak about the social, economic, cultural and political discourses related to the Sri Lankan Tamil speaking communities.

He was the instrumental for bringing documentary films of legend of Thavil Alaveddy Thadchanamoorthy and Tamilnaadu vocalist Manakkal Rangarajan.

## சண்முகநாதன் சிறிரங்கன்



இணுவில் கிராமத்தில் பிறந்தவர். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்படிப்பை முடித்து, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவனாகப் படித்துக் கொண்டு, இலங்கையின் அரச வங்கியில் ஒன்றான மக்கள் வங்கியில் பதினாங்கு வருடங்களாகப் பணியாற்றியவர். கொழும்பில் பணி செய்த காலத்தில், பெரும் இலக்கிய மன்றதாகிய கலை இலக்கியக் கழகத்தின் செயலாளராகப் பணி செய்தார்.

வங்கியில் இணைவதற்கு முன்பதாக, 'புதுயுகம்', 'தேசாபிமாணி' ஆகிய பத்திரிகைகளில், துணை ஆசிரியர்களில் ஒருவராகச் சேவை செய்தார். இக்கால கட்டத்தில் பிரபல பத்திரிகைகளான 'வீரகேசரி', 'தினகரன்', 'தினபதி', ஆகிய பத்திரிகைகளில் கட்டுரைகள், சிறுகதைகள் எழுதி யவர். இறைவரித் திணைக்களம் நடாத்திய இலக்கியப் போட்டியில், சிறுகதைப் போட்டியில் பரிசைப் பெற்றுக் கொண்டார். இலங்கை வானொலியில் "கலைக்கோலம்" தொடர் நிகழ்சியிலும், 'மத்தாப்பு' நிகழ்ச்சியிலும் பங்கு பற்றி, இலக்கியத்துறைக்குப் பங்களிப்புச் செய்தார்.

பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்து, கடந்து முப்பத்தொரு வருடங்களாக சமய, சமூகப்பணிகள் மேற்கொண்டு வருகின்றார். இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் ஒன்பது ஆரம்பகர்த்தாக்களில் இவரும் ஒருவர். 91ல் ஆலயத்தை ஸ்தாபித்தவேளையில், பொருளாளராகப் பணியாற்றினார். இவரின் சமயப்பணி, சமூகப்பணி இரண்டுக்குமாக ஆலய இளைஞர் மன்றத்தினால் பட்டம் சூட்டி, கௌரவிக்கப்பட்டார். 2003ல் இவரும், சமூகசீலர் கருணைலிங்க மும் இணைந்து, தாய்நாட்டுக்கு வெண்புறாத்திட்டத்திற்காக, அடியார்கள் காணிக்கையை எடுத்து சென்று, கையளிப்புச் செய்ததோடு, அங்கு பராமரிக்கப்படும் அனாதை இல்லங்களுக்குச் செய்யப்படும் சேவைகள் பற்றி, இங்கு தொடர் கட்டுரைகளைப் "புதினம்" பத்திரிகையில் எழுதினார். கனகதுர்க்கா ஆலயத்தின் அறங்காவற்சபைத் தலைவராக இரண்டு தடவைகள் பணி செய்தார். சென்ற ஆண்டு, யாழ்ப்பாணம் சென்று, ஆலயத்தின் அடியார்கள் பெரும் காணிக்கையை, வறுமைக்கோட்டின் கீழ் இருந்து, பட்டப்படிப்பைத் தொடர இயலாத மாணவர் களுக்குப் பகிர்ந்தளிக்கும் பாக்கியம் பெற்றார். இதே போல வலுவிழந்தோர் நல்வாழ்வுக்காக, ஆலயத்தின் அடியார் அன்பளிப்பான சக்கர நாற்காலிகள் வழங்கும் சேவையில் கலந்து, சக்கர நாற்காலிகளை வழங்கினார்.

பத்து வருடங்களுக்கு மேலாக இலண்டன் "சன்றைஸ்" வானொலியில் சேவையாற்றி, சமய,இலக்கிய நிகழ்வுகள், பேட்டிகள் ஆகியவற்றைத் தயாரித்தளித்தார்.

பிரித்தானிய அரசசேவையில் (Civil Service) 1986ல் நியமனம் பெற்று, இன்றுவரை பணியாற்றி வருகின்றார.

## "சைவ வளரொளி" மதிப்பளிப்பை பெறும் சிவபாதம் கணேஷ்குமார்.



ஈழத்திருநாட்டில் சைவமும், இசையும், தமிழும் தழைத்தோங்கிய குப்பிளான் என்னும் கிராமத்தில் சிவபாதம் சிவானந்தமலர் தம்பதிகளுக்கு சிரேஷ்ட மகனாக பிறந்தார். கணேஷ் தங்கள் குடும்ப குலதெய்வம் கற்கரை கற்பக விநாயகரின் அடியவனாகவும், தொண்டனாகவும் இன்றும் விளங்குகின்றார். தனது சிறுவயதிலேயே திருமுறை, சமய பேச்சு, நாடகம் என பலதுறைகளிலும் பங்குபற்றி தனது ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். இவர் தனது ஆரம்ப கல்வியை குப்பிளான் விக்கினேஸ்வராவிலும், பின்பு வசாவிளான் மத்திய கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை யூனியன் கல்லூரியில் கற்றபோது மாணவர் ஒன்றிய தலைவராகவும், தமிழ் மன்றத்தின் பத்திரிகையாசிரியாகவும், பல பேச்சு போட்டி, பட்டி மன்றங்களிலும் பங்கு பற்றி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் நன்மதிப்பையும் பெற்றார். நாட்டின் சூழ்நிலை காரணமாக குப்பிளானிலிருந்து இடம்பெயர்ந்து சுன்னாகத்தில் வாழ்ந்த காலத்தில் கதிரைமலை சிவன் கோயிலில் தொண்டர்சபை உறுப்பினராகவும், சமய சொற்பொழிவு, பட்டிமன்ற நிகழ்வுகளிலும் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்த நேரத்திலும் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவன் கோயில், கணேசபுரம் பிள்ளையார் கோயில், மகாதேவா ஆச்சிரமம், மன்னார் பாலம்பிட்டி அம்மன் கோயில் என பல ஆலயங்களிலும் தமது சமயச் சொற்பொழிவை ஆற்றினார். அதன் பின்னர் வவுனியா ஆதிவிநாயகர், வேப்பங்குளம் என பல ஆலயங்களிலும், விழாக்களிலும் சமய சொற்பொழிவுகளை ஆற்றினார். அத்துடன் வவுனியாவில் உயர்தர மாணவர்களுக்கும் A/L, முதற்கலை (GAQ) மாணவர்களுக்கு "வேதங்கள் ஆகமங்கள் கிராமிய தெய்வங்கள்" "சைவ வினாவிடை" "இந்து தத்துவம்". "ஈழத்து இந்து மதவரலாறு" "ஈழத்து செம்மல்கள்" என பல நூல்களைகளையும் எழுதி வெளியிட்டார். அதே நேரத்தில் தன்னுடைய கல்வியையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் கற்று B.A பட்டதாரியுமானார். இலங்கையில் அவரின் சமய பணியை பாராட்டி "ஞானசொல்வித்தகர்" "ஞானவாரிசு" என்னும் விருதும் கிடைக்கப்பெற்றது.

கணேஷ் அவர்கள் இரண்டாயிரத்து ஒன்றாம் (2001) ஆண்டு லண்டன் வந்தார். அவர் இங்கு வந்ததும் தன்னுடைய வேலையுடன் லண்டனிலும் சமய சொற்பொழிவு, பட்டிமன்றம், சமயக்கருத்தரங்கு என பல ஆலயங்களிலும், மன்றங்களிலும், சைவ மகாநாட்டிலும், அரங்கேற்றங்களிலும், தொலைக்காட்சியிலும் சமய நற்சிந்தனைகள் என தன்னால் இயன்ற சமய பணிகளையாற்றி வருகின்றார். லண்டனில் இளம் சமுதாயத்தையும், சைவசமயத்தையும், கலைத்துறையும் வளர்க்கும் நோக்கில் பல இளைஞர்களையும், சிவாச்சாரியார்களையும், சமய அடியார்களையும் ஒன்று கூட்டி "சரவதேச இந்து இளைஞர் பேரவை" 2012ஆண்டு உருவாக்கி வருடம் தோறும் "முத்தமிழ் சங்கமம்" " மார்கழி உற்சவம்" "சமய பேச்சுப் போட்டி" ஆகிய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர். அத்துடன் இலங்கை சென்று 2013ம் ஆண்டு அங்கும் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் கிளையை உருவாக்கி பல சமய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார்.

திரு. கணேஷ்குமார் 2011ம் ஆண்டு கனடா சென்றபோது அவரின் சமய பணியை பாராட்டி வரசித்தி விநாயகர் ஆலயமும், மோடேர்ன் ஆகம கலை கலாச்சார நிறுவன ஸ்தாபகர் சிவாகமலாநிதி சோமஸ்கந்தகருக்களினால் "இலக்கிய கலைமணி" என்னும் சிறப்பு விருதினை வழங்கினார்கள். மதிழகத்திலுள்ள பேரூர் ஆதினத்தால் 2017ம் ஆண்டு பங்குனி மாதம் சாந்தலிங்க சுவாமிகளின் 103வது விழாவில் அவருடைய சமய சொற்பொழிவை தொடர்ந்து 5ம் நாள் விழாவில் ஆதினகுரு அவர்களால் கணேஷ் அவர்களின் சமய தமிழ் பணியை பாராட்டி "இந்து இளம்பரிதி" என்னும் கௌரவ விருதினை வழங்கி இன்னும் அவரின் பணி தொடர கௌரவித்தும் ஆசீர்வதித்தும் வழங்கினார்கள். திரு.கணேஷ்குமார் அவர்கள் பெற்றோர்களின் விருப்பத்திற்கு ஏற்ப வினோப்பிரியாவை திருமணம் செய்து கஜானன், காருன்யா ஆகிய இரு பிள்ளைகளுடன் இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்து வருவதுடன் தனது சமய சமூக பணிகளை ஆற்றிவருகின்றார். இவரை சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தால் ஆசீர்வதித்து கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

வாழ்க பல்லாண்டு

# 18th Saiva Conference Children Competition Winners 2017

## English Speech

### Group 1




1st
AARUSHI SUTHARJAN

### Group 2



1st
THIVINA MAYURAN



2nd
NARTHANA SAJESAN



3rd
SAKEENA PATHMARUBAN


### Group 3



1st
ANESHA GANAPATHY




2nd
SAAYINYA SORUBANATHAN



3rd
GAJAANANEI GAJARUBAN

## Group 4



1st
SARUJAN THAVARAJAH




2nd
THANNIYA SORUBANATHAN




3rd
KAVILAISH RAVINDRAN

## Group 5



1st
JANAVI SHANMUGANATHAN



2nd
YANUSHA PATHMANATHAN



3rd
SAJINI SANJEEVAN

# Tamil Speech


## Group 1



1st
NILAVAN PIRABHAKARAN



2nd
JAATHURI ARULMOLEMARAN



3rd
JAATHURI ARULMOLEMARAN

## Group 2



1st
NARTHANA SAJESAN



2nd
SAKEENA PATHMARUBAN



3rd
THIVINA MAYURAN


## Group 3



1st
ROHISAN PATHMARUBAN



2nd
VITHTHAKY SURESHKUMAR




3rd
KAJEENA PATHMARUBAN


# Group 4



1st
VISHNUVARTHA SHARMA RAMANESHAN




2nd
THARSIKA GANALINGAM




3rd
BHAIRAVI SANMUGARAJAH


# Group 5



1st
THERSHAN GANALINGAM



2nd
NILOSHAN SANTHAKUMARAN




3rd
MATHURI SANMUGARAJAH

# Thirumurai Oothal

## Group 1


1st
JAATHURI
ARULMOLEMARAN


2nd
NILAVAN PIRABHAKARAN


3rd
RIYA MAYURAN
PARRYVARMAN KUMARAN

## Group 2


1st
SAHANA ANANTH


2nd
THIVINA MAYURAN


3rd
AKKSHITA SIVARUBAN


## Group 3


1st
GAJAANANEI GAJARUBAN


2nd
SADHANA SURENDRAN
SHARUJA THASANIKANTH


3rd
KAJANISHA SAJEEPAN

# Group 4



1st
SHARANYA SANTHARUBAN



2nd
THANNIYA SORUBANATHAN
SHARINI SEYONE




3rd
GANESHA JANAKAN


# Group 5



1st
THENUGA SIVANESARAJAH



2nd
AARANEIYA VASUDEVAN




3rd
LUXMI SANTHARUBAN



















# VIBSU

## VIBSU Minicab Booking App

**Revolutionising minicab booking in**

# LONDON

Book your journey through the VIBSU app visit vibsu.com

Bid for your journey to suit your budget

**EXCLUSIVE OFFER**

*Receive £5 off for your first booking*

*Now you can with Cash or Card!*





Google play

**Visit vibsu.com to download the app!**

App Store

***DRIVERS WE WANT YOU!***



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£99
மட்டுமே
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
15
மாதங்கள்
£99
மட்டுமே
VIJAY
தமிழ்
KTV
SUN LIFE
JAYA TV
Raj
THANTHI TV
45க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
INCLUDED
TENT KOTTA
1000க்கும் அதிகமான Tamil திரைப்படங்கள்
EROSNOW
6000க்கும் அதிகமான Hindi & Tamil திரைப்படங்கள்
BANJO
Ki&Ka
HOUSEFULL3
DISHOOM
7000க்கும் அதிகமான சூப்பர்ஹிட் திரைப்படங்கள்
Roku
tv
AirPlay
chromecast
amazon fireTV
SMART TV
Panasonic SMART VIERA
LG Smart TV
SONY
kindle fire
SUBSCRIBE NOW!
UNITED KINGDOM
0207 132 2727
Go Online
www.lycatv.tv
Printed @ JR Print, Tel: 0208 503 6